# வாழ்க்கைச் சுவடுகள்




ஆசிரியதிலகம் எஸ். பிரான்சிஸ்.

Class No. 928
Acc No. 1678

# வாழ்க்கைச் சுவடுகள்

THE PUBLIC LIBRARY
20 JUN 1996
BATTICALOA.

*ஆசிரிய திலகம்*

**எஸ். பிரான்சிஸ்**

**அன்பு வெளியீடு**
''தவபதி''
ஆரையம்பதி — 1996.

அன்பு வெளியீடு - 6.

## பதிப்புத் தரவுகள்

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | "வாழ்க்கைச் சுவடுகள்" |
| வகை | : | வாழ்க்கை நினைவுகள். |
| ஆசிரியர் | : | எஸ். பிரான்சிஸ்,<br>19, ஞானசூரியம் சதுக்கம்,<br>மட்டக்களப்பு. |
| அச்சகத்தொடர்பு | : | செல்வி க. தங்கேஸ்வரி, B. A. (சிறப்பு) |
| பதிப்பு | : | இரா. நாகலிங்கம் (அன்புமணி). |
| அச்சுப்பதிப்பு | : | புனித வளனார் கத்தோலிக்க அச்சகம்,<br>மட்டக்களப்பு. |
| வெளியீடு | : | அன்பு வெளியீடு, ஆரையம்பதி. |
| பிரசுரத் தேதி | : | 15-10-95 (முதற் பதிப்பு). |
| அட்டை அமைப்பு | : | நா. அருட்செல்வன் (அருள்). |
| புருப் திருத்தம் | : | கண. மகேஸ்வரன். |
| பக்கம் | : | 170 + xi + viii. |
| விலை | : | ரூ. 180/- |

## BIBLIOGRAPHICAL DATA

| | | |
|---|---|---|
| Title | : | "**Valkai Chuvadukal**"<br>(Foot prints of life) |
| Category | : | Memoirs. |
| Author | : | S. Francis,<br>19, Gnanasuriyam Square, Batticaloa. |
| Press Relation | : | Miss. K. Thangeswary, B. A. (Hons ) |
| Editing | : | R. Nagalingam (Anbumani). |
| Printers | : | St. Joseph's Catholic Press, Batticaloa. |
| Publishers | : | Anbu Veliyeedu, Arayampathy. |
| Date of Publication | : | 15-10-95 (First Edition). |
| Cover Design | : | N. Arudselvan (Arul) |
| Proof | : | Kana. Maheswaran. |
| No. of Pages | : | 170 + xi + viii. |
| Price | : | Rs. 180/- |

# பொருள் அடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| i. | ஆசியுரை | | |
| ii. | பதிப்புரை | | |
| iii. | முன்னுரை | | |
| 1. | பள்ளிப் பருவம் | — | 1 |
| 2. | ஆசிரிய கலாசாலைப் பயிற்சி | — | 5 |
| 3. | ஆசிரிய கலாசாலைச் சம்பவங்கள் | — | 10 |
| 4. | ஆசிரியப் பணி | — | 15 |
| 5. | புத்திப் பரீட்சைப் புத்தக வெளியீடு | — | 21 |
| 6. | சித்திரச் செயற் கண்காட்சி | — | 27 |
| 7. | "சியவச" கல்வி நூற்றாண்டு | — | 33 |
| 8. | மெதடிஸ்த பாடசாலை | — | 41 |
| 9. | மட்டப்புற்களிப் பாடசாலை | — | 46 |
| 10. | கொக்கட்டிச்சோலை றோ. க. த. பா. | — | 52 |
| 11. | வெளிக்கள நடவடிக்கைகள் | — | 59 |
| 12. | வீச்சுக்கல்முனைப் பாடசாலை | — | 63 |
| 13. | மட்டக்களப்பில் மேலும் சில பணிகள் | — | 70 |
| 14. | ஞானசூரியம் சதுக்கம் | — | 76 |
| 15. | கிழக்கிலங்கை ஆசிரியர் சங்கம் | — | 82 |
| 16. | சந்தர்ப்பவாதிகளுக்கு ஒரு பாடம் | — | 87 |
| 17. | கெஞ்சினால் மிஞ்சுவர், மிஞ்சினால் கெஞ்சுவர் | — | 91 |
| 18. | சிறுமைகண்டு பொங்குவாய் | — | 99 |
| 19. | "எங்கள் கடை" ஆரம்பம் | — | 104 |
| 20. | பாதயாத்திரைக் குழு | — | 111 |
| 21. | 1978 சூறாவளியின் பின் | — | 117 |
| 22. | பழுதடைந்த வீடுகளைத் திருத்துதல் | — | 121 |
| 23. | சில அதிர்ச்சி வைத்தியங்கள் | — | 126 |
| 24. | அசுத்த ஆவியின் பிடியில் | — | 130 |
| 25. | அசுத்த ஆவியுடன் மற்றொரு போர் | — | 133 |
| 26. | ஏழையின்மேல் இரக்கம் | — | 141 |
| 27. | சில நகைச்சுவைச் சம்பவங்கள் | — | 145 |
| 28. | சில சமூக உறுத்தல்கள் | — | 150 |
| 29. | கறிகளைப்பற்றிய அறிவுரைகள் | — | 157 |
| 30. | மூன்று சண்டியர்கள் | — | 161 |
| 31. | மணவினைப் படலம் | — | 164 |

PUBLIC LIBRARY
20 JUN 1996
BATTICALOA.

# சமர்ப்பணம்



இன்பத்திலும் துன்பத்திலும் பங்குகொண்ட
என் வாழ்க்கைத் துணைவி

**மேரி தெரேசா பிரான்சிஸ்**

*அவர்களின்*

**9ம் ஆண்டு நினைவு - 27-2-96.**



# ஆசியுரை

ஒவ்வொருவருடைய வாழ்க்கை அனுபவங்களும் ஏதோ ஒரு வகையில் மற்றவர்களுக்குப் பயனுள்ளதாக அமையும். அனுபவங்களே சிறந்த ஆசான் என்பது நிறைமொழி. புத்திசாலிகள் பிறருடைய அனுபவங்களிலிருந்து பாடம் படிக்கின்றனர். ஏனையோர் தங்கள் அனுபவங்களிலிருந்து பாடம் படிக்கின்றனர் என்று சொல்வதுண்டு.

திரு. பிரான்சிஸ் அவர்கள் தமது அனுபவங்கள் சிலவற்றை இந்நூலில் வெளிப்படுத்தியுள்ளார். இவற்றுள் நல்லவையும் இருக்கலாம். அல்லாதவையும் இருக்கலாம். நல்லதைக் கொள்வதும் அல்லாததைத் தள்ளுவதும் வாசகர் பொறுப்பு. ஒவ்வொருவரும் தத்தமது இயல்புக்கேற்ப இவற்றை படிப்பதும், ஏற்பதும், ரசிப்பதுமே, இந்நூலுக்குப் பொருத்தமானதாகும்.

திரு. பிரான்சிஸ் அவர்கள் கல்வித்துறையில் நீண்டகாலம் பணியாற்றியவர். சமூகசேவை, பிறர்நல சேவை இவருடைய வாழ்க்கையோடு கலந்தது. இவரால் உருவாக்கப்பட்ட, நன் மாணாக்கர் அனேகர். இவர் எழுதிய பாடத்திட்டம் சார்ந்த பல நூல்களும் வெளிவந்துள்ளன. எளிமையான இவரது மொழி நடையும், இயல்பான கதை ஓட்டமும் இவர் எழுத்துக்களைச் சுவாராஸ்யமாகப் படிக்கவைக்கின்றன. எண்பது வயதை அண்மிக்கொண்டிருக்கும் இவருக்கு இறைவன் எல்லா நலன்களையும் அருளவேண்டும் எனப் பிரார்த்திக்கிறேன்.

✠ ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை,
திருமலை - மட்டுநகர் மறைமாவட்ட ஆயர்.

# வெளியீட்டுரை

"ஒவ்வொருவருடைய வாழ்க்கையும் ஒரு நாவல்'' என ஒரு மேல்நாட்டறிஞன் கூறினான். அர்த்தமுள்ள வார்த்தை இது. ஒவ்வொருவரும் தத்தமது வாழ்க்கையைக் கூர்ந்து நோக்கினால் தாம் படிக்கும் கற்பனை நாவல்களைவிட அற்புதமான சம்பவங்கள் நிறைந்த நிஜநாவலாக அது அமைந் திருப்பதைக் காணலாம். எனவேதான் ''Truth is stranger than fiction'' (உண்மை கற்பனையைவிட விநோதமானது) என்ற அனுபவமொழி தோன்றியது.

உலகப் பிரமுகர்கள் தமது சுயசரிதைகளை எழுதியிருக்கி றார்கள். வாழ்க்கை நினைவுகளை எழுதியிருக்கிறார்கள். அவற்றைப் படிக்கும்போது கற்பனை நாவல்களைவிட சுவா ராஸ்யமாக அவை அமைந்திருப்பதைக் காண்கிறோம்.

பிரமுகர்களுடைய வாழ்க்கை அனுபவங்கள் மட்டும்தான் சுவாராஸ்யமாக இருக்கும் என்பதில்லை. சாதாரண மனிதன் ஒருவனின் வாழ்க்கை அனுபவங்கள்கூட அப்படித்தான் இருக் கும். அதுவும் மனிதவாழ்க்கை அல்லோல கல்லோலப்படும் இந்தக் காலகட்டத்தில், ஒருவரது வாழ்க்கை அனுபவங்கள் பரபரப்பூட்டும் சம்பவங்கள் நிறைந்ததாக அமைவதில் ஆச் சரியமே இல்லை.

அவ்வாறே, வாழ்க்கையில் எதிர்நீச்சல் போட்டவர்கள், சாதனை புரிந்தவர்கள், பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்த வர்கள் கூறும் அனுபவங்களும் நமக்குப் பல பாடங்களைப் போதிக்கின்றன. அவர்களுடைய அனுபவங்கள் நமக்கு வழி காட்டியாக அமைகின்றன. அவர்களுடைய துணிச்சலும் திட சித்தமும், வாழ்க்கையில் வெற்றிக்கு வழிகாட்டுகின்றன. அத்தகைய ஒருவர்தான் ஆசிரியதிலகம் திரு. எஸ். பிரான்சிஸ் அவர்கள்.

சாதாரணமான ஒரு பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியராக அவர் வாழ்ந்தபோதும், அவருடைய சாதனைகள் சில அர சியல் பிரமுகர்களுடைய அனுபவங்களைவிடவும் ஆச்சரிய கரமாக அமைந்துள்ளன. (கவிஞர் 'மகாகவி' எழுதிய ''ஒரு சாதாரண மனிதனின் சரித்திரம்'' இங்கு நினைவுகூரத்தக்கது).

திரு. பிரான்சிஸ் அவர்களுடைய சில சாதனைகள் நம்மைப் பிரமிக்கவைக்கின்றன. சில அனுபவங்கள் நம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்துகின்றன. சில துணிச்சலான நடவடிக்கைகள் நம்மைச் சிந்திக்கவைக்கின்றன. இச்சிந்தனைகள் நிச்சயமாக நமது வாழ்க்கையை நெறிப்படுத்தக்கூடியவை. நமது வாழ்க்கையில் பரிசோதித்துப் பார்க்கக்கூடியவை. வாழ்க்கையின் வெற்றிக்கு உதவக்கூடியவை.

சாதாரண மனிதர்கள் ஓரிரு துறைகளில்தான் திறமை பெற்றிருப்பார்கள். ஆனால் திரு. பிரான்சிஸ் அவர்களைப் போல், தமிழ்மொழி, இலக்கியம், இலக்கணம், ஓவியம், கற்பித்தல், விளையாட்டு, சமயப்பணி, சமூகப்பணி எனப் பல துறைகளிலும் திறமை பெற்றிருப்பவர்கள் ஒருசிலரே. அப்படியானவர்கள் தமது வாழ்க்கை அனுபவங்களை நூலாக வெளியிடுவது பயனுள்ளது.

திரு. பிரான்சிஸ் அவர்களுடைய தலைமைத்துவம், ஆளுமை, திடசித்தம், மனவுறுதி, மனிதாபிமானம், தியாக உணர்வு என்பவற்றை அவருடைய அனுபவங்களில் நாம் காண்கிறோம்.

''எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ண வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்''

என்ற மகாகவி பாரதியின் பாடல்களுக்கு இலக்கணமாக அவை அமைந்திருப்பதைப் பார்க்கிறோம்.

திரு. பிரான்சிஸ் அவர்களுடைய வாழ்க்கை பற்றி மேலோட்டமாக அறிந்திருப்பவர்களுக்கு இந்த உள்ளார்ந்த நோக்கு, நம்பமுடியாததாக, பிரமிப்பூட்டுவதாக அமையலாம். ஆனால் அவர் எதையும் மறைக்கவில்லை. மனம் திறந்து பேசுகிறார். உள்ளதை உள்ளபடியே உரைக்கிறார். சில இடங்களில் தன் 'இமேஜை'ப் பாதிக்கும் அம்சங்களைக் கூட அப்படியே அவர் கூறியிருக்கிறார். அதைப் படிப்பவர்கள் ''இவர் ஒரு சண்டைக்கோழி'', ''மேலதிகாரிகளை மதிக்காதவர்'' என்றெல்லாம் முடிவுகட்டிவிடாதபடி, பிரச்சினையின் மறுபக்கத்தையும் கூறுகிறார். எனவே அவரது நேர்மையில் நமக்குச் சந்தேகம் எழவில்லை. மகாகவி பாரதியின் கூற்றுப்படி ''சிறுமைகண்டு பொங்கும்'' உணர்வையே நாம் அங்கு காண்கிறோம்.

''மேலதிகாரிகள் - கீழ் உத்தியோகத்தர்கள் என்ற பேதம் இன்றுகூட மறையவில்லை. உழைப்பை மதிக்கும் பண்பு இன்றுகூட உயர் அதிகாரிகளிடம் இல்லை. Ego என்ற தன் முனைப்பு அவர்கள் கண்களை மறைப்பதை இன்றும் நாம் பார்க்கிறோம் சுமார் அரை நூற்றாண்டுக்கு முன்பு நிலைமை எப்படி இருந்திருக்கும்? கற்பனை பண்ணிப்பார்க்கவே முடியாது. அந்தக்காலத்திலேயே, உயர் அதிகாரிகளில் நல்லவர்களையும் அல்லாதவர்களையும் இனங்கண்டு அவரவர்க்கேற்ற வகையில் இவர் நடந்துகொண்டிருக்கிறார்.

இது இன்றைய தலைமுறையினருக்கு ஒரு முக்கிய பாடம்.

இவ்வாறே, மனிதாபிமான அடிப்படையில், அவர் ஆற்றிய சில பொதுப்பணிகள் அமைந்திருக்கின்றன. உண்மையான சமதர்மவாதியாக, முற்போக்குவாதியாக, மார்க்ஸிஸவாதியாக அவர் செயல்பட்டிருப்பதை நாம் பார்க்கிறோம்.

அன்றும் சரி, இன்றும் சரி ''தொழிலாளர், தொழிலாளர்'' என்று உதட்டளவில் உச்சரித்துக்கொண்டு, தமது வாழ்க்கை வசதிகளைப் பெருக்கிக்கொண்ட மார்க்ஸிஸவாதிகள் மத்தியில் அவ்வாறு செய்யாத, ஒரு உண்மையான மார்க்ஸிஸவாதியாக அவர் செயற்பட்டிருப்பதை நம்மால் அவதானிக்கமுடிகிறது.

ஆசிரிய சேவையில், தொழிற்சங்க சேவையில் பொதுப் பணிகளில், சமூகப்பணிகளில், அவர் நடந்துகொண்டமுறை, அவர் பெற்ற அனுபவங்கள், அவர் செய்த சாதனைகள் அவரது மனிதாபிமான உணர்வை வெளிப்படுத்துகின்றன.

ஆசிரியராக இருந்தகாலத்திலும் சரி, இளைப்பாறிய பின்னரும் சரி, மனிதாபிமான அடிப்படையில் அவர் மற்றவருக்குச்செய்த உதவிகள் ''Love thy neighbour like thy ownself'' (உன்னைப்போலவே உன் அயலானையும் நேசி) என்ற யேசுபிரானின் வார்த்தைக்கேற்ப அமைந்திருக்கின்றன.

அதன் பயனை, அவர் பிற்காலத்தில், கனடாவிலும், மற்றும் பல சந்தர்ப்பங்களிலும் அனுபவித்திருக்கிறார். மனித வாழ்க்கையில், மக்கள் மறந்துவிட்ட அரிவரிப்பாடத்திற்குச் சிறந்த நிருபணமாக, ஆணித்தரமான அகச்சான்றாக அவை அமைந்திருக்கின்றன. அது என்ன அரிவரிப்பாடம்?

> ''நன்றி ஒருவருக்குச் செய்தக்கால் அந்நன்றி
> என்று தருங்கொல் எனவேண்டா - நின்று
> தளராவளர் தெங்கு தாளுண்ட நீரைத்
> தலையாலே தான்தருதலால்''

ஆம்; மனிதகுலம் இன்று மறந்துவிட்ட மகத்தான அரிவரிப் பாடம் இதுதான். இதை மக்கள் மனதில் பதிக்க வேண்டும் என்பதே இந்நூலின் முக்கிய நோக்கம். நெல்லுக் கிறைத்த நீர் வாய்க்கால் வழியோடிப் புல்லுக்கு மாங்கே பொசிவதுபோல், பழைய நினைவுகளை இரைமீட்கும் இப்பணி அவரது வாழ்க்கையின் அந்திவேளை மனக்குமைச்சலுக்கு சிறந்த ஒளடதமாக, ஒத்தடமாக அமைந்தது என்பதையும் இங்கு குறிப்பிடத்தான் வேண்டும். ''பெரியோரை வியத்தல் இலமே, சிறியோரை இகழ்தல் அதனிலும் இலமே'' என்ற பாடம் நம் அனைவருக்கும் நினைவில் இருக்கவேண்டும்.

மகாத்மா காந்தியின் ''சத்தியசோதனை'' மட்டுமல்ல சாதாரணமான ஒரு தமிழ் ஆசிரியரின் சத்திய சோதனையும் மனித குலத்துக்கு மகத்தான பாடங்களைப் போதிக்கவல்லது என்பதை இந்த நூல்மூலம் நாம் அறிந்துகொள்ளலாம்.

விதைகளைத் தூவியிருக்கிறோம். கல்லில் விழுந்தவை, முள்ளில் விழுந்தவை போக, நல்ல மண்ணில் விழுந்த ஒரு சில விதைகளாவது முளைக்காமலா போகும்?

பொறுத்திருந்து பார்ப்போம்.

இரா. நாகலிங்கம்
(அன்புமணி)

அன்பு வெளியீடு,
ஆரையம்பதி - 1.
(15-1-96)

# என் உரை

இவ்வாண்டு ஏப்ரல் மாதம் (18-4-95) வெளிவந்த எனது ''நூறு வருட மட்டுநகர் நினைவுகள்'' என்ற நூலுக்கு வாசகர்கள் கொடுத்த ஆதரவு என்னைப் புல்லரிக்கச் செய்தது. இலங்கையின் பல பாகங்களிலிருந்தும், வெளிநாட்டு அன்பர்கள் பலரிடமிருந்தும், நூலுக்கான கோரிக்கைகளும் பாராட்டுக்களும் கிடைத்தன. என் தேவனுக்கு அவை அர்ப்பணம்.

இச்சிறிய பொறி என்னை மேலும் ஊக்குவித்தது. சாம்பல் பூத்திருந்த என் நினைவுத் தணல்களை ஊதிக் கனிய வைத்தது. நினைவுத் தடங்களில் பதிந்திருந்த அவ்வெண்ணங்கள் எழுத்துருப் பெற்றன. பல நெருங்கிய நண்பர்களின் கோரிக்கைகளும் இதற்குக் காலாயமைந்தன.

''The idle Man's brain is the Work Shop of the devil'' (சோம்பேறியின் மூளை சாத்தானின் பட்டறை) என்பார்கள். சாத்தான் மூளைக்குள் புகுந்தால் எல்லாம் தீமைதானே! எனவே என் மூளைக்குள் சாத்தான் புகாமல் இருக்க உதவி செய்த என் கெழுதகை நண்பர்களை மரியாதையுடன் நினைவுகூர்கிறேன்.

இவ்விடத்தில் ஆங்கிலத் தளபதி ஒருவன் கூறிய வார்த்தைகள் நினைவுக்கு வருகின்றன. அவன் சொன்னானாம், ''நான் செய்த நல்ல காரியங்களை ஒரு தூபியில் எழுதி பலரும் பார்க்கக்கூடிய இடத்தில் நட்டுவையுங்கள். இதனால் எனக்கு எவ்வித நன்மையும் ஏற்படாவிட்டாலும், அதை வாசிக்கும் மனிதர்களில் ஆயிரத்தில் ஒருவருக்காவது சிந்தனையைத் தூண்டவும், செயல்படவும் அது பயன்படும்'' இவ்வாக்கியத்தைப் பின்பற்றி, எனது அனுபவங்கள் சிலவற்றை எழுதினேன். இது என்னுடைய வாழ்க்கைச் சுவடுகள் மட்டுமல்ல என்போன்ற எத்தனையோபேருடைய வாழ்க்கைச் சுவடுகளும் இவ்வாறுதான் அமையும் என்பதில் சந்தேகமில்லை.

இதை வாசிப்பவர்களில் ஆயிரத்தில் ஒருவருக்காவது இது பயன்படும்-சிந்தனையைத் தூண்டும்-செயல்பட வைக்கும் என்பது எனது நம்பிக்கை.

இந்நூல் அச்சுப்பிரதியாக மிளிர அச்சாணியாக இருந்தவர்கள், வந். ஆயர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை, கெழுதகை நண்பர் ''அன்புமணி'' ஆகியோர். இவர்கள் இருவருக்கும் என் இதய அன்பின் மலர் தூவி நன்றி நவில்கின்றேன்.

சில பழைய சம்பவங்களில், சாம்பலை ஊதி, தணலை வெளிக்கொணர்ந்தவர் இளைப்பாறிய இசை ஆசிரியர், வயலின் மேதை S. சிவஞானம் அவர்கள்.

கலை, இலக்கிய ஆர்வம் கொண்ட கலைச்செல்வி க. தங்கேஸ்வரி, தனது பழு நிறைந்த கலாசார வேலைகளுக்கு மத்தியில், இந்நூலின் அச்சகத் தொடர்பை மேற்கொண்டதுடன், நூலைச் செம்மைப்படுத்துவதிலும் பெரிதும் உதவினார்.

எனது மாணவர் சரவணபவான் தனது ஓவியக் கலையால் நூலை அணிசெய்தார்.

புளித வளனார் அச்சகத்தார், வழமைபோல இந்நூலை அழகுற அச்சேற்றும் வேலையைக் கச்சிதமாகச் செய்துமுடித்தனர்.

இவர்கள் அனைவருக்கும் எனது அன்பு நன்றி. வாசகர்களுக்குச் சில வரிகள் —

இந்நூலில் குறிப்பிடப்படும் சில பணிகளை நான் தனியாக நிறைவேற்றினாலும், பலர் எனக்குப் பக்கபலமாக நின்றனர். உதாரணமாக ஞானசூரியம் சதுக்க வீட்டுத்திட்டம் - இதற்காகப் பாடுபட்டவர் காலம்சென்ற திரு. வி. ரி. ஞானசூரியம் அவர்கள். அவருக்குப் பக்கபலமாக நின்று பல வேலைகளைச் செய்துமுடித்தது அடியேன். இதைப்பற்றி திரு ஞானசூரியம் அடிக்கடி கூறுவார். அவர் எழுதிய கடிதங்களில் ஒன்றில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார். ''My dear Francis, Thank you verymuch for Completing the work. I don't Know, what I would have done without your active Support''

இத் திட்டவேலையின் இறுதிக்கட்டத்தில் அவர் கொழும்பில் தெஹிவளையில் தங்கியிருந்தார். அவ்வப்போது மட்டுநகர் வருவார். கடிதமூலமே நாம் இருவரும் உரையாடிக்கொள்வோம்.

ஒருபானைச் சோற்றுக்கு ஒரு சோறு, இவ்வுதாரணம்.

இவ்வாறு நான் தனித்துநின்று பணிபுரிவதற்கு உந்து சக்தியாக அமைந்தவர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகள்தான். அவரிடம் நான் சிலகாலம் கல்வி பயின்றேன். அவர் கல்வியுடன் உலகியலையும் எனக்குப் புகட்டினார். அவர் சொல்வார் -

''கடின வேலை ஒன்றைச் செய்யத் தொடங்குமுன் துணிவு பெறவேண்டும். துணிந்தபின் எடுத்த தீர்மானங்களை துரிதமாக நடைமுறைப்படுத்தவேண்டும். தேவைப்படின் உதவிக்குச் சிலரைச் சேர்த்துக்கொள்ளலாம். ஆனால் ஆலோசனை பெறுவதற்கல்ல''

இப் பொன்மொழியை என் வாழ்நாள் முழுவதும், நான் கடைப்பிடித்தேன். ''எண்ணித் துணிக கருமம்; துணிந்தபின் எண்ணுவமென்பது இழுக்கு'' அல்லவா?

இப் பொன்மொழியும், அதில் விளைந்த என் செயற்பாடுகளும், உங்களில் யாரோ ஒருவருக்கு உந்து சக்தியாக அமையலாம் அல்லவா? அந்த யாரோ ஒருவராக நீங்கள் இருக்கவேண்டும் என்பதே எனது ஆசை.

நூலைப் படித்தபின் உங்கள் கருத்தை எனக்கு எழுதுங்கள். அது பரஸ்பர நல்லுறவையும், நல்லெண்ணத்தையும் வளர்க்கப் பெரிதும் உதவும்.

அன்பன்,

**எஸ். பிரான்சிஸ்.**

*19, ஞானசூரியம் சதுக்கம்,*
*மட்டக்களப்பு.*
*(15-1-96)*

# 1. பள்ளிப் பருவம்

1922ம் ஆண்டு தை மாதத்தில் மட் / புனித மரியாள் பாடசாலையில், அம்மா என்னைக் கொண்டு சேர்த்தார். அப்போது படிப்பித்த ஒரேயொரு ஆசிரியர் சூசைமுத்து சட்டம்பியார். சிறிய குடும்பி, வாய்நிறைந்த வெற்றிலை. வெனியன் போடமாட்டார். ஒரு சிறிய துவாய் மாத்திரம். அதிகமாக சாய வேட்டியே உடுப்பார். கையில் (சிலவேளை மேசையில்) மரத்தால் செய்யப்பட்ட ஒரு சாட்டை வைத்திருப்பார். (சாட்டை என்பது, அப்பம் சுடும் பெண்கள் கையில் வைத்திருக்கும் தகரத் தகட்டினால் செய்யப்பட்ட சத்தகம் போன்றது.) கைபிடிக்கும் பகுதி $1\frac{1}{2}$ அங். விட்டம். அடிக்கும் பகுதி 2 அங். விட்டம். ஒரு அடி நீளம். இரு வட்டங்களிலும் ஐவைந்து துவாரங்கள். (படம் பார்க்கவும்).

கையை நீட்டச்சொல்லி எங்கள் கைவிரல்களைத் தனது இடது கையால் இறுக்கிப்பிடித்து வலது கையில் இருக்கும் சாட்டையால் உள்ளங்கையில் அடிப்பார். படீர் படீர் எனச் சத்தம் கேட்கும். அதிகம் கோபம் வந்தால் தனது கீழ் உதட்டை மேல் பற்களால் கடித்துக்கொண்டே அடிப்பார்.

பெரிய மீசை. இடையிடை நரை மயிரும். பார்க்கவே பயங்கரமாய் இருக்கும். நான் மிக அருமையாகத்தான் அடி வாங்கியிருக்கிறேன். இவர் பாடசாலைக்கு வராத நாட்களில் தனது மகனை அனுப்புவார். வேட்டி, சேட், சால்வை அணிவார். இவரும் நன்றாக வெற்றிலை போடுவார். கருங்காலி நிறம். இவரைத் தங்கன் வாத்தியார் என்று கூப்பிடுவோம். இவர் சாட்டைக்குப் பதிலாகப் பந்து ஒன்று வைத்திருப்பார். யாராவது கதைத்தால், விளையாடினால் சரியாக அந்தப் பிள்ளைக்கு எறிவிழும். இலக்குப் பார்ப்பதில் திறமைசாலி.

அக்காலத்தில் சிறுவர், வாலிபர் வளர்ந்தோரும் விளையாடும் விளையாட்டு கட்டைப்பந்து எறிதல். ஒரு செங்கல்லை நிறுத்திவைத்து அதன்மேல் ஓட்டுத்துண்டுகள் பத்து, பன்னிரெண்டு அடுக்கி ஒரு இடத்தில் வைத்து இருபக்கமாகக் கன்னை பிரிந்து சமதூரத்தில் நின்று பந்தால் எறிந்து ஓட்டுத்துண்டுகளையும், செங்கல்லையும் சேர்த்து விழப்பண்ணுதல். மறு கன்னையில் உள்ளவர் அடுக்கி முடிக்கவேண்டும். கல்லை விழுத்திய கன்னையிலுள்ளோர் அடுக்கி முடிக்கும்வரையும் அடுக்குவோருக்கு எறிந்துகொண்டேயிருப்பர்.

இதனால் குறி தவறாது எறிதல் எல்லோருக்கும் கைவந்த கலையாக அமைந்துவிடும். இதைப் பிள்ளையார் கட்டை விளையாட்டு என்றும் கூறுவர். தங்கன் வாத்தியாரும் இவ்விளையாட்டில் பங்குபற்றியிருக்கலாம்.

ஒருநாள் ஒருவர் பாடசாலைக்கு வந்தார். பல நிறம் கொண்ட பட்டுச்சாறன், சாம்பல் நிறக் கோட், குஞ்சம் தூங்கும் சிகப்புத் துருக்கித் தொப்பி அணிந்திருந்தார். சூசைமுத்துச் சட்டம்பியாருடன் கதைத்துவிட்டுச் சென்றார். மறுநாள் காலை பாடசாலை தொடங்கும் நேரம். தொப்பியில்லாமல், வேறு சாறன், கோட் அணிந்துவந்தார். எங்களுக்கு அ, ஆ சொல்லித்தந்தார்.

பிற்பாடு அறிந்த விடயம்: இவரது பெயர் இபுறாகீம். சொந்த இடம் மூதூர். எட்டாம் வகுப்புச் சித்தியடைந்தவர். பாடசாலை முகாமையாளர் இவருக்கு ஆசிரியத் தொழில் கொடுத்ததாக. இவர் கொய்யா வளவில் குடியிருந்தார். (கொய்யா வளவு என்பது, இப்போது புனித சிசிலியா மகளிர் கல்லூரிக்குப் பின்புறத்தில் இருக்கும் வளவு). இருபத்தைந்துக்குமேல் கொய்யா மரங்கள் காய்த்துத் தொங்கும். காய்க்கும் காலத்தில் பள்ளிப்பிள்ளைகள் எல்லோரும் வானரக் கூட்டம்போல மரங்களில் தொத்தித்திரிவர்.

கொஞ்சநாளின்பின் சமயம் மாறிப் பெயரையும் ஆபிரகாம் என மாற்றிப் பாக்கியம் என்னும் பெண்ணை மணந்து இரு ஆண் பிள்ளைகளைப் பெற்றனர். பிற்காலத்தில் இருவரும் பயிற்றப்பட்ட ஆசிரியராகிச் சேவை செய்தனர். பாக்கியம் காலம்சென்றதும், இரண்டாந் தாரமாக வேறு ஒரு பெண்ணை மணந்து, பல்கிப்பெருகி பழைய ஏற்பாட்டின் ஆபிரகாம் சந்ததிபோன்று மட்டக்களப்பின் பல பகுதிகளிலும் வாழ்கின்றனர்.

நான் பயிற்றப்பட்ட ஆசிரியராக 1-9-1936ல் புனித மரியாள் பாடசாலையில் எனது 19வது வயதில் கடமை ஏற்ற

போது, இதே ஆபிரகாம் வாத்தியார், இதே சம்பளத்தோடு, இதே பாடசாலையில் 15 வருடங்களின் பின்பும் கடமை செய்துகொண்டிருந்தார். என் மனம் சகிக்கவில்லை. நானாக அவரிடஞ் சென்று அவரது நிலையை விளக்கி, பாடஞ் சொல்லிக்கொடுத்து (S S.C.) உயர் பரீட்சையிலும், ஆசிரியர் தராதரப் பரீட்சையிலும் சித்தியடையச் செய்தேன். மட் / அம்பிளாந்துறைப் பாடசாலைக்குத் தலைமை ஆசிரியராகச் சென்றார். கூடிய சம்பளம் பெற்று, என்னிலும் கூடிய இளைப்பாற்றி வேதனம் பெற்று இறைபதமடைந்தார். கடைசி வரையும் இந்த நன்றியை அவர் மறக்கவில்லை.

இவரது மூத்த மகன் ஆ. யோசேப் கடைசியில் தாண்டவன்வெளி றோ. க ஆ. பாடசாலையில் தலைமை ஆசிரியரானார். எஸ். எஸ். ஸி. பரீட்சைப் பரிசோதகராகவும் கடமைபுரிந்தார். நான் சியவச கண்காட்சி, சித்திரச் செயற்காட்சி போன்ற கடின வேலைகளைச் செய்வதற்கு எனது வலது கைபோல இருந்து உதவியவர். இவரும் இப்போது இவ்வுலகில் இல்லை.

நான் புனித மரியாள் பாடசாலையில் 8ம் வகுப்பை முடித்ததும் 9ம் வகுப்புப் படிக்க புனித செபஸ்தியார் பாடசாலைக்குச் சென்றேன். அப்போது புனித மரியாள் பாடசாலையில் 9ம் வகுப்பில் படிக்க மாணவரும் இல்லை. படிப்பிக்க ஆசிரியர்களுமில்லை. நான் சென்ற பாடசாலையில் தலைமை ஆசிரியர் பண்டிதர் செ. பூபாலபிள்ளை. இவர் தான் எனக்கு நல்ல தமிழை ஆரம்பித்துவைத்தவர். எனது கட்டுரைகளைப் புகழ்வார். எப்பொழுதும் கையை ஆட்டி எழுதவேண்டும் எனச் சொல்வார். அப்படிச் செய்ததால் கெதியாக எழுதக்கூடிய பழக்கம் ஏற்பட்டது.

கணிதம் படிப்பித்தவர் திரு. செல்லையா என்பவர். (பின்பு நில அளவை ஆணையாளராகக் கொழும்பில் பணிபுரிந்தார்). 1932ம் ஆண்டில் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் கிடைத்ததும் தொடர்ந்து என்ன செய்வதென்றே தெரியவில்லை. வழிநடத்த எவரும் இருக்கவில்லை.

எனது தந்தையார் மார்க்கட்டில் குத்தகை எடுத்து ஒவ்வொரு நாளும் காசு வசூல் பண்ணுவார். இரவில் காசு எண்ணுவதுதான் எனது வேலை. உறுதிகள் ஈடும் பிடிப்பார். அந்தக் கணக்குகளையும் பார்ப்பது. ஓரளவு செல்வந்தராக இருந்ததால் படிப்பைப்பற்றிய கவலை இருக்கவில்லை.

பின்பு யாரோ ஒருவரின் தூண்டுதலின்பேரில் புனித மிக்கேல் கல்லூரியில் சேர்க்கப்பட்டேன். 1933ல் நான்காம்

வகுப்பில் சேர்த்தார்கள். உடன் மாணவர்கள் சிறிய தோற்றமும், குறைந்த வயதும், அரைக்காற்சட்டை உடையும் கொண்டிருந்ததால், வேட்டி சேட்டுடன் நான் அவர்களுடன் சேர விரும்பவில்லை. எனக்குப் பெரியம்மை (பொக்குளிப்பான்) நோய் ஏற்பட்டதால் மூன்று மாதகாலம் பாடசாலை செல்லவில்லை, ஐந்தாம் வகுப்புக்கு மாற்றியிருப்பதாக அறிவித்தல் கிடைத்தும், ஆங்கிலம் தெரியாத காரணத்தால் நான் போக விரும்பவில்லை.

ஒவ்வொரு நாளும் பின்னேரத்தில் சென் மேரிஸ் பாடசாலைக்கு விளையாடப் போவேன். ஒருநாள் பாடசாலை வளவுக்குள் ஆஸ்பத்திரியில் தாதிமார் வெள்ளை உடையுடன் திரிவதுபோல நாலைந்து விறதர்மார் திரிந்தனர். விசாரித்த போது, படிப்பிக்கும் விறதர்மார், கொழும்புத்துறை விறதர்மார், யாழ்ப்பாணத்து விறதர்மார் என்று பல பெயர்களைச் சொன்னார்கள்.

புனித அகுஸ்தீனார் ஆசிரியர் கலாசாலையிலும், புனித மரியாள் பாடசாலையிலும் படிப்பிக்கிறார்கள். விடுதிச்சாலை மேற்பார்வையும் செய்கிறார்கள் என அறிந்தேன். 1934ம் ஆண்டு சித்திரை மாதத்தில் ஒருநாள். ஆசிரியர் கலாசாலை அதிபராக இருக்கும் வண. ஜெறாட் அவர்கள் என்னோடு கதைத்து, புரட்டாதி மாதம் முதலாந் திகதியில் ஆசிரிய கலாசாலை முதலாம் ஆண்டு படிப்பு ஆரம்பமாகும், அதில் சேர்ந்து படிக்கும்படி சொன்னார். நானும் சம்மதம் கொடுத்து விட்டேன்.

புனித மிக்கேல் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றும் வண. தியோபிலஸ் அடிகளார் என்னிடம் ''நீ ஏன் இப்போ கொலிச்சுக்குப் படிக்க வருவதில்லை'' என்றார். அதற்கு நான் ''ஆசிரியர் கலாசாலையில் படிக்கப்போகிறேன்'' என்றதும், அவரது புத்திமதி ''ஏன் ஐசே! வாத்திவேலை. வயித்துக்கு இல்லாதவன்தான் வாத்தி. உங்கப்பா பெரிய பணக்காரன்தானே. இங்கிலீசைப் படித்தால் பெரிய உத்தியோகத்துக்குப் போகலாமே. அப்பாட்டச் சொல்லு'' என்பது.

# 2. ஆசிரிய கலாசாலைப் பயிற்சி

**1934**ம் ஆண்டு புரட்டாதி மாதம் அகுஸ்தீனார் ஆசிரிய கலாசாலையில் சேர்ந்துவிட்டேன். இதுவரையில் ஒரு நாளாவது வீட்டில் பாடம் படித்ததாக எனக்கு ஞாபகமில்லை. பாடசாலையில் சொல்லித்தருவதைக் கவனமாகக் கேட்டுக் கொள்வது மாத்திரந்தான். கலாசாலைப் பயிற்சி ஆரம்பிக்கும்போது எனது 17 வயது ஆரம்பம். வகுப்பில் இருந்தவர்களுள் வயதிலும், தோற்றத்திலும் சிறியவன் நான்தான். என்றாலும் குழப்படி கொஞ்சம் கூடத்தான்.

கலாசாலையில் கட்டிட வசதி குறைவானதால், பாடசாலை நேரத்திலும் மாணவர் கல் அடுக்குதல், மரம் தூக்குதல் முதலியவைகளிலும் ஈடுபடவேண்டிய நிர்ப்பந்தம். கொடி றோசா படர்ந்து நன்றாகப் பூத்திருந்தாலும், பற்றையாகப் பற்றிப் படர்ந்து இருந்தது. ஒருநாள் அதிபர் விறதர் ஜெறாட் என்னிடம் அக்கொடியை அடியோடு வெட்டித் துப்பரவு செய்யச்சொன்னார்.

இதற்குச் சில நாட்களின் முன் நன்றாகத் தளைத்திருந்த முள்முருக்கங் கதிகால் ஒன்றைத் துளைத்து மல்லிகைக்கொடி ஒன்றைப் புகுத்திக் களிமண்ணால் அடைத்துவைத்திருந்தேன். அக்கொடியில் இருந்த வெள்ளைநிறப் பூக்கள் செந்நிறமாக மாறத்தொடங்கின. விஞ்ஞான ஆசிரியரிடமிருந்து பெருமதிப்பைப் பெற்றிருந்தேன்.

றோசாச்செடியை வெட்டும்போது முள்ளொன்று வலது கை நடுவிரல் நகப்பொட்டில் குத்தி, முள் உள்ளுக்கு முறிந்தும்விட்டது. இரண்டு மூன்று நாட்களில் அது பழுத்து

வேதனை தாங்கமுடியாத நிலைக்கு வந்துவிட்டது. இதை அறிந்த அதிபர் சமையற்கார மரியான் இடம் குமிழம்பழம் இங்கு எடுக்கலாமா என விசாரித்தார் யாழ்ப்பாணத்தில் இப்படி நடந்தால் குமிழம்பழத்தைச் சுட்டு அதனுள் விரலைப் புகுத்தினால் முள்ளை இழுத்துவிடும் என்று சொன்னபோது, இங்கு குமிழம்பழத்துக்குப் பதில் எலுமிச்சம் பழத்தைச் சுட்டு அப்படிச் செய்வது வழக்கம் என மரியான் ஆலோசனை கூறினாராம்.

அதன்படி அன்று மத்தியானம் சாப்பாடு முடிந்ததும் என்னைப் படுக்கவைத்துச் சில மாணவர் என்னை அமத்திப் பிடிக்க மரியான் எலுமிச்சம்பழத்தை எனது விரலில் புகுத்தினார். என்னால் சூடு தாங்கமுடியவில்லை என அழுது கதறினேன். இன்னும் கொஞ்சநேரம்தான் என்று பிடித்தார்கள். நான் அறிவு மயங்கிவிட்டேன். அறிவு வந்ததும் நான் கண்ட காட்சி பயங்கரமாக இருந்தது.

எனது கையை அதிபர் பிடித்துக்கொண்டு நிற்கிறார். எல்லோரும் பேயறைந்தவர்கள்போலத் திகைப்புடன் நிற்கிறார்கள். விரலில் இருந்த முள்ளைக் காணோம். நகத்தைக் காணோம். எலுமிச்சமபழம் புகுந்த இடத்தில் சதையையே காணோம். எலும்புத்துண்டு மாத்திரம் (முதலாவது இறை) இருந்தது.

பத்திரமாக மோட்டாரில் ஏற்றி வைத்தியசாலைக்குக் கொண்டுசென்று மருந்து கட்டினர். ஒரு கிழமையாகியும் எவ்வித பலனுமில்லை. அதிபர் கொழும்புக்குத் தந்தியடித்து ஏதோ மருந்து எடுத்துப் பூசினார், ஒரு பலனுமில்லை. குழந்தைக்கு உணவூட்டுவதுபோல அதிபரது மேற்பார்வையில் சோறும் தீத்துகிறார்கள்.

இதற்கிடையில் எனது தந்தையார் மட்டக்களப்பிலுள்ள அத்தனை டாகுத்தர், தமிழ் வைத்தியர்களிடமும் ஆலோசனை கேட்கிறார். வயதிலும் அனுபவத்திலும் மிக்க தமிழ் வைத்தியர் ஒருவர் சொன்ன ஆலோசனை ''அந்த விரலில் உள்ள சதையை முதலில் வளரப்பண்ணவேண்டும். அதற்கு ஒரேயொரு மருந்து புங்கம்பால். கடற்காற்றுப் படாத புங்கம் வேரின் மேற்பகுதியை மெல்லச் சீவித் தேங்காய்ப்பூப் போல வரும் துகள்களைப் பிழிந்து சாற்றை அதில் விட்டுச் சக்கையையும் வைத்துக் கட்டினால் பதினைந்து நாளில் சதையும் நகமும் வளரும்'' என்பது.

அப்பா என்னை வீட்டுக்குக் கொண்டுபோக விரும்பவில்லை. ஏனெனில் நான் எட்டாம் ஆண்டு படிக்கும்போதே

என் தாயார் இறைபதமடைந்துவிட்டார். வீட்டில் அப்பாவும் நானுமே வாழ்ந்துவந்தோம். நான் மற்றவர்களின் சொல் கேட்டு நடப்பதுமில்லை.

அதிபருடன் ஒழுங்குபண்ணி ஒவ்வொரு நாளும் காலையில் ஒரு இலையில் கறள் தேங்காய்ப்பூப்போல ஏதோ கொண்டுவருவார். (அது புங்கம்வேர்த் துருவல்). நாலைந்து பேர் என்னைப் பிடித்துக்கொள்ள, அத்தூளை உள்ளங் கையில் வைத்துக் கசக்கிப் பால்போல வரும் வெள்ளைநிறத் திரவத்தை எனது விரலில் விடுவார். ஒவ்வொரு துளியும் புண்ணில் விழும்போது நூறு இறாத்தல் பாரமான சுத்தியலால் உச்சந்தலையில் அடிப்பதுபோல இருக்கும்.

இப்போது நினைத்தாலும் மயிர் சிலிர்க்கின்றது. ஒரு கிழமையில் சதை வளரத்தொடங்கியது. வைத்தியர் சொன்னபடி 15 நாட்களில் சதை வளர்ந்துவிட்டது. பின்பு நகமும் வளரத்தொடங்கிவிட்டது. அந்த விரல் பழுதடைந்த ஒன்றாகவே இன்றும் காட்சியளிக்கின்றது. சாய்மனைக் கதிரை ஒன்றில் படுத்துக்கொண்டே பாடங்களைக் கவனிப்பேன். முதலாந் தவணைப் பரீட்சையில், நான் சொல்லச் சொல்ல எழுதுவதற்கு எழுதுவினைஞர் ஒருவரையும் ஒழுங்குபண்ணினார் அதிபர் அவர்கள்.

பரீட்சையில் சித்தியடைந்தேன். கைவிரலும் சுகமாகிவிட்டது. நல்லகாலமும் பிறந்துவிட்டது. அதிபர் விறதர் ஜெறாட் என்னைக் கூப்பிட்டு ''இனிமேல் நீ ஒரு வேலையும் செய்யவேண்டாம். நீதான் வகுப்பு மொனிற்றர். எனது சந்தோர் அறையைத் துப்புரவாக வைத்துக்கொள்ளவேண்டும். ஒழுங்கீனங்கள் ஏதும் ஏற்பட்டால் உடனடியாக எனக்கு அறிவிக்கவேண்டும்'' எனக் கூறினார்.

நான் சரிவர எல்லாம் செய்யத்தொடங்கினேன். சில வேளைகளில் 10 ரூபா, 100 ரூபா நோட்டுக்களும் கடதாசிக் குள்ளும், குப்பைக் கூடைக்குள்ளும் கிடந்தன. (அதிபர் பணத்தில் அவ்வளவு அக்கறைகொள்பவர் அல்லர்.) நான் அவைகளை மேசையில் அடுக்கிப் பாரம் ஏற்றிவைத்து அவரிடம் கொடுப்பேன். என்னில் நல்ல நம்பிக்கை பிறந்தது.

ஆசிரிய கலாசாலையை மேற்பார்வை செய்ய அடிக்கடி கொழும்பில் இருந்து திரு. உவாட்சன் போன்றோர் வருவார்கள். அவர்களுக்கு மதியபோசன ஒழுங்குகள் செய்வது. இதற்காகப் பங்குக் குருவானவரிடம் பூசைக்கு உபயோகிக்கும் உவைன் ஆறாறு போத்தல்களாக வாங்கி வைப்பது

வழக்கம். மூன்று மாதத்துக்கொருமுறை குருவானவரிடம் கணக்கை வாங்கி அதிபரிடம் கொடுத்துப் பணத்தைப் பெற்றுக் குருவானவருக்குக் கொடுப்பேன்.

இந்த உவைன் கொழும்பில் இருந்து கனிச்சைகளில் வந்து கொண்டிருக்கும். பங்குக் குருவானவரின் தலைமையில் ஆறுட்றாம் போத்தல்களில் அடைத்து, கிழக்கு மாகாணத்திலுள்ள கத்தோலிக்க தேவாலயங்களுக்கு விநியோகிக்கப்படும். ஒரு போத்தலின் விலை இரண்டு ரூபாதான். அதிபரின் அறைக்குள் இருக்கும் அலுமாரியில் எப்போதும் இரண்டொரு போத்தல்கள் இருக்கும். அதிபர் குடிப்பதில்லை. சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் நான் கொஞ்சமாகச் சுவை பார்த்துக்கொள்வேன். (எனது உடம்பு மதுபானத்தில் பழக்கப்பட்டது. இதன் விளக்கம் வேறொரு இடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.)

அடுத்த ஆண்டு ஆசிரியர் பயிற்சிக்குச் சேர விரும்புவோருக்கு நேர்முகப் பரீட்சை நடக்கிறது. மூதூரில் இருந்து வந்த சவரிமுத்து குரூஸ் என்னும் மாணவனுக்கு அதிபர் ஒரு படுக்கை அறையைக் காட்டி, தூசி இல்லாமல் தட்டிக் கூட்டி விடும்படி சொன்னார். இம்மாணவனுக்குக் கண்பார்வை அவ்வளவு நல்லாயில்லை. தடித்த கண்ணாடி அணிந்திருந்தார்.

இதைக் கவனித்துக்கொண்டிருந்த நான், மெல்ல ஒரு தும்புக்கட்டுடன் படுக்கை அறைக்குச் சென்று, மேலே உள்ள தூசியையும் தட்டி மூலை முடுக்குகள் எல்லாம் நன்றாகக் கூட்டிக் கதவடியில் விட்டுவிட்டு, மாணவன் சவரிமுத்து குரூஸ் இடம் ''வாசலிற் போய்க் கூட்டிக்கொண்டு நில்'' எனச் சொல்லிவிட்டு அதிபரிடம் சென்று, ''நீங்கள் படுக்கை அறையைக் கூட்டச்சொன்ன மாணவன் கூட்டிவிட்டு வாசலடியிற் காத்து நிற்கிறார்'' எனக் கூறினேன். உடனே அவர் வந்து பார்த்துவிட்டு, அம்மாணவனைப் போகச்சொன்னார். இம்மாணவன் கலாசாலையிற் சேர்த்துக்கொள்ளப்பட்டார்.

தூசி தட்டிக் கூட்டிய நிகழ்ச்சி, தங்க விழாக் கண்டபின் (58 ஆண்டுகளின் பின்) நான் 1992ல் கனடாவுக்குப் போனபோது ரொறண்டோவில் ஒரு வீட்டுக்கு எனது இளைய மகன் என்னைக் கூட்டிச்சென்றார். அந்த வீட்டுக்காரி (தமிழ்ப் பெண்) யுடன் பேசிக்கொண்டிருந்தபோது, நான் மட்டக்களப்பில் இருந்து வந்ததை அறிந்த அப்பெண் கூறினாள். என் தந்தை அடிக்கடி கூறுவார்: தான் ஆசிரியர் கலாசாலையில் சேராமல் இருந்திருந்தால் இந்த நிலைக்கு வந்திருக்க முடியாது. பிரான்சிஸ் என்ற ஒருவர் இல்லாமல் இருந்திருந்

தால் தான் ஆசிரியர் கலாசாலையில் சேர்ந்திருக்கமுடியாது என்று.

அதற்கு நான் சொன்னேன், அந்தப் பிரான்சிஸ்தான் நான். பின்பு முழு விளக்கத்தையும் கூறினேன். அன்று மதிய போசனம் அருந்தாமல் போகவிடமாட்டேன் எனக் கூறிச் சகல ஆயத்தங்களும் செய்தாள்.

இரு கிழமைக்குப் பின் நான் ரொறண்டோவில் மூத்த மகன் ரெட்ணஜோதியின் வீட்டில் இருந்து 2000 கி.மீ. அப்பா லுள்ள வினிபெக் என்ற இடத்துக்கு மற்ற மகன் அருள்ஜோதி யின் வீட்டுக்குப் போய் 40 நாள் தங்கியிருந்தேன். அப்போது எனது பிறந்தநாளைக் கொண்டாடும்முகமாக இளைய மகன் ஜெகஜோதியும் அங்கு வந்தார். சவரிமுத்து குரூஸின் மகளும் ஒரு பார்சல் கொடுத்து அனுப்பியிருந்தார். அதற்குள் கனடா வில் கிடைக்காத பருத்தித்துறை வடை, முறுக்கு, சோகி முதலியன இருந்தன. கொண்டாட்டத்தில் பங்குகொண்ட அனைவரும் ரசித்துச் சுவைத்தனர்.

இடையில் ஏதோ ஒரு கதையில் என் கைக்கடிகாரத்தை ஒரு மணித்தியாலம் பிந்தி வைக்கும்படி கூறினர். வினிபெக், ரொறண்றோவில் இருந்து மேற்கில் 15 நெட்டாங்கு தூரத் தில் இருப்பதால் ஒரு மணி நேரம் பிந்தும் என விளக்கினர். சமூக, குடும்ப விவகாரங்கள் பலவற்றை விளங்கும் சந்தர்ப் பங்களும் ஏற்பட்டன. விரிவஞ்சி இங்கு குறிப்பிடவில்லை.

1988ல் திரிகோணமலையில் ''அறிவகம்'' என்னும் ரியூட் டரியை நான் ஆரம்பித்தபோது குரூஸ் ஆசிரியரின் மக்கள் இருவர் பெரிதும் உதவினர். இச்சம்பவங்கள் ''காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும் - ஞாலத்தின் மாணப் பெரிது'' (102) என்னும் குறளை இலேசாக விளங்க உதவின.

# 3. ஆசிரிய கலாசாலைச் சம்பவங்கள்

ஆசிரிய கலாசாலையின் முதலாண்டுப் பரீட்சைக்குப் பாடங்கள் மும்முரமாக நடைபெறுகின்றன. அடுத்த ஆண்டு 1935 மாசியில் நடைபெறவிருக்கும் பிரவேச பண்டித பரீட்சைக்கும் பாடங்கள் ஆரம்பிக்கப்பட்டன. யாப்பிலக்கணம், அணியிலக்கணம், நன்னூல், பாட்டியற்றல் இவைகளை வண. இன்னாசிமுத்து விறதர் படிப்பித்தார். படிக்க ஆசையாகவே இருக்கும். நன்றாகப் பாடுவார். சிரித்துச் சிரித்துச் சிரிப்புக் காட்டிக்கொண்டேயிருப்பார். அடுத்த ஆண்டில் பரீட்சை எடுத்த அத்தனைபேருமே சித்தியடைந்தோம்.

இதற்கிடையில் வந்த சுற்றுநிருபம், ஆசிரியர் கலாசாலையில் சேர்க்கப்படுவோர், 18 வயதைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும் எனக் கூறியது. இது அதிபருக்கு ஒரு அதிர்ச்சியைக் கொடுத்திருக்கவேண்டும். அவர் என்னை அழைத்து "அடே பிரான்சன், என்ன சிக்கல்டா, உனக்கு வயது 17. சுற்றுநிருபத்தின்படி உன்னை ஆசிரியர் கலாசாலையிலிருந்து விலக்கவேண்டும்" என்றார். பின்பு, "சரி, பார்க்கலாம்" என்றார்.

எனக்கு 18 வயது ஆகியதும், அடுத்த ஆண்டு எல்லாப் பெயர்களையும் எழுதி, "all are all right" என்று கல்வித் திணைக்களத்துக்குப் பதில் அனுப்பினார்.

இதிலிருந்து, அவரது துணிவும், புத்திக்கூர்மையும், என் மேல் கொண்ட அன்பும் விளங்கியது.

1936ம் ஆண்டில் இரண்டாம் வருடத்துக்கான பாடங்கள். அத்துடன் பாலபண்டித பரீட்சை. ஆசிரியர் சித்திரப் பரீட்சை,

தேசுப்பயிற்சிப் பரீட்சைகளுக்கும் தோற்றவேண்டும் என அறிவித்தல் பலகையில் போட்டுவிட்டார் அதிபர். இதற்கிடையில் 60 மணித்தியாலம் படிப்பித்தலில் பயிற்சி பெற வேண்டும் சாதனா பாடசாலைகளாக புனித மரியாள் கார்மேல் கழகம், தெரேசாள், செபஸ்தியார் பாடசாலைகள் இருந்தன. பாடக்குறிப்புகள் எழுதி ஆசிரியரிடம் காட்டி ஒப்பம் வாங்காமல் படிப்பித்தல் பயிற்சிக்காக சாதனா பாடசாலைகளுக்குப் போகக்கூடாது. பி ப. 4-30க்கு கரபந்தாட்டத் திடலில் நிற்கவேண்டும். காலை 5-00 மணிக்கு நித்திரை விட்டெழும்பவேண்டும். இரவு 10-00 மணிக்கு வெளிச்சம் அணைத்துவிடவேண்டும். இப்படிப் பிரமாணங்கள் பலப்பல.

அரசடி ஆசிரியர் கலாசாலைக்கும், அகுஸ்தீனார் ஆசிரியர் கலாசாலைக்கும் நடைபெறும் கரபந்தாட்டப் போட்டியோ போட்டி. வழக்கமாக இப்போட்டிகள் மட் / பொலிஸ் நிலையத் திடலில் நடைபெற்றன. பொதுமக்கள் பார்ப்பதற்கு வசதியீனம் ஏற்பட்டதால், முற்றவெளியில் இதற்கென ஒரு திடல் அமைக்கப்பட்டு இரு கலாசாலைகளுக்கும் போட்டி ஆரம்பமாயிற்று.

முதல்நாள் 4-00 மணிக்குத் தொடங்கியது 6-30 ஆகியும் முடியவில்லை. இரண்டாம் நாளும் 4-00 மணிக்குத் தொடங்கியது 6-00 மணிவரையில் முடிந்தது. அரசடிக்கு ஒரு வெற்றி; அகுஸ்தீனாருக்கு இரு வெற்றி. மட்டக்களப்பிலும் கரபந்தாட்ட இரசிகர்கள் உண்டு என்பதை அன்றுதான் கண்டோம். வலைக்கு அருகில் திரு. F. X. C. நடராசாவும், நானும் வந்தால் நிச்சயம் புள்ளிகள் கூடிக்கொண்டேபோகும். வலையில் விழும் பந்தை நான் கிளப்பிக் கொடுப்பேன்.

F. X. C. நின்றுகொண்டே அடிக்கக்கூடிய உயரம் இருந்தும் கிளம்பி அடிப்பார். நிச்சயம் புள்ளிதான். அப்போது F. X. C. க்கு இருந்த ஒரேயொரு பட்டம் "Dasher" சடார் அடியர். கிழக்கு மாகாணத்தில், மட்டக்களப்பு மாவட்டம், திருகோணமலை மாவட்டம் எல்லாக் கோஷ்டிகளையும் வென்றோம். கம்பஹாவில் இருந்துவந்த கோஷ்டியுடன் திருகோணமலை சென்று விளையாடினோம். இதில்மாத்திரம் தோற்றுவிட்டோம்.

திருகோணமலை, மட்டக்களப்பு இரு கோஷ்டிகளும் திருமலை மக்கேஷர் விளையாட்டரங்கில் விளையாடியபோது மத்தியஸ்தம் வகித்தவர் காலம்சென்ற திருமலை நகரசபைத் தலைவர் திரு. ஏகாம்பரம் அவர்கள். இப்போட்டியின்போது

தான் மட்டக்களப்பு மக்களுக்கு மட்டுமல்ல, திருமலை மக்களுக்குச் சூடைமீன் என்ற பட்டம் எல்லார் மனதிலும் நிலை கொண்டது. (இரண்டாவது உலக யுத்தகாலம். மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து சென்ற ஆயிரக்கணக்கானோர் ''டொக்கியாட், சைனாவே (சீனன்வாடி)'' என்ற இடங்களில் வேலை செய்த காலம்).

ஆசிரியர் கலாசாலையில் என்னுடன் இரண்டாம் ஆண்டில் படித்தவர் இருவர் மட்டக்களப்பார். ஒருவர் மண்டூர்ச் சின்னையா, மற்றவர் ஊறணிச் செல்லப்பிள்ளை. மற்ற 13 பேரும் யாழ்ப்பாணத்தவர். போதனா ஆசிரியர்கள் எல்லோரும் யாழ்ப்பாணத்தவர்.

இடையிடையே திரு. தருமலிங்கம் என்னும் சித்திர ஆசிரியர் மாத்திரம் (இவர் மட்டக்களப்பு) வருவார். யாழ்ப்பாணம் பருத்தித்துறையில் இருந்து வந்த செல்லமாணிக்கம் என்பவருக்கும் எனக்கும்தான் படிப்பில் போட்டாபோட்டி. சாப்பாட்டு மேசையிலும் செல்லமாணிக்கத்தின் பீங்கானுக்குப் பக்கத்தில் புத்தகம் விரித்தபடி இருக்கும். விளையாட்டு நேரத்திலும் விளையாடாது பக்கத்தில் இருந்து வாசித்துக் கொண்டே இருப்பார்.

அன்று பெரும்பாணாற்றுப்படையில் பரீட்சை நடந்தது. மறுநாள் விடைத்தாள்களுடன் வந்த கந்தப்பு என்னும் போதனா ஆசிரியரிடம், இன்று யார் சேர் முதலாவது என மாணவர் கேட்க, வழமைபோல் செல்லமாணிக்கம்தான். ''அவரை முந்த மட்டக்களப்பில் பிள்ளை பிறக்கவில்லை'' என்றார். (ஏனெனில் நான் எப்போதும் இரண்டாவது ஆள் தான்).

அவரது பதில் என்னை இந்த உலகில் இருந்து வேறு உலகத்துக்குத் தூக்கிச்சென்றதுபோல இருந்தது. அடுத்த இரு நாட்களில் இராமாயணம் சுந்தரகாண்டம், (1500 பாக்கள்) பரீட்சைக்கு முதல்நாள் பின்னேரம் பெரிய மெழுகு திரிக்கட்டு ஒன்று, ஒரு சதத்துக்கு மூக்குத்தூள், நெருப்புப் பெட்டி ஒன்று, பெரிய வாளி நிறைய நீர், துவாய், கதிரை, சிறிய மேசை எல்லாவற்றையும் ஸ்ரோர் ரூமில் வைத்துப் பூட்டிவிட்டேன். நான் மொனிற்றராக இருந்ததால் வசதியாகச் செய்துமுடித்தேன்.

இரவு 10 மணிக்கு விளக்கு அணைக்கப்பட்டது. செல்லமாணிக்கத்தைப் படுக்கை அறையில் காணவில்லை. தேடித் திரிந்தேன். பழைய சாமான்கள் கிடந்த ஒரு கொட்டிலுக்குள்

சிறிய வெளிச்சம் தெரிந்தது. ''செல்லமாணிக்கம்'' எனப் பெரிய சத்தமாகக் கூப்பிட்டேன். கொஞ்சநேரம் படித்துவிட்டு வந்து படுக்கிறேன் எனக் கெஞ்சினான். எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. 15 நிமிடம்வரை இருட்டில் மறைந்து நின்று பினபு ''செல்லமாணிக்கம்'' உடனே வராவிட்டால் அதிபரிடம் போய்ச் சொல்லுவேன் என்று பயமுறுத்தினேன். வந்து கட்டிலில் படுத்துவிட்டான்.

நானும் கட்டிலில் படுத்து நித்திரை செய்வதுபோல் பாசாங்கு காட்டிவிட்டு எழுந்து ஸ்ரோர் ரூமுக்குப் போய் விட்டேன். கதவைப் பூட்டிவிட்டுப் படிக்கத்தொடங்கினேன். நடுச்சாமம்போல் தூக்கம் தலையை அடிக்கத்தொடங்கியது. மூக்குத்தூள் கொஞ்சம் போட்டு சத்தம் கேளாமல் துவாயால் அமத்திபபிடித்து 25 தும்மலுக்குமேல் தும்மினேன். நித்திரை மறைந்தது. தொடர்ந்தேன்.

2 மணித்தியாலம் சென்றதும் மீண்டும் மிக மோசமாக நித்திரை வரத்தொடங்கியது. கால் இரண்டையும் வாளி நீருக்குள் வைத்தேன். நீர் நன்றாகக் குளிர்ந்து இருந்ததால் நித்திரை பறந்துவிட்டது. விடிய 4 மணி வரையில் புத்தகம் முடிந்ததும் துறவிகள் எழும்புவதற்காக 4 மணிக்கு அடிக்கும் மணிச்சத்தம் கேட்டது. எழுந்து அறையைப் பூட்டிவிட்டு, முழுகினால் நல்லது என நினைத்து நீர் நிறைந்திருந்த வக்கினுள் விழுந்து முழுகினேன்.

வெளியேறி வழக்கப்படி தலை உடல் எல்லாம் சவர்க்காரத்தைத் தேய்த்துவிட்டேன். அப்போதுதான் என் மடத்தனம் தெரிந்தது. வக்கினுள் விழுந்தால் நீர் நிறம் மாறும். வெளியே நின்று வாளியால் அள்ளிக்குளித்தால் சத்தம் கேட்கும். மேற்பார்வையாளர் விறதர் வந்துவிடுவார். திறப்புக் கோவை என்னிடம் இருந்ததால் குசினிக் கதவைத் திறந்து, சட்டி, பானை கழுவுவதற்குப் பதிவில் பூட்டியிருந்த பைப் குழாயின்கீழ் குந்தியிருந்து சவர்க்காரத்தைக் கழுவிவிட்டு மீண்டும் வந்து வக்கினுள் விழுந்து முழுகிவிட்டு நேரத்தைப் பார்த்தேன் 5 மணிக்கு இன்னும் 10 நிமிடங்கள்.

கோவிலுக்குப் போவதற்காகப் புறப்பட்டு, மற்றவர்களையும் எழுப்பிவிட்டேன். காலை 10 மணிக்கு பரீட்சை ஆரம்பமாகியது. நன்றாக எழுதினேன்.

இரு நாட்களுக்குப்பின் கந்தப்பு ஆசிரியர் விடைத்தாள்களுடன் வந்தார். என் மனம் அடித்துக்கொள்கிறது. மாணவர் வழமைபோல் இன்று யார் சேர் முதல் என்றதும் அவர் சற்றுத் தயங்கி பிரான்சிஸ்தான் முதல் செல்லமாணிக்கம் இரண்டாவது என்றார். அன்று நான் எடுத்த பிரதிக்கினை:

இனிமேல் ஒவ்வொரு பாடத்திலும் நான்தான் முதலில் வர வேண்டும் என்பது. அப்படியே தொடர்ந்தது.

ஒருநாள் அதிபர் சொன்னார், கொழும்பில் இருக்கும் கல்விமா அதிபர் 'கொட்பிறி' அவர்களுக்கு அனுப்புவதற்காக ஐயாயிரம் முந்திரிகைப் பருப்பு வாங்கி, யாரிடமாவது கொடுத்து சீனிப்பாகு கலந்து எடுக்கவேண்டுமென்று. அப்படியே செய்து இரு தகரங்களில் அடைத்து, தபாற்கந்தோருக்குக் கொண்டுசென்றேன். தபாற்கட்டணம் அதிகமாக வந்ததால் திரும்பிவந்து அதிபரிடம் கூறியபோது, ஒரு தகரத்தை மாத்திரம் அனுப்பிவிட்டு மற்றதை அறையில் வைக்கச் சொன்னார். அப்படியே செய்தேன்.

விளையாடிக் களைத்த நேரத்தில் இடையிடையே தகரத்தைத்திறந்து கொஞ்சம் கொஞ்சமாகச் சாப்பிடவும் தொடங்கிவிட்டேன். முக்கால்வாசி முடிந்தது. மூளையில் ஒன்று தட்டுப்பட்டது. ஒருநாள் பின்னேரம், மிகுதியான பருப்புகளை வெய்யிலில் காயவைத்து, வகுப்பு மாணவர் 40 பேருக்கும் கந்தப்பு மாஸ்ரருக்கும் கொடுத்துச் சாப்பிடச்செய்தேன்.

கொஞ்ச நாட்களின்பின் அதிபர் என்னிடம் முந்திரிகைப் பருப்பைப்பற்றிக் கேட்டார். நான் அதற்கு அவைகள் பூஞ்சணம் பிடித்துவிட்டன. நன்கு காயவைத்து கந்தப்பு மாஸ்ரர் உட்பட எல்லோருக்கும் கொடுத்தேன். உங்களிடம் சொல்ல மறந்துவிட்டேன் என்றேன். உடனே அவருக்குக் கோபம் வந்து, நீ உனது காசில் ஐயாயிரம் பருப்பு வாங்கி வைக்க வேண்டும் என்றார். நான் உடனே ஆம் செய்கிறேன் என்றேன். ஆனால் அவரது சுபாவம் அடுத்த நிமிடமே இப்படியான விடையங்களை மறந்துவிடுவார். அவரது மூளையில் எப்பொழுதும் தாண்டவமாடுவது மாணவரின் படிப்பு ஒன்றே. சில நாட்களின்பின் முந்திரியம் பருப்பு வாங்கி வைக்கவா எனக் கேட்க, வேண்டாம் என்று சொல்லிவிட்டார்.

1936ம் ஆண்டில் மாசியில் பாலபண்டித பரீட்சை நடந்தது. 60 வீதமானோர்தான் சித்தியடைந்தோம். இவ்வாண்டு சித்திரை விடுதலையில் யாழ்ப்பாணம் சென்று சங்கீத வகுப்பில் சேர்ந்து வாய்ப்பாட்டில் உயர்ந்த சித்தி என்னும் பத்திரம் பெற்றேன். ஆசிரியர் சித்திரச்சான்று, தேகப்பயிற்சிச் சான்றிதழ்களும் பெற்றேன்.

அடுத்த இரு ஆண்டில் கத்தோலிக்க சமய டிப்ளோமாவும் பெற்றேன். கலாசாலை இறுதிப் பரீட்சைக்கு மதிப்புரைப் பாடம் மதிப்பிட திரு. உவாட்சன் கொழும்பில் இருந்து வந்தார். அதற்கு நான் படிப்பித்த பாடம் கேத்திர கணிதத்தில் பைதகரசின் தாட்டாந்தம். பெற்ற புள்ளி 95. ஆவணி கடைசி வாரத்தில் பரீட்சை முடிந்தது. புரட்டாதி முதலாந் திகதியில், நான் படிப்பை ஆரம்பித்த அதே புனித மரிய நாயகி பாடசாலையிலேயே ஆசிரியர் பதவி பெற்றேன். ■

# 4. ஆசிரியப் பணி

அப்போது அப்பாடசாலையில் தலைமை ஆசிரியராக இருந்தவர் வண. அந்தோனிப்பிள்ளை விறதர். இவர் இலக்கணப் புலி. எஸ். எஸ். ஸீ. வகுப்பில் சுமார் 35 பேர்வரையில் இருந்தனர். வயதிலும் தோற்றத்திலும் என்னிலும் கூடியவர்களும் இருந்தனர்.

நேரசூசியில் எனக்கு அந்த வகுப்பிற்கு இலக்கியம், சரித்திரம், சித்திரம் 3 பாடங்கள் போடப்பட்டன. இலக்கணப் பாடம் தலைமை ஆசிரியர் அந்தோனிப்பிள்ளை அவர்களின் பெயரில் போடப்பட்டிருந்தாலும் என்னையே படிப்பிக்கச் சொல்லிவிட்டார். என்னிடம் சொன்னார் நன்றாக இலக்கணப் பாடத்தை ஆயத்தம்பண்ணி வரவேண்டும் என்று. அதேநேரத்தில் மாணவர்களிடம் சொல்லியிருந்தார் கூடுதலாகக் கேள்வி கேட்கும்படி.

நான் அப்பாடத்தைப் படிப்பிக்கும்போது, விறதர் நீளமான பிரம்புடன் வகுப்புக்குப் பின்னே நிற்பார். நான் போதியளவு விளக்கம் கொடுத்தபின்பும் விளங்கவில்லையென்று கேட்பவருக்கு அடிவிழும். சிலவேளை அவரே வந்து விளங்கப் படுத்தியும் விடுவார். இரு வருடங்களின்பின்பு ஒருநாள் என்னிடம் சொன்னார், என்னை நன்றாக இலக்கணம் படிப்பிக்கும் ஆசிரியர் ஆக்கிவிட்டேன் என்று.

ஒரு வருடம், 8ம் வகுப்புக்கு அரசாங்கத்தால் பரீட்சை நடைபெறும் எனச் சுற்று நிருபம் ஒன்று வந்தது. அப்போது அப்பாடசாலையில் 8ம் வகுப்பில் 10 மாணவர்கள் இருந்தனர். அதிபர் என்னிடம் சொன்னார், இந்த வகுப்புக்கு ஆசிரியராக உன்னையே விடுகிறேன். எஸ் எஸ். ஸீ. வகுப்புப் பாடங்களுடன் இதையும் சேர்த்து 10 பேரையும் சித்தியடையச்

செய்தால் 100 ரூபாவும், ஒரு உலைன் போத்தலும் பரிசாகத் தருவேன் என்று அப்போது 100 ரூபா என்றால் பெருந் தொகை. அப்போது எனது மாதச்சம்பளம் 43 ரூபாதான்.

ஒரு கிழமை படிப்பித்துப் பார்த்துவிட்டு அவரிடம் சொன்னேன: பத்துப்பேரையும் சித்தியடையச் செய்வது கஷ்டம். ஒன்பது பேர் நிச்சயம் சித்தியடைவர் என்று அப்படி வந்தாலும் பரிசு கிடைக்கும் என்றார். பெறுபேறு அப்படியே வந்தது. அன்று இரவு 6 30க்குப் பாடசாலைக்கு வரும்படி சொன்னார். இரண்டையும் தந்தார். போத்தலை அவர் கால்வாசியும் நான் முக்கால்வாசியுமாக முடித்தோம்.

அப்பாடசாலையில் நான் இல்லாமல் எதுவும் நடக்காது என்ற எண்ணம் அவருக்கு ஏற்பட்டுவிட்டது. 10 வருடங்களின் பின் என்னை வேறொரு பாடசாலைக்கு மாற்றப்போவதாக, பொது முகாமையாளர் விறதரிடம் கேட்டபோது, இவர் சொன்ன பதில், ''இவரின் இடத்துக்கு 3 ஆசிரியர்களைத் தரமுடியுமா? நாடகமா, பேச்சுப்போட்டியா, விளையாட்டா, பத்திரிகையா, தமிழில் தட்டச்சுப் போடுவதா, வெளிவேலைகளா, பரீட்சைப் பெறுபேறுகளா எல்லாம் இவர் கையில் தான் உண்டு'' என்பது. அப்படிச் செய்யவேண்டாம் என்று ஒரே பிடியாக நின்றுகொண்டார்.

1938ல் வண. பிலிப் விறதர் மட்டக்களப்புக்கு வந்து சேர்ந்தார். அவரது அறை, விடுதிச்சாலையின் ஒரு பகுதியாக அமைந்திருந்தது. பாடசாலை, விடுதிச்சாலை அவரது அறை எல்லாவற்றிற்கும் வழி ஒன்றேதான். அந்த நாட்களில் சாதாரணமாக நாளாந்தம் இரு பக்கற் சிகரெட் ஊதித்தள்ளுவேன். இவைகளைக் கவனித்த பிலிப் விறதர் ஒருநாள் காலை நான் சைக்கிளில் இறங்கிப் பாடசாலைக்குச் செல்லும் வழியில் நின்று என்னிடம் ஒருநாளைக்கு எத்தனை பக்கற் சிகரெட் புகைப்பாய் எனக் கேட்டார். நான் இரண்டு எனச் சாதாரணமாகச் சொல்லிவிட்டுப் போய்விட்டேன்.

மறுநாள் காலையும் அதேநேரம் அதே இடத்தில் நின்று நேற்று எத்தனை பக்கற் எனக் கேட்டார். நான் தயங்கியபடி இரண்டொன்று குறைய எனச் சொல்லிவிட்டுப் போனேன். வேறு கெட்ட பழக்கங்கள் இருந்தாலும் பொய்யும் களவும் என்னிடம் இல்லை.

மூன்றாம் நாளும் அதே இடத்தில் நின்று அதே கேள்வி. எனக்கு என்ன மறுமொழி சொல்வதென்றே தெரியவில்லை. என்றாலும் அவரது பஞ்சுப்பெட்டி போன்ற தலையும் வயோ

திபத் தோற்றமும் என்னை ஏதோ செய்ய, நான் சொன்ன பதில், ''ஐயோ விறதர், நான் பொய் சொல்வதேயில்லை. என்னால் குடியாமல் இருக்கவும் முடியவில்லை'' என்பது. சரி, இன்று பின்னேரம் விளையாடப் போகவேண்டாம், நாம் இருவரும் உலாப்போவோம் என்றார்.

அன்று பின்னேரம் உலாப்போனோம். மட்டக்களப்புக் கச்சேரிக்கும் கோட்டு வீட்டுக்கும் இடையில் ஆற்றோரமாக நின்ற கோணற்புளி மரத்தின்கீழ் இருந்த சீற்றில் இருந்தோம். அவர் என்னோடு உரையாடியதன் சுருக்கம்: உன்னைப்பற்றி எல்லாம் அறிந்தேன். எத்தனை பரீட்சைகளில் சித்தியடைந் திருந்தாலும் நீ தமிழ் வாத்தி தமிழ் வாத்திதான். இந்தப் பெயரை மக்கள் வாயில் இருந்து எடுப்பதற்கு உன்னால்தான் முடியும். முதலில் ஆங்கில அறிவு தேவை. அதை நான் உனக்குத் தருவேன். பொதுவேலைகள் எல்லாவற்றிலும் ஈடு பட்டு எந்த இடத்திலும் நீ ஒரு பிரதான ஆளாகத் திகழ வேண்டும். அப்போதுதான் வித்தியா சந்தோர் மேலதிகாரிகள் உன்னைக் கெஞ்சுவார்கள். அவரது விருதுவாக்கு, ''மிஞ்சி னால் கெஞ்சுவது, கெஞ்சினால் மிஞ்சுவது''. தகுதிக்கு மதிப் புக்கொடுத்து அநீதியை எதிர்க்கவேண்டும். இப்படிச் செய்வ தினால் பெரும் தீமையும் நஷ்டங்களும் உனக்கு ஏற்படலாம். ஆனால் இவைகள் எல்லாவற்றிற்கும் ஈடுகொடுக்கும் கெட்டித் தனம் இங்கேயுள்ள எந்தத் தமிழ் ஆசிரியர் இடத்திலும் காணவில்லை. உன்னிலேயே கண்டேன். இதைச் செய்துமுடிப் பாயா என மிகவும் கெஞ்சலோடு கேட்டார்.

நான் என்னையே மறந்தேன். மகுடிக்கு அடங்கிய நாகம் ஆனேன். ஆம். நிச்சயமாகச் செய்வேன் என்றேன். எனது நெற்றியில் சிலுவை வரைந்து இறைவனைப் பிரார்த்தித்து என்னை ஆசீர்வதித்தார். மறுநாள் மத்தியானம் 12.15 தொடங்கி 1.15 வரை படிக்கும் நேரமாகக் குறிப்பிட்டார். அவருக்கும் வேறு நேரமில்லை. எனக்கும்தான். நான் பாட சாலை விட்டு 11.45க்கு வீட்டுக்குச்சென்று சாப்பிட்டதும் 12.10க்கு விறதரின் அறைக்கு வந்துவிடுவேன். எனக்குப் படிப் பித்துக்கொண்டே உலாத்தி உலாத்திச் சாப்பிடுவார். 5 கரண் டிச் சோறும், 5 கரண்டி மரக்கறியும்தான் அவரது சாப்பாடு.

காலை 5 மணிக்கு நித்திரை விட்டெழுந்து நீராடி கோயி லுக்குள் போய் இருந்தார் என்றால் 7.30 க்குத்தான் வெளியே வருவார். காலைச்சாப்பாடு ஒரு சிறிய பாண்துண்டு. 8 மணிக்கு சிசிலியா பாடசாலை, பின் ஆசிரியர் கலாசாலை, 11.30க்கு வந்து தியானத்தில் இருப்பார்.

படிப்பித்தல், விளையாட்டு இவைகளோடு பொது வேலைகளிலும் மும்முரமாக ஈடுபட்டேன். சங்கீத சபை ஒன்றை உருவாக்கி திருமதி நவம் எதிர்வீரசிங்கம், திரு. தில்லையம்பலம், பின்பு திரு. சபாரெத்தினம் ஆசிரியர்களை வேலைக்கமர்த்தி புனித சிசிலியா பாடசாலை, புனித தெரேசா பாடசாலை, புனித மிக்கேல் கல்லூரிகளில் வகுப்புக்கள் வாய்ப்பாட்டும் வயலினும். கூட்டுறவுச் சமாஜத்தையும் மட்டக்களப்பில் உருவாக்கினேன். (இது வேறோர் இடத்தில் விளக்கமாக உண்டு)

புனித மரியாள் பாடசாலை, புனித சிசிலியா பாடசாலைகளில் பிரவேச பண்டித வகுப்புக்களை ஆரம்பித்து, சனி ஞாயிற்றுக்கிழமைகளில் நானே படிப்பித்தேன். இவ்வகுப்புக்கள் அதிககாலம் நீடிக்கவில்லை, ஆங்கில மோகங் கொண்டவர்களாக மாணவர் மாறியதால்.

மட் / சிறைக்கூட மேற்பார்வையாளராகவும் 5 வருடம் சேவையாற்றினேன். ஒருநாள் சிறைக்கூடத்தில் சின்ன உப்போடை மரியான் என்பவரைக் கண்டேன். உரையாடினேன். சில ஆண்டுகளின் முன் தனது சகபாடிகள் சிலருடன் மண் முனைத் துறையடியில் அவரைச் சந்தித்தேன். மரவேர் உயரமாக இருந்த இடத்தில் இவர் இருந்தார். சகபாடிகள் நிலத்தில் இவரைச்சுற்றி அரைவட்டமாக இருந்தனர். எனக்குப் பக்கத்தில் நின்றவர்களது உரையாடல் எனது காதுகளில் விழுந்தது.

மரியான் உண்மையான ஏழைகளின் நண்பன். ஒரு ஏழைக் கன்னிக்கு விவாகம் நடக்கப்போவதை அறிந்தால் ஒரு போடியாரிடம் சென்று, வண்டிலைக் கட்டு, 10 அவணம் நெல்லை ஏற்று, என்னுடன் வா எனக் கூட்டிக்கொண்டு, ஏழைக் கன்னியின் வீட்டில் கொடுப்பான். தனக்கென்று ஒன்றையும் தேடிக் கொள்வதில்லை.

செல்வி அருளம்மா என்னும் ஆசிரியை என்னிடம் சொன்ன கதை. தான் ஒருநாள் மட்டக்களப்புக்குச் சென்று திரும்பி வரும்போது நன்கு இருட்டிவிட்டது. துறையடியில் இருந்து தனது வீட்டுக்கு இடைத்தூரம் இரண்டு மைல்கள். தெருவில் ஒருவர்கூட இல்லை. தெய்வமே நீதான் துணை என்று பயத்தால் நடையும் தள்ளாட நடந்துகொண்டிருக்கும் போது பக்கத்துச் செடிகளுக்குள் இருந்து ஒருவர் வந்து, தங்கச்சி நீ பயமில்லாமல் போ. நான் மரியான். உனது வீடு மட்டும் நான் பின்னால் வருவேன் என்று சொன்னார். இடையிடையே திரும்பிப் பார்ப்பேன். 25 யாருக்குப் பின்னால்

நடந்துகொண்டு வந்தார். விட்டடி மட்டும் வந்தார். பின் ஆளைக் காணோம். இப்படியான ஒரு தியாகி. சிங்கள நாட்டில் இப்படி நன்மை செய்த ஒருவருக்கு நினைவுச் சின்னமும் கட்டியிருக்கிறார்களாமென்று.

ஏழைகள் நண்பர்களாக இருந்ததால் பணக்காரப் போடிமார் பகைவர்களாயினர். ஒரு போடியார் தனது நெல்லை அடாவந்தியாய்ப் பறித்தார் என்ற வழக்கில் 3 மாத மறியலில் வந்திருந்தார். மறியற்கூடத்திலும் மிகவும் சந்தோசமாக பெரிய கிடாரத்தில் சோறு துழாவிக்கொண்டிருக்கும்போது தான் நான் கதைத்தேன். எனது வாழ்நாளில் ஏழை மக்களுக்கு உதவுவதில் மரியானைப்போல எவரையுமே காணவில்லை.

அடுத்த ஆண்டில் மண்முனைத்துறைக்கருகிலுள்ள காட்டுக்குள் ஒரு பிரேதம் கிடப்பதாகத் தகவல் கிடைத்து மரண விசாரணை அதிகாரி திரு. V. இளையதம்பி சென்றபோது என்னையும் கூட்டிச்சென்றார். (இவருக்கு கைநடுக்கம், எழுத மாட்டார், வசதியான நேரம் நான்தான் இலிகிதராகப் பணி புரிவேன்). சடலத்தைக் கண்டதும் மரியான்தான் என நான் கண்டுகொண்டேன். விசாரணையில் அறிந்தவை:

சில போடிமார் திட்டம்போட்டு மரியானுக்கும் அவரது சகபாடிகளுக்கும் விருந்து ஆயத்தம்பண்ணச் சிலரை ஒழுங்கு பண்ணி இரண்டு குடம் கள்ளுக்குள் கமுகம் வேரை ஊறப் போட்டு வடித்தபின் குடிக்கக் கொடுத்திருக்கிறார்கள். கமுகம் வேர் ஊறிய கள்ளு அறிவை மயக்குவதோடு கைகால்களை அசைக்கவும் முடியாமல் செய்துவிடுமாம். எல்லாரும் மயக்கத்தில் கிடந்தநேரம் மரியானை அடித்துக் கொன்றிருக்கிறார்கள். உடம்பு முழுவதும் ஊமைக்காயம். இவ்வளவு நன்மை செய்த ஒருவருக்கு இப்படியான சாவு வரவேண்டுமா? எனக்கே கண் கலங்கிவிட்டது, அழுதும்விட்டேன்.

கல்விக்கந்தோருடன் தொடர்புடைய 63 பாடசாலைகளின் ஆசிரியர் (பட்டின வட்டாரம்) களுக்குத் தலைவர் பதவி வகித்தேன். இது மேலதிகாரிகளின் அநீதியைக் கண்டிப்பதற்கு உதவியது.

கத்தோலிக்க ஆசிரியர் சங்கம் ஒன்றை உருவாக்கி அதில் செயலாளராக இருந்தேன். யுத்தப் படி 'War allowance' என ஒவ்வொரு ஆசிரியருக்கும் 43 ரூ. கிடைத்தது. அதைத் திரட்டி சங்க நிதியாக்கி ஆசிரியர்களுக்குக் கடன் வழங்க உதவினேன். கிழக்கு மாகாண ஆசிரியர் சங்கத்தை உருவாக்கிக் கிழக்கு

மாகாண ஆசிரியர் சங்கப் பிரதிநிதியாக யாழ்ப்பாணம் சென்றேன். (இது வேறொரு இடத்தில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது). யூரி சேவையில் தெரியப்பட்டுத் திருகோணமலை பன்குளம் வழக்கில் 40 நாள் கடமையாற்றினேன்.

திரு. C. W. W. கன்னங்கரா இலவசக் கல்வியை ஆரம்பித்த காலம். ஐந்தாம் வகுப்பில் எல்லா மாணவர்களையும் பரீட்சித்துத் தரம்பிரிக்கும் முறை ஆரம்பமாகியது. இதில் அவர்களது விவேகம் கண்டிப்பாகப் பரீட்சிக்கப்பட்டது. கொழும்பு ஆங்கில ஆசிரிய கலாசாலை அதிபர் திரு. H. S. பெரேரா ஆங்கிலத்தில் புலமைப்பயிற்சி "Intelligent Test" என்ற புத்தகத்தை எழுதியிருந்தார். ஒருநாள் விறதர் பிலிப் அந்தப் புத்தகத்தை என்னிடம் தந்து, இதை நன்றாகப் படித்துவிட்டு இதேமாதிரி ஒன்று எழுது. இதிலுள்ளது ஒன்றும் அப்படியே இருக்கக்கூடாது என்றும் ஆலோசனை கூறிச்சென்றார். வாசித்தேன்.

சென் மேரிஸ் பாடசாலையில் 5ம் வகுப்பில் படித்த 10 மாணவர்களையும், பாடசாலை முடிந்ததும் ஒருமணி நேரம் படிப்பித்துச் சில வினாக்களைத் தயாரித்தேன். அவற்றுள் ஒன்று – 5 என்னும் இலக்கத்தை 4 முறை எழுதிக் கூட்டினால் $6\frac{1}{2}$ விடை வரவேண்டும். கரும்பலகையில் எழுதிக் காட்டச் சொன்னேன். (இதற்கு விடை $5+\frac{5}{5}+.5=6\frac{1}{2}$) உடனே ராதாக்கிருஷ்ணன் என்னும் மாணவன் – இவர் நியாயதுரந்தரர் திரு. N.S இராசையாவின் மகன். வயது 10. ஒரு நிமிடம் யோசித்துவிட்டு வெண்கட்டியை எடுத்து ($5+{}^{\cdot}5+{}^{\cdot}5+{}^{\cdot}5=6\frac{1}{2}$) என எழுதிவிட்டான். அப்பையனைக் கூட்டிக்கொண்டு விறதர் பிலிப்பிடம் ஓடினேன். அவருக்கும் புழுகம் தாங்கமுடியவில்லை. அவனைக் கட்டியணைத்து நெற்றியில் சிலுவை வரைந்து, நீ நன்றாக வருவாய் என வாழ்த்தினார்.

பல ஆண்டுகளின் பின்பு ஒருநாள் புளியந்தீவுப் பாலத்தால் நடந்துகொண்டிருந்தேன். கார் ஒன்று பின்னால் வந்து "காரில் ஏறுங்கள் சேர் நான் கொண்டு விடுகிறேன். நான்தான் ராதாகிருஷ்ணன். இப்போது பௌதிகப் பேராசிரியராக பெரதேனியாப் பல்கலைக்கழகத்தில் பணிபுரிகின்றேன்" எனக் கூறி என்னைப் போகவேண்டிய இடத்திற் சேர்ப்பித்தார்.

# 5. புத்திப் பரீட்சைப் புத்தக வெளியீடு, கலை, இலக்கிய முயற்சிகள்

புத்திப் பரீட்சை வகுப்புக்களை நடாத்தி, 25 வினாப் பத்திரங்களைத் தனித்தனியாக எழுதி ஒரு பையில் போட்டு, விறதர் பிலிப்பிடம், இப்படியாக அச்சிடுவோம். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வினாப்பத்திரமாகக் கொடுக்கலாம். புத்தகமாகக் கட்டினால் எல்லா வினாக்களையும் மாணவர் முன்கூட்டியே வாசித்துவிடுவார்கள். அவர்களது விவேகம் தடைப்படும் என்றேன். அவர் அதை ஏற்றுக்கொண்டது மட்டுமல்ல, H. S. பெரேரா உன்னிடம் பிச்சை வாங்கவேண்டும் என்றும் கூறினார். யாழ்ப்பாணம் சென்று புனித வளனார் அச்சகத்தில் 500 பக்கற் அச்சிடுவித்தேன். ஒரு ரூபாவுக்கு விற்பனை செய்தேன். ஒருமாத காலத்தில் எல்லாம் விற்பனையாகிவிட்டன.

அப்போது தங்கப்பதக்கப் பரிசிலுடன் அப்புக்காத்துப் பட்டம் பெற்ற திரு. A. தவராசாவின் மகன் (இப்போது கட்டிடத் திணைக்களத்தில் உயர்ந்த பதவியில் இருக்கிறார். மட்/பெரிய ஆஸ்பத்திரிக் கண் டாகுத்தரின் கணவர்.) புனித மிக்கேல் கல்லூரியில் 5ம் வகுப்பில் படிக்கிறான். தகப்பனிடம் 6½ வரும் கணக்கைக் கேட்டிருக்கிறான். தகப்பன் தனக்குத் தெரியாது என்று சொல்ல, எந்த மடையன் உங்களுக்கு தங்கப் பதக்கம் பரிசிலாகத் தந்ததென்று கிண்டல் பண்ணியிருக்கிறான். இது அவரது மனத்தை அழுத்திற்று. சில நாள்களின் பின் ஒருநாள் நான் ஆனந்தா புத்தகசாலையில் இருந்து வரும்போது தன் மன ஈறலை வெளிப்படுத்தினார். நான் விடையைக் கூறினேன். சந்தோஷமிகுதியால் தனது சட்டைப் பையில் கையைவிட்டார். ஆக 10 ரூபாதான் இருந்தது.

இதை எனது அன்புப்பரிசாக ஏற்றுக்கொள்ளுங்கள். மட்டக் களப்பிலும் இப்படியான மூளைசாலிகள் இருப்பதையிட்டுப் பெருமைகொள்ளுகிறேன் எனக் கூறிச் சென்றார்.

இதைப் பிலிப் விறதரிடம் சொன்னபோது, மற்றவர்களுக் குச் சிரமம் கொடுக்கக்கூடாதுதான் எனக்கூறி ''கிருத்திருமத் திறவுகோல்'' என்னும் பெயரில் 100 விடைப்புத்தகங்கள் மாத்திரம் அச்சிட்டு ஒரு பாடசாலைக்கு ஒன்றாக விநியோ கித்தோம்.

வினாத்தாள்கள் அடங்கிய ஆயிரம் பைகளை இரண்டாம் பதிப்பாக யாழ்/ புனித வளனார் அச்சகத்திலேயே அச்சிட் டோம். அச்சிடத் தொடங்குமுன் எனக்கு ஒரு கடிதம் எழுதி னார்கள். தாங்கள் இரண்டாயிரம் பைகள் செய்து கூலியாக ஆயிரத்தைத் தாங்கள் எடுப்பதாகவும், மற்ற ஆயிரத்தை எனக்கு அனுப்புவதாகவும், அச்சிடும் கூலியே வேண்டாம் எனவும் குறிபபிட்டு.

நாங்கள் அதற்குச் சம்மதித்தோம். யாரோ ஒருவரின் கதையைக் கேட்டு மூன்றாவது பதிப்பாக இரண்டாயிரம் பிரதி கள் புத்தகமாக அச்சிடும்படி யாழ்/ சண்முகநாதன் அச்சகத் துக்கு நான்தான் கொடுத்தேன். அவர்கள் நேர்மை தவறி, குறைந்த விலையில் எனக்கு இரண்டாயிரம் பிரதிகளைத் தந்துவிட்டு அவர்களும் ஆயிரம் பிரதிவரையில் தாங்களாக விற்கத்தொடங்கிவிட்டனர்.

நான்காவது பதிப்பாகக் கட்புலப்பயிற்சி 10 பக்கங்களைக் கூட்டி ''புளொக்'' Block எல்லாம் செய்து மட்/ பாத்திமா அச்சக உரிமையாளர் திரு. கிளறன்ஸ் அச்சிட்டுத்தந்தார். 1.25 சதப்படி விற்றோம். பிலிப் விறதரின் ஆலோசனைப்படி ஐந்தாவது பதிப்பாக மதுரை டி. நொபிலி அச்சகம் சென்று இரு கிழமை அங்கு தங்கி அட்டைப்படம் முதலியவற்றுக்கு ஆலோசனைகூறி ஐயாயிரம் பிரதிகள் அச்சிட்டோம்.

கொஞ்ச நாட்களின்பின் யாழ்ப்பாணத்திலுள்ள சந்தன நங்கை என்னும் பெண்மணி இதிலுள்ள சில வினாக்களை மாற்றி அமைத்துக் குறைந்த விலையில் விற்கத்தொடங்கினார். இதை அறிந்த பிலிப் விறதர், மற்றவர்கள் தங்களைவிடத் திறமையாக வருவதைச் சிலர் விரும்புவதில்லை. அது அந்த ஊர் வழக்கம் எனச் சிரித்துக்கொண்டே கூறினார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு பதிவுத்தபால் வந்தது. எனது புத்தகத்தில், தொழில்கள் ஒரு பக்கம், இதனால் ஏற்

பட்ட பெயர்கள் மறுபக்கம் - இணைத்துக் காட்டுவது. இதில் சவம் காவுவோர், கோவியர் என வரும் தங்களை மரியாதை யீனப்படுத்தியதற்காக மான நஷ்டமாகப் பத்தாயிரம் ரூபா கோட்டுமூலம் பெறப்போவதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

அதற்கு எனது பதில் —

மாணவரின் விவேகத்தை மட்டிடுவதே இவ் வினாக்களின் நோக்கம். விவேகமுள்ள மாணவன் செய்யவேண்டியது சவம் காவுவோர் கோவியர் எனப் பொருத்திவிட்டு, அக்கோட்டில் இது இப்போது நடைமுறையில் இல்லை அல்லது இது பழைய வழக்கம் என எழுதுவது. உங்களது கடிதமூலம் உங்கள் விவேகத்தையும் மட்டிடமுடிகிறது என்பது.

இப்படி இருக்கையில் அப்பெண்டிக்ஸ் ஆப்பரேஷன் செய்ய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டேன். (இதைப்பற்றிய விளக்கம் வேறொரு இடத்தில் தரப்பட்டுள்ளது.) வைத்திய சாலையில் இருந்து வந்த சில மாதங்களின்பின் எஸ்.எஸ் ஸி. வகுப்பு மாணவருக்கு இலக்கியப் புத்தகமாக இருந்த கிருஷ்ணன் தூதுச்சருக்கப் பாடல்கள் கஷ்டமாக இருந்ததால் அதை வசனநடையில் எழுதி வினாப்பத்திரங்களும் சேர்த்து மாணவர் கைந்நூல் என்னும் பெயரில் வெளியிட்டேன். இதில் ஒரு வசனம் உதாரணத்துக்காகக் குறிப்பிடுகின்றேன். ''புல்லர்கள் நிறைந்த சபைக்குப் புல்லாங்குழலுடன் புறப்பட்டான் கண்ணன்.'' பலரும் விரும்பி வாசித்தனர். அப்போது நான் விரும்பி வாசிக்கும் புத்தகங்கள் திரு. R. P. சேதுப்பிள்ளை அவர்கள் எழுதிய கட்டுரைகள் – பாடங்கள்.

அப்போது கத்தோலிக்க சமயத்துக்கென இருந்த சிறிய புத்தகங்கள் சின்னக் குறிப்பிடம், பெரிய குறிப்பிடம் என்னும் வினா விடைப் புத்தகங்களே. இவைகள் யாழ்/புனித வளனார் அச்சகத்தால் வெளியிடப்பட்டவை. நான் சமயத்தில் டிப்ளோமா பெற்றிருந்ததால் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு (விவிலிய நூல்) இரண்டிலுமுள்ள சிலவற்றைக் கதைரூபமாக எழுதி வேத உபதேசம் என்னும் பெயருடன் நான்கு புத்தகங்களை (4ம், 5ம், 6ம், 7ம்) நான்காம் வகுப்புத் தொடங்கி ஏழாம் வகுப்பு வரை தாங்களே வாசித்து விளங்கக்கூடிய எளிய நடையில் வெளியிட்டேன். இவை அமெரிக்காவில் இருந்து வந்த குருக்களுக்கும் விளங்கக்கூடியதாக இருந்ததாகக் குறிப்பிட்டனர். அதிகமாக வாங்கி மாணவர்களுக்கு இலவசமாக விநியோகம் செய்தனர்.

பேச்சுப்போட்டி, நாடகப்போட்டிகளில் அதிகமாக முதலிடம் பெறுவது சென்மேரிஸ் பாடசாலையே. பாட்டு எழுத

மெட்டுத் தேவை. எனவே சினிமா ஒன்றையும் தப்பவிடுவதில்லை. M. K. தியாகராஜ பாகவதர், அசுவத்தாமா நடித்த சிந்தாமணி என்னும் படத்தைப் பன்னிருதடவைகளுக்கு மேல் பார்த்ததாக ஞாபகம்.

சுதந்திரதின விழாவையொட்டி நடந்த போட்டிகளில், மட்டக்களப்பில் கடமையாற்றிய D. R. O. ஒருவர் அரசாங்கத்தில் பெருந்தொகைப் பணத்தைப்பெற்றுப் பயனற்ற வழியில் செலவுசெய்து தான் நன்மையடைந்தார். அவர் நடந்து கொண்ட விடயத்தையே நாடகமாக்கி மேடையேற்றி முதலாம் பரிசையே பெற்றேன். அதில் வந்த பாட்டின் ஒரு வரி ''ஆறு முழுதும் ஓடித்திரிந்த ஆக ஒரு தோணி, அதுவே முதலாம் பரிசும் பெற்ற ஆக ஒரு தோணி''. அடுத்த நாள் அவரே நேரில் வந்து இனிமேல் இப்படி மானத்தை வாங்க வேண்டாம் எனத் தாழ்மையுடன் கேட்டுக்கொண்டார்.

கல்முனை, கார்மேல் மகளிர் கல்லூரிக் கட்டிட நிதிக்காக ஒரு நாடகம் பழக்கும்படி கேட்டனர் ஒவ்வொரு நாளும் பின்னேரம் பாடசாலை முடிந்ததும் வஸ்ஸில் கல்முனை சென்று இரவு 11 மணிக்குத்தான் வந்து சேருவேன். இந்த நாடகத்தில் இப்போது திருமலை 99, கிறீன் வீதியிலுள்ள திருமதி நேசம் ஜேசுதாசனும் ஒரு நடிகையாக நடித்தது ஞாபகம் வருகிறது. குறிப்பிடக்கூடிய தொகை இதன்மூலம் வசூல் ஆகியது.

பாடசாலை மாணவனாக இருக்கும்போது பல நாடகங்களில் நடித்துள்ளேன். ஆசிரியர் பதவியில் இருந்தபோதும் சில நாடகங்களில் ஆண், பெண் பாத்திரங்களிலும் பங்கு கொண்டேன். குறிப்பிடக்கூடிய நாடகங்கள் இரண்டு. ஒன்று தமயந்தி, மற்றது மதிசந்திரை. மதிசந்திரை என்பது சந்திரமதி மாறி நிற்கிறது. அரிச்சந்திரன் நாடகத்தை நானே மாற்றி சந்திரகரி என எழுதினேன். வாய்மை தவறாதவன் என்ற சொல் மாறி எப்போதும் பொய்யே பேசுபவன் என அமைந்தது.

இதில் சந்திரகரியாக நடித்தவர் மட்/பெரும்பாக வித்தியாதரிசி A. சரவணமுத்து என்பவர். நான் அவரது பத்தினி மதிசந்திரை. கல்விப்பணிப்பாளராக இருந்தவர் திரு. V. K. நாதன் அவர்கள். முதன்முறை மட்/மத்திய கல்லூரி மண்டபத்தில் மேடையேறி இரண்டாவது முறையாகக் கல்முனை கார்மேல் கழக மண்டபத்தில் மேடையேற்றப்பட்டது.

திரு. சரவணமுத்து என்பவர் மிஞ்சும் மேலதிகாரி வர்க்கத்தைச் சேர்ந்தவர். உதாரணமாக சித்திரவகுப்பிலே ஒரு



அதி. வண. ஆயர்
L. R. அன்ரனி
*1974ல் ஆயரானவர்.*
*1978 புயலின் பின் புனரமைப்புப் பணிகளை மேற்கொண்டவர். (பக்: ix)*



அதி. வண. ஆயர்
இங்ஸ்லி சுவாம்பிள்ளை
*7-6-83 முதல் மட்டுநகரின் ஞானத் தந்தையாகப் பணி ஆற்றுபவர். (பக்: ix)*



அருட்தந்தை சுவாமிநாதன்
மட்டுநகரில் கத்தோலிக்க குருமனை ஆரம்பித்தவர்.
(பக்: 154)



அருட்சகோதரர் பிலிப்
ஆசிரிய உலகத்துக்குப் புது வழியைக் காட்டியவர்.
(பக்: 16)




மகாவித்துவான் F. X. C. நடராசா
கரப்பந்தாட்ட வீரர், மிலிற்றரி
கலியாணம் நாடகத்தில் மணப்
பெண். (பக்: 25)



ஆசிரியமணி K. L. ராஜேந்திரம்
மிலிற்றரி கல்யாணம் நாடகத்தி
மாப்பிள்ளை. (பக்: 25)



சுவாமி விபுலாநந்தர்
ஊர்கூடிச் செக்குத் தள்ளமுடி
யாது என்று உலகியல் அறி
வைப் புகட்டியவர்.
(பக். 28)



அருட்சகோதரர் ஞானப்பிரகாசம்
புனித வளனார் அச்சகத்தை வழி
நடாத்தி இன்று அமரராகிவிட்ட
போதும் அனைவரது நெஞ்சங்களி
லும் நிறைந்தவர்.

முறை சிகப்பு நிறத்துக்கு வெற்றிலை எச்சிலைப் பூசக்கூடாதா எனக் கேட்ட புத்திசாலி. கல்முனை மேடையில் வைத்து எழுதப்படாத வசனம் ஒன்றைச் சொல்லிவிட்டேன். நீயும் ஒரு மனிசனா வாய் திறந்தால் கொட்டுவது முழுதும் பொய். போடுகிற கால்சட்டைக்கும் மதிப்பில்லை. மானம் இருந்தால் உப்புச்சிரட்டைக்குள் விழுந்து செத்துத்தொலை என்று.

அன்றுதொடங்கி என்னுடன் கதைக்காமலே விட்டுவிட்டார். அப்போது என் இரத்தத்துடன் கலந்திருந்த கொள்கை மேலதிகாரிகளின் கொட்டத்தை அடக்குவது என்பது. ''ஆணா பெண்ணா அழகுடையவர்'' என்னும் நான் எழுதிய சிறு நாடகம் இலங்கை வானொலியிலும் ஒலிபரப்பாகியது. இதன் முடிவு ஆணுக்குப் பெண்ணழகு. பெண்ணுக்கு ஆணழகு என்பது.

ஆசிரியர்க்கான கருத்தரங்கு ஒன்று இரு நாட்களாக சென் மேரிஸ் பாடசாலையில் நடந்தேறியது. முடிவில் ஒரு தமாஷா இருந்தால் நல்லது என நினைத்து F. X. C. நடராசா (6½ அடி உயரம்) அவர்களைப் பெண் வேடமாக்கி, (4¾ அடி உயரமான) காலம்சென்ற திரு. K. L. இராசேந்திரம் அவர்களை ஆண் வேடமாக்கி நான் தரகராக நின்று ''மிலிற்றறிக் கலியாணம்'' என்னும் பெயருடன் மேடையேற்றுவித்தேன். இதைப்பற்றி வேறொரு இடத்தில் வண. நோபேட் ஒக்கஸ் அவர்கள் கூறியுள்ளவை. இவர்களை இன்று கண்டாலும் சிரிக்காமல் இருக்கமுடியவில்லை என்பதைச் சிரித்துக்கொண்டே கூறுகின்றேன் என்னும் வசனங்கள்.

எனது சிநேகிதர் ஒருவர் அவரது சகோதரனுக்கு மாதாந்தம் படிப்புக்காக இந்தியாவுக்குப் பணம் அனுப்பவேண்டும். வருமானவரி செலுத்துபவர்கள் மாத்திரம் நேரடியாகப் பணம் அனுப்பலாம். மற்றவர்கள் கள்ளத்தனமாக அனுப்பப் பெரும் தொகைப் பணம் செலவு. இதை என்னிடம் சொன்னபோது நான் எனது சம்பளத்துடன் வேறுவித வருமானத்தையும் காட்டி, மூன்று மாதத்துக்கு ஒருதரம் வருமானவரி கட்டினேன். இதனால் என் சிநேகிதர் நன்மையடைந்தார்.

எனது பெயர் தமிழ் பேசும் யூரி, ஆங்கிலம் பேசும் யூரி, வருமானவரி செலுத்தும் யூரி என மூன்றுவகைத் தகுதி பெற்றதால் திருகோணமலை, பன்குளம் கொலை வழக்கில் யூரி சேவைக்குத் தெரியப்பட்டேன். 40 நாள்வரை திருமலை நகரசபை மண்டபத்தில் வழக்கு நடந்தது. சனி ஞாயிற்றுக்கிழமைகளில் கந்தளாய்ச் சீனித்தொழிற்சாலை, குளக்கட்டுக்கள், கன்னியா வெந்நீரூற்றுக்களைக் கண்ணாரக் கண்டு நீரின்

சூட்டின் அளவையும் கண்டுபிடிக்கக்கூடியதாக இருந்தது: கோணேஸ்வரர் கோயிலில் (இப்போது கச்சேரி) மான் கூட்டங்களைக் கண்டுகளிக்கும் வசதியும் ஏற்பட்டது. இடையிடையே மோட்டார்ப்படகில் மூதூருக்குச் சென்று சில சிநேகிதர்களையும், ஆசிரியர்களையும் கண்டு உறவாடும் சந்தர்ப்பமும் ஏற்பட்டது.

நான் புளியந்தீவில் வசித்தபோது (10 வயதிருக்கும்) கூடி விளையாடிய ஒரு பறங்கிப் பெண்பிள்ளை பெயர் 'மேபிள்' வெற்றிவேல் என்னும் தபால் அதிபரை (இவர் தமிழர்) விவாகம் முடித்து மூதூரில் அரசாங்க விடுதியில் குடியிருந்தார்கள். இப்பிள்ளை சிறு வயது தொடங்கியே வலது கைப் பெருவிரலை எப்போதும் வாய்க்குள் வைத்துச் சூப்பும் பழக்கம் உடையவள். நாங்கள் பகிடிபண்ணிச் சிரிப்பது. மூதூர் சென்றபோது இப்பெண் பேரப்பிள்ளைகளுடன் இருந்தாள். இதிலே சிரிப்புக்கும் கவர்ச்சிக்கும் உரிய விடயம் என்னவென்றால், இவவுடைய மகள், தனது பிள்ளைக்கு (பேத்தி) பால் கொடுத்துக்கொண்டிருந்தாள். அப்பிள்ளை தாயின் முலைக் காம்பைச் சூப்பிக்கொண்டிருக்க, அம்மாவின் அம்மா 'மேபிள்' தனது பெருவிரலைச் சூப்பிக்கொண்டிருந்தாள்.

அந்தநேரம் என்னிடம் படம் பிடிக்கும் கருவி ஒன்று இருந்திருந்தால் அப்படத்தை என் மாணவர்க்குக் காட்டியிருக்கலாம். ''தொட்டிலிற் பழக்கம் சுடுகாடு மட்டும்'' என்னும் பழமொழியை விளக்க வேறு எந்த விளக்கமும் தேவைப்பட்டிருக்காது.

# 6. சித்திரச் செயற் கண்காட்சி

ஆசிரியர் சித்திரத் தராதரம் பெற்றவர்கள் 10 பேரைத் தெரிந்து, சுட்டுப்பெத்தை என்னுமிடத்துக்கு, செய்முறைப் பயிற்சிக்காக அனுப்பினர். அதை முடித்து வந்தபின், படித்தவற்றைப் பயன்படுத்துவதற்காக வகுப்புக்களை அமைக்குமாறு என்னையே பணித்தார் கல்விப்பணிப்பாளர் திரு. சங்கரலிங்கம் அவர்கள்.

மட்டக்களப்பு, கல்முனை, திருகோணமலை மூவிடங்களிலும் ஆசிரியர்க்கான வகுப்புக்களை ஆரம்பித்தேன். ஒவ்வொரு வகுப்பிலும் சுமார் 100 ஆசிரியர்கள் பயிற்சிபெற்றனர். கல்முனையில் பல ஆசிரியர்கள் முன்னேற்றங் கண்டனர். மட்டக்களப்பில் ஓரளவு, திருகோணமலை திரு. தா. பி. சுப்பிரமணியம் ஒருவரே தலைசிறந்து விளங்கினார்.

திருமலை வகுப்புக்குப் பொறுப்பாளராக, அப்போது வின்சன் மகளிர் பாடசாலைச் சித்திர ஆசிரியராக இருந்த திரு. அருளானந்தமும் நானும் இருந்தோம். ஆறு மாதங்களாக, தொடர்ந்து ஒவ்வொரு வெள்ளிக்கிழமை இரவிலும் 8 மணி புகைவண்டியில் திருமலை செல்வோம். தி/இந்துக் கல்லூரியில் வகுப்புகள் நடந்தன. அப்போது அதிபராக இருந்த காலஞ்சென்ற திரு. இளையதம்பி அவர்கள் எங்களுக்குப் பெரிதும் உதவினார்.

காலை 6 மணிக்குத் திருமலையை அடைந்தாலும், பயிற்சி பெறுவோர் தூரத்தில் இருந்தும், ஆறுகள் கடந்தும் வர வேண்டியிருந்ததால் சனி காலை 11 மணிக்குத்தான் வகுப்பு ஆரம்பம். இடைவேளையின் பின் 3 மணி தொடங்கி 5 மணி வரை, ஞாயிறு 8 மணி தொடங்கி 12 மணி வரை, மட்டக்களப்பு கல்முனை வகுப்புகள் சனி ஞாயிறுடன் வாரத்தில்

இடையில் ஒருநாளும் நடைபெற்றன. அந்த நாட்களில் மேற் பார்வைக்காக அங்கு செல்வேன். இவைகளுக்காகக் கணிச மான தொகையைப் பெற்றேன்.

வகுப்புகள் முடிவடைந்துவிட்டன. ஒருநாள் கல்விப் பணிப்பாளர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் என்னைக் கூப்பிட்டு, சித்திரத்துக்குப் பொறுப்பான வித்தியாதிபதி கொழும்பில் இருந்து வருகிறார். அன்று பயிற்சிபெற்ற ஆசிரியர்களுக்குச் சான்றிதழ்களும் வழங்குவார். அதற்கான ஆயத்தங்களைச் செய்யும்படி கூறினார். அன்றிரவு ஆலோசித்து முடிவு எடுத் தேன். மட்/சிசிலியா மகளிர் பாடசாலையில் 3 நாள், வாழைச் சேனை பேய்த்தாளை அரசினர் கல்லூரியில் 2 நாள், கல்முனை கார்மேல் கழகத்தில் 3 நாள், அக்கரைப்பற்று இ.கி.மி. பாட சாலையில் 2 நாள், திருகோணமலை சென் மேரிஸ் கன்னியர் மடத்தில் 3 நாள், மூதூர் அந்தோனியார் பாடசாலையில் 2 நாள் (மூதூர் முஸ்லிம் பெண்களுக்கென மூன்றாம் நாளும் வைக்கப்பட்டது) நான் தனித்து ஆலோசித்தே இந்த முடிவை எடுத்தேன்.

1940 வரையில் இருக்கும். முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்தர் அவர்கள் மட்/கல்லடி சிவாநந்தா வித்தியாலய அதிபராக இருந்த காலம். யாப்பிலக்கணம், அணியிலக்கணம் இவைகளில் சில சந்தேகங்களைத் தீர்ப்பதற்காக இடை யிடையே சுவாமி அவர்களைச் சந்திப்பது வழக்கம். படிப் பித்ததுடன் வாழ்க்கைச் சிக்கல்களைத் தீர்க்கும் சில ஆலோ சனைகளும் கூறிவைத்தார். அவைகளில் ஒன்றுதான், 'எந்த அலுவலையும் ஊர்கூடிச் செக்குத்தள்ள நினைப்பது பலன் தராது, அலுவலைச் செய்துமுடிக்கவும் முடியாது. தனித்து ஒரு முடிவுக்கு வரவேண்டும். முதலாம் நாள் அலுவல்கள் முடிய அவைகளில் ஏற்பட்ட பிழைகளைச் சொல்வதற்குப் புத்திசாலி ஒருவரைத் தெரிந்து வைத்துக்கொள்ளவேண்டும். அவர் சொல்லும் ஆலோசனைகளை அலசி ஆராய்ந்து தேவை யாயின் மறுநாள் திருத்திக்கொள்ளவேண்டும்'. இதையே நான் இன்றுவரை கடைப்பிடித்தும் வருகின்றேன்.

மறுநாட் காலை திரு. சங்கரலிங்கம் அவர்களிடம் எனது திட்டத்தை விளக்கி இதற்காக வித்தியா கந்தோர் எவ்வளவு பணம் செலவு செய்யும் எனக் கேட்டபோது, அவர் ஒரு சத மும் தரமுடியாது. ஸ்ரோரில் உள்ள கலர் பவுடர், விறஷ், டுப்ளிக்கேற்றிங் பேப்பர் எல்லாம் எடுக்கலாம் என்றார். ஆனால் பிரவேசச்சீட்டு ஒன்று 25 சதப்படி விற்கலாம் என உத்தரவு தந்தார். இது ஒன்றே போதும் எனத் தீர்மானித் தேன்.

ஒரு இலட்சம் பிள்ளைகள் வரக்கூடும். எனவே 25 ஆயிரம் ரூபா பணம் தேறும் எனத் திட்டம் வகுத்தேன். சித்திரம் கீறுவதற்குக் கடதாசி தேவை. இரண்டாயிரம் ரூபாவுடன் உதவிக்கு ஒருவரையும் கூட்டிக்கொண்டு வாடகைக் கார் ஒன்றில் வாழைச்சேனை காகிதத் தொழிற்சாலைக்குச் சென்றேன். அங்கு முகாமையாளராக இருப்பவர் திரு. தங்கராசா என்று பெயர்மாத்திரம் கேள்வி. ஒருநாளாவது அவரைக் காணவும் இல்லை, கதைக்கவுமில்லை.

'துணிவே துணை' என எண்ணிக்கொண்டு அவரது அலுவலக அறைக்குச் சென்றேன். விடயத்தை விளக்கினேன். உடனே ½ மீற்., ¾ மீற். அகலங்கொண்ட 1000 மீற்றருக்கும் கூடுதலாக, சுருள்களை, காருக்கு உள்ளும் மேலும் ஏற்றினார்கள். எனது மனம் அடித்துக்கொண்டது. இரண்டாயிரம் ரூபாவுக்கு மேலாகக் கேட்டால் என்ன செய்வதென்று. நான் சொன்னேன்: ஐயா, இவ்வளவும் போதும், தேவையானால் திரும்பவும் வருகிறேன் என்று. எவ்வளவு காசு என்று மெல்ல மரியாதையாகக் கேட்டதற்கு அவர் இது ஒரு சேவை, நாட்டுக்கும் மாணவர்க்கும் தேவை. எனவே 500 ரூபா தந்தால் போதும் என்றார். எனக்குப் பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல இருந்தது. அவருக்கு நன்றி கூறிவிட்டு வித்தியா சந்தோர் சென்று திரு. சங்கரலிங்கம் அவர்களிடம் விடயத்தைக் கூறினேன். வாயில் கையை வைத்தார். எல்லாம் வெற்றி தான் என்றார். பணியாளரை அழைத்து ஸ்ரோரில் பத்திரமாக அடுக்கி வைக்கச்சொன்னார்.

மறுநாள் எனக்கு 40 நாள் கடமை லீவு அனுமதிக்கப்பட்ட கடிதத்துடன், எனக்கு உதவியாளராகக் கடமையில் ஈடுபடுபவர்களுக்கென, தனது ஒப்பத்துடன் ஒரு கட்டுக் கடிதமும் தந்தார். அப்பத்திரத்தில் விலாசமிட்டு, செயலாளர் என எனது ஒப்பமிடவேண்டும் எனவும் கூறினார். அப்போதெல்லாம் மேலதிகாரிகள் மிஞ்சுவார்கள் என்ற எண்ணமே என் மனத்தை விட்டு அகன்றிருந்தது.

சித்திர வித்தியாதரிசி ஜனாப் குசைன் அவர்களை அழைத்துத் திட்டம் தீட்டினேன். காட்சி நடைபெறும் பாடசாலை அதிபர்களுக்கு, காட்சி நடைபெறும் நாட்களுக்கு முந்திய நாளும் பிந்திய நாளுமாக விடுதலை கொடுக்கும்படி கடிதங்கள் அனுப்பப்பட்டன. சித்திர வித்தியாதரிசியும் நானும் காட்சி நடக்கப்போகும் பாடசாலைகளுக்குச் சென்று இடவசதி, தங்கும் வசதிகளைக் கவனித்தோம்.

ஒரு ஸ்ரென்சில் பேப்பரில் 10 சீட்டுக்கள் வீதம் தட்டச் சால் வெட்டி 5 றீம் பேப்பரில் 5×500×10=25000 இருபத் தையாயிரம் சீட்டு ஆயத்தமாயிற்று. இலேசாகக் கிழிப்பதற் காகத் துவாரம் போடும் வேலையை அருட்சகோதரி அன்ரனி னாவிடம் பொறுப்புக் கொடுத்தேன். அவர் கன்னியர் மடத் தில் 4 பிள்ளைகளிடம் 4 தையல் மெஷின்களில் நூல் போடா மல் தைத்துத் துவாரமிட்டு 5 நாட்களில் ஆயத்தஞ் செய்து விட்டார். 10 கடதாசிகளை ஒன்றாகப் 'பின்' அடித்தாயிற்று. விற்பனை செய்ய இரு ஆசிரியர்கள் இடத்துக்கிடம் ஒழுங்கு செய்யப்பட்டது.

எனது செயலாளர், காலஞ்சென்ற R. சதாசிவம் ஆசிரியர். பொருளாளர் திரு. N. இராசதுரை ஆசிரியர், ஒவ்வொரு நாளும் விற்பனையாகும் சீட்டுக்களைக் கணக்கெடுத்துப் பணத்தையும். மிகுதிச் சீட்டுக்களையும் பொருளாளர் பொறுப் பெடுப்பார்.

ஒரு இலட்சம் மாணவருக்கு மேல் பார்வையாளர்கள். (வளர்ந்தோரும் உட்பட) 25,000 ரூபாவுக்கு மேல் பணமும் வசூல் ஆகியது. செலவுபோக மிகுதிப் பணத்தை என்ன செய்ய லாம் என ஆலோசித்து, திருகோணமலை சென் மேரிஸ் மகளிர் கல்லூரிக் காட்சி முடியும் நாளிலேயே கொழும்பில் இருந்து சித்திர வித்தியாதிகாரி வருகைதருவார், சான்றிதழ்கள் வழங்குவார் எனவும் அறிவித்தல் கிடைத்தது.

எனவே மட்டக்களப்பு, கல்முனையில் நடந்த வகுப்பு களில் பங்குபற்றியோரையும் திருகோணமலைக்கு வரும்படி ஏற்பாடு செய்து, திருகோணமலையிலுள்ள பிரமுகர்கள் 200 பேர் வரை அழைத்து மதியபோசனமும் அளித்துக் கோலாகல மாக முடிவுற்றது. இதற்காக (5000) ஐயாயிரம் ரூபாவரை யில் செலவு. சமுகந் தரமுடியாதவர்களின் சான்றிதழ்களை நானே பெற்று, தபால்மூலம் அனுப்பிவைத்தேன்.

ஆரம்ப தினத்தைப்பற்றிய சிறு குறிப்பு:

திறப்பு விழாவுக்காகக் கல்விப்பணிப்பாளர் திரு. சங்கர லிங்கமும், பல பிரமுகர்களும் வந்துவிட்டார்கள். மட்/சிசீலியா மகளிர் பாடசாலை வளவிற்குள், இரு பக்கமும் இவ்விரண்டு தென்னங் கைமரங்கள் நடப்பட்டு நான்கு மரங்களையும் இணைத்த ஒரு தட்டியில் 'சித்திரச் செயற்காட்சி' என எழுதப்பட்டிருந்தது. அதற்குமேல் தனித்தனி 12 அடி வரை நீளமுள்ள மூன்று விறஷ் (தூரிகை)கள். தும்புப்பகுதி மாத்

திரம் சிகப்பு, நீலம், மஞ்சள் ஆகிய மூன்று மூலவர்ணங்களைக் காட்டின.

இந்த முகப்பு, கண் வைக்காத முகம்போன்ற தோற்றம் அளித்தது. திரு. சங்கரலிங்கம் அவர்களிடம் சொன்னேன்: திறப்பு விழாவுக்கு வந்து அதை ஆரம்பித்து வைப்பவரே தட்டியையும் கிறவேண்டும். அதற்கு அவர் தன்னால் முடியாது என மறுத்தார். தனித்தனியாக வர்ணம் இருந்த சிறிய தகரங்களுள் வெள்ளை நூல் கயிறுகளைப் போட்டு இரு தொங்கல்களும் வெளியே தெரிந்தன. ஒவ்வொரு கயிற்றையும் தூக்கி நான் சொன்னபடி மேசையில் வைத்திருந்த 8 அடி நீளம் 3 அடி அகலமாக சொம்பிறஸ்ற் காட்போட் மட்டையில் போட்டார். எனது உதவியாளர்கள் நாலுபேர். அதேமாதிரி மற்ற மட்டையைத் தூக்கி அதன்மேல் போட்டு ஏறி இருந்தார்கள். ஒவ்வொரு கயிறாக மெல்லமெல்லத் திறப்பு விழா நாயகர் இழுத்துக்கொண்டே வந்தார்.

எல்லாம் இழுத்துமுடிந்ததும், இரு தட்டிகளையும் தூக்கி இதற்கென இருந்த கொழுக்கியில் கொழுவிவிட்டேன். என்ன அலங்காரம், எத்தனை நிறங்கள். ஒருநாளும் கண்டிராத எத்தனையோ உருவங்கள். சிதம்பர சக்கரத்தைப் பேய் பார்த்தது போல எல்லாரும் அசைவாட்டமின்றிப் பார்த்துக்கொண்டே இருந்தனர். உள்ளே செல்கின்றோம். மண்டபத்தினுள்ளே மருந்துக்குக்கூட ஒரு படம் இல்லை கயிறுகள் மாத்திரம் சோணால் வீணாலாகக் கட்டப்பட்டிருந்தன. எல்லார் மனத்திலும் இதுவும் ஒரு காட்சியா, வீண் ஏமாற்றம்தான் என ஏமாறுகின்றனர்.

திறப்புவிழா நாயகரிடம் ஒரு கடதாசியையும், மெழுகுதிரி ஒன்றையும் கொடுத்து அவரது பெயரைக் குறுக்கும் மறுக்குமாக எழுதச்சொன்னேன். எழுதினார். 3 அங்குல அகலமான தூரிகை (விறஷ்) ஒன்றைக் கொடுத்துக் கரைத்துவைத்திருந்த வர்ணத்தில் தொட்டுப் பூசும்படி சொன்னேன். பூசினார். பல உருவங்கள் தோன்றின. பழங்கள், பறவைகள், மிருகங்கள் போன்ற உருவங்கள். ஒவ்வொரு உருவத்துக்கும் பென்சிலால் வெளி உருவம் கீறச்சொன்னேன். கீறினார். கூட நின்றவர்களும் செய்து செய்து கயிற்றில் மாட்டினர்.


அடுத்த மேசைக்குக் கூட்டிச்சென்றேன். பல வர்ணக் கடதாசிகள் பூத்தெளிப்புக்கு வெட்டுவதுபோல வெட்டி வைக்கப்பட்டிருந்தன. கடதாசியை நீநள் அமர்த்தி எடுத்து நிறக் கடதாசித் தூள்களை அதில் தூவிக் கொஞ்சம் அமர்த்தி

விடச் சொன்னேன். அப்படியே செய்தார். பின்பு தாள்கள் தட்டிக் கொட்டப்பட்டாலும் ஈரத்தில் சில துண்டுகள் ஒட்டிக் கிடந்தன. நிற அடிப்படையில் வெளி உருவத்தைப் பென் சிலால் கீறிவிட்டார்.

இப்படி ஒவ்வொரு இடமாகச் சென்று ஒவ்வொரு விதமான பல சித்திரங்களை உருவாக்கினார். ஒருமணி நேரத்தில் மண்டபம் நிறையச் சித்திரங்கள். இதுதான் சித்திரச் செயல் என்றேன். அவரும் தானும் இனிமேல் பயமின்றிச் சித்திரம் கீறலாம் எனச் சொல்லி மகிழ்ச்சியுடன் புறப்பட்டார். மட்டக் களப்பு, கல்முனை, திருகோணமலை மக்கள் இதுபோன்ற ஒரு காட்சியைக் காணவுமில்லை, அதன்பிறகும் இல்லை, இனிமேலும் இல்லை. விழா முகப்பிற் கட்டப்பட்ட சமச்சீர் அட்டை இன்னும் எனது வீட்டுச் சுவரில் அமைந்த அலுமாரிக் கதவுகளாகக் காட்சியளிக்கின்றன. கால் நூற்றாண்டைக் கடந்ததால் மினுமினுப்புத்தன்மை சற்றுக் குறைவடைந்துள் ளது.



இசைமணி எஸ். சிவஞானம்
நீறுபூத்த நெருப்பாக இருந்த
சில நிகழ்வுகளை நினைவூட்டி
யவர். (பக்: X)



திரு. என். இராஜதுரை
சித்திரக் கண்காட்சி, சியவச
கண்காட்சி போன்ற பல
நிகழ்வுகளில் இடதுகரம்.
(பக்: 30, 37)



திரு. R. சதாசிவம்
சித்திரக் கண்காட்சி, சியவச
கண்காட்சி போன்ற பல
நிகழ்வுகளில் வலதுகரம்.
(பக்: 30, 37)



திரு. வி. சங்கரலிங்கம்
கல்விப்பணிப்பாளர்.
சித்திரக் கண்காட்சி (பக்: 28)
சியவச கண்காச்சி (பக்: 37)
செயல்திறனை மதிப்பவர்.



சட்டத்தரணி K.V.M. சுப்பிரமணியம்
மக்கள் கடை ஆரம்பிக்க
வழிவகுத்தவர்.
(பக்: 104)



திரு. டி. எஸ். கே. வணசிங்க
அகில இலங்கைத் தமிழர் ஆசிரி
யர் சங்கத் தலைவராகி, மட்
டக்களப்புக்குப் புகழ் சேர்த்த
வர். (பக்: 85)



வண. பிதா H. J. வெபர்
மட்டக்களப்பு விளையாட்
டரங்கை உருவாக்கியவர்.
விளையாட்டு வீரர்களை
உருவாக்கியவர். (பக்: 72)



திரு. வி. ரி. ஞானசூரியம்
ஞானசூரியம் சதுக்கம்,
வீட்டுத்திட்டத்தை
உருவாக்கியவர்.
(பக்: 76)

# 7. 'சியவச' கல்வி நூற்றாண்டு

மட்/வீச்சுக்கல்முனை றோ. க. த. பாடசாலையில் படிப்பித்த காலம். இப்பாடசாலைக்குச் சென்ற முதல்நாளே என் மனம் பல விடயங்களை அலசி ஆராய்ந்துகொண்டிருந்தது. அங்கிருந்த மக்கள் ஒரு குடம் குடிநீரைப் பத்து சதம் கொடுத்து வாங்கினர். சுமைதாங்கியில் இருந்து பாடசாலை வரை செல்லும் பாதை கிறவல்பாதை. இடையிடையே சிறிய கருங்கற்துண்டுகள் குவித்து வைக்கப்பட்டிருந்தன. புல் முளைத்து அவைகளை மூடியிருந்தன.

இம் மக்கள் நடையிலேயே பட்டினம் வந்து சேரவேண்டும். அங்கு குடியிருந்தவர்கள் அதிகமாக விவசாயிகள். ஆனால் இவர்களது வயல்கள் ஆயித்தியமலை, பொன்னாங்காணிச் சேனை, கொத்தியாபுலை போன்ற இடங்கள். அங்கு கொண்டு போவதற்காக மட்/சந்தையில் வாங்கும் பொருட்களைத் தலைமீது சுமந்துவரும் காட்சி பார்க்கப் பரிதாபகரமான காட்சி. இவைகளுக்கு ஒரு நிம்மதியான வழி தேடவேண்டும் என என் மனம் அலசிக்கொண்டிருந்த காலம்.

அன்று நான் பாடசாலைக்குப் போகவில்லை. பெரும்பாக வித்தியாதரிசியும், பிரதம லிகிதரும் பாடசாலைக்குச் சென்று 500 ரூ. பெறுமதியான சியவசச் சீட்டுக்களைக் கொடுத்துவிட்டு 10 நாட்களில் இப்பணம் கல்விக்கந்தோரில் கட்டுப்படாவிட்டால் எனது இம்மாதச் சம்பளத்தில் சழிக்கப்படும் எனச் சொல்லிவிட்டுப் போயிருந்தனர். பிலிப் விறதருக்குக் கொடுத்த வாக்கு ஞாபகம் வந்தது. மனம் கொதித்தது.

1.30க்குப் பாடசாலை முடிந்ததும் வீட்டுக்குக்கூடப் போகாமல் கல்விக்கந்தோருக்குப் போனேன். நேரே பிரதம லிகிதரிடம் சென்று, ''ஆசிரியர்கள் உங்கள் அடிமைகள்

என்று நினைத்துக்கொண்டீர்களா? சீட்டுக்களுக்குரிய பணம் பத்து நாட்களுள் வராவிட்டால் சம்பளத்தில் கழிப்பதாகச் சொன்னீர்களாம். உங்களால் முடியுமா? நான் ஒரு சீட்டும் விற்கமாட்டேன்'' என்றேன்.

நான் சற்றுப் பலமாகக் கதைத்ததால் அடுத்த அறையில் இருந்த பெரும்பாக வித்தியாதரிசி வந்து என்னிடம் ''நான் யார் என்று தெரியுமா?'' எனக் கேட்டார். அதற்கு எனது பதில் ''நீர் யாராய் இருந்தாலும் எனக்குக் கவலையில்லை'' என்பது. முறைத்துப்பார்த்தார். நானும் அதையே பின்பற்றினேன். சென்றுவிட்டார்.

இதே நபர்தான் முன் ஒருநாள் நான் கல்விக்கந்தோருக்குச் சென்றவேளை, கந்தோரில் வேலை பார்க்கும் அத்தனை பேரையும் கூட்டி ஒவ்வொருவர் வீட்டிலும் எத்தனை தலையணைகள், எத்தனை கட்டில் விரிப்புக்கள் இருக்கின்றன எனக் கணக்கெடுத்துக்கொண்டிருந்தார். எனக்குச் சிரிப்பு வந்தது. நான் அவரிடம் கேட்ட கேள்வி ''யாருடைய தலையணையில் சுகந்த மணம் வீசுகிறது என மணந்துபார்க்கப்போகின்றீர்களா?'' அதற்கு மிகவும் அமைதியாக,

கொழும்பில் இருந்து தமிழ்த்தின விழாவுக்காக 30 பேர் வருகிறார்கள். படுக்கை இடம் ஆசிரியர் கலாசாலையில் ஒழுங்கு செய்துவிட்டேன். தலையணைகளும், கட்டில் விரிப்புக்களும் கொண்டுவரும்படி சொல்லிவிட்டார்கள். அதற்காகத்தான்'' என்று கெஞ்சினார். உடனே நான் ''இதற்குத்தானா தலையைப்போட்டு விண்வெளிப் பயண ஆராய்ச்சியில் ஈடுபடும் விஞ்ஞானிகளைப்போல் குடைந்துகொண்டிருக்கிறீர்கள். சரி நான் தருகிறேன். உங்கள் கார், அல்லது கந்தோர் வான் இருக்கிறதா'' எனக் கேட்டேன். அவர் உடனே றைவர் சதாசிவத்தைக் கூப்பிட்டு இந்த ஐயாவைக் கொண்டு, அவர் சொல்லுகிற இடமெல்லாம் போய் வா என்றார்.

நான் வானை எடுத்துக்கொண்டு வெளிக்கிட்டு அடுத்த தெருவில் இருந்த பௌசி என்பவரின் பான்சி கடையில் 30 தலையணைகளை ஏற்றச்சொல்லி, விலையைக் கேட்டேன். முதலாளி 3 ரூபா விற்கிறோம். உங்களுக்கு 2/75 சதப்படி போடுகிறோம் என்றார். காசும் கொடுக்கவில்லை. (நான் அப்போது சந்தையில் எங்கள் கடையை நடத்திக்கொண்டிருந்த காலம்) நேரே வயோதிபர் மடத்துக்குச் சென்றேன்.

மதர் ஆகத்தாவிடம் ''Mother I want 30 white bed sheets and I can return these in 3 days time'' என்றேன்.

உடனே 30 விரிப்புக்களை ஏற்றிவிட்டார். 1954ம் ஆண்டில் வயோதிபர் மடத்தைப் பொறுப்பேற்பதற்கு மதர் ஆகத் தாவும் மற்றொரு சகோதரியும் வந்தபோது, நானும் என் மனைவியும் காலைச் சாப்பாட்டுடன சென்று வரவேற்றோம். இன்றுவரை அவர்களுடன் பல வழிகளில் தொடர்புண்டு.

தலையணைகள் விரிப்புக்களைக் கொண்டுபோய் ஆசிரியர் கலாசாலையில் இறக்கிவிட்டு, திரும்பிக் கல்விக்கந்தோருக்கு வந்தபோதும், தலையணையின் கணக்கெடுப்பு முடியவில்லை. இதே நபர்தான் பின்னர் எனக்குச் சேவை நீடிப்புத் தர மறுத்த பண்பாளன். எனக்குச் சேவை நீடிப்புக் கிடைத்திருந் தால், கெதியில் 3ம் தர, 2ம் தர அதிபராகி ஓய்வு பெறும் போது பெருந்தொகை மொத்தத் தொகையும், ஓய்வூதியம் மூவாயிரம் ரூபாவுக்குமேல் பெற்றிருப்பேன். 55 வயதில் இளைப்பாறியதால் நான் பெற்ற மொத்தப்பணம் 5050 ரூபா. மாதாந்த ஓய்வூதியம் 1112 ரூபா.

இப்போ ஒரு வருடகாலமாகத்தான் 3112 ரூ. பெறுகி றேன். 73ம் ஆண்டு தொடங்கி 95ம் ஆண்டுவரை கணக்கிட் டால் இரண்டொரு ஆயிரம் அல்ல பல இலட்சங்கள் விடை யாகும். அந்தநேரத்தில் நான் இதைப்பற்றி யோசிக்கவில்லை. ஏனெனில் பாடசாலையில் இருந்து நான் பெற்ற மாத வேத னம் 502 ரூ. உடனே ஜெசுவிற் அக்கடமியில் எனக்கு மாதாந் தம் 800 ரூ. தந்தார்கள். இதையிட்டு நான் இன்றும் கவலை கொள்வதில்லை. ஏனெனில் ''மேலதிகாரிகளுடன் மோதினால் உனக்கு அதிக பொருள் நட்டமும் ஏற்படும்'' என்று தீர்க்க தரிசனமாக விறதர் பிலிப் அவர்கள் சொன்னது நிறைவேறுவ தால்.

'சியவச' கல்வி நூற்றாண்டு இலங்கை முழுவதும் தடல் புடலாகக் கொண்டாடுவதற்கு ஆறுமாதம் முன்னதாகவே ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. கண்காட்சி, விஞ்ஞானம், கலை என இரண்டாகப் பிரிக்கப்பட்டு நிருவாகக் குழுக்கள் காலுக்கும் கைக்கும் தொழிற்படுகின்றன. விஞ்ஞான வித்தியா தரிசி திரு. சற்குணராசா இருபதுக்கு மேற்பட்ட விஞ்ஞான ஆசிரியர்களுடன் கல்விக்கந்தோரில் ஐம்பதினாயிரம் ரூபா பணமும் பெற்று அரசினர் கல்லூரியில் (இப்போது இந்துக் கல்லூரி) தவளை, நத்தை, அட்டை பிடிப்பதும், வெட்டு வதும், ஒட்டுவதும் என மூச்சுவிட நேரமில்லாமல் செய்து கொண்டே இருக்கின்றனர்.

இது 1970ம் ஆண்டில். மட்டக்களப்பில் 3 நாள் கொண் டாட்டம். திறப்பு விழாவுக்கு வருகைதருபவர்களும் நிகழ்ச்சி

களும் குறிப்பிட்டு மட்டக்களப்புக்கு வந்து சேர்ந்துவிட்டது. கல்விப்பணிப்பாளர் விஞ்ஞானப்பகுதிக்குச் சென்று ஒருநாள் முழுவதும் அவர்களது செயற்திறனைக் கண்டு சந்தோஷப் பட்டு வந்துவிட்டார். மறுநாள் கலைப்பிரிவைப் பார்ப்பதற் காக அக்குழுவில் இடம்பெற்றவர்கள் எல்லாரையும் கந்தோ ருக்கே அழைத்தார்.

குழுவில் இடம்பெற்றோர் வின்சன் பாடசாலை அதிபர் திருமதி சின்னையா, திருமதி சிவபாதசுந்தரம், செல்வி கனக ரெட்ணம் (பெண்கள்). திரு. K. கணபதிப்பிள்ளை F.R.G.S., பண்டிதர் கந்தையா (ஆண்கள்). கல்முனை வாழைச்சேனை களில் இருந்தும் ஆண்களும், பெண்களும் மொத்தம் 20 பேர் வரை. மறுநாள் எல்லோரும் கல்விப் பணிமனையில் கல்விப் பணிப்பாளரைக் காத்துக்கொண்டிருக்கின்றனர். அவர் வந்த தும் இவர்களிடம் அவர் சில கேள்விகளைக் கேட்டு விசாரித் தார்.

''நீங்கள் என்ன என்ன பொருட்களைச் சேர்த்து வைத் துள்ளீர்கள்? எப்போ இவைகளை எடுத்துவரலாம்? நீங்கள் சேகரித்த பொருட்களின் பட்டியலைத் தந்தால் விளம்பரத் துக்கு இலேசாக இருக்குமே.''

குழுவினரின் பதில்:-

நாட்டுக்கூத்தில் வடமோடி, தென்மோடி உடைகளையும், தாளக்கட்டுக்களை விளக்கக்கூடியவைகளையும் தேடினோம். தொல்பொருள் ஆராய்ச்சியில் ஈடுபட்டுச் சில கல்வெட்டுக் களையாவது எடுக்க முயற்சித்தோம். பண்டைய சிற்பக் கலையை விளக்க முயற்சி மேற்கொண்டோம். இவை ஒன்றுமே கைகூடவில்லை. தயவுசெய்து எங்களை மன்னித்துவிடுங்கள். இந்தக் குழுவில் இருந்து எல்லோருமே விலகிவிடுகிறோம் என்பது. திரு. சங்கரலிங்கம் தன்னையே மறந்தார். இந்த உலகத்தையே மறந்தார். தான் இருந்த சூழ்நிலையையே மறந்தார். பேசத்தகாத பேச்சுக்களைப் பேசி எல்லோரையும் துரத்திவிட்டார். அவர் ஓர் இருதய நோயாளி. இருதயம் படபட என அடிக்கத்தொடங்கியது. தனது அறையில் போய்ப் படுத்துக்கொண்டார்.

மட்/பட்டின வட்டாரக் கல்வி அதிகாரி ஏதோ அலுவ லாக இவரது அறைக்குச் சென்றார். ''என்ன மிஸ்டர் சோம சுந்தரம், சியவச அழைப்பிதழ்களும் வந்துவிட்டன. இரு கிழமை மாத்திரம் உண்டு. விஞ்ஞானப்பகுதி ஓரளவு பிழை யில்லை. கலைப் பகுதியில் ஒன்றுமே நடக்கவில்லை. என்

னைப்பற்றி என்ன நினைக்கப்போகிறார்கள்'' என அழாக் குறையாக முறைப்பட்டார்.

திரு. சோமசுந்தரம் (இவர் இப்போது பணிப்பாளர், தமிழ்த்துறை தேசியக்கல்வி நிறுவனம் மகரகமை) எனது பெயரைச் சொல்லி, தான் அறிந்தவரையில் பொறுப்புணர்ச்சி உணர்ந்து செயல்படுபவர் இவர் ஒருவர்தான். ஆனால் ஒரு சிறிய சங்கடம். அவரும் பெரும்பாக வித்தியாதரிசியும் பாம் பும் கீரியும்போல் இருக்கிறார்கள். அதனால் சம்மதிப்பாரோ தெரியவில்லை.

இதற்குச் சங்கரலிங்கம் ''பெரும்பாக வித்தியாதரிசி இதில் தலையிட விடமாட்டேன். திறப்பு விழா நேரத்தில் மாத்திரம் என்னுடன் வரவேண்டும். இதை மீறினால் என்ன செய்ய வேண்டும் என்பது எனக்குத் தெரியும்'' என உத்தியோக தோரணையில் பேசினார்.

அன்று, நான் பாடசாலையில் இருந்து 10 மணிக்கு சம்பவத் திரட்டுப் புத்தகத்தில் எழுதிவிட்டு வைத்தியசாலை சென்று பல் ஒன்றைப் பிடுங்கிவிட்டு வெளியில் இருக்கிறேன். திரு. சோமசுந்தரம் எனக்குப் பக்கத்தில் வந்து இருந்து எல்லாம் விபரமாகக் கூறினார். இரத்தம் ஓடிக்கொண்டிருந்ததால் வாய் நிறையப் பஞ்சை அடைத்திருந்தனர். கதைக்கமுடியவில்லை. கைப்பாஷை காட்டி இருவரும் துவிசக்கரவண்டிகளில் எனது செயலாளர் திரு. R. சதாசிவம் பணிபுரியும் புனித செபஸ்தியார் பாடசாலைக்குச் சென்றோம்.

வழியில், திரு. சங்கரலிங்கம் அவர்கள் மேலதிகாரி என்னும் அகந்தை அற்றவர். எப்பாடுபட்டாவது மிகவும் திறமையாகச் செய்துவிடவேண்டும். அதனால் பெரும்பாக வித்தியாதரிசியின் கொட்டமும் அடங்கும் எனத் தீர்மானித்துவிட்டேன்.

பாடசாலை அதிபரின் அறைக்குச் சென்றதும் பகல் 12 மணிக்கு அடிக்கும் கோயில் மணி அடித்தது. வாய்க்குள் இருந்த பஞ்சை எடுத்துவிட்டு, கட்டாயம் எப்பாடுபட்டாவது இதைச் செய்துமுடிப்பேன் எனக் கூறி, திரு. சோமசுந்தரத்தைப் பார்த்து நீங்கள் (Co-ordinating Officer), தான் இணைப்பாளர். வித்தியாசந்தோரில் இருந்து வேறு எவரும் இங்கு வரக்கூடாது. நாளைக் காலை 8 மணிக்கு எனது செயலாளர், பொருளாளர் மற்றும் எனக்கு உதவியாளராக (Peon) திரு. A. யோசேப், தாண்டவன்வெளி றோ. க. பாடசாலை அதிபரையும் கூட்டிக்கொண்டு வருவேன். எல்லாம் திட்டம் போடுவோம் எனக் கூறி நான் வீட்டுக்குச் சென்றேன்.

மறுநாட்காலை கூடியதும் முதல் வேலையாக இணைப்பதி காரியும் நானும் ஒப்பமிட்டு, ஒவ்வொரு பாடசாலைக்கும் சுற்றுநிருபம் அனுப்பப்பட்டது. ''இதுவரை சியவச விழா வுக்குக் கலை சம்பந்தமாக அனுப்பப்பட்ட சுற்றுநிருபங்கள் எல்லாம் இத்தால் ரத்துச் செய்யப்படுகின்றன. விபரங்கள் கெதியில் அறிவிக்கப்படும்.''

இதற்கான செலவுகளுக்காகப் பணம் வாங்க நான் விரும்ப வில்லை. சித்திர வித்தியாதரிசி ஜனாப் ஹுசைன் இடம் பத்தாயிரம் ரூபா கொடுக்கப்பட்டது. பாடசாலைதோறும் சென்று சித்திரங்களையும், புராதன பொருட்களையும் சேகரிக் கத் தொடங்கினார். விஞ்ஞானக் காட்சிக்குப் பிரவேசச் சீட்டு 25 சதம். அங்கிருந்து கொண்டுவரும் அட்டை கலைக் காட் சிக்கும் செல்லுபடியாகும். எனவே கலைக்காட்சி இலவசம்.

பின்வருவன நடைமுறைப் படுத்தப்பட்டன:

1. ஒரு கிழமைக்கு வின்சன் பாடசாலையும், விடுதிச்சாலை யும் மூடப்பட்டன.

2. அப்போது கல்விக்கந்தோரில் பிரதம இலிகிதராகப் பணி புரிந்த திரு. நாகலிங்கம் நாடகக்குழுக்களுடன் நெருங்கிய தொடர்புகொண்டு நாளாந்தம் 3 நாடகங்கள் வீதம் மேடையேற்றுதல். இதற்கான அனுமதிச்சீட்டு ஒரு ரூபா.

3. ஆசிரியர்க்கும், மாணவர்க்கும் விரும்பினால் இரவிலும் உணவு கொடுத்தல். ஆட்டிறைச்சிக் கறியுடன் 1.50 சதம், மீன்கறியுடன் 1 ரூபா, மரக்கறிச் சாப்பாடு 75 சதம். 3 நாட்களின் முன் பணம் செலுத்திச் சீட்டுப் பெற்றவர் களுக்கு மாத்திரந்தான்.

4. ஒவ்வொரு பாடசாலையில் இருந்தும் சிற்றுண்டி வகை கள் சேகரிக்கப்பட்டன. ஒரு கிழமையின் பின்பே அவர் களுக்குப் பணம் கொடுக்கப்பட்டது.

5. (Canteen) சிற்றுண்டிச்சாலை காலை தொடங்கி நடுச் சாமம் வரை திறந்திருக்கும். அருட்சகோதரி அன்ரனினா இதற்குப் பொறுப்பு. பழுதடையக்கூடிய பொருட்கள் (வடை, பற்றிஸ் முதலியன) நாளாந்தம் நடிகர்களுக்கு வழங்கப்படும்.

6. நடிகர் குழுவுக்குப் பிரயாணச் செலவு, பக்கவாத்தியச் செலவு, அலங்காரச் செலவுகள் வழங்கப்பட்டன.

7. குடிநீர்ப் பிரச்சினை கூடுதலாக இருந்ததால் அதற்குத் தீர்வுகாண - அப்போதைய நகரபிதா திரு. J. L. திசவீர சிங்கம் அவர்களிடம் புதிதாகச் செய்துவைத்திருந்த 40 (Dustbins) பெரிய வாளிகளை இரவலாக வாங்கி வந்தேன். இவைகளில் எப்போதும் நீர் நிரம்பியபடியே இருக்கும்.

ஒவ்வொரு சந்தியிலும் நீர் செல்லும் குழாயை மூடுபவர் திரு. செபமாலை என்பவர். அவரை அழைத்து, இப் பாடசாலைக்கு நீர் செல்லும் குழாயைப் பூட்டாமல் திறந்தபடி வைக்க ஏற்பாடு செய்தேன்.

8. நாளாந்தம் வாழையிலை, தாமரை இலைகள் வந்து கொண்டே இருக்கும். இவைகளுக்குப் பொறுப்பு திரு. A. யோசேப். பலவிதமான வேலைகளையும் அவர் மிகக் கெட்டித்தனமாகச் செய்துமுடித்தார். எல்லாம் முடிய திரு. சோமசுந்தரம் அவர்கள் யோசேப் ஆசிரியருக்குக் கொடுத்த பட்டம் Mr. யோசப் C.B.O என்பது. எனக்கு விளங்கவில்லை. சோமசுந்தரம் விளக்கினார். ''இடையிடையே இவர் ''Corner Bar Officer''. அங்கே போய்ப்போய் வருவார்''

9. திருமதி சின்னையா, பாடசாலை அதிபர் சமையலுக்கு 8 பேரை உதவினார். இவர்களுக்குச் சம்பளமும் சன் மானமும் வழங்கப்பட்டது.

10. எனது உதவியாளர் ஒவ்வொருவருக்கும் அவரவர் உத்தி யோகத்துக்குத் தக்கபடி பல வர்ணங்களில் சட்டையில் குத்துவதற்கு 'Badge' கொடி. எல்லாவற்றிலும் சியவச என அச்சிடப்பட்டது.

கல்விக்கந்தோரில் இருந்து காட்சி பார்க்கவருபவர்கள், எனது கந்தோரில் உள்ள புத்தகத்தில் ஒப்பமிட்டு ஒன்றைப் பெற்றுக்கொள்ளலாம் என அறிவித்தல் கொடுத்திருந்தேன். கல்விப்பணிப்பாளருக்கும், பிரதம வித்தியாதரிசிக்கும் நான் எனது பியன்மூலம் அனுப்பியிருந்தேன். ஒரு C. E. O. என்னி டம் வந்து ''நாங்களும் Badge குத்தித்தானா வரவேண்டும்'' என ஒருமாதிரியாகக் கேட்டார். ''ஆம். பாட்ஜுடன்தான் பிரவேசிக்கவேண்டும்'' எனச் சொல்லிவிட்டேன். அவர் தனது ஒப்பத்தை இட்டு ஒரு Badge எடுத்துக்கொண்டார்.

திறப்பு விழா முதல் நாளன்று வாசலில் நின்று பணி புரிந்தவரிடம், யாராவது Badge குத்தாமல் வந்தால் தடுத்து

நிறுத்தச்சொன்னேன். முன் குறிப்பிட்ட C. E. O. பாட்ஜ் குத்தாமல் வந்தார். பையன் தடுத்துவிட்டான். அவர் சமாளித்துக்கொண்டு ''என்னிடம் Badge இருக்கிறது குத்து வதற்கு மறந்துவிட்டேன்'' எனக்கூறி பாட்ஜ் குத்திக்கொண்டு உள்ளேவந்து என்னைச் சந்தித்து எனது நிருவாகத் திறமை யைப் பாராட்டினார்.

எமது கண்காட்சி மிகச் சிறப்பாக நடந்தது. அரசினர் கல்லூரியில் நடைபெற்ற விஞ்ஞானப் பகுதியைப்போல் வின் சென்ட் மகளிர் கல்லூரியில் நடந்த எமது கலைப்பகுதிக்கும் ஏராளமான பார்வையாளர் வருகைதந்தனர். ஒவ்வொரு நாளும் மாலையில், பாடசாலை வளவில் அமைக்கப்பட்டிருந்த கொட்டகையில் நாடகங்கள், கலை நிகழ்ச்சிகள் நடக்க ஏற் பாடு செய்யப்பட்டிருந்தது.

நாளாந்தம் ஐயாயிரம் (5000) மாணவர்க்குமேல் மதியச் சாப்பாடு வழங்கப்பட்டது. சாப்பாடு கொடுத்தது, சிற்றுண் டிச்சாலை நடத்தியது, மாலையில் நாடகங்கள் நடாத்தியது. இவைகளிலிருந்து வரும் பணத்துக்குப் பொறுப்பாகக் கல்விக் கந்தோர் திரு. சுப்பிரமணியம் அவர்களைப் பொறுப்பாக்கி னேன். எல்லாம் முடிய ஐயாயிரம் ரூபாவுக்குமேல் இலாபம் இருந்தது. எனக்கு ஆயிரம் ரூபாயாவது தந்துவிடத் திரு. சங்கரலிங்கம் அவர்கள் படாதபாடுபட்டார். நான் மறுத்தே விட்டேன். அடுத்த ஆண்டு இவர் மாற்றலாகிக் கொழும்பு சென்றார்.

# 8. மெதடிஸ்த பாடசாலை

கத்தோலிக்க பாடசாலைகளின் பொது முகாமையாளர் வண. தம்பிமுத்து அவர்கள் ஒருநாள் என்னிடம் ஒரு கடிதத்தைத்தந்து வாசிக்கச்சொன்னார். வாசித்து முடித்ததும் திருப்பிக் கொடுத்தேன். (அதில் அவரைப்பற்றிக் கூடாமல் எழுதப்பட்டிருந்தது).

நீதான் இதை எழுதியிருக்கிறாய் எனத் தான் நினைப்பதாகக் கூறினார். அதற்கு எனது பதில் ''எனக்குத் தெரிந்த விடயங்களில் கால்வாசிதானே இதில் எழுதப்பட்டிருக்கிறது'' என்றதும், என்ன தெரியும் சொல்லு பார்ப்போம் என்றார். வடிவாக ஆலோசித்து நாளைவந்து சொல்கிறேன் எனக் கூறிவிட்டுப் பிலிப் விறதரிடம் சொன்னேன். அதற்கு அவர் ''கடவுளே அந்த ஆளுக்கு ஒற்றைப்புத்திதான். இனி உனக்குக் கஷ்டம்தான். என்றாலும் பின்னேரம் வா வண லாசறஸ் இடம் போவோம்'' எனக் கூறினார்.

இருவரும் தாண்டவன்வெளியில் இருந்த பங்குத்தந்தை லாசறஸ் இடம் சென்றோம். நான் எழுதிவைத்திருந்த குற்றச்சாட்டுகளை வாசித்துக்காட்டினேன். முழுவதையும் சொல்லும்படி அனுமதி தந்தார்கள். மறுநாள் வண. தம்பிமுத்து அவர்களின் அறைக்குச் சென்றேன். தனிமையில் இருந்தார். எல்லாம் விளக்கமாகச் சொன்னேன். சிலவற்றை மறுத்தார். நான் சாட்சிகளோடு நிரூபித்தேன். வரும்போது அவரிடம் கூறினேன்: ''இந்தக் கோபத்தை நிலைநாட்டுவதற்கு எனக்கு நிச்சயம் மாற்றம் தருவீர்கள்'' என்று. ''தான் அப்படிச் செய்யவேமாட்டேன்'' என்றார். சரிசரி காலம் பதில் சொல்லும் எனக் கூறிவிட்டுச் சென்றேன்.

மூன்று மாதம் சென்றதும் தேற்றாத்தீவு றோ. க. பாடசாலைக்கு மாறுதல் கடிதம் வந்தது. அவரிடம் போய் யார்

சொன்னது சரி எனக் கேட்டேன். மிகவும் பணிவுடன் பல ஆசிரியர்கள் முறைப்படுகிறார்கள். அவர் மாத்திரம் ஒரே இடத்தில் எத்தனையோ வருடங்களாக இருக்கிறார் என்று. அடுத்த தவணை ஆரம்பத்தில் நிச்சயமாகப் புனித செபஸ்தியார் பாடசாலைக்கு மாற்றுவேன் என்றார். இதில் எனக்கு நம்பிக்கை இல்லை. சென்றுவிட்டேன்.

மெதடிஸ்த பாடசாலைகளின் பொது முகாமையாளர் திரு. S. A. செல்வநாயகம் எனது உற்ற நண்பர். அவரிடம் கதைத்தபோது அவர், உன்னை அரசடிக்கு எடுத்து அதை உயர்த்தவேண்டும் என விரும்பினேன். நீ வர மறுத்துவிடுவாயோ என்றுதான் நான் கேட்கவில்லை. தைமாதம் முதலாந் திகதி தொடங்கி நியமிக்கிறேன். அங்கிருந்து அவர்கள் உன்னை விடச் சம்மதம் எனக் கடிதம் ஒன்று மாத்திரம் எடுக்கும்படி கூறினார். ஒரு கடிதத்தை ரைப் பண்ணிக்கொண்டு மார்கழி 15 அளவில் வண. தம்பிமுத்துவிடம் போய் எனது மாற்றம் எப்படி என்று கேட்டதுதான் தாமதம், ஆங்கிலத்தில் டான்ஸ் ஆடத்தொடங்கிட்டார். "Do you think that I should dance to your tune" என்றதற்கு நான் நீங்கள் டான்ஸ் ஆடவேண்டாம் இதில் ஒரு ஒப்பம் மட்டும் போடுங்கள் என்று கடிதத்தைக் கொடுத்தேன்.

Where do you want to go என்றார். You have no right to ask this question என்றேன். ஒப்பமிட மறுத்தார். அதை எடுத்துக்கொண்டு பாடசாலைகளின் உரிமையாளர் வந். இக்னேசஸ் கிளென்னி ஆயரிடம் சென்று விடயத்தை விளக்கினேன். ஒப்பமிட்டுத்தந்தார். அதைத் திரு. செல்வநாயகம் அவர்களிடம் கொடுத்து அடுத்தமாதம் அரசடிப் பாடசாலையில் வேலையை ஆரம்பித்தேன். நான் கற்பித்த 3 ஆண்டுகளிலும் எஸ். எஸ். ஸீயில் திறமான சித்தி.

ஒருநாள் பாடசாலை நேரத்தில் வளர்ந்த ஒரு பையனிடம் எனது சைக்கிளைக் கொடுத்துக் கச்சேரிக்கு அனுப்பினேன். அப்பையன் அதைப் பூட்டாமல் வைத்துவிட்டுக் கச்சேரி மேல்மாடிக்குச் சென்று அலுவலை முடித்துக்கொண்டு வந்து சைக்கிளைப் பார்த்தான். சைக்கிளைக் காணவில்லை. என்னிடம் வந்து சொன்னான். நான் ஊம்பக் கனாக் கண்டேன், ஒருவரிடமும் சொல்லக்கூடாமற்போயிற்று என்ற பாவனையில் இருந்துவிட்டேன். ஏனென்றால் பாடசாலை நேரத்தில் மாணவனை வெளியில் அனுப்பியது பிழை. பாடசாலைக்கு நடந்தேசென்றேன்.

இதைக் கவனித்த பொது முகாமையாளர் திரு. செல்வ நாயகம் விசாரித்தார். உள்ளதைச் சொன்னேன். அவரது நண்பன் டாகுத்தர் தம்பி. அவரின் மகன் மத்திய கல்லூரியில் 5ம் வகுப்பில் படித்துக்கொண்டிருந்தான். அடுத்த ஆண்டு தொடங்கி 6ம் வகுப்பு சுயமொழியில் படிப்பிக்கப்படவேண் டும் எனக் கல்விக்கந்தோர் ஆணை பிறப்பித்துவிட்டது.

ஆகவே, 5ம் வகுப்பில் இருந்து 7ம் வகுப்புக்கு மாற்றப் பட்டால்தான் ஆங்கிலமொழியில் தொடர்ந்து படிக்கலாம். இதற்கு என்ன செய்யலாம் எனத் திரு. செல்வநாயகம் அவர் களிடம் ஆலோசனை கேட்டார். மாணவன் ஒவ்வொரு பாடத்திலும் 90க்குமேல் புள்ளிகளைப் பெற்று வகுப்பில் முதல் இடம் பெற்றால் இரட்டைச் சித்தி கொடுப்பார்கள். அதற்கு ஒருவரை ஒழுங்குபண்ணுகிறேன். அவருக்கு ஒரு சைக்கிள் வாங்கிக் கொடுக்கவேண்டும். (அப்போது ''செல்வநாயகம் அன் சன்ஸ்'' என்ற பெயரில் சைக்கிள்கள், கார்கள் விற்பனை செய்தனர்).

டாகுத்தர் சம்மதித்தார். தேவையான பொருட்கள் (டைனமோ, கரியல், சிறகவர்) எல்லாம் சேர்ந்து மொத்தம் 300 ரூபா வரையில் 3 மாதம் படிப்பித்தேன். முதலாம் இடம், இரட்டைச்சித்தி. பெரும் விருந்தும் நடத்தினர். இதேபோல அடுத்த ஆண்டிலும் பிரதம பொறியியலாளர் திரு. சின்னத் தம்பி அவர்களின் மகனுக்கும் இரட்டைச்சித்தி கிடைத்தது. இது 6 ஆண்டுகளின்பின் வீச்சுக்கல்முனையில் கிறவல் பாதை தார்ப் பாதையாகி வஸ்வண்டி ஓடுவதற்குப் பயன்படுத்தி விட்டது. நான் அரசடியில் இருந்து விலகியபோது திரு. செல்வநாயகம் பெரிதும் மனமுடைந்தார் என்றாலும் சிநே கிதம் முறியவில்லை.

நான் கத்தோலிக்க பாடசாலைகளில் இருந்து விலகியதை, தல முகாமையாளர் (Local Managers) எவருமே விரும்ப வில்லை. பொது முகாமையாளரிடமும் வெறுப்பைப் பகிரங்க மாகவும் வெளிப்படுத்தினர். 1955ல் கத்தோலிக்க பாடசாலை யில் இரு இடங்கள் வெற்றிடங்கள் ஆகின பலரும் என்னை நெருக்கினர். அந்த இடத்துக்கு விண்ணப்பிக்கும்படி. பிரதான மாக வண. J. லாங் அடிகளார். கத்தோலிக்க சேவைகளின் தலைவர்.

நான் அரசடி பாடசாலையில் கடமையாற்றியபோதும் தொடர்ந்தும் செயலாளராகக் கடமைபுரிந்தேன். அடுத்தவர் திரு. V. T. ஞானசூரியம் அவர்கள். அவரும் ஒரு தேசத்

தொண்டன், பொதுநலவாதி. அவர் எனக்குச் சொன்ன அறிவுரை – ''உம்மிடம் கல்விகற்ற பலர் இன்று தலைமை ஆசிரியர்களாசக் கடமையாற்றுகின்றனர். இவர்களின்கீழ் நீர் போய் வேலை செய்யமுடியுமா?

அது நியாயமாகவே பட்டது. விண்ணப்பித்தேன். பலர் விண்ணப்பித்தனர். நியமனக்கூட்டம் கதலிக் கிளப்பில் நடைபெறுகிறது. தல முகாமையாளர்கள் எவரும் பாக்கி இல்லாமல் எல்லோரும் சமுசம் கொடுத்தனர். திரு. P. இராமலிங்கம் (காலம்சென்றுவிட்டார்), நான் இருவரும் தெரிவுசெய்யப்பட்டோம். வெற்றிடங்கள் (1) மட்/தன்னாமுனை, (2) தி/மட்டப்புற்களி. தன்னாமுனைக்கு யார்? மட்டப்புற்களிக்கு யார் என்பது கொஞ்சநேரம் மூளையைக் கலக்கியது.

பொது முகாமையாளர், தான் சிறந்த மூளைசாலி என்பதை நிரூபித்துவிட்டார். அவர் கூறியது திரு. பிரான்சிஸ் 19 வருடம் சேவை, திரு. இராமலிங்கம் 17 வருடம் சேவை. தல முகாமையாளர் அத்தனைபேரின் முகங்களிலும் மகிழ்ச்சிக் குறி காணப்பட்டது. ஆனால், திரு. பிரான்சிஸ் 3 வருடம் மெதொடிஸ்த பாடசாலையில் கடமையாற்றியுள்ளார். அதைக் கழித்தால் 16 வருடசேவை, திரு. இராமலிங்கம் 17 வருட சேவை. ஆகவே திரு. இராமலிங்கத்தை மட்/தன்னாமுனை றோ. க. த. பாடசாலைக்கும், திரு. பிரான்சிஸ் தி/மட்டப்புற்களி றோ. க. த. பாடசாலைக்கும் அதிபர்களாக நியமிக்கிறேன் எனக்கூறி எழும்பிப் போய்விட்டார்.

எவரும் மெல்லவும் முடியாத விழுங்கவும் முடியாத நிலையில் வெளியேறினார்கள். அன்றிரவு திரு. V. T. ஞானசூரியம் அவர்கள் என்னை வீட்டில் வந்து சந்தித்து இவ்வாண்டு சித்திரையில் ஆசிரியர்க்கான சம்பளத்திட்டம் அமுலில் வரப் போகிறது. சிறிய பாடசாலை, பெரிய பாடசாலை அதிபர்களுக்குத் தனித்தனித் திட்டம். நீங்கள் பொதுவேலை பொது வேலை என மாடாக உழைக்கிறீர்கள். நீங்கள் கண்டிப்பாக மட்டப்புற்களிக்குப் போங்கள். உங்களுக்குத்தானே நரகத்தையும் சுவர்க்கமாக்கும் கெட்டித்தனம் உண்டு என அவர் மனதில் எழுந்த ஈறலையும், எனது நன்மையையும் நினைத்துக் கூறிச்சென்றார்.

மறுநாள் காலை வண. தம்பிமுத்து அவர்களிடம் சென்று மட்டப்புற்களி எப்படியான இடம்? எனக் கேட்டபோது அவரது பதில் ''Next to Hell'' என்பது. நரகத்தைப் பார்ப்பதும்

நல்லது என்ற எண்ணம் ஏற்பட்டது. தைமாதம் 2ம் திகதி மூதூர் சென்று வண. பெங்குலர் (தல முகாமையாளர்) அவர்களைச் சந்தித்தேன். அவரது கிளாக் (இலிகிதர்) ஆக வேலை செய்தவர் திரு லேயோ என்பவர். மூதூர் புனித அந்தோனியார் பாடசாலையில் ஆங்கில ஆசிரியராகக் கடமையாற்றியவர், எனது நண்பர். இப்போது சமாதான நீதிவான். (இவர் தான் நான் மட்டப்புற்களிப் பாடசாலைக்கு வருவதில்லை என்று பலர் கைச்சாத்திட்டு அனுப்பிய பிட்டிசத்தை, இவர் ஒரு நல்ல ஆசிரியர். கொஞ்சக் காலத்துக்கு இவரை மாற்றாமல் இங்கேயே வைக்கும்படி கேட்கின்றார்கள் எனப் பாஷைப் படுத்திச் சொன்னவர்.) அப்பிட்டிசத்தை "What nonsense" எனக் கூறி வண. பெங்குலர் கிழித்துக் குப்பைக்கூடைக்குள் போட்டுவிட்டார்.

# 9. மட்டப்புற்களிப் பாடசாலை

மட்டக்களப்பில் இருந்து தோப்பூருக்கும், திருமலையில் இருந்து தோப்பூருக்கும் செல்வது கஷ்டமில்லை. Eastern Bus Company Managing Director ஆகத் திரு. K W. தேவநாயகம் இருந்தார். இவருக்குத் தமிழ் கற்பித்துக் கூட்டங்களில் பேசப் பழக்கியது, மகனுக்குத் தமிழ் கற்பித்தது. இவர் இல்லாத போது "Director" வேலையைச் சம்பளம் இல்லாமல் செய்தது. எனவே இந்த வஸ்களில் பிரயாணம் செய்யப் பணமே தேவையில்லை. எவ்வளவு சாமான்களையும் ஏற்றிப்பறிக்கலாம். பல தடவைகள் கதிர்காமம் போகவும் வசதி தந்தது.

தோப்பூரில் இருந்து மட்டப்புற்களி 4 மைல் தூரம். மணல் நிலம், வயல்வெளி, இடையில் சிற்றாறு. மாரி காலத்தில் மாத்திரம் ஒரு தோணி சேவைசெய்யும். மற்ற நாட்களில் நீருக்குள் பாய்ந்துதான் கடக்கவேண்டும். முதலாம் நாள் பாடசாலையைப் பார்த்ததும் என்னை அறியாமலேயே கண்கள் நீரைச் சொரிந்தன. என்றாலும் புத்திமான் பலவான் என்னும் எண்ணம் ஏற்பட்டது. தோப்பூரில் வந்திருந்து திட்டம் தீட்டினேன். பாடசாலையில் படித்த பிள்ளைகளின் மொத்த எண்ணிக்கை - 11, வகுப்புக்களின் எண்ணிக்கை - 4. மாணவர்களில் ஆண்கள் - 7, பெண்கள் - 4.

பெண் பிள்ளைகளின் மாதாந்தச் சராசரி 3 மாதங்களுக்கு மேல் 15க்குமேல் வந்தால் பெண் ஆசிரியை ஒருவரை நியமிக்கலாம் என்பது பிரமாணம். மட்டப்புற்களிப் பட்டங்கட்டியார் சுந்தையாவையும், கிராம அங்கத்தவர் கதிராமனையும் கூட்டிக்கொண்டு சேனைக்குள் இருந்த 5 வயதுக்கு மேற்பட்ட பெண் பிள்ளைகளின் பெயர்களை எழுதி எடுத்தேன். தினவரவு இடாப்பைத் தோப்பூரில் வைத்துக்கொண்டு அடையாளம் பண்ணினேன்.

என்னிடம் படித்து எஸ். எஸ். ஸீ. சித்தியடைந்த தோப்பூர் அமானுல்லாவையும், வாகரை இராயப்பு என்பவரையும் ஆசிரியர் கலாசாலைக்குப் பிரவேசப் பரீட்சைக்கு ஆயத்தம் பண்ணுவதற்காக என்னுடன் வைத்துக்கொண்டேன். அமானுல்லா இப்போது ஒரு பாடசாலையில் அதிபர். இராயப்பு கிராமசேவகர். அரசரெத்தினம் என்னும் ஒரு பையனும் கூட வந்தான். வீட்டில் இருந்து ஒரு சைக்கிளைக் கொண்டு வைத்துக்கொண்டு ஒவ்வொருவர் ஒவ்வொரு நாளும் மட்டப்புற்களி சென்று ஒரு மணித்தியாலம் வரும் பிள்ளைகளுக்கு ஏதும் சொல்லிக்கொடுத்துவிட்டு வருவார்கள்.

ஒவ்வொரு திங்கட்கிழமை காலையிலும் அப்போதிக்கரி கந்தையா இரட்டைமாட்டு வண்டியில் மட்டப்புற்களி சென்று மருந்து கொடுத்துவருவார். 7.30க்குப் புறப்பட்டு 12 மணிக்குத் திரும்பிவிடுவார். திங்கட்கிழமையில் அவருடன் வண்டிலில் போவேன்.

நான்கு ஆசிரியர்கள் மாறிமாறிப் போய்வந்தாலும் படிப்பு நடப்பதில்லை. இதற்கு நிரந்தர முடிவுக்காக தோப்பூரில் ஒவ்வொரு நாளும் பெண்பிள்ளைகளுக்கான வரவு விழுந்து கொண்டே வருகின்றது. பெண்பிள்ளைகளின் சராசரியும் 16 ஆகிவிட்டது. முதலாந்தவணை விடுமுறையில் பொது முகாமைக்காரரிடம் சராசரியைக் குறிப்பிட்டுப் பெண் ஆசிரியை ஒருவரை நியமிக்கும்படி வற்புறுத்தினேன்.

அப்போது அடிக்கடி இவரைக்கண்டு கரைச்சல் கொடுத்துக் கொண்டிருந்த செல்வி லில்லி தெரேசம்மாவுக்கு நியமனம் வழங்கப்பட்டது. இவர் தனது சிற்றன்னையுடன் அங்கு தங்கியதும் பாடசாலை முறையாக இயங்கத்தொடங்கியது. இவர் கொஞ்சக்காலத்தின்பின் ஆசிரிய கலாசாலை சென்று பயிற்றப்பட்ட ஆசிரியராகி இன்று ஓய்வுபெற்று பேரப்பிள்ளைகளையும் கண்டுவிட்டார். நான் செய்த பிழை நன்மைக்கு வழி வகுத்தது.

''பொய்ம்மையும் வாய்மையிடத்து புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்''

292ம் குறளுக்கு இலக்காகியது.

அன்று திங்கட்கிழமை காலை 7 மணி. தோப்பூர் குளத்தில் குளித்துக்கொண்டிருக்கிறேன். திரு. சபாபதி என்னும் வித்தியாதரிசி மட்டப்புற்களிக்குப் போவதற்காகச் சைக்கிளில் வந்து, தோப்பூர் அரசினர் பாடசாலை அதிபர் செல்லையா அவர்கள் வீட்டில் காத்திருப்பதாகவும், என்னை உடனடியாக

வரும்படியும் செய்தி கிடைத்தது. வருடாந்தப் பரீட்சைக்கு திரு. இம்மானுவேல் அல்லது திரு. சண்முகநாதன் வருவார் என எதிர்பார்த்திருந்தேன். ஆனால் திரு. சபாபதி பயிற்றப் பட்ட தமிழ் ஆசிரியர் B.O.L. சித்திபெற்று வித்தியாதரிசி யாக வந்ததால் மிஞ்சும் மேலதிகாரிகளின் கூட்டத்திலேயே சேர்வார் என்று என்மனம் தீர்மானித்தது.

மட்டப்புற்களிக்கு வரும் வித்தியாதரிசிகளுக்கு என வாங்கி நேர்ந்துவிட்ட பியர் போத்தல் 6ம், ½ போத்தல் சாராயமும் மட்டப்புற்களியில் இருந்தது. திரு. சபாபதி அவர்களை மரி யாதையுடன் அனுப்புவதற்குத் திட்டம் தீட்டிவிட்டேன். குளித்ததும் அப்போதிக்கரி கந்தையா அவர்களின் விடுதிக்குச் சென்று 8.30 மணிக்குத்தான் செல்லையா அதிபர் வீட்டுக்கு வரும்படி சொல்லிவிட்டு, அதிபர் வீட்டுக்குச் சென்று, இடை யில் வாங்கிய இரு ஓரா மீன்களையும், அதிபர் வீட்டு வேலை காரப்பிள்ளையிடம் கொடுத்து ஆறுதலாக வெட்டி, உப்பும் மஞ்சளும் போட்டு 9 மணிபோலத் தரவேண்டும் எனச் சொல்லிவிட்டுத் திரு. சபாபதியைச் சந்தித்தேன்.

அப்போதே அவர் கடுமுடுக்குப் பண்ணத் தொடங்கிவிட் டார். நான் உள்ளூரச் சிரித்துக்கொண்டேன். பத்துப் பிள்ளை பெற்றவளுக்கு ஒரு பிள்ளை பெற்றவள் பரிவினை பார்த்தது போலத்தான் வருமென நினைத்துக்கொண்டேன். உடனே புறப்பட்டால்தானே பள்ளிக்கூடத்துக்குப் போய்ச் சேரலாம் என்றார். உங்களுக்குச் சைக்கிளில் போவது சிரமம். டாகுத்தர் ஐயாவை வரச்சொல்லியிருக்கிறேன் என்றேன்.

டாகுத்தர் ஐயா என்றதும் இவர் ஒருபடி இறங்கினார். இதற்கிடையில் காலைச்சாப்பாட்டை முடித்துக்கொண்டோம். என்ன இன்னும் டாகுத்தர் ஐயா வரவில்லையே என்றார். ஆளை அனுப்பிப் பார்ப்போம் எனச் சொன்னேன். அப்போது நேரம் 8.15 வெளியில் சென்று கொஞ்சநேரம் நின்றுவிட்டு 'வருகிறார்' என்றேன். வண்டிலும் வந்துவிட்டது. எல்லாரும் ஆயத்தமானோம். அதிபர் வீட்டு வேலைகாரப்பிள்ளை ஓடி வந்து 5 நிமிஷம் பொறுங்கள். மீனை வெட்டி உப்புப்போட்டு மஞ்சள் கொஞ்சம் அரைத்துப் போட்டுத்தருகின்றேன் எனச் சொல்லி இன்னும் 15 நிமிடம் தாமதம்.

மூவரும் வண்டிலில் ஏறிவிட்டோம். நேரம் 9.00. தெரு வில் வண்டி செதியாகச் சென்றது. மணல்வெளியும், வயல் வரம்புக்கட்டுகளும் வந்ததும் மாடுகள் கலியாண ஊர்வலம் போல நடக்கத்தொடங்கின. வித்தியாதரிசி கேட்கிறார்: ''இந்த மாடுகள் விரைவாகப் போகாதா?'' டாகுத்தர் பதில்:

செதியாகத் துரத்தினால் திரும்பி வரமுடியாது. இடையில் படுத்துவிடும். அலைகளின் விருப்பத்திற்கே விடவேண்டும். 11 மணிபோல் ஆற்றின் இக்கரை சேர்ந்தோம். டாகுத்தர் அங்கு இறங்கிவிட்டு எங்களை வண்டில்மூலம் அக்கரை செல் லும்படி விட்டுவிட்டார்.

பாடசாலையை அடைந்தோம். வித்தியாதரிசியால் தேவாரம் பாடுங்கள் பார்ப்போம் என்ற தோரணையில் கேள்விகள் கேட்கப்படுகின்றன. முன்னேற்பாட்டின்படி டாகுத்தர் அரை மணித்தியாலத்தில் பாடசாலைக்குள் வந்து விட்டார். டாகுத்தருக்கு மரியாதை கொடுக்க விரும்பிய வித்தியாதரிசி, என்ன செய்வோம் என என்னைக் கேட்டார். மதியச் சாப்பாட்டைத் தோப்பூர்ப் பாடசாலை அதிபரிடம் ஒழுங்குபண்ணச் சொல்லியிருக்கிறேன். அங்கு சென்று சாப் பிட்டபின் உங்கள் குறிப்புகளை எழுதி அவரிடமே கொடுத்து விட்டுப் போகலாம். நான் திரும்ப அலைகளை எடுத்துக்கொள் வேன் என்றேன்.

எல்லோரும் புறப்பட்டு மட்டப்புற்களி வட்டவிதானை முத்துக்குமாரின் வீட்டுக்குச் சென்றோம். அங்கு ஒரு அறை யில்தான் ஆசிரியை வசிப்பது. டாகுத்தர் சொன்னார்: இங் குள்ள நீரைக் குடிப்பது நல்லதல்ல, சுண்ணாம்புச்சத்துக் கூடி யது. கொஞ்சம் பியர் குடித்துவிட்டுப் புறப்படுவோம் என்று. முன் ஏற்பாட்டின்படி டாகுத்தரே பியருக்குள் கொஞ்சம் சாராயத்தையும் மறைவில் வைத்து ஊற்றிக் கொடுத்துவிட்டு இருவரும் குடிக்கின்றனர். பியரும் சாராயமும் முடியும் தரு வாய். நான்மட்டும் நல்லபிள்ளையாக நடந்துகொண்டேன்.

இருவரும் புறப்படும்போது, என்னையும் வரும்படி டாகுத்தர் கேட்டார். நான் பள்ளிக்கூடத்தை விட்டு வரமுடி யாது சனிக்கிழமை காலையில் வருவதாகச் சொல்லி அனுப்பி விட்டு 4 மணிக்கு பட்டங்கட்டியாரின் சைக்கிளை எடுத்துக் கொண்டு சென்று அன்றிரவு டாகுத்தர் வீட்டில் நல்ல கொண் டாட்டம். பாடசாலை வேலையும் திருப்தி என எழுதப் பட்டிருந்தது.

மட்டப்புற்களியில் இருக்கும் நல்லதம்பி என்பவர் இடை யிடையே நான் பாடசாலைக்கு வருவதில்லை எனப் பொது முகாமைக்காரருக்குக் கடிதம் எழுதுவதாக அறிந்தேன். ஒரு நாள் பொதுமுகாமையாளரிடம் கேட்டேன்: அதிகம் பிட்டிசங் கள் வருகிறதாமே என்று. அவரது பதில் உன்னை எனக்குத் தெரியாதா? நீதான் அவர்களைத் தூண்டி எழுதச்சொல் கிறாய், அதனால் நான் ஒன்றுமே வாசிப்பதில்லை. எல்லா

வற்றையும் குப்பைக்கூடைக்குள் போட்டுவிடுவேன் என்றார். அதுவும் ஒரு நிம்மதி எனது நாடகத்தைத் தொடர்வதற்கு. அப்போது கிழக்குமாகாணக் கல்விப்பணிப்பாளராக இருந்தவர் திரு. S. தணிகாசலம் அவர்கள். திருகோணமலை வட்டாரக் கல்வி அதிகாரி திரு. சண்முகநாதன். அவர்தான் சில வேளை மட்டப்புறக்ளி வருடாந்தத் திரட்டுக்கு வருவார். அவர் மாமிசம் உண்ணுவதில்லை. வந்தால் சாப்பாட்டைக் கவனித்துவிடவும் எனச் சொன்னார். அடுத்த ஆண்டுப் பரீட்சைக்கு அவரே வந்தார். முதல்நாள் இரவு இளக்கந்தைப் பாடசாலையில் தங்கி, விடிய இன்னுமொருவருடன் இரு சைக்கிள்களில் வந்துசேர்ந்தனர்.

நான் இருந்த வீட்டுக்கு, ஆசிரியை ஒரு பையனை அனுப்பியிருந்தார். சோதனைகார ஐயாவாம் ஒருவர் வந்திருக்கிறார் என்று. மணி 8.15. எனது மேசைக் கடிகாரத்தை 7.30 என மாற்றிக்கொண்டு அதையும் தூக்கிக்கொண்டு போனேன். தானாகவே தனது பெயர் சண்முகநாதன் என அறிமுகப்படுத்தினார். அதற்கு நான், "எல்லாம் திரு. தணிகாசலம் D. E. சொல்லியிருக்கிறார். நீங்கள் வந்தால் ஆரதக்கறியுடன் தான் சாப்பாடு கொடுக்கவேண்டும் என்று. நான் வீட்டில் இருந்து புறப்படும்போதே வட்டவிதானையிடமும் மனைவியிடமும், இரு மரக்கறிகளோடு, வாழைப்பழமும் புட்டும் இரண்டு பேருக்கு அனுப்பும்படியும், அங்கு நான் மட்டக்களப்புக்குக் கொண்டுபோக வாங்கிவைத்திருந்த தேன்போத்தல் இரண்டையும் அனுப்பும்படியும். திறமான தேன். ஒரு போத்தல் 50 சதம்தான்; சொல்லியிருந்தேன்.

நானும், திரு. சண்முகநாதனும் நன்றாகக் கதைத்துக் கொண்டிருந்தோம். இப்படியான இடங்களுக்கு உங்களை ஏன் அனுப்பினார்கள் எனத் துக்கப்பட்டார். சாப்பாடும் வந்தது. வாழை இலையும். சந்தோஷமாகச் சாப்பிட்டார். பொது முகாமையாளரிடமிருந்து வருடாந்த சம்பவத்திரட்டுப் பத்திரம் தனக்கு வரவில்லை என்றார். நான் போய் அதை அவரிடம் வாங்கிக்கொண்டு அடுத்த சனிக்கிழமை உங்களை வீட்டில் சந்திக்கிறேன் என்றேன். எனது கரைச்சல் பொறுக்க முடியாமல் தேன் போத்தல்களையும் பெற்றுக்கொண்டார்.

அடுத்த சனிக்கிழமை அங்கு சென்றேன். எல்லாம் திருப்தி என எழுதிவிட்டார். எனக்கும் திருப்தி ஏற்பட்டது. ஏனெனில் பொதுமுகாமையாளர் என்னிடம் அடுத்த ஆண்டு கொக்கொட்டிச்சோலை றோ. க. த. க. பாடசாலைக்கு என்னை மாற்றப்போவதாகக் கூறியிருந்தார். ஏனெனில் அங்கே

ஆங்கிலம் படிப்பிக்க ஆசிரியர் இல்லை. அங்கே ஆங்கிலம் படிப்பித்தால் 10 ரூ. சம்பளத்தில் கூடும். மட்டப்புற்களியில் மேல் வகுப்புக்கள் இல்லாதபடியால் தமிழ் படிப்பித்து, ஆறாம் ஆண்டுக்கு மேல் தமிழ் இலக்கணம் இலக்கியம் ஒரு வாரத்தில் 10 மணித்தியாலம் படிப்பித்து மாதாந்தம் 10 ரூபா கூடுதலாகப் பெற்றிருந்தேன். இச்சலுகை பாலபண்டிதம் சித்தியடைந்ததால். எடுத்த 10 ரூபாவும் நிறுத்தப்பட்டது என்று ஏதோ முதலைக்கண்ணீர் வடித்தார். எனக்கும் பொரியல் சட்டியில் இருந்து அடுப்புக்குள் விழுந்தமாதிரித்தான் என மனம் எண்ணியது. ஒவ்வொரு நாளும் மண்முனைத்துறை கடந்துபோகவேண்டிய நிலை. ''மலையே வந்தாலும் தலையே சும'' என்ற எண்ணம் வந்தது. அடுத்த ஆண்டு கொக்கொட்டிச்சோலை சென்றேன்.

# 10. கொக்கொட்டிச்சோலை
# றோ. க. த. க. பாடசாலை

மட்டக்களப்புச் சந்தையில் 'எங்கள் கடை' யையும் ஆரம் பித்துவிட்டேன். (இதைப்பற்றிய விபரம் வேறு இடத்தில்.) திட்டமிட்டபடி செயலாற்றத் தொடங்கினேன். உடுப்பை மாற்றிக்கொண்டேன். அரைக்காற்சட்டை (விளையாட்டுக் குப்போடுவது), கலர் வைத்த வெனியன் (ரி. சேட்). காலை 6 30க்கு வீட்டில் இருந்து புறப்பட்டு அரசடிச்சந்திக்குச் சென்று அரசடிப் பாடசாலையில் அல்லது (பக்கத்து வீடு) டாக்டர் தருமரெட்ணம் வீட்டில் சைக்கிளை வைத்து வஸ்ஸில் ஏறு வேன். (என்னைக் கண்டால் வஸ்ஸை நிறுத்திவைத்திருப்பர்.)

தாழங்குடாவில் இறங்கித் தலமுகாமையாளர் அறையில் இருந்த றேசிங் சைக்கிள் (பாரங் குறைந்தது). அதில் ஒரு பன் னால் இழைத்த தொப்பியும் வைத்திருந்தேன். ஏனெனில் காலை வெயில் முகத்தைச் சுடும். பாதுகாப்பாக அதை அணிந்து கொண்டு மண்முனைத்துறையைச் சேர்வேன். சுமார் ஒரு மைல். அந்தநேரம் தோணிகள் வந்து மீன் விற்பனை நடக் கும். நான் விரும்பியபடி இறால், நண்டு, மீன் வாங்கிக் கொண்டு (10 சதம் வரையில்தான். இப்போ 50 ரூபாய்க்கு மேல் பெறுமதி) பாதையில், வள்ளத்தில் அல்லது தோணியில் அக்கரை செல்வேன்.

பாடசாலை சேர எப்படியும் 9 மணி ஆகும். எனது உதவி ஆசிரியை செல்வி அருளம்மா (இன்றும் இவர் செல்வி யாகவே இருக்கின்றார்). இவரது சகோதரி S. S. C. சித்தி யடைந்துவிட்டு வீட்டில் இருந்தார். அவரை எனது பாடங் களைப் படிப்பிக்கச்செய்து எனது மேலதிக 10 ரூபாவை அச் செல்விக்குக் கொடுத்தேன்.

தல முகாமையாளர் அருட்திரு. கிளாக்ஸ்ஸன் அவர்களிடம் சொல்லி அவரும் 10 ரூ. கொடுத்தார். 20 ரூ. இவர்களது குடும்பத்துக்கே போதுமான பணம். கொக்கொட்டிச்சோலையில் எனது வேலை: கொண்டுபோகும் சாமான்களை (மீன், இறால், மரக்கறி) கொடுப்பது, எனது உடுப்பை மாற்றுவது, பாடசாலையில் வந்து இடாப்பைப் போடுவது, ஆங்கிலத்தைக் கற்பிப்பது, மதியம் 12 மணிக்கு அறையில் வைத்திருக்கும் சாப்பாட்டை உண்பது. (மாதம் முடிவில் சாப்பாட்டுக்கென அவர்கள் கேட்கும் தொகையைக் கொடுப்பது), புறப்பட்டுத் துறையடிக்குச் செல்வது. வீட்டில் போய்க் குளித்துவிட்டு எங்கள்கடை மேற்பார்வைக்கு எப்படியும் 3.30 க்குப் போய்ச் சேர்ந்துவிடுவேன். இரவு 10-00 மணி வரை அங்கே இருப்பேன்.

அங்கு நாட்டுக்கோழி முட்டை மலிவு. காலையில் பிள்ளைகளை வீடு வீடாக அனுப்பி முட்டைகள் வாங்குவேன். இதையிட்டு தலமுகாமையாளரிடம் சிலர் முறைப்பட்டார்கள். அவர் அதை என்னிடம் கேட்டபோது நான் சொன்ன பதில்: சரியாகக் கணக்குப்பார்த்துக் காசு கொடுக்கவேண்டும். என்னிடம் சரியாகக் கணக்குக்காட்டி மிகுதிப் பணத்தையும் தரவேண்டும். இது நடைமுறைப் படிப்பித்தல் (Practical teaching). இதனால் எனக்கு நட்டமே ஏற்படும். சில முட்டைகளை உடைத்தும்விடுவார்கள். நியாயத்தை ஏற்றுக்கொண்டார்.

கொக்கொட்டிச்சோலைப் பாடசாலை மட்/பட்டின வட்டாரத்துடன் இணைக்கப்பட்டிருந்த காலம். வட்டாரப் பரிசோதகர் திரு. வ. அரசன். இவரும் மனைவியும் விஞ்ஞானப் பட்டதாரிகள். பிள்ளைகள் இல்லை. இவரது குணநலன்களைப் பற்றி எனக்குத் தெரியாது. மட்/கல்விக்கந்தோரில் O. A. ஆகக் கடமையாற்றியவர். திரு. பேர்சி செல்லையா எனது நண்பன். இவரிடம் விடயத்தைச் சொன்னேன். அடுத்த மாதம் வருடாந்தப்பரீட்சைக்காகத் திரு. அரசன் கொக்கொட்டிச்சோலைக்கு வருவார். அவரைக் கொஞ்சம் அறிமுகப்படுத்திவிடவேண்டும் எனக் கேட்டுக்கொண்டேன்.

அன்று செவ்வாய்க்கிழமை. ஒவ்வொரு புதன்கிழமையும் திரு. அரசன் இங்கு வருவார். நீரும் வந்தால் கதைக்கலாம் என்றார். அப்படியே நான் திரு. பேர்சியுடன் கதைத்துக்கொண்டிருக்கும்போது திரு. அரசன் வந்தார். ஆரம்ப அறிமுகத்திலேயே கிளம்பிவிழுந்தார். சடுபுடு என்று ஏதோ கதைத்துவிட்டுச் சென்றுவிட்டார்.

பேர்சியிடம் மனம்வருந்திக் கதைத்தபோது பேர்சி சொன்னார்: வெளிக்கதையில் அவரை மட்டிடமுடியாது. தான் அறிந்த வகையில் மட்டக்களப்பு மக்களுக்கு உதவி செய்யும் யாழ்ப்பாணத்தவர் இவர் ஒருவரேதான். சிலரை வெளிநாட்டுக்கு அனுப்பியும் படிப்பிக்கிறார். உமது போக்கும் அவரது போக்கும் ஒன்றாய் இருப்பதால் கெதியில் நீங்கள் இருவரும் நல்ல நண்பர்களாகிவிடுவீர்கள் என எனக்கு ஆறுதல் கூறினார்.

இரு மாதங்களின்பின் கொக்கொட்டிச்சோலைப் பாடசாலைக்கு, நான் பாடசாலை செல்வதுபோலவே அரைக்காற்சட்டை, ரீசேட், பன் தொப்பி ஒன்றுடன் காலை 11 மணியளவில் துவிசக்கர வண்டியில் வந்து இறங்கினார். வெய்யிலில் நன்றாகக் களைத்திருந்தார் உடனே அவரை எனது அறைக்குள் கூட்டிச்சென்று அலுமாரியில் இருந்த ½ போத்தல் சாராயத்தையும் கிளாஸ் ஒன்றையும் எடுத்து மேசையில் வைத்தேன்.

நன்றாகக் களைத்துப்போய்விட்டீர்கள். கொஞ்சம் எடுத்தால் உடம்புக்குத் தென்பாக இருக்கும் என்றேன். தான் குடிக்கமாட்டேன் என்றார். மட்டக்களப்பார் பாயோடுதான் ஒட்டவைப்பார்கள். சாராயத்துக்குள் மருந்து போட்டுக் கொடுக்கமாட்டார்கள். இந்தப் போத்தலில் சீல் இன்னும் உடைபடவில்லையே என்றேன். ஆறுதலாக விடயத்தைச் சொன்னார்.

கொக்கொட்டிச்சோலை இ. கி. மி. பாடசாலையில் ஒரு நாள் மதுபானம் அருந்தியதாக ஒரு முறைப்பாட்டு விளக்கம் இருக்கிறது. இதற்கிடையில் இங்கும் அதைச் செய்யத் தான் விரும்பவில்லை. இரவு 8 மணிக்குக் கட்டாயம் தனது வீட்டிற்கு வரும்படி அழைப்பையும் தந்தார். இடாப்பில் ஏற்படும் பிழைகளை எப்படிக் கண்டுபிடிப்பது, பாடசாலை நிருவாகம் எப்படிப் போகிறது என்றார். நான் உள்ளது முழுவதும் சொன்னேன். இவ்வளவு வேலை செய்தாலே போதும், நீதானே எடுக்கும் சம்பளத்துக்கும் மேலாக எல்லா வேலைகளையும் தலையிற் போட்டுக்கொள்கிறாய் என்று கதைத்து வேலை திருப்தி என எழுதிவிட்டுச் சென்றுவிட்டார்.

அன்றிரவு 8 மணிக்கு அவரது வீட்டில் ஆரம்பித்த சிநேகிதம் வளர்ந்துகொண்டே வந்தது. தமிழ், சிங்களப் பிரச்சினையின் போது மட்டக்களப்புக் கச்சேரியைச் சுற்றித் தமிழர் சத்தியாக்கிரகம் இருக்கின்றனர். சுமார் மூவாயிரம்பேர் வரை. பகலில் சாப்பாட்டுக்குப் பொறுப்பாய் இருந்தவர் திருமதி றாணி திசைவீரசிங்கம். இரவில் நான். ஒவ்வொரு நாளும் இரவு 8

மணிபோல திரு. அரசன் முற்றவெளியில் (வெபர் விளை யாட்டரங்கு) வந்துநின்று என்னைக் கூப்பிடுவார். சப்பை உருவமான சிறிய போத்தலில் இரண்டு திறாம் சாராயம் இருக்கும். கொஞ்சநேரம் கதைத்துக்கொண்டிருப்போம். அதற் கிடையில் இரு தடவையில் அதைக் குடித்துவிட்டுப் போத் தலைக் கொடுப்பேன். அதிகம் நித்திரை விழித்து வருத்தத் தைத் தேடவேண்டாம் எனப் புத்திசொல்லிப் போவார்.

இவர் யாழ்ப்பாணம் மாறுதல் பெற்றுச்செல்ல இருந்த போது பிரியாவிடை நிகழ்ச்சிக்காக ஒவ்வொரு ஆசிரியரிடமும் இவ்விரண்டு ரூபா வீதம் வாங்கினேன். இதை அறிந்து என் னிடம் கூறினார்: காசு வாங்கிப் பிரியாவிடை செய்வதைத் தான் விரும்பவில்லை. வெறும் பேச்சுக்களோடு முடிப்பதா யின் தான் வருவதாக ஒப்புக்கொண்டார். நான் சொன்னேன்: இன்று மாலையாகுமுன் வாங்கிய பணம் யாவும் திருப்பிக் கொடுபடும். இப்போ மனம் சரிதானே என்று. ஆம் என்றார்.

பட்டின வட்டாரத்தை இடவசதிக்கு அமைய ஐந்து சிறிய வட்டாரங்களாகப் பிரித்து, சிற்றுண்டி வகைகள், குளிர்பானம், புகைப்பட ஒழுங்கு, சோடினைகள் எனக் கொடுத்தேன். நிகழ்ச்சி நடைபெறும் இடம் அரசடி மகா வித்தியாலயம் (மகாஜனக் கல்லூரி). முதல்நாள் இரவு குருத்துகள் பின்னி, மட்டக்களப்பு பட்டின வட்டார ஆசிரியர்கள் என வெளிச் சுவரில் ஒட்டுவதற்கு முகப்புப்போல, அட்டையில் வெட்டி எழுதி, குலைகளுடன் இரு வாழைமரங்கள், பின்னிய குருத் துக் கட்டப்பட்ட கயிறுகள் கம்புகளில் கட்டப்பட்டு, கம்பை நடுவதற்கு மடு கிண்டி, முழு போத்தல்களின் கழுத்தை உடைத்துவிட்டு, மடுவில் வைத்துக் கடுதாசியால் மறைத்து (உள்ளே 4 ஈர்க்குகள்) ஓரளவு மண்ணால் மூடி எல்லாம் ஆயத்தமாகிவிட்டன.

குறித்த நாள் அன்று பி. ப. 3 மணிக்கு ஆரம்பம். 2 மணி யிருக்கும் தனது காரில் அரசடிப் பாடசாலையைப் பார்த்துப் போகிறார். அந்தநேரம் ஒன்றுமே இல்லை. எல்லாம் வெறிச் சோடிச்கிடக்கின்றன. எனது மூளை வேலை செய்யத்தொடங் கியது. இவர் சிலவேளை திரும்பவும் வரக்கூடும் என்று, ஒரு ஆசிரியரைச் சைக்கிளில் அனுப்பி அவரது வீட்டு வாசலில் சைக்கிளில் காற்றைத் திறந்துவிட்டு உருட்டிக்கொண்டு அவ ரது வீட்டுக்குச் சென்று ''வந்தேன் வழியில் சைக்கிள் காற்றுப் போய்விட்டது. நானும் உங்களோடு வருகிறேன் என்று சொல்லி அவரோடு இருக்கும்படி. அப்படியே நடந்தது.

பி. ப. 2 மணிக்கே சிற்றுண்டிகள், குளிர்பானம் எல்லாம் ஆயத்தம். ராஜா ஸ்ரூடியோ நடராசாவும் ஒரு அறைக்குள் இருக்கிறார். 2 45க்குத் தொடங்கிய வெளிச் சோடினை 10 நிமிடத்தில் எல்லாம் முடிந்தது. 3 மணிக்குத் திரு. அரசனின் கார் வருகிறது. நாங்கள் எல்லாரும் தெருவோரத்தில் காரை மறிக்க ஆயத்தமாக நிற்கின்றோம். அதற்கு அவர் இடம் தராமல் சிரித்துக்கொண்டு தானாகவே இறங்கிவந்தார்.

மாலை போட்டு வரவேற்ற படத்தை எனது நூறுவருட மட்டுநகர் நினைவுகள் என்னும் நூலில் 56ம் பக்கத்தில் காண லாம். மற்றப் படம் வாழ்த்துப்பத்திரம் வாசித்துக்கொடுத்த போது. சொற்பொழிவுகள் முடித்து அவரது நன்றி உரையின் பின், என்னிடம் இரவு 7 மணிக்குத் தனது வீட்டுக்கு வரும்படி சொல்லிவிட்டுப் போனார். நான் போனதும் அவர் சொன்ன முதலாம் ஆசை வசனம் ''உன்னைப்போல ஒரு துணிந்த போக்கிரி ஆளை நான் இதுவரை காணவேயில்லை.''

''தகுதி கண்டு மதிப்புக் கொடுக்கத் தயங்காதே''. இது எனது குருவாக்கு. நிறைவேற்றிவிட்டதால் நிம்மதியடைந் தேன். இருவாரம் கழித்து இரு புகைப்படங்களையும் பெருப் பித்துக்கொண்டு யாழ் தும்பளை சென்று அவரிடம் கொடுத்து அன்று நாள் முழுவதும் அவருடன் சந்தோஷமாகச் செல வழித்துவந்தேன்.

### வாழ்த்துப் பத்திரத்தில் ஒரு பகுதி:

மட்டுநகர் பட்டின வட்டார வித்தியாதரிசி

**திருவளர் வ. அரசன் அவர்கள்**

பிரிவுபசாரம் பெற்ற ஞான்று

அன்னாரின் சேவைநலம் பாராட்டி

மேற்போந்த வட்டார ஆசிரியர் நயந்தளித்த

## நன்மொழி வாழ்த்து

தாய்மொழி வாழ்த்து

தென்னவன் பொன்மொழி தெய்வத்தமிழ்மொழி
திசைபட வாழியவே
முன்னுளோர் கண்ணின் முத்தெனக்காத்தநம்
முதுமொழி வாழியவே.



வீச்சுக்கல்முனை குடிநீர்ப் பிரச்சினை: ஒரு குடம் நீர் 10 சதப
இதற்கு நிவாரணம் காணப்பட்டது. (பக்: 64)




தகுதிகண்டு மதிப்புக்கொடு: நண்பனாகிய உயர் அதிகாரி.
பக். 54, 55, 56)



அமைச்சர் தேவநாயகத்திற்கு வரவேற்பு : மியான்கல்குளம் குடியேற்றத் திட்டத்தில் தன்னந்தனியாக ஆசிரியப் பணிபுரிந்த செல்வி மங்கையர்க்கரசி (கிரான்) அமைச்சருக்குத் திலகமிட்டு வரவேற்கிறார். (பக்: 156)




அமைச்சரும், திரு. மரியசிங்கமும் : கட்டுமுறிவுக்குளம் குடியேற்றத்திட்டத்தை உருவாக்கியவர்கள். (பக்: 128)

நலம் பாராட்டு வாழ்த்து

சென்றவிட மெலாம் சீர்கொள வாழி,
குன்றிடை விளக்காய் குணம் நிறை குடமாய்
மன்றிடை மஞ்ஞையாய் மணியிடை பவளமாய்
நின்று நீரிலங்கியே நீடூழி வாழியே.

வெண்பா

பேரால் அரசன் பெருங்குணத்தால் நல்லாசான்
சீரார் திறம்நயந்தே செந்தமிழ்ப்பாத் - தாரேந்திச்
சூட்டியுமைப் பாராட்டச் சூழ்ந்திருக்கும் இச்சபையே
காட்டும் கடமைக் கவின்.

விருத்தம்

அறிவு மணக்கும் பணியாளா!
அன்பு மணக்கும் கனிமொழியோய்!
விரிவு மணக்கும் கொள்கைகளால்
வெற்றி மணக்கும் கடமையிலே
உறுதி மணக்கும் குணசீலா
உவப்பக் கூடிக்குலவிய நும்
பிரிவு மணக்கும் இஞ்ஞான்று
பிரிய மனத்தால் வாழ்த்துதுமே.

— "ராஜபாரதி"

ப. வ. ஆசிரியர்,
மட்டக்களப்பு.
26-7-61.

"இன்னாசெய் தாரை யொறுத்த லவர்நாண
நன்னயம் செய்து விடல்" (குறள் 314)

கத்தோலிக்க பாடசாலைகளின் பொது முகாமையாளராக வண. E. கிறவுதர் நியமிக்கப்பட்டார். வண. தம்பிமுத்து அவர்கள் காலையில் பூசை முடிந்ததும் அறையிலேயே முடங்கிக்கிடக்கவேண்டியதாயிற்று. அவரது காருக்கும் பெற்றோல் வாங்கக் காசு இல்லாத நிலை. அவரது மனதை அதிகம் அலட்டிக்கொண்டிருந்தது பெற்றோல் கடைக்கு இரண்டாயிரம் ரூபா வரையில் கடன் கொடுக்கவேண்டியிருந்த விடயம். இதைப் பலரிடம் வாய்விட்டுச் சொல்லியும் எவராவது உதவி செய்ய முன்வரவில்லை.

மேலே குறிப்பிட்ட குறட்பா ஞாபகத்துக்குவர ஏதாவது உதவி செய்யவேண்டுமென்ற எண்ணம் ஏற்பட்டது. கத்

தோலிக்க ஆசிரியர் சங்கத்தில் சகாயநிதி என்ற தலைப்பில் war allowance யுத்தப்படி 43 ரூபாவும், கடன் வழங்கிய வகையில் வட்டிப் பணமும் ஒவ்வொருவர் பெயரிலும் நூற்றுக்கு மேற்பட்ட தொகை கையிருப்பில் இருந்தது. சிறிய பத்திரம் ஒன்று அச்சிடப்பட்டு ஒவ்வொரு ஆசிரியருக்கும் அனுப்பப்பட்டது.

பொதுமுகாமையாளராகப் பணிபுரிந்து இளைப்பாறிய வண. தம்பிமுத்து அவர்களுக்குச் சிறிய பணமுடிப்பு ஒன்றை அன்பளிப்புச் செய்வதற்காக விரும்பிய ஆசிரியர், தங்களுக்குரிய பணத்தில் 25 ரூபாவைக் கொடுக்கச் சம்மதித்து ஒப்பமிடும்படி. இந்தவகையில் மூவாயிரம் ரூபா வரையில் சேர்ந்தது.

ஒரு சனிக்கிழமை காலை 10 மணிக்கு புனித மரியாள் பாடசாலையில் சந்தித்து, அப்பாடசாலை அதிபர் வண. மரியதாஸ் அவர்கள் தலைமையில் சுமார் 20 பேர் வண. தம்பிமுத்து அவர்களின் அறைக்குச் சென்று இருவர் அவர் செய்த நன்மைகளுக்காக நன்றி கூறியபின் நான் அன்பளிப்பைச் செய்தேன். அவர் தனது பதிலுரையில் தன்னிடம் நன்மை பெற்றோர் பலர். எவருமே தனக்கு உதவவில்லை. தான் வேணுமென்று தீமை செய்தது இவர் ஒருவருக்குத்தான். அவரே எனது கஷ்டத்தை நீக்கிவிட்டார் எனக் கூறித் தனது மன்னிப்பையும் கோரினார். இருவரும் நல்ல சிநேகிதர்களானோம்.

# 11. வெளிக்கள நடவடிக்கைகள்

**செத்தல் மிளகாய்த் தட்டுப்பாடு :**

புளியந்தீவில் செத்தல் மிளகாய்த் தட்டுப்பாடு ஏற்பட்டது. தும்பன்கேணியில் கொச்சித்தோட்டம் ஒன்று உண்டு. அங்கு சென்றால் ஓரளவு மலிவாக வாங்கலாம் என்று யாரோ சொன்னது ஞாபகத்தில் வந்தது. அந்தநேரம் கட்டுப்பாட்டு விலை ஒரு இறாத்தல் ஒரு ரூபா இருபத்தைந்து சதம். எனது நண்பன் ஒருவரிடம் கார் இருந்தது. இன்னும் ஒருவரையும் கூட்டிக்கொண்டு காருக்குத் தாங்கி நிறையப் பெற்றோல் அடித்து, எங்களுக்கும் பெற்றோல் தேவைப்படும் என நண்பன் ஞாபகப்படுத்தியதால் இரண்டு போத்தல் சாராயமும் (ஒரு போத்தல் 8 ரூபா) வாங்கிக்கொண்டு களுவாஞ்சிக்குடியால் திரும்பி எருவிலைக் கடந்துபோகும்போது இன்னும் 2 போத்தல் சாராயமும் வாங்கிக்கொண்டு தும்பங்கேணியை அடைந்தோம்.

கொச்சித்தோட்டத்தில் ஒரு பகுதியில் செங்கம்பள வரவேற்புப்போல காய்ந்துகிடக்கும் செத்தல் மிளகாய் காட்சியளிக்கின்றது. மனேஜரைச் சந்தித்து முதலில் ஒரு போத்தல் சாராயத்தை அன்பளிப்புச் செய்து கதையைத் தொடங்கினேன். மனேஜர் உற்சாகத்துடன் ஒரு இடத்துக்கு அனுப்புவதற்காக 25 அந்தர் (112×25=2800 இறா.) செத்தல் மிளகாய் ஆயத்தமாக வைத்திருக்கிறோம். நாங்கள் ஒரு இறாத்தல் ஒரு ரூபாய்படிதான் கொடுக்கிறோம். நீங்கள் இரண்டாயிரம் ரூபா தந்தால் போதும் என்றார். மற்றப் போத்தலையும் அன்பளிப்புச் செய்தேன். திரும்பி வரும்போதும் எருவிலில் 2 சாராயப் போத்தல்கள் வாங்கினோம். புளியந்தீவிலும் தாண்டவன்வெளியிலும் பெரிய குடும்பங்களுக்கு இரண்டு இறாத்தலும், சிறிய குடும்பங்களுக்கு ஒரு இறாத்தல் வீதமும் இறாத்

தல் ஒரு ரூபாப்படி கொடுத்தேன். ஒரு சதமும் எங்களுக்கு நட்டமில்லை. கள்ளச்சந்தையில் இறாத்தல் 10 ரூபாவுக்கு விற்ற கடைகளில் இருந்த மிளகாய் காய்ந்து பாரங்குறைந்து. காம்பு கழன்று, விதை உதிர்ந்து, பூஞ்சணமும் பிடிக்கத் தொடங்கிவிட்டது.

சுப்பிரமணியம் ஸ்பெஷல் + முருங்கைக் கதியால்கள்:

ஒருமுறை யாழ்ப்பாணம் சென்றபோது பண்டத்தரிப்பில் (மனைவியின் வீடு) குளிர்பானம் தந்தார்கள். நல்ல சுவையுள்ளதாய் இருந்தது. இந்தக் கம்பனி ஸ்ரான்லி றோட்டில் இருந்தது. அந்த முதலாளியுடன் கதைத்து, தேவைப்பட்டால் வருகிறேன் என்று சொல்லிவிட்டு மட்டக்களப்புக்கு வந்துவிட்டேன்.

எஸ். எஸ். ஸீ சித்தியடைந்த ஒரு ஏழைப் பையனுக்கும் வழிகாட்டவேண்டிய நிலையும் ஏற்பட்டது. புளியந்தீவு வஸ் ஸ்ரான்ற்றுக்குப் பக்கத்தில் இராஜேஸ்வராத் தியேட்டருக்கு எதிரில் ஒரு பெரிய கறாஜ் பூட்டிக்கிடந்தது. அது நகரசபைக்குரிய லொறி இரவில் விடும் இடம். தற்போது தேவையில்லாமற் கிடக்கிறது என அறிந்து, வருடம் நூறு ரூபா வாடகை தருவதாகப் பொருந்தி, அதைப் பெற்று சோடாக் கடையாக மாற்றினேன். மட்டக்களப்பில் இருந்து வாடகை லொறிமூலம் பண்டத்தரிப்பு சென்று, அங்கு எனது மைத்துனர் வாங்கி வைத்திருக்கும் யாழ்ப்பாணத்து முருங்கைக் கதியால்களையும் ஏற்றிக்கொண்டு, ஸ்ரான்லி றோட்டில் சோடாப்பெட்டிகளையும் ஏற்றிக்கொண்டு வருவேன்.

சாதாரணமாக மாதமொருமுறை செல்வேன். பையனின் குடும்பமும் வாழ்ந்தது, சோடாவுக்கும் நல்ல மதிப்புக் கிடைத்தது. அப்போது வின்சன் டி போல் நலன்புரிச் சங்கத்தில் பிராந்தியத் தலைவராக இருந்தேன். ஏழைக் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு முருங்கைக் கதியால் இலவசமாகக் கொடுத்து, குடத்தடியில் அல்லது கிணற்றடியில் நடச்செய்தேன். மட்டக்களப்பிலும் யாழ்ப்பாணத்து முருங்கைக்காய் மலிவாகக் கிடைக்கத்தொடங்கியது. ஏழைக் குடும்பங்களும் ஓரளவு திருப்தியடைந்தனர்.

சிலவேளைகளில் வாகரையில் இருந்தும் முருங்கைக் கதியால் கொண்டுவந்து கொடுத்தேன். (Eastern Bus Company) கிழக்கின் வஸ் கம்பனியில் மனேஜிங் டிறக்ரர் திரு. K. W. தேவநாயகம் என்பவர் (பின்பு அமைச்சர்).

நாங்கள் இருவரும் நெருங்கிய நண்பர்களாயிருந்ததால் வஸ் பிரயாணம், சாமான்கள் ஏற்றி அனுப்புதல் எல்லாம் இலவசம். இதனாலேயே வாகரையில் இருந்து முருங்கைக் கதியால் கொண்டுவருவது இலகுவாயிற்று.

யாழ்ப்பாணத்து முருங்கைக்காய்க்கும் வாகரைக்காய்க்கும் உள்ள வித்தியாசம், யாழ்ப்பாணத்துக்காய் நீளமும், பருப்பமும், நல்ல சதைப்பிடிப்பும். ஆனால் குறைவாகத்தான் காய்க்கும். உருசி கூட. வாகரைக்காய் மெல்லியதாக, சதைப் பிடிப்புக் குறைவு. ஆனால் ஒரு கந்தில் நூற்றுக்கணக்கில் காய்க்கும். உருசியும் குறைவுதான். வியாபாரிமார் பயனடைவது இதனால்தான். யாழ்ப்பாணத்துக்காய் விலை கூட என்று எல்லாரும் வாங்குவதில்லை.

தென்னம்மட்டைகளிலும் இந்த வித்தியாசம் அதிகம் உண்டு. குருநாகல் மட்டை இரண்டு சேர்த்தால் கற்குடா மட்டை ஒன்றுக்குச் சமன். குருநாகல் மட்டை மூன்று தன்னா முனை மட்டை ஒன்றுக்குச் சமன். குருநாகல் மட்டை ஐந்து சேர்ந்தால்தான் சின்ன உப்போடை, பெரிய உப்போடை ஒரு மட்டைக்குச் சமன். இன்னும் விளக்கமாகச் சொன்னால் குரு நாகல் மட்டை 500 கொண்டு வேயும் இடத்தைச் சின்ன உப் போடை மட்டை 100 கொண்டு வேயலாம். குருநாகல் மட் டையால் வேய்ந்த இடம் 2 வருடத்தால் ஒழுகத்தொடங்கும், உப்போடை மட்டை 4 வருடம் வரை நின்றுபிடிக்கும். வேய்ச் சல் கூலி, குருத்துக் காசும் குறைவு.

நான் சின்ன உப்போடை, பெரிய உப்போடையில் ஒவ் வொரு வீடுவீடாகச் சென்று கூடுதலாக முற்பணம் கொடுத்து, சேகரித்து எடுத்து, புளியந்தீவிலுள்ள ஏழை மக்களுக்கு அதே விலையிற் கொடுத்து வேயச்செய்தேன். இப்போ இவை களைக் கவனிப்பார் யாருமில்லை. வின்சன் டீ போல் சபை யாரால் குறிப்பிட்ட ஏழைகளுக்கு வாராந்தம் பணம் கொடுப்ப தோடு வருடமொருமுறை நத்தாருக்கு முதல்கிழமை உடுப்புக் கொடுத்தல். அன்று திருவாசு உத்தியோகத்தர்களும் இவர் களுடன் இருந்து சாப்பிடுவார்கள்.

இந்த வழக்கம் அவர்கள் ஏழைகள் என்பதை மற்றவர் களுக்கும் பகிரங்கப்படுத்துவதாய் இருக்கும் என்பது எனது எண்ணம். இதை எப்படியாவது மாற்றவேண்டும் என்று அருட்திரு. அலக்சாந்தர் அவர்கள் ஆன்மீகத் தலைவராய் இருந்தபோது இதை விளக்கினேன். அவரும் ஏற்றுக்கொண் டார். அவர் அப்பதவியில் இருந்த மூன்று ஆண்டு காலமும்

அதிட்டலாபச் சீட்டுக்கள் விற்றுப் பணத்தை இரட்டிப்பாக்கி, அவருடைய காரில் இரவிரவாகச் சென்று 100 ரூபாவுக்குக் கொடுத்துவந்த வீட்டுக்கு 200 ரூ பா பெறுமதியான உடுப்பும், பிள்ளைகளுக்குச் சீனவெடிக்கட்டு, செருப்பு முதலியவைகளும் கொடுக்க உதவினேன். இதையும் இப்போது கைவிட்டுவிட்டார்கள். எல்லாரும் தலைவர், செயலாளர், அங்கத்தவர் என்ற பதவிகளில் இருந்து பேரும் புகழும் பெற விரும்புகிறார்களேயன்றி, கஷ்டப்பட்டு வேலை செய்பவர்கள் வர வரக் குறைந்துகொண்டே வருகின்றார்கள். யாரிடம் சொல்வது.

தமிழ் சிங்களப் பிரச்சினை ஏற்பட்டபோது சில சிங்களக் கடைகளிற்தான் சாமான்கள் இருந்தன. ஆனால் பொருட்கள் யானை விலை, குதிரை விலை. சந்தைக்குள் 'எங்கள் கடை' என்னும் பெயரில் ஒரு கடையை உருவாக்கினேன். தமிழரும் நாடுபக்கங்களிலுள்ள சிறிய கடைக்காரரும் பெரிதும் பயனடைந்தனர். (இதன் விளக்கம் வேறொரு இடத்தில்)

# 12. வீச்சுக்கல்முனைப் பாடசாலை

வீரமுனை, நொச்சிமுனை, பாலமுனை, கல்முனை, மண்முனை, புளியடிமுனை எனப் பல முனைகள் மட்டக்களப்புப் பகுதியில் இருந்தாலும் சொறிக்கல்முனை, தன்னாமுனை, வீச்சுக்கல்முனை ஆகிய மூன்று இடங்களிலுமுள்ள கத்தோலிக்கர் நெருங்கிய தொடர்புடையவர்கள்.

புனித மரியாளின் தாயார்தான் புனித அன்னம்மாள். இவரின் பெயர்கொண்ட தேவாலயம்தான் வீச்சுக்கல்முனையில் இருக்கிறது. திருநாள் கொண்டாட்டம் ஆடி மாதம் 26ந் திகதியில் நடைபெறும். ஒரு கிழமைக்கு முன்பே தன்னாமுனை, சொறிக்கல்முனைக் கத்தோலிக்கர் அங்கு சென்று குடில்கள் கட்டித் தங்குவர்.

தாண்டவன்வெளி காணிக்கை மாதா கோயில் பங்குத் தந்தையாக இருந்த அருட்திரு. லாசறஸ் அவர்கள் ஆடி மாதம் 26ந் திகதி காலையில் என்ன வேலை இருந்தாலும் அவைகளைப் பின்போட்டுவிட்டு, வருபவர்களிடம் காலை 11 மணிக்கு வரும்படி அனுப்பிவிட்டுத் தான் பெத்தாச்சியிடம் போகவேண்டும் என்று சொல்லிப் போய்விடுவார்.

'பெத்தாச்சி' என்று அவர் புனித அன்னம்மாளைச் சொல்லும் விபரம்: யேசு, பெரிய வெள்ளியன்று சிலுவையில் தொங்கிக்கொண்டிருந்தபோது தமது தாயாரான மரியாளை, புனித அருளப்பர் இடம் இதோ உன்தாய் என ஒப்புவித்தார். அன்றுதொடங்கி மாதா எல்லா மக்களுக்கும் தாய் ஆனார். நமது தாயின் தாய்தான், பாட்டி, பெத்தாச்சி என அன்புடன் அழைக்கப்படுகின்றார். குழந்தைகளுக்கு வருத்தம் வந்

தால், இன்றும் அக்கோயிலில் கொண்டுபோய்ப் பழிபோட்டுக் கிடப்பது வழக்கத்தில் உள்ளது.

மட்டக்களப்பு வாவியின் ஒரு கரையில் இக்கோயில் அமைந்துள்ளது. இங்கு நின்று பார்த்தால் புளியந்தீவின் தோற்றத்தை அழகுறக் காணலாம். இன்றும் பெரியகளம் (எருமை தீவு) படுவான்கரை, பரந்துகிடக்கும் மட்டக்களப்பு வாவி, அழகுகொழிக்கும் காட்சி. தலைநகரில் இருந்து குறுக்கு விட்டம் ஒரு மைல் தொலைவில் உள்ள இந்தக் கவர்ச்சிகரமான இடத்தை எந்த அரசியல்வாதியும் நேர்மைக் கண்கொண்டு பார்க்கவில்லை என்பது மிக மனம்வருந்தக்கூடியதொன்று. கிணறு வெட்டினால் நீர் வராது, கற்பாறையை உடைத்தாலும் வெள்ளை நிறமான நீரே வரும். இதனால் மக்கள் குடிநீரை ஒரு குடம் பத்து சதம் கொடுத்து வாங்கினர். இந்நீர் ஆற்றுக்கு மறுகரையில் உள்ள கிணற்றில் இருந்து தோணிகள் மூலம் கொண்டுவந்து விற்கப்படும்.

இங்குள்ளவர்கள் எல்லோரும் விவசாயிகள், படிப்பறிவில்லாதவர்கள் (அந்தக்காலத்தில்), பாராளுமன்ற அங்கத்தவர்களாலும் புறக்கணிக்கப்பட்டவர்கள் என்பதை உணர்ந்து, 60ம் ஆண்டு தை மாதம் இப்பாடசாலையில் சேர்ந்ததும், இதே ஆண்டு ஆடி மாதம் 26ந் திகதி கோயில் திருநாளுக்கு முன் வலையிறவுக்குப் போகும் பேருந்தை (வஸ்) இத்தெருவால் காலையிலும் மாலையிலும் ஓடச் செய்ய வேண்டும். குழாய்மூலம் குடிநீர் பெற வசதி செய்யவேண்டும் எனத் திடசங்கற்பஞ் செய்தேன். பேருந்தைத்தான் ஓட்டமுடிந்தது. உடனடியாக நீரைக் கொண்டுவர முடியவில்லை.

பேருந்து ஓடப்பண்ணியது:

தெருவோரத்தில் கருங்கல் குவியல்கள் பல இருந்தன. ஆனால் புல்லால் மூடப்பட்டுக்கிடந்தன. ஏனெனில் கற்குவியல்கள் வருடக்கணக்கில் அதிலேயே கிடந்ததினால். பகிரங்க தெருக்களின் பிரதம பொறியியலாளர் சின்னத்தம்பி அவர்களின் மகனுக்கு இரட்டைச் சித்தி பெற்றுக்கொடுத்து 5ம் வகுப்பில் இருந்து 7ம் வகுப்பிற்கு உயர்த்திவிட்ட செயல் ஞாபகத்திற்கு வந்தது.

திருமதி சின்னத்தம்பியிடம் சென்று, வீச்சுக்கல்முனைக்குச் செல்லும் ஆற்றோரப் பாதைக்குக் கல் போட்டுத் தார் றோட்டாக்கி வஸ் ஓடப்பண்ணவேண்டும். உங்கள் ஐயாவிடம் சொல்லிச் செய்துதரும்படி சொன்னேன். உங்களுக்கு அவர் கட்டாயம் செய்துதருவார். நீங்கள் முயற்சிப்பட்டு எங்கள்

மகனை 7ம் வகுப்பிற்கு உயர்த்திவிட்டதை நாங்கள் மறக்கவில்லை எனக் கூறித் தொலைபேசிமூலம் சந்தோரில் வேலை செய்துகொண்டிருந்த கணவனை அழைத்தார்.

நான் தேநீர் அருந்தி முடியுமுன்னரே வந்துவிட்டார். கதைத்தோம். அதற்கான செலவைத் தான் உடனடியாக அங்கீகரித்துவிடுகிறேன். ஆனால் திரு. தைரியராசா ஓவசியர் தான் செய்துமுடிக்கவேண்டும். அவர் நினைத்தால் ஒரு மாத காலத்துக்குள்ளும் முடிக்கலாம், ஒரு வருடத்துக்கு அப்பாலும் இழுத்தடிக்கலாம் எனச் சிரித்துக்கொண்டே சொன்னார். விடைபெற்றுச் சென்றேன்.

நான் விவாகம் முடிக்குமுன் ஒரு ஆசிரியையுடன் சிநேகிதமாய் இருந்தேன். சமய சம்பந்தத்தில் இருவரும் இரு துருவங்கள். அதனால் விவாகம் நடக்கவில்லை. என்றாலும் அன்பாகவும் பண்பாகவும் பழகிக்கொண்டோம். இந்த ஆசிரியைக்கும் குறிப்பிட்ட ஓவசியருக்கும் நெருங்கிய இன சம்பந்தமுண்டு. எனவே இவ்வாசிரியர்மூலமாகவே இதைச் செய்து முடிக்கத் திட்டமிட்டு, அவவின் வீட்டுக்கு ஒருநாள் சென்று உணவு உண்டு சல்லாபமாகப் பேசிக்கொண்டிருக்கும்போது இந்த விடயத்தை அவவிடம் சொன்னேன்.

உடனே அவவுக்குக் கோபம் வந்துவிட்டது. இதை ஏன் என்னிடம் சொல்கிறீர்கள் எனக் கேட்டார். அதற்கு நான் இது அத்தியாவசியம் செய்யவேண்டிய ஒரு தரும முயற்சி. நீங்கள் சொன்னால் அவர் கட்டாயம் செய்வார் என்பது எனக்குத் தெரியும். நாம் இருவரும் உள்ளன்போடும் பண்போடும் பழகினோம் என்பதை நீங்கள் ஏற்றுக்கொண்டால் இதைச் செய்யுங்கள் எனச் சொல்லிவிட்டு நான் புறப்பட்டுவிட்டேன்.

அடுத்த கிழமையே தெருவில் வேலை ஆரம்பமாகிவிட்டது. பழைய கற்களுடன் புதிய கற்களும் வரத்தொடங்கின. சுமைதாங்கியில் தொடங்கி, கோயில், பாடசாலைகள் இருக்கும் தெருவைக் கடந்து புதூர்ச் சந்தியில் முடிந்தது. கல் அமர்த்தும் இயந்திரம் "Engine Roller" வந்தது. நன்றாக அமர்த்தியபின் தாரும் போடப்பட்டாயிற்று. (தெரு வஸ் வண்டி ஓடக்கூடியதாக அமையவேண்டும் எனத் திரு. சின்னத்தம்பி அவர்களிடம் கூறியிருந்தேன்.) ஆற்றங்கரை ஓரமாகப் புற்கற்றைகளும் அடிக்கப்பட்டன.

அடுத்த படி வஸ் ஓடத்தொடங்கவேண்டும். இ.போ.ச. டிப்போ மனேஜர் திரு. வேலுப்பிள்ளை எனது நண்பர்.

ஞானசூரியம் சதுக்கம் முதலாம் இலக்க வீட்டில் வாடகைக்கு இருந்தவர். அவரிடம் விஷயத்தைக் கூறி வஸ் ஓட ஒழுங்கு பண்ணும்படி கேட்டேன். ஆரம்பத்தில் பயந்தார். தெரு ஒரு வருடமாவது சென்றால்தான் கெட்டிப்பு உண்டாகும். அதற்கிடையில் வஸ் ஓடுவது வஸ்சுக்கும், பிரயாணிகளுக்கும் ஆபத்து என்றார்.

நான் அவரிடம், உங்களுக்குச் சந்தேகமாயிருந்தால் பொறியியலாளர் திரு. சின்னத்தம்பி அவர்களுடன் கதையுங்கள் – உங்கள் மனத்திருப்திக்காக ஒருநாளைக்கு ஒரு வஸ்ஸைப் பாடசாலைக்குக் கொண்டுவாருங்கள் – வஸ் நிறையச் சனங்களை ஏற்றி வெள்ளோட்டம் விட்டுப்பார்ப்போம் என்றேன்.

சித்திரை வருடப் பிறப்பிற்கு மறுநாள் வெள்ளோட்டம் விட்டோம். எவ்வித அசைவாட்டமுமின்றி வஸ் ஓடியது. அடுத்தநாள் தொடங்கி, வலையிறவு செல்லும் வஸ் காலையிலும் மாலையிலும் புதுத் தெருவால் ஓடத்தொடங்கியது. கவனிப்பாரற்றுக் கிடந்த வீச்சுக்கல்முனை, சேற்றுக்குடாப் பகுதிகளுக்கு ஓரளவு நகரத்துடன் இணைப்பு ஏற்பட்டது. அவ்வருடம் கோவில் திருவிழா கோலாகலமாக நடைபெற்றது.

அடுத்த விடயம் இதைவிடப் பிரதானம் குடிநீர்ப் பிரச்சினை. மட்டக்களப்புச் சந்தையில் எங்கள் கடை கம்பனியாகப் பதியப்பட்டு நடத்துநர் குழுவில் (Board of Directors) என்னோடு கூட உழைத்த திரு. ஆச்சிபோல்ட் அழகையா (வக்கீல்), இவரது சகோதரர் டொனால்ட் அழகையா, நீர்ப்பாசன டிறக்ரராகக் கொழும்பில் தலைமைக்கந்தோரில் கடமையாற்றுகிறார். அவருக்கு நான் எழுதிய கடிதத்தின் கீழ், தமையன் ஆச்சிபோல்ட்டும் இதைச் செய்து கொடுக்கும்படி எழுதிய சிபார்சுடன் அனுப்பினேன்.

சுமைதாங்கிச் சந்தியில் இருக்கும் நீர்க்குழாயில் இணைப்பு எடுத்து 300 யார் தொலைவில் சேற்றுக்குடாவில் ஒன்றும், அங்கிருந்து 400 யார் தொலைவில் புனித அன்னம்மாள் கோவில் வாசலில் ஒன்றும் அமைத்துத்தரும்படி விண்ணப்பித்திருந்தேன். இதற்குரிய செலவில் அரைவாசியை நான் தருவதாயின் மற்ற அரைவாசியை அரசாங்கம் பொறுப்பேற்றுச் செய்யும் எனப் பதில் கிடைத்தது.

மொத்தச் செலவு எவ்வளவு வரும் எனவும் தெரியாது. அரைவாசிச் செலவே ஆயிரம் ஆயிரமாகத் தொடர்ந்தால் என்ன செய்வது என மூளை குழம்பியது. அப்போது வீச்சுக்

கல்முனைப் பங்குத்தந்தையும், அப்பாடசாலை முகாமை யாளருமாய் இருந்த அருட்திரு. ஹென்றி பொன்னையா அவர்களிடம் விடயத்தைச் சொன்னபோது, காசுக்குத் தான் ஒன்றும் செய்ய இயலாது; மேற்றிராணி ஆண்டவரிடம் கேட் டாலும் சிலவேளை இரண்டொரு ஆயிரம் ரூபாய்களை வாங்கலாம்; இது எந்த மூலைக்குப் போதும் என்று வழு வழுத்த கதை சொன்னார்.

அதிட்டலாபச் சீட்டு – நண்பர்களுக்கு மாத்திரம் என அச் சிட்டு, ஒன்றின் விலை 25 சதம். 10 சீட்டுகளை ஒன்றாக வைத்துப் 'பின்' அடித்து 2 ரூபா எனப் பத்தாயிரம் புத்த கங்களை விற்கத்தொடங்கினேன். எங்கள் கடை, இ. போ. சபை, கூட்டுறவு இயக்கம், ஆசிரிய சங்கம் இவைகளில் செல் வாக்கு இருந்ததாலும், யாழ்ப்பாணம், வதுளை, திருகோண மலை ஆகிய இடங்களில் பல நண்பர்கள் இருந்ததாலும் பதினையாயிரம் (15,000) ரூபாவரையில் பணம் சேர்ந்தது.

இதற்கிடையில் டொனால்ட் அழகையா கடிதம் எழுதி னார். முழுச் செலவையும் அரசாங்கமே பொறுப்பெடுத்துச் செய்யும். அடுத்த மாதம் வேலை தொடங்கும் என்று நீர்க் குழாய்கள் வரப்போகின்றன என்ற சந்தோஷத்தினாலும், சேகரித்த பணத்தை என்ன செய்வது என்ற யோசனையி னாலும் மூளையே சூழாகிவிட்டது. ஹென்றி பொன்னையா அடிகளார் எவ்வித ஆலோசனையும் சொல்லவில்லை.

திரு. ஆச்சிபோல்ட் அழகையா அவர்களின் ஆலோசனைப் படி முதலாம் நாள் சீட்டிழுப்பு இடம்பெற்றது. இதற்கு நூற்றுக்கு மேற்பட்ட பிரமுகர்கள் தேநீர் விருந்துக்கு அழைக் கப்பட்டு D. R. O. வாகவிருந்த திரு. S. M. தியோப்பிலஸ் தலைமை வகித்தார். குறிப்பிட்டபடி முதலாம் பரிசு ஆயிரம் ரூபா; இரண்டாம் பரிசு 750 ரூபா; மூன்றாம் பரிசு 500 ரூபா. ஆறுதல் பரிசு 25 ரூபா எனக் குறிப்பிடப்பட்ட பத்துப் பரிசு களுக்கும் 250 ரூபா வீதம் கொடுக்கப்பட்டது.

இரண்டாம் நாள் மலிவு விற்பனை. பலவிதமான இறைச்சி வகைகள், மரக்கறிகள். துண்டுப்பிரசுரம் அச்சிட்டுப் பகிரங் கப்படுத்தியதாலும், வஸ் வண்டி ஓடியதாலும், நகரத்தில் இருந்தும் பலர் வந்து சாமான்களை வாங்கிச்சென்றனர். இதற்குத் தலைமை வகித்தவர் சபாபதிப் பண்டிதர் அவர் களின் மகள். பிற்பாடு இவர் திருமதி சங்காரவேல் (தமிழ் அரசுக் கட்சி அங்கத்தவர்). இதிலும் பல ஆயிரங்கள் செல வாயின.

மூன்றாம் நாள் விளையாட்டுப் போட்டி. பெரியகளத்தில் நின்று நீந்தி இக்கரை சேர்தல், தோணி வலித்துவருதல், வழுக்கு மரத்தில் ஏறுதல், தேங்காய் துருவுதல், ஓலை இழைத்தல், ஓருமைல் ஓட்டம், சைக்கில் ஓட்டப் போட்டி முதலியன. திரு. ஆச்சிபோல்ட் அழகையா அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

வழுக்கு மரத்தில் ஏறுகல், நீந்துதல், சைக்கிலோட்டம் முதலியவற்றிற்கு முதற்பரிசு ஆயிரம் ரூபாவும், மற்றவைகளுக்கு ஐந்நூறு ரூபாவும். இதற்கமைய 2ம், 3ம் பரிசுகளும் வழங்கி அந்தத் தொகை முழுவதும் செலவிடப்பட்டது.

நீர்ப்பாசனப் பகுதியினர் குறிப்பிட்டதுபோல அடுத்த மாதம் நீர்க்குழாய் வேலையை முடித்துவிட்டனர். நீர்க்குழாய்கள் இன்றும் செயல்படுகின்றன; தெருத்தான் பழுதடைந்த நிலையில் இருக்கிறது. கவனிப்பார் யாருமில்லை.

1960ம் ஆண்டில் 5ம் வகுப்புடன் இருந்த பாடசாலை படிப்படியாக 8ம் வகுப்புவரையும் உயர்ந்தது. 1960ம் ஆண்டில் பாடசாலைகளை அரசாங்கம் கையேற்றது. படிப்பும் குறைவடையத்தொடங்கியது. அரசாங்க சபை அங்கத்தவர்களின் தலையீடே காரணமாக அமைந்தது.

அப்போது புனித மிக்கேல் கல்லூரியைத் தனியார் பாடசாலையாக நடத்தத் தீர்மானித்தனர். அருட்திரு. பீரிஸ் அடிகளார் காலியில் இருந்து புனித மிக்கேல் கல்லூரிக்கு அதிபராக வந்தார். சிறந்த முறையில் கல்வி வளர்ந்தது. வெளியிடங்களுக்கு ரியூஷன் வகுப்புக்குப் போகும் மாணவர்களைப் பாடசாலையில் இருந்து விலக்கிவிடப்போவதாக அறிவித்தல் பலகையில் போட்டும்விட்டார். ஆசிரியர்கள் மிகவும் கவனமாகப் படிப்பித்தனர். அரசினர் பாடசாலையாக மாறினால் வேலை சுகம், பிரயாணச் சீட்டுக்களும் இலவசமாகப் பெறலாம் என்ற எண்ணமும் உருவாகத்தொடங்கியது அங்குள்ள ஆசிரியர்களிடம்.

ஒரு ஞாயிற்றுக்கிழமை காலை திருமலை வீதியில் உள்ள முதியோர் இல்லத்தில் பூசை கண்டு வெளியில் வந்தவேளை, பாதர் மில்லர் என்னிடம் ''மாணவர் பள்ளிக்காசு கட்டுவதும் ஒழுங்காக இல்லை, ஆசிரியர்களது சம்பளம் கொடுப்பதும் கஷ்டநிலையில் வருகிறது, வேறு என்ன செய்யலாம்'' என ஆலோசனை கேட்டார். மேலதிகமாக இருக்கும் அறைகளையும், நாடக மண்டபத்தையும் வாடகைக்குக் கொடுக்கலாம். நானும் ஒரு அறையை எடுக்கிறேன். பல்கலைக்கழகப்



புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை
தமிழறிஞர், சுவாமி விபுலாநந்த
ரின் சீடர், ''உள்ளதும் நல்லதும்''
ஆசிரியர். (பக்: 69)



திரு. கே. கணபதிப்பிள்ளை
தத்துவ சிரோமணி பட்டம்
பெற்றவர், ஆங்கில அறிஞர்,
தன்னடக்கம் மிகுந்தவர்.
(பக்: 69)



மகாவித்துவான் வி. சி. கந்தையா
தமிழறிஞர், ''மட்டக்களப்புத் தமி
ழகம்'' நூலாசிரியர், ஜெசுற் அக்
கடமியில் தமிழ் போதித்தார்.
(பக்: 69)



பண்டிதை கங்கேஸ்வரி கந்தையா
மகாவித்துவான் வி.சீ. கந்தையா
அவர்களின் பாரியார், ஆசிரிய
கலாசாலை விரிவுரையாளர்,
வீச்சுக்கல்முனைக்குப் பஸ் ஓட
உதவியவர். (பக்: 69)



செ. தவராசா
30 ஆண்டுகளாகப் பொதுப் பணிகளில் புகழ் ஈட்டியவர். நன்றி மறவாதவர். (பக்: 113)



A. ராஜேந்திரம்
-தயா ஸ்ரோர் அதிபர், கலை இலக்கிய முயற்சிகளுக்கு உதவும் கரங்கள். நன்றிக்கொரு நண்பர். (பக்: 71)



அன்டமணி
கல்வித்திணைக்கள நண்பர். 'சியவச' கண்காட்சியில் நாடக ஏற்பாடு செய்தவர். (பக்: 38)



க. தங்கேஸ்வரி
கலைச்செல்வியாகிவிட்டவர். பதவியால் கலாசார உத்தியோகத்தர், பணிகளால் சமூக சேவகர். (பக்: x)

புகுமுகப் பரீட்சைக்கு ஆயத்தம்பண்ணலாம் என நான் நினைக்கிறேன் என ஆலோசனை கூறி, அதன்படி ஒரு இடத்துக்கு மாதம் 300 ரூபா வாடகை கொடுத்தேன்.

இந்த வகுப்பில் பல ஆசிரியர்கள் படிப்பித்தார்கள். காலஞ்சென்ற திரு. V. T. ஞானசூரியம் - ஆங்கிலம், திரு. A. B. குலசிங்க - சிங்களம், காலஞ்சென்ற திரு. L. M. ஜோசேப் - இலங்கைச் சரித்திரம், திரு. K. தியாகராசா (மட்/சிவானந்தா ஆசிரியர், பின்பு வடக்குக் கிழக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர், இப்போது செயலாளர்) - இலங்கைச் சரித்திரம், திருமதி சிவபாதசுந்தரம் - இந்திய நாகரிகம், செல்வி கந்தையா - இந்திய சரித்திரம், காலஞ்சென்ற புலவர் மணி பெரியதம்பிப்பிள்ளை - தமிழ். காலஞ்சென்ற வித்துவான் V. C. கந்தையா - தமிழ். ஒரு கிழமையில் 2 மணித்தியாலங்கள் படிப்பிப்பர். மாதம் 100 ரூபா வீதம் சன்மானம் கொடுத்தேன் திரு. F. X. C. நடராசா கொழும்பில் இருந்து இங்கு வரும்போது இலவசமாக இலக்கணம் கற்பித்தார். இதுவே ஜேசுவிற் அக்கடமியாக மாறியது.

வீச்சுக்கல்முனை நீர்க் குழாய்த் திட்டத்துக்கு மட்டக்களப்பில் பொறுப்பாக இருந்தவர் வண. நோபேட் ஒக்கஸ் அடிகளாரின் மைத்துனர் காலஞ்சென்ற திரு. பெல்றமென் அவர்கள். கொழும்பில் இருந்து திரு. டொனால்ட் அழகையா கடிதம் எழுதியதும் மிக விரைவில் இரு குழாய்கள்மூலமும் நீர் விநியோகம் ஆரம்பமாகியது இன்றும் நடைமுறையில் உள்ளது. இதில் எனக்கு அவ்வளவு சிரமமில்லை. சேகரித்த பணத்தைச் செலவிடுவதில்தான் சிரமம் ஏற்பட்டது. 35 ஆண்டுகளாகியும் இன்னும் ஆங்காங்கு நீர்க்குழாய்களை அமைத்து நீர்த் தட்டுப்பாட்டை நீக்க முபற்சிக்காது பத்திரிகையில் மாத்திரம் எழுதிக்கொண்டிருக்கிறார்கள் என்பதும் மனவேதனை தருகின்றது.

# 13. மட்டக்களப்பில் மேலும் சில பணிகள்

மட்/கனிஷ்ட வித்தியாலயத்தில் எனக்கு எவ்வித சிரமமும் இருக்கவில்லை. 5ம் வகுப்பு வரையும்தான். ஆனால் ஆசிரியர்கள் 13 பேர். உதவி ஆசிரியர்களுள் ஒருவர் திரு. S. பாலசிங்கம் என்பவர். தோட்டவேலை செய்வதில் நிபுணர். தோட்டம் செய்வதற்குக் கொஞ்ச நிலமே இருந்தது. அதுவும் வெறும் மணல். இலை குழைகளைப் புதைத்து, வாய்க்கால்களுக்குக் களி போட்டு, நீர் பாய்ச்சி, கொச்சித்தோட்டம் போட்டு ஒவ்வொரு சனிக்கிழமையும் 50 இறாத்தலுக்குமேல் மிளகாய் ஆய்ந்து விற்றோம். ஆசிரியர்களுக்கு மலிவான விலையிலும், மிஞ்சுவதைக் கடைகளுக்கும் கொடுத்தோம். மாணவர்களும் மற்றைய பாடசாலை மாணவர்களை விடப் படிப்பில் முன்னேற்றம் காட்டினர். ஏனெனில் பெற்றார் கல்வியிலும் பொருளாதாரத்திலும் முன்னேறியிருந்ததே காரணம்.

1971ம் ஆண்டு என நினைக்கிறேன். ஒருநாள் பாடசாலைக்குப் பக்கத்தில் இருந்த தெருவில் நின்று ஏதோ யோசித்துக்கொண்டு அங்குமிங்கும் பார்க்கிறார் ஒரு நடுத்தர வயதுள்ளவர். எனது கந்தோர் அறையிலிருந்து இதைக் கண்டு அவரிடம் சென்று விசாரித்தேன். அவர் யானை மார்க் சோடா ஏஜன்சி எடுத்திருப்பதாகவும், மட்டக்களப்பில் பலருக்கு அழைப்பிதழ் அனுப்பிச் சிற்றுண்டியுடன் இக்குளிர்பானத்தையும் அறிமுகப்படுத்துவதற்கு ஒரு இடம் தேவை; தானும் ஊருக்குப் புதியவர்; எவரையும் தெரியாது என அவரது உண்மை நிலையை விளக்கினார்.

அவருக்கு உதவி செய்யவேண்டும் என என் மனம் சொல்லியது. உங்கள் அழைப்பிதழில் மட்/கோட்டைமுனை கனிஷ்ட

வித்தியாலயம் எனக் குறிப்பிட்டு அனுப்புங்கள்; குறிப்பிட்ட நாள் அன்று, குறிப்பிட்ட நேரத்துக்கு அரைமணி நேரம் முந்தி நான் வந்து கதவுகளைத் திறந்துவைப்பேன். பாட சாலை மண்டபம் முழுவதும் கதிரைகள் போட்டு வைப்பேன். வாசலிலும் மண்டபத்திலும் சிறிய சோடினையும் இருக்கும் எனச் சொல்லி அனுப்பிவிட்டு அப்படியே செய்தேன். எல் லாம் இனிது நிறைவேறியது. நன்றி கூறிச் சென்றார். அவர் தான் இப்போதைய தயா ஸ்ரோர்ஸ் முதலாளி திரு. இரா ஜேந்திரம்.

தமிழ், சிங்கள இனப்பிரச்சினை தொடங்கி, இலங்கை அரசாங்கத்துக்கு உதவ இந்தியப் படை வந்த காலம். வெருகல்துறைக்கு இறப்பர் பாலம் போட்டுப் போக்குவரத்து நடந்த காலம். வடக்கு, கிழக்கு மாகாணங்கள் ஒன்றாக இணைக்கப்பட்டு, கௌரவ வரதராஜப்பெருமாள் முதல் அமைச்சராக ஆட்சி செய்தபோது அவர் எவ்வித திருத்தங் களை நடைமுறைப்படுத்தலாம் எனத் தனக்கு ஆலோசனை கூறும்படி பத்திரிகையில் வேண்டுதல் பிரசுரித்தார்.

நான் கிழக்குமாகாணத்துக்கான சில ஆலோசனைகளைக் கடிதமூலம் அறிவித்தேன். நேரடியாக வந்து விளக்கிக் கூறும் படி வேண்டுகோள் விடுத்திருந்தார். போக்குவரத்துக் கஷ்ட மான காலம். 10 லொறிகள் வரை அடிக்கடி மட் / தயா ஸ்ரோரில் இருந்து திருமலை சென்று யானை மார்க் சோடா கொண்டுவரும்.

தயா ஸ்ரோர் முதலாளி இராஜேந்திரம் அவர்களிடம் சொன்னேன். அவர் என்னிடம் ''நீங்கள் 71ம் ஆண்டில் செய்த உதவியை ஒருபோதும் மறக்கமுடியாது. தான் இன்று இவ் வளவு உயர்ந்த நிலையை அடைந்தது உங்களால்தான்'' எனக் கூறித் தனது மனேஜர் இராஜன் என்பவரைக் கூப் பிட்டு ''இந்த ஐயா, எப்போ திருகோணமலைக்குப் போக வேண்டுமென்று சொல்கிறாரோ அப்போது பத்திரமாகக் கூட்டிப்போய்க் கூட்டிவரவேண்டும் என றைவர்மாரிடம் சொல்லிவைக்கும்படியும், இவரிடம் பணம் வாங்கக்கூடாது'' என்றும் சொன்னார்.

பல தடவைகளில் திருமலை சென்றுவந்தேன். இடையில் விறகும் ஏற்றிக்கொண்டு திருமலையில் எனது நண்பர்களுக்கும் கொடுத்தேன். அப்போது திருமலையில் ஒரு கட்டு விறகு ஒரு கட்டுக் கரும்பிலும் கூடிய விலை. அப்போது திருமலைப் பேராலயப் பங்குத்தந்தையாக இருந்த அருட்திரு. பயஸ் அடிகளார் என்னிடம் ''நீங்கள் இப்படி அடிக்கடி வரதராஜப்

பெருமாளைச் சந்திக்கவருவதால் உங்கள் உயிருக்கே ஆபத்து வரலாம் என வேடிக்கையாகக் கூறினார்.

இதுமட்டுமா... 18-03-95ல் மட் / ஆனைப்பந்தி மகளிர் கல்லூரி மண்டபத்தில் எனது "நூறுவருட மட்டுநகர் நினைவுகள்" என்னும் நூலின் அறிமுக விழாவின்போது, நூறு சோடா போத்தல்களை அன்பளிப்புச்செய்த இராஜேந்திரம் அவருக்கு எனது நன்றி தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத் தலையாலே இனிய பானமாகத்தருவதற்கு இலக்கணமாகவும் அமைந்தார் திரு. இராஜேந்திரம் அவர்கள்.

1973 தையில் மட் / தாண்டவன்வெளி றோ. க. த. ஆண்கள் பாடசாலைக்கு மாற்றினார்கள். பாடசாலை வேலை குறைவாக இருந்ததால், பாதயாத்திரை போன்ற சமயத் தொடர்புகளுடனும், பொதுவேலைகளுடனும் காலம் கழிந்தது. இளைப்பாறியும் விட்டேன். இதனால் 15 ஆண்டுகள் வரை எஸ். எஸ். ஸீ. வகுப்புக்குத் தமிழ்ப் பரீட்சகராக இருந்த உத்தியோகமும் நின்றுவிட்டது. நட்டத்தின்மேல் நட்டம். பரீட்சை மேற்பார்வையாளர் வேலையும் இல்லை.

வெபர் விளையாட்டு அரங்கு:

அருட்திரு. H. J. வெபர் சே.ச. அடிகளார் 1947ல் மட்டுநகர் வந்த காலந்தொடங்கிச் சிறாரின் உடற்பயிற்சியை மனதிற்கொண்டு மட் / முற்றவெளியில் மதிய வெய்யிலையும் பாராது ஒரு சிறிய கல்லுத்துண்டைக் கண்டாலும் அதைப் பொறுக்கி ஒரு மூலையில் குவித்துவைத்து, ஒரு பள்ளம் இருந்தால் ஒரு மூலையில் கொஞ்சம் மண் வெட்டிக்கொணர்ந்து நிரப்பிப் பண்படுத்திக்கொண்டுவருகிறார்.

இதனால் இந்த விளையாட்டு இடத்துக்கு அவரது பெயரையே வைக்கவேண்டும் என்ற எண்ணம் என் மனதில் உதித்தது. மட்டுநகர் நகரசபையில் பெரிய உப்போடை அங்கத்தவராயிருந்த ஜேம்ஸ் ஆசிரியரிடம் அடுத்த மாதாந்தக் கூட்டத்தில் ஒரு பிரேரணையாகப் பிரேரிக்கும்படி சொன்னேன். அவரும் அப்படியே பிரேரித்தார். அனுமதிக்கவே எவரும் இல்லை.

அவர்கள் சொன்ன நியாயம் ஒருவர் உயிரோடு இருக்கும்போது அவரது பெயரைச் சூட்டுவது பிழை என்பது. மட்டக்களப்புப் பட்டின வட்டார ஆசிரிய சங்கத் தலைவராகக் கிட்டத்தட்ட பத்து ஆண்டுகளுக்கு மேலாகக் கடமைபுரிந்தேன். அப்போது எனது எண்ணப்படியேதான் போட்டி




வெபர் விளையாட்டரங்கு : *15.03.1968ல் ஆரம்பிக்கப்பட்டது.*

(பக்கம் 72)



குடும்பிமலை **(Barren's Cap)** தொப்பிகல்: மியான்கல்குளம் குடியேற்றத்திட்டத்தில் அமைந்துள்ள 600 அடி உயரக் குன்று. புளியந்தீவுப் பாலத்தில் நின்று இதன் பின்னணியில் சூரிய அஸ்தமனக் காட்சியைப் பார்ப்பது சொர்க்கம்.



ஆண்டான்குளத் திட்டம்: செடெக் (SEDEC) நிறுவன உப தலைவர் வண நோபேட், உறுப்பினர்களான திரு. நோபேட் றாகல், திரு. சனி ஒக்கர்ஸ். (பக்: 128)



ஞானசூரியம் விளையாட்டரங்கு: திரு. எஸ். சாள்ஸ் நந்தகுமார் தனது மகன் மிராண்டா லக்ஷி, தனது தம்பி நோபிள் சுகுமாரின் மகள் நிஷானி மயூறி ஆகியோருடன். (பக்: 80)

நடைபெறும். இதற்குரிய செலவுகளை வித்தியாகந்தோரில் இருந்து பெறுவேன்.

அந்த வருடம் நான் எடுத்த தீர்மானம்:- மாணவர், ஆசிரியர், பொதுமக்கள், மத்தியஸ்தம் வகிப்போர் எல்லார் மனதிலும் வெபர் விளையாட்டு அரங்கு என்ற பெயரைப் பதிய வைக்கவேண்டும். வெபர் விளையாட்டு அரங்கில் 15-3-68ல் விளையாட்டுப்போட்டி நடைபெறும் எனச் சீலையில் பெரிய எழுத்துக்களால் 'பானர்' எழுதிப் புளியந்தீவுப் பாலத்துக்குக் குறுக்கே தெருவுக்குமேல் கட்டிவிட்டேன்.

மரதன் ஓட்டம் 14ந் திகதி காலை 7 மணிக்குப் பெரிய புல்லுமலையில் இருந்து ஆரம்பமாகி அன்றிரவு செங்கலடியில் தரித்து மறுநாள் 12 மணிக்குத் தொடர்ந்து ஓடி புளியந்தீவுப் பாலத்தை 3 மணிக்கு வந்தடையும். தாழங்குடாவில் 1.30க்கும், முகத்துவாரத்தில் இருந்து 2 மணிக்கும் ஆரம்பமாகி 3 மணிக்குப் புளியந்தீவுப் பாலத்தை வந்தடையும். அங்கு நிற்கும் ஒருவர் ஒரு விளக்கைக் கொண்டு வெபர் அரங்கில் நிற்கும் பாதர் வெபர் இடம் கொடுக்க அவர் ஒலிம்பிக் தீபத்தை ஏற்றிவைப்பார். உடனே புறாக்களும் வலூன்களும் ஆகாயத்தில் பறக்கும். தொடர்ந்து, (1000) ஆயிரம் மாணவ மாணவியரின் உடற்பயிற்சிக் காட்சி. அதைத்தொடர்ந்து விளையாட்டுப்போட்டி நடைபெறும். பிரதம மத்தியட்சகரான பாதர் வெபர் அவர்களே பரிசுகளையும் வழங்குவார் என்ற விளக்கத்துடன் துண்டுப்பத்திரம் ஒரு கிழமைக்கு முன்னே பல இடங்களிலும் விநியோகிக்கப்பட்டன.

எப்போது அந்த நாள் வரும் என எல்லாரும் ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர். அந்த நாளும் வந்தது. மூன்று இடங்களிலிருந்தும் மூன்று மோட்டார் சைக்கில்கள் மரதன் ஓடியவர்களுக்குப் பாதுகாப்பாக வந்தன. மூன்று ஓட்டக்காரரும் ஒருவர் லொயிட்ஸ் அவெனியூவால், மற்றவர் லேடிமனிங் ட்றைவால், மூன்றாவது பையன் பிரதான வீதியால். மூவரும் ஒன்றாகப் பாலத்தில் சந்திக்க ஏற்பாடுசெய்ய, நான்காவது மோட்டார் சைக்கிள் நபர். பாலத்தில் வாங்கிய பையன் பின்னே செல்ல வெபர் விளையாட்டு அரங்கு சென்று பாதர் வெபரிடம் கொடுக்க அவர் ஒலிம்பிக் தீபத்தைக் கொழுத்திவிட்டார். உடனே சுமார் 50 புறாக்களும், சுமார் 40 வலூன்களும் மேலே பறந்தன.

இந்த வலூன்கள் சிகரட் பக்கற்றிலுள்ள வெள்ளிக் கடதாசியைப் பொசுக்கி அந்தப் புகையைச் செலுத்திக் கட்டப்

பட்டிருந்தன. நூலை அறுத்துவிட்டதும் ஒரே வீச்சில் மேலே எழுந்தன.

600 மாணவியரும் 400 மாணவரும் சீருடை அணிந்து இடது கையில் சிகப்புக்கொடியும் வலது கையில் வெள்ளைக் கொடியும் பிடித்து உடற்பயிற்சி செய்தனர். புனித மிக்கேல் கல்லூரியின் பாண்டுவாத்திய முரசு (ட்றம், Dram) பயிற்சியை வழிநடத்தியது.

இவைகளைப் பொறுப்பேற்று நடத்தியவர், எனது உதவி ஆசிரியர் திரு. இம்மானுவேல் என்பவர். சொந்த ஊர் மன்னார், ஆசிரியப் பயிற்சி கொழும்புத்துறையில். மட்டுநகர் இதுவரை கண்டிராத ஒரு வைபவம். இனிமேலும் நடக்குமோ என்பதும் கேள்விக்குறிதான்.

விளையாட்டுப்போட்டியும் பரிசளிப்பும் பாதர் வெபர் தலைமையிலேயே நடந்தது. பங்குபற்றிய அத்தனைபேருக்கும் சோடா கொடுக்கப்பட்டது. (இதுவும் ஒருபோதும் நடக்காத ஒன்று). இதற்காக அமைக்கப்பட்ட மேடையும் பந்தல்களும் பிரமாதமாக அமைந்தன.

மறுநாட் காலை பந்தலைப் பிரித்துக் கம்புகளைச் சொந்தக்காரருக்குக் கொடுக்கும்படி சில உதவியாளருடன் சென்றபோது, வின்சன்ற் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி சின்னையா வந்து என்னைச் சந்தித்தார். இரு கிழமையில் தமது பாடசாலைப்போட்டி நிகழ இருப்பதால் மேடையையும் பந்தல்களையும் அப்படியே விடும்படி கேட்டுக்கொண்டார்.

உடனே சம்மதித்தேன். ஆனால் இரு நிபந்தனை. நீங்கள் நோட்டிஸ் அச்சிடும்போது அதில் வெபர் விளையாட்டு அரங்கு எனப் பெயரிடவேண்டும். அடுத்தது இரு கிழமைகள் பாதுகாப்பாக இருக்கச் சிலரை இரவில் காவல்புரிய வைக்க வேண்டும். அதற்கு 200 ரூ. தரவேண்டும் என்றேன். அவர் இரண்டுக்கும் சம்மதம் தெரிவித்து அப்படியே செய்தார்.

அடுத்தமாதம் (Govt. College) இப்போது இந்துக்கல்லூரியில் விளையாட்டுப்போட்டி. அதிபர் திரு. சாரங்கபாணியிடம் சொல்லி வெபர் விளையாட்டு அரங்கு எனப் பெயர் போடுவித்தேன். நகரசபையின் (Works Inspector) வேலை மேற்பார்வையாளராயிருந்த எனது நண்பர் திரு. செல்லத்துரை என்பவரிடம் சொல்லி எனது செலவில் ''வெபர் விளையாட்டு அரங்கு'' என்ற அறிவித்தல் பலகையை நடச்செய்தேன். பிறகு நகரசபை இதைக் கல்லாற் கட்டியபோது கமிஷனராக

இருந்த திரு. நிலவீர என்பவர் ''வெபர் ஸ்ரேடியம்'' என மூன்று பாஷையிலும் எழுதிவிட்டார். இன்று பதிவுசெய்யப் பட்ட பெயராகத் திகழ்கிறது. (படம் வேறொரு இடத்தில்)

திரு. ஜேம்ஸ் என்னைச் சந்தித்து, அனுமதிக்கவே ஆள் இல்லாமல் இருந்த பெயர் இன்று நிலைபெற்றுவிட்டதே என நன்றி தெரிவித்தார்.

30-7-94ல் துறவற வாழ்வில் பொன்விழாக் கண்டும், தனது 80ம் வயதைப் பூர்த்திசெய்தும் மட்டுநகர் மண்ணுக்கே என் உடல் சொந்தம் என இன்னும் பணிபுரிகின்றார் அருட்திரு. H. J. வெபர் அடிகளார். 'ஆரத்தி' நிறுவனத்தின் முதல் கௌரவத்தையும் பெற்றார்.

# 14. ஞானசூரியம் சதுக்கமும் விளையாட்டு மைதானமும்

1950ம் ஆண்டளவில் மத்திய வகுப்பாரின் வீட்டுத்திட்ட மொன்றை உருவாக்க திரு. V. T. ஞானசூரியம் அவர்கள் திட்டம்போட்டு நிருவாகசபை ஒன்றைக் கூட்டி திரு. P. E. டானியல் தலைவராக, திரு. வீடில் பொருளாளராக, தான் செயலாளராகக் கடமைபுரிந்து, அங்கத்தவராக விரும்பிய வர்களிடம் தலைக்கு ஆயிரம் ரூபாவீதம் வாங்கி மட்டக்களப்பு வெட்டுக்காட்டி லுள்ள "மோள்வளவு" என்ற வளவை வாங்கினார். இதன் பரப்பு 15 ஏக்கர். விலை 15000 ரூபா.

பகலில்கூட மனிதர் போகப் பேய்க்குப் பயப்பட்ட இடம். நிதி அமைச்சராக திரு. J R. ஜயவர்த்தனா அவர்கள் கடமையேற்றிருந்த காலம். வீடமைப்பு அமைச்சராக சேர். கந்தையா வைத்தியநாதன் இருந்தார். திரு. V. T. ஞான சூரியம் அவர்கள் விடாமுயற்சியுடன் பலதடவை கொழும்பு சென்று அரசாங்கத்தில் 7 இலட்சம் ரூபாய்களைக் கடனாகப் பெற்றார். 20 வருடங்களில் இப்பணம் 2% வட்டியுடன் திருப்பிக் கொடுக்கவேண்டும். 2 வருடங்களுக்கு ஒருமுறை ஒரு தொகையைச் செலுத்திவிட்டால் மீதிப் பணத்துக்குத் தான் மறுமுறை வட்டி அறவிடப்படும் (தொடர் வட்டி).

இத்திட்டம் அப்போது அரசாங்க அதிபராக இருந்த திரு. D. C. R. குணவர்த்தனா அவர்களால் மூலைக்கல் வைக்கப்பட்டு, 1954ம் ஆண்டு ஆடி மீ 3ந் திகதி சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது. மொத்தம் 28 வீடுகள். கட்டுப்பணம் கட்டிய ஒழுங்கின்படி திரு. டானியல் அவர்களுக்கு முதலாம் இலக்க வீடும், எனக்கு 19ம் இலக்க வீடும், திரு. ஞானசூரியம் அவர்களுக்கு வார்

றோட்டில் வளவு இருந்ததால் இதேமாதிரி ஒரு வீட்டை அங்கு கட்டி எடுக்கலாம் என நினைத்தார். கடைசியில் அப்படிச் செய்யமுடியாது எனக் கூறிவிட்டனர். 14ம் இலக்கத் துக்குரியவர் திரு. ஞானசூரியம் அவர்களுக்கு வீட்டை மாற்றி விட்டுத் தான் கட்டிய காசைப் பெற்றுக்கொண்டு கொழும் புக்குச் சென்றுவிட்டார்.

இப்படியான சந்தர்ப்பம் ஏற்படாமல் இருந்திருந்தால் இவ்வளவு கஷ்டப்பட்டு இதை உருவாக்கியவருக்கே வீடு கிடையாமல் போயிருக்கும். இந்த வளவு சதுரம், நீள்சதுரம், ஐங்கோணம் முதலிய பல உருவங்களையும் ஒன்றாகச் சேர்த் ததுபோன்ற உருவம். 3 தெருக்களையும் உருவாக்கினோம். விளையாட்டு மைதானம் என நீள்சதுசரத் துண்டு ஒன்று மிஞ்சியது.

அடுத்த வருடம் இதைப் பார்வையிடவந்த பாதர் வெபர் இது சிறுவர் விளையாட்டிடத்துக்கே உதவும் எனக் கூறிவிட் டார். அப்படியே அதைச் செய்தோம்.

நிருவாகசபை கூடி இவ்வளவு கஷ்டப்பட்ட ஞானசூரியம் அவர்களுக்கு ஒரு (Drawing Room Set) நடு மண்டபத்தில் போடக்கூடியதாக ஆசனத்தொகுதி ஒன்றை அன்பளிப்புச் செய்தார்கள். இது எனக்கு அவ்வளவு பொருத்தமாகத் தெரியவில்லை. ஞானசூரியம் சதுக்கம் (Gnanasuriyam Square) எனச் சீமேந்தால் உருவாக்கி பிரதான தெருவின் இரு மூலை யிலும் நட்டுவிட்டேன். இதில் ஒன்று இப்போதும் இருக்கின் றது.

வீடுகள் கட்டிமுடிந்தாலும் எவரும் குடிபுகுவதாகத் தெரியவில்லை. 54ம் ஆண்டுகளில் மட்டக்களப்பிலேயே தலை சிறந்த வீடுகளாக இருந்தாலும். கொழும்புக் கறுவாத் தோட்டம்போல விளங்கினாலும், குடிபுகப் பயந்த காரணம் இவ்வளவு பெரிய வேலைத்திட்டத்தில் எவ்வித நரபலியும் ஏற்படவில்லை. ஆதலால் முதலில் குடிபுகுபவரையே ஆவி பலி எடுக்கும் எனப் பயமுறுத்தியதே.

அப்போது எனது மனைவிக்கு மூன்றாவது பிள்ளைப்பேறு நெருங்கிய காலம். என்னை அல்லது பிறக்கும் பிள்ளையைப் பலி எடுக்கட்டும் எனக் குடிபுகுந்தோம். ஓந மேசை லாம்பும், அரிக்கன் லாம்பும், குப்பி வெளிச்சங்களுடனும் காலம் போகின் றது.

ஒரு மாதத்தின்பின் கிராமக்கோட்டில் பிரதம லிகித ராகக் கடமையாற்றும் திரு. ரெட்ணசிங்கம் குடும்பத்துடன்

26ம் இலக்க வீட்டில் குடிபுகுந்தார். அவரது மகளுக்குக் கணிதம் கற்பித்து எஸ்.எஸ்.ஸீ பரீட்சையிற் சித்திபெறச் செய்தேன். அப்பெண் சில ஆண்டுகளின்பின் கிழக்குப் பிராந்திய தொலைபேசி இணைப்புப் பிரதம பரிசோதகர் திரு. A. பாலசுந்தரம் என்பவரை மணந்து இரு பெண்பிள்ளைகளுக்குத் தாயாரானார். இப்பிள்ளைகளுக்கும் படிப்பித்தேன்.

ஜப்பானிய அரசாங்கத்தின் உதவியுடன் தொலைபேசிக் கம்பிகளை நிலத்தினூடாகச் (Under Ground Works) செலுத்தும் வேலை நடைபெறுகின்றது. இணைப்புத் தரும்படி விண்ணப்பித்தோர் நூற்றுக்கணக்கானோர். அதில் நானும் ஒருவர். 1983ம் ஆண்டில் வேலை பூர்த்தியானதும் ஜப்பானிய அதிகாரி, திரு. பாலசுந்தரத்திடம் இதன் ஞாபகார்த்தமாக, முதல் இணைப்பை நீர் விரும்பிய ஒருவருக்கு அரைவாசிச் செலவுடன் செய்யும் எனக் கூறியிருக்கிறார். பொத்துவிலில் மேற்பார்வை செய்துகொண்டிருந்த பாலசுந்தரம் 26ம் இலக்க வீட்டில் தன் மனைவியுடன் தொடர்புகொண்டு, உடனே நாலாயிரத்து இருநூறு ரூபாயைத் (4200/-) தொலைபேசி அலுவலகத்தில் வைப்புச்செய்து பற்றுச்சீட்டைப் பெறும்படி எனக்கு அறிவித்தார். அப்படியே செய்தேன். மூன்றாம் நாள் பாலசுந்தரம் வந்ததும் எனது 19ம் இலக்க வீட்டுக்கு இணைப்புக் கிடைத்தது. இன்றும் அவுஸ்திரேலியா, வினிபெக், ரொறன்றோ, மதுரை, கொழும்பு முதலாம் இடங்களில் உள்ள என் பிள்ளைகளுடன் கதைக்கிறேன்.

தனது மனைவிக்கும். இரு மகள்களுக்கும் பணம் பெறாமலே படிப்பித்த நன்றிக்கடனை இவ்விதம் தீர்த்துவிட்டேன் என திரு. பாலசுந்தரம் என்னிடம் கூறினார். அவருக்கு நன்றி கூறினேன். அக்கம் பக்கங்களில் உள்ள பலரும் இதனால் நன்மையடைகின்றனர்.

065-2779 என்னும் இலக்கம் இன்றும் செயற்படுகின்றது. ஆரம்பத்தில், பிரபல வியாபாரி ஒருவர் வந்து இந்த இலக்கத்தைத் தனது பெயரில் பதிய ஒப்புக்கொண்டால் எனக்கு ஐம்பதினாயிரம் ரூபா தருவதாக வாக்குப்பண்ணினார். நான் ஏற்கவில்லை. 4200 ரூபாவின் பெறுமதி 50,000/- ரூபாவாகியது.

படிப்படியாக எல்லாரும் வந்து சேர்ந்தனர். ஐந்து வருடங்களின் பின்தான் மின்சார இணைப்புக் கிடைத்தது.

எனது நண்பர் திரு. V. இளையதம்பி நகரசபை உதவித் தலைவராக இருந்தார். தலைவராக இருந்த ஜனாப் M. A. L.

காரியப்பர் ஒவ்வொரு மாதமும் நான்காவது கிழமை, உதவித் தலைவருக்குத் தன் வேலையைப் பாரம் கொடுத்துவிட்டுக் கல்முனைக் கோட்டுக்குச் சென்றுவிடுவார். பிரதம வக்கீலாக இருந்தவர். இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தித் தார்றோட்டுப் போடுவதற்கென எட்டாயிரம் ரூபா அங்கீகரிக்கப்பட்டது. பெருந்தெருவில் இருந்து ஆறு வீடுகள்வரை தார்றோட்டாகியது.

எனது வீட்டு வாசலைக் கடந்தும் தெரு முடியவில்லை. மாடுகள் சென்ற பாதைபோல அங்குமிங்கும் சில தார்ப்பிடிப்பு மாத்திரம் சாணம்போல் இருக்கின்றது. இத்தனை வருடங்களாகியும் நகரசபையோ மாநகரசபை எனப் பெயர் பெற்ற பின்போ ஒன்றும் நடக்கவில்லை. இனப்பிரச்சினை காரணமாக அங்கத்தவர் தெரிவு இல்லாமல் கமிஷனர் நடத்திய காலத்தில்தான் செய்யாமல்விட்டாலும், இப்போது தெரிவுசெய்யப்பட்ட அங்கத்தவர்களும் தத்தம் வேதனம் பெறுவதில் முழுக்கவனமும் அல்லாது நாட்டு நலனில் ஒன்றையும் காணோம்.

ஆரம்பகாலத்தில் வரிப்பணம் கொஞ்சம் குறைவுதான் என்றாலும் 28 வீடுகளும் வருடமொன்றுக்கு 10 ஆயிரம் ரூபா சராசரியாகக் கட்டியிருந்தாலும் 41 வருடங்களுக்கும் 41 × பத்தாயிரம் கட்டுப்பட்டிருக்குமே. தெருத்தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைக்கிறார்களா? இது ஒருபுறமிருக்க,

சிறுவர் விளையாட்டு மைதானத்துக்கு ஆரம்பத்தில் ஒவ்வொரு வீட்டாரும் 5 ரூபா மாதாந்தம் பராமரிப்புச் செலவுக்காகக் கொடுத்தோம் நாளடைவில் பலர் வாடகைக்குக் கொடுத்தும், விற்றும் வேறிடஞ் சென்றதால் நிலைமை யோசிக்கவேண்டியதாயிற்று. நிலமில்லாதவர்கள் இவ்விடத்தில் வீட்டைக் கட்டிக் குடியிருந்தாலும் எழுப்பிக்கொள்ளவும் முடியாத நிலை அதனால் விளையாட்டு மைதானத்தை நகரசபைக்கு அன்பளிப்புச் செய்வோம் எனத் தீர்மானித்தோம்.

அப்போது அரசாங்க அதிபராகக் கச்சேரியில் கடமையாற்றிய திரு. அந்தோனிமுத்து அவர்களே நகரசபையிலும் கமிஷனராகக் கடமையாற்றினார். அவரோடு கலந்துபேசி திரு. காலைல் காசிநாதரால் உறுதி எழுதப்பட்டது. வைபவரீதியாகக் கையேற்கவருகிறார் கமிஷனர் திரு. அந்தோனிமுத்து அவர்கள்.

8-12-1981ல் தேநீர் விருந்துக்குச் சில பிரமுகர்களும் அழைக்கப்பட்டனர். திரு. ஞானசூரியம் அவர்களும் 7ந் திகதி காலையில்தான் கொழும்பில் இருந்து வந்தார். அவருக்குமே தெரியாமல் நான் இரும்பு வேலையில் ''மட் / ஞானசூரியம் விளையாட்டு மைதானம்'' என 10 அடி நீளம், 2½ அடி அகலத்தில் அமைத்து 7ந் திகதி இரவு பிரதான வாயிலுக்குக் குறுக்கே, இரு தூண்களிலும் வைத்துக் கொங்றீற் போட்டு விட்டேன். (படம் வேறொரு இடத்தில்)

திரு. ஞானசூரியம் அவர்களுக்கே பெரும் ஆச்சரியமாகி விட்டது. எல்லாம் முடிய என்னிடம் கேட்டார் ''எவ்வளவு செலவு'' என்று. நான் சொன்னேன். இரண்டொரு நாள் கழித்து அவர் கொழும்பு சென்றதும் நன்றிக் கடிதமும், நான் சொன்ன தொகை 1275 ரூபாவுக்குத் தனது காசோலை ஒன்றையும் அனுப்பிவைத்தார்.

சமீபத்தில் செஞ்சிலுவைச் சங்கத்தால் நடத்தப்பட்ட மட்டக்களப்பு காத்தான்குடி உட்பட்ட சங்கங்களின் விளை யாட்டுப் போட்டியும் இங்கேயே இடம்பெற்றது. இதன் ஒரு பகுதியில் மாரிகாலத்தில் வெள்ளம் நிற்கும். மாநகரசபை ஆணையாளரிடம் பலமுறை சொல்லியும் கவனிப்பதாகத் தெரியவில்லை. ''குப்பை கொட்ட இடமில்லாததால் கூட் டாமல் விடுகிறீர்களே - இந்தப் பள்ளத்தில் குப்பையைக் கொஞ்சம் கொட்டிக் கிறவலைப்போட்டு மூடும்படிதான் நான் கேட்டது''

இச் சதுக்கம் ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம் - எழுத்தில் இல்லாவிட்டாலும் - தமிழ் மக்களுக்கென்றே இருந்தது. தலை வராக இருந்த டானியேல் அவர்கள் தனது மகளின் விவா கத்துக்குப் பணம் தேவைப்பட்டதால் தனது முதலாம் இலக்க வீட்டை லங்கா வேக்கரி சிங்கள முதலாளிக்கு 65 ஆயிரத் துக்கு விற்றுவிட்டார். இதை அறிந்த நான் திரு. டானியேல் அவர்களுக்குக் காரசாரமாகக் கதைத்துவிட்டேன். அன்று தொடங்கி சிநேகபான்மையை மறந்துவிட்டோம்.

27, வைத்தியா வீதி, தெகிவளையில் குடியிருந்த திரு. V. T. ஞானசூரியம், பலநாட்கள் வருத்தமாக இருந்து இறைவ னடி சேர்ந்தார். அவரது இறந்த உடலைக்கூட வெளியே கொண்டுவரமுடியாத தமிழர், சிங்களவர் பிரச்சினை தலை தூக்கிய நாட்கள். றேமன் கம்பனி பொறுப்பேற்று பத்தாயிரம் ரூபாய் வாங்கிக்கொண்டு இரவோடிரவாகச் சடலத்தை எடுத் துச்சென்று மறுநாள், கொஞ்சம் சாம்பல் கொண்டுவந்து அவரது மனைவியாரிடம் கொடுத்துச்சென்றனர்.

ஒருமாத காலத்தின்பின் திரு. டானியேல் என்பவர் (தலைவர்) எனது வீட்டுக்குவந்து, காலஞ்சென்ற திரு. ஞான சூரியம் அவர்களின் அஸ்தியில் கொஞ்சம் வைத்து, விளை யாட்டு இடத்தில் ஞாபகத்தூபி ஒன்று அமைக்க விரும்புகிறேன் என்றார். அதற்கு நான் ''உயிரோடு இருக்கும்போது அவரது பெயரை நிலைநாட்ட எதிர்ப்புத் தெரிவித்தீர்கள்; சங்க நோக்கத்துக்கு மாறாக வேற்றுச்சாதிக்கு வீட்டை விற்றீர்கள்; இப்போ சுடலையாக்கியா பெயரை நிலைநாட்ட யோசிக் கிறீர்கள். உங்களால் இயலுமாயிருந்தால் செய்துபாருங்கள்'' எனச் சவால்விட்டேன். அத்தோடு மட்டக்களப்பையே விட்டு லண்டன் மாநகரத்துக்கே சென்றுவிட்டார்.

உயிரோடு இருக்கும்போதே பெயர் வைக்கும் வழக்கம் மட்டக்களப்பில் உதயமாயிற்று. வேதாரணியம் சதுக்கம், திசைவீரசிங்கம் சதுக்கம், செல்வநாயகபுரம், இராசதுரைபுரம் என்ற பெயர்கள் ஆரம்பமாயின.

## 15. கிழக்கிலங்கை ஆசிரியர் சங்கம், கூட்டுறவு சமாசம்

கிழக்கிலங்கை ஆசிரிய சங்கத்துக்கு வருடச்சந்தா ஒரு ரூபா. யாழ்நகர் ஆசிரிய சங்கத்துடன் இணைவதாயின் ஒவ்வொரு அங்கத்தவரும் இணைப்புப் பணமாக ஒரு ரூபா வருடத்துக்குக் கொடுக்கவேண்டும். நான் அப்போது கிழக்கிலங்கை ஆசிரிய சங்கத் தலைவர்.

ஒருநாள் கந்தையா ஆசிரியர் யாழ்நகரில் இருந்து என்னிடம் வந்தார். இவர் வட இலங்கை ஆசிரியர் சங்கச் செயலாளர். கிழக்கிலங்கைச் சங்கத்தையும் வட இலங்கை ஆசிரியர் சங்கத்துடன் சேர்க்கும் நோக்கமாகவே வந்தார்.

இரண்டையும் இணைத்துவிட்டால் அகில இலங்கை ஆசிரியர் சங்கமொன்றையே உருவாக்கிவிடலாம் என்ற எண்ணம் எனக்கு உண்டாயிற்று எனவே இருவரும் வஸ்ஸிலும் சைக்கிளிலும் வாழைச்சேனை தொடங்கி அக்கரைப்பற்று வரையும் சென்று எனது சங்க அங்கத்தவர்களைக் கண்டு விடயத்தை விளக்கிப் பற்றுச்சீட்டுக் கொடுத்து 2 ரூபா வீதம் வாங்கினோம்.

ஒரு கிழமையில் திரு கந்தையா திரும்பிச் சென்றுவிட்டார். இணைப்புப் பணமாக 200 ரூபா வரையில் கொண்டு சென்றார். வட இலங்கை ஆசிரியர் சங்க வருடாந்தக் கூட்டத்துக்கு எனக்கும் அழைப்பிதழ் அனுப்பியிருந்தார், காரியதரிசி கந்தையா. கிழக்கிலங்கை ஆசிரியர் சங்கத்தையும் இணைத்துக் கொள்வதாயின் வருடாந்த மகாநாட்டில் ஏற்றுக்கொள்ளப் படவேண்டும். நான் போகும்போது உதவியாக திரு. இராஜரெட்ணம் என்பவரையும் கூட்டிச்சென்றேன்.

இவர் தமிழரசுக்கட்சி அங்கத்தவராயிருந்த திரு. S. M. இராசமாணிக்கம் என்பவரின் சிறிய தகப்பனார். தமிழ், ஆங்கிலம் இரு பாஷைகளிலும் பயிற்றப்பட்ட ஆசிரியர்.

திரு. முத்துக்குமாரசுவாமி (B. A ) அவர்கள் தலைமையில் கூட்டம் ஆரம்பமாகியது. நிகழ்ச்சி நிரலில் கிழக்கிலங்கை ஆசிரியர் சங்க இணைப்பு என்ற விடயம் வந்ததும் காரியதரிசி சந்தையா, மட்டக்களப்புக்குச் சென்றதைப்பற்றி விளக்கி இணைப்புப் பணமாக 200 ரூபா வரையில் சேர்ந்தது. இதற்கான செலவு 100 ரூபாவுக்கும் குறையத்தான் என்று ஏதோ கணக்கைச் சமர்ப்பித்தார்.

இதை எதிர்த்துத் திரு. சந்தசாமி (B.O.L.) என்பவர், செலவு செய்தவற்றிற்குப் பற்றுச்சீட்டு இணைக்கவில்லை. மட்டக்களப்பு ஆசிரியர்களைச் சேர்ப்பதால் நமக்கு என்ன லபாம் என்றெல்லாம் ஏதேதோ கதைக்கிறார்

நான் எழுந்து ''பாவத்துக்கு உழவந்த மாட்டைப் பல்லுக்குப் பதம்பார்க்கலாமா'' என ஒரு வசனம் சொன்னதுதான் தாமதம், ஆங்கிலத்திலும் தமிழிலும் ஒவ்வொரு மூலையில் இருந்தும் புதுப்புதுச் சொற் தொடர்கள் புறப்பட்டன. This person should clear out from this hall. He is using un wanted words. இவரை இம்மண்டபத்தில் இருந்து வெளியேற்றவேண்டும். தேவையற்ற சொற்களைப் பேசுகின்றார். இப்படிப் பலப்பல.

எனக்குப் பக்கத்தில் இருந்த இராஜரெட்ணம் என்னிடம் ''அடிவிழப்போகுதடா மச்சான் என்ன செய்வோம்'' என்றார். அவரது வாயில் இருந்து சொற்கள் புறப்படுவதே கஷ்டமாயிருந்தது. உடல் முழுவதும் நடுக்கம் ஏற்பட்டது. அசுர வேகத்தில் எனக்குத் துணிவு ஏற்பட்டது. அடிவாங்குவதாயிருந்தாலும் மேடையில் நின்றுதான் வாங்கவேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. உடனே மேடைக்குச் சென்று தலைவர் அவர்களிடம் ''ஐயா, சற்றுநேரம் பேச உத்தரவு தருகிறீர்களா'' என்றேன். அவர், நீங்கள் பேசுங்கள் என்றார்.

எனது பேச்சு:-

மதிப்புக்குரிய தலைவர் அவர்களே, சபையோரே,
நான் இதுவரை காலமும் ஒரு பிழையான எண்ணத்துடன் வாழ்ந்துவந்தேன். இன்று அதைத் திருத்துவதற்கு நல்ல சந்தர்ப்பம் ஏற்பட்டதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். நான் இதுவரை கொண்டிருந்த பிழையான அபிப்பிராயம் - யாழ்

நகரவாசிகள் தமிழ் இலக்கணத்தில் புலிகள் என்பது. இன்று அவர்களுக்கு, சாதாரண சிறு பிள்ளைகள் விளங்கிக்கொள்ளக் கூடிய உவமையே தெரியாமல் திண்டாடுகிறார்கள். சுயநிலையையே மறந்துவிடுகிறார்கள். தற்செயலாக 2 வயதுப் பிள்ளை ஒன்றுக்கு மூத்த சகோதரனோ சகோதரியோ அடித்து விட்டால், அந்தப் பிள்ளை எப்படி ஏசுகிறது? ''பல்லைப் பார் திருவலைப் பல்லுப்போல, சொக்கையைப் பார் ரீ வணிஸ்போல'' என்று. ஏனிதை அந்தப் பிள்ளை சொல்கிறது? அதன் பொதுத்தன்மையை அது உணர்வதால். ஆனால் சொக்கையைத் தின்பதும் இல்லை, பல்லில் தேங்காயைத் துருவுவதுமில்லை.

''பாவத்துக்கு உழவந்த மாட்டைப் பல்லுக்குப் பதம் பார்க்கலாமா'' என்றால், திரு. சுந்தையா அவர்கள் சுயநலம் எதையும் கருதாது சங்க வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு மட்டுநகர் வந்து ஒரு கிழமையாகக் கஷ்டப்பட்டார். அவர் 100 பேரைச் சங்கத்தில் சேர்த்தார். வருடாந்தம் 100 ரூபா வரையில் இணைப்புப் பணமாகப் பெறப்போகின்றீர்கள். தண்ணீர் விடாமல் எண்ணெய் எடுக்கமுடியாது. அவர் செலவு செய்த சொற்பப் பணத்துக்கு நாக்கு வழிக்கின்றீர்கள்.

தலைவர், பக்கத்தில் இருந்தவரிடம் தம்பி சொல்வதில் நியாயம் இருக்கிறது என்று சொன்னது எனக்குக் கேட்கிறது. துணிவு கூடுகிறது. இன்னும் விளக்கமாகச் சொல்வதாயின் மட்டக்களப்பு ஆசிரியர்களைச் சேர்ப்பதால் என்ன லாபம் எனக் கேட்கின்றீர்கள். இதிலிருந்து நீங்கள் சுயநலவாதிகள் என்பது வெளிப்படை. வந்தாரை வாழவைக்கும் மட்டக்களப்பு என்பதை நீங்கள் கேள்விப்படவில்லையா? இப்போது மணி 2. கூட்டம் நடத்துகிறீர்கள் ஒரு வடையுடனும், ஒரு கோப்பைத் தேநீருடனும்.

மட்டக்களப்புக்கு வந்து பாருங்கள். பாலும் தேனும் கலந்த போசன ஆசனங்களையே விட்டு எழுந்திருக்கமாட்டீர்கள். உங்கள் ஊரில் 2 சதத்துக்குத் தேநீரும, 50 சதத்துக்குச் சாப்பாடும் உண்டால் பற்றுச்சீட்டுக் கொடுப்பார்களா? ''ஊர் ஓடினால் ஒத்தோடு, தனித்தோடுகில் கேட்டோடு'' என்னும் பழமொழியும் தெரியாதுபோல் இருக்கிறது.

திரு. சுந்தையா என்பவர் அவ்வளவு வாய்ச் சாதுரியமாகப் பேசமாட்டார் என்பதை அறிந்து எல்லோரும் ஏறி மிதிக்கின்றீர்கள். இம்முறை கிழக்கு மாகாணத்தைச் சேர்த்தால் அடுத்தமுறை மற்ற மாகாணங்களையும் சேர்த்து அகில இலங்கை ஆசிரியர் சங்கமாக உருவாகும் என்பதையும்

ஞாபகப்படுத்தி, என்னைப் பேச அனுமதித்த தலைவருக்கு நன்றி கூறுவதுடன், கேட்டுக்கொண்டிருந்த சபையோருக்கும் நன்றி கூறுகிறேன்'' எனக் கூறி விடைபெற்றேன்.

கிழக்கிலங்கை ஆசிரியர் சங்கம் வட இலங்கை ஆசிரியர் சங்கத்துடன் இணைவதை ஏற்றுக்கொண்டனர். (இதையிட்டு சில வருடங்களின்பின் அ. இ. த. ஆ. சங்கத் தலைவராக வந்த திரு. D. S. K. வணசிங்கா அவர்கள் வேறொரு இடத்தில் குறிப்பிட்டுள்ளார்.) கூட்டம் முடிந்ததும் திரு. கந்தையா அவர்கள் என்னை வாடிவீட்டுக்கு அழைத்துச்சென்று விருந்துபசாரம் செய்து வாடகைக் காரில் பண்டத்தரிப்புக்குக் கொண்டு சேர்ப்பித்தார். இச்சங்கத்தால் தவணைக்கொரு முறை வெளியாகும் ''ஆசிரியன்'' என்னும் சஞ்சிகையின் அட்டைப்படத்தில் எனது உருவத்தைப் போட்டு மதிப்பும் தந்தனர்.

மட்டக்களப்பில் கூட்டுறவு இயக்கத்தலைவராக இருந்தவர் காலம்சென்ற திரு. V. இளையதம்பி. நான் செயலாளர். இவர் பல பொது வேலைகளில் ஈடுபட்டிருந்தார். கூட்டுறவுப் பண்டசாலைகளை ஒவ்வொரு வட்டாரத்துக்கும் ஒன்றாக அமைத்தார். 70ம் ஆண்டுவரையில் யாழ்ப்பாணக் கூட்டுறவுச் சமாசத்தில் இருந்தே மட்டக்களப்புக்குச் சாமான்கள் வந்தன. இதனால் அதிருப்தி அடைந்த நாங்கள் மட்டக்களப்பில் ஒரு சமாசத்தை ஏற்படுத்துவது எனத் தீர்மானித்தோம்.

எனவே யாழ்நகரில் நடந்த சமாசத்துக்கு நான்தான் பிரதிநிதியாகச் செல்லவேண்டும் எனத் தீர்மானித்தனர். எனது செலவில் சிறந்த பேச்சாளர் ஒருவரையும் கூட்டிச்சென்றேன்.

யாழ்நகர் சென்றதும் கூட்ட ஆரம்பத்தில் கொழும்பில் இருந்து வந்த கூட்டுறவு ஆணையாளர் திரு. ரங்கநாதன், நான் கூட்டிச்சென்ற அறிஞருடன் ஏதோ கதைத்தார். உடனே நான் கூட்டிச்சென்றவர் அவர்களோடு போய் அமர்ந்துகொண்டார். நிகழ்ச்சி நிரலில் மட்டக்களப்புக்கு சமாசத்தைப் பிரித்து விடுவது என்ற விடயம் வந்ததும் திரு. ரங்கநாதன், இப்பொழுது அது அவசியம் இல்லை. கொஞ்சக்காலம் நடந்ததுபோலவே நடக்கட்டும் என்றார். நான் கூட்டிச்சென்றவர் எழுந்து ஏதும் சொல்லுவார் என நான் எதிர்பார்த்தேன். ஆனால் அவர், தனக்கும் மட்டக்களப்புச் சமாசத்துக்கும் ஏதும் தொடர்பு இல்லாதவர்போல மற்றவர்களுடன் கதைத்துக் கொண்டேயிருக்கிறார். இச்சந்தர்ப்பத்தை நழுவவிடக்கூடாது என நினைத்த நான் மேடைக்குச் சென்றேன். நான் கூறியது:

''மட்டக்களப்புக்குச் சமாசத்தைப் பிரித்தெடுக்கும் விடயமாகத்தான் நானும் இன்னொரு பிரமுகரும் இங்கே வந்தோம். ஆனால் அவரோ இப்போது வந்த விடயத்தை மறந்துவிட்டார். ஒரு சிறிய கதையை மாத்திரம் உங்களுக்குச் சொல்லலாம் என நினைக்கின்றேன். ''ஒரு இளம் குடும்பம். சந்தோஷமாகத்தான் வாழ்ந்தார்கள். ஆனால் பிள்ளைச் செல்வம்தான் ஏற்படவில்லை. பல நேர்த்திகளின்பின் ஒரு பெண் குழந்தை பிறந்தது. அழகான குழந்தை. அதுவும் வளர்ந்து 18 வயதுப் பருவ மங்கையாகிவிட்டாள்.

அவள் ஒருவனை விரும்பினாள். பெற்றோர் எதிர்ப்புத் தெரிவித்தனர். கூடியளவு கெஞ்சிப்பார்த்தாள். பெற்றோர் இணங்கவில்லை. தன் கண்ணிறைந்த கணவனோடு ஓடிவிட்டாள். கர்ப்பவதியானாள். தலைப்பிரசவத்துக்குத் தாயே போய்நின்று பாடுதுணைப் பார்த்தாள். பின்பு தகப்பனும் மெல்லமெல்லப் போகத்தொடங்கினார்.

இதேமாதிரி நிச்சயமாக நாங்கள் மட்டக்களப்பில் சமாசம் ஒன்றை உருவாக்கியே தீருவோம்'' எனக் கூறிவிட்டு வந்து அமர்ந்தேன். சற்றுநேரத்தில் தலைவர், மட்டக்களப்பில் சமாசம் அமைக்க நாங்கள் தடையில்லை எனக் கூறினார். இதையிட்டு, கிழக்குப் பிராந்திய உதவிக் கூட்டுறவு ஆணையாளர் திரு. க. சண்முகநாதன் குறிப்பிட்டுள்ளார்.

*(சமாசத்தில் நடந்த சுவாரசியமான கதை ''தொப்பிக்குள் மூளை'' என்னும் தலைப்பில் கூறப்பட்டுள்ளது.)*

# 16. சந்தர்ப்பவாதிகளுக்கு ஒரு பாடம்

எனக்கு ஒரு குடிகார நண்பர் இருந்தார். நாங்கள் இருவரும் அடிக்கடி ஹோட்டல்களுக்குச் சென்று மதுபானம் அருந்துவது வழக்கம். ஒருநாள் அவரது வீட்டுக்குச் சென்ற போது அவரது மனைவி இவருக்கு ஏசிக்கொண்டிருக்கிறார். ''நீங்கள் எப்போதும் குடித்துத்திரிந்தால் எங்கே போய் முடியப்போகிறதோ தெரியல்ல?'' அதற்கு எனது நண்பர் சொல்லுகிறார்: ''இப்போது ஏசுகிறாய் சாகப்போகும் நேரம் வந்தால் கொஞ்சம் சாராயம் தரட்டுமா என அன்புடன் கேட்பாய். அப்போது முலைப்பால்கூடத் தொண்டைக்குள் இறங்காத நேரத்தில் கேட்டு என்ன பயன்?'' இந்த நண்பர் சம்பந்தப்பட்ட பல சம்பவங்கள் உள்ளன.

சியவச நூற்றாண்டு விழா நடந்தபோது ஒருநாள் மதியச் சாப்பாட்டுக்குப் பொறுப்பாக அவரது மனைவி இருந்தார். ஒவ்வொரு நாளும் சாப்பாட்டுக்கு வெவ்வேறு சீட்டு உண்டு. அன்று நண்பர் முதல் நாள் சீட்டு ஒன்றுடன் சாப்பாட்டுக்குப் போயிருக்கிறார். இச்சீட்டை அவருக்குக் கொடுத்தது அவரது மனைவிதான். இது முதல் நாளுக்குரியது. அதில் திகதி இல்லை. ஒவ்வொரு நாளுக்கும் ஒவ்வொரு 'பூ'தான் அடையாளம். இது எனக்கும், சாப்பாடு ஒழுங்குபடுத்துபவருக்கும்தான் தெரியும்.

அவர் கொண்டுபோனது இறைச்சிச் சாப்பாட்டுக்குரியது. ஆனால் சாப்பாட்டுக்குப் பொறுப்பாளி இறைச்சிக்கறி கொடுக்க மறுத்துவிட்டார். எனக்கு முறைப்பாடு வந்து போய்ப் பார்த்தபோது முதல்நாளுக்குரிய சீட்டு. நான் அவரிடம் ''கணவனுக்கு நல்ல உணவு கொடுக்கவேண்டியது

மனைவியின் கடமைதான். ஆனால் இப்படியான பொது இடங்களிலல்ல'' என்றதும் இருவரும் கோபித்துக்கொண்டு சென்றுவிட்டனர்.

ஒருநாள் காலை 6.30 மணிக்கு எனது வீட்டிற்கு, ஒரு கார் வந்தது. திரு. V. இளையதம்பி, மரண விசாரணை அதிகாரி என்னைக் கூட்டிக்கொண்டு வரச்சொன்னதாக ட்ரைவர் சொன்னார். அவருக்குக் கை நடுக்கமாக இருந்ததால் வசதியான நேரம் நான் அவருக்கு எழுதுவதில் உதவுவது வழக்கம். உடனே அங்கு சென்றேன்.

அன்றிரவு கிணற்றில் தண்ணீர் அள்ளும்போது கிணற்றுள் ஒருவர் விழுந்துவிட்டதாகவும், மறுநாட் காலைதான் பிரேதத்தை எடுத்ததாகவும் தெரியவந்தது. அவர் கல்வித்திணைக்கள உயர் அதிகாரி. மட்/வன்னியார் தெருவில் ஒரு வாடகை வீட்டில் தனியே வசித்தார். இவரது கார்ச்சாரதி வேறொரு வீட்டில் வசித்தவர்.

ஒவ்வொரு நாளும் இரவில் எனது குடிகார நண்பரும் அவரது சகாக்களும் இந்த அதிகாரி வீட்டுக்குச் சென்று சிட்டாடி அவரது மதுபானத்தையும் மூக்குமுட்டக் குடிப்பவர்கள். முதல்நாள் இரவும் அப்படி நடந்த பின்புதான் இந்த மரணம் சம்பவித்திருக்கிறது.

மரண விசாரணை முடிந்துவிட்டது. கல்விப்பணிப்பாளர் இறந்தவரின் சடலத்தை யாழ்ப்பாணம் கொண்டுசெல்ல அனுமதிப்பத்திரமும் பெற்றுக்கொண்டு வந்தார். பிரேதத்துடன் யார் போவது என்ற வினா எழுந்தது. எனது நண்பரும் அவரது சகாக்களும் புளி தின்றவர்கள்போல வாயைச் சப்பிக்கொண்டு நிற்க ஒரு ஆசிரியமணி ''நான் போவேன், ஆனால் லீவைப்பற்றித்தான் யோசிக்கிறேன்'' என்றார். கல்விப்பணிப்பாளர் அவருக்கு மோசமாக ஏசிவிட்டார்.

நான் போகிறேன் என்றேன். உடனே கல்விப்பணிப்பாளர் மிக்க சந்தோஷத்தோடு ''Please take Charge'' என்றார்.

வானில் (Van) ஏறினேன், புறப்பட்டுவிட்டேன். சாதாரண வேட்டி, ஒரு ரீசேட் அவ்வளவுதான் என் உடை. வன்னியார் வீதியால் திரும்பி மாடிவீட்டுத் தெருவுக்கு வான் திரும்பியதும் ஒரு வாலிபன் கையைக் காட்டினான். வானை நிறுத்தினேன். என் உத்தரவுடன் அவனும் ஏறிக்கொண்டான்.

இப்பையன் தமிழில் எஸ். எஸ். ஸீ. சித்தியடைந்தவன். இறந்தவர் இவனுக்கு ஆசிரிய உத்தியோகம் கொடுத்ததாகச்

சொன்னான். அதற்காகத் தனது நன்றிக்கடனைச் செலுத்த வந்தேன் எனவும் சொன்னான்.

என்னிடம் ஒரு சதமும் காசு இல்லை. புனித மிக்கேல் கல்லூரிச் சந்திக்குச் சென்றதும் தெருவோரத்தில் வானை நிறுத்திவிட்டு ஆயர் இல்லம் சென்று காசாளர் அருட்திரு. ஜெறோம் அடிகளாரிடம் 200 ரூபா கடனாகப் பெற்றுக்கொண்டு புறப்பட்டு காலை 10 மணி வரையில் பொலநறுவையை அடைந்தோம்.

வான் சாரதிக்கும் பசி. ஒரு பக்கமாக வானை நிறுத்தி விட்டு ஒரு கடைக்குச் சென்று இடியப்பம் சாப்பிட்டு வெளி யில் வரும்போது, எனது குடிகார நண்பரும் மற்றும் சிலரும், இறந்த கல்வி அதிகாரியின் காரில் திருமண வீட்டுக்குச் செல் பவர்கள்போல வந்திறங்கினர்.

நண்பர் என்னிடம் ''இவ்வளவு கெதியாக வானைச் செலுத்துவது நல்லதா'' எனக் கேட்டார். எனக்குக் கோபம் வந்துவிட்டது. ''பொத்தடா வாயை. உனக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை'' என்று சொல்லி நாங்கள் புறப்பட்டு விட்டோம்.

பி. ப. 4 மணி அளவில் யாழ்ப்பாணம் பெரியகடையில் இரண்டாம் குறுக்குத் தெருவில் இருந்த காலஞ்சென்றவரின் வீட்டில் இறங்கி பிரேதத்தை அவரது துணைவியாரிடம் ஒப் படைத்தேன்.

எனது மனைவியின் சகோதரி பிளசந் சாமுவேல் யாழ்ப் பாணம் கன்னியர் மடத்தில் ஆசிரியை. இவர் நான் வந்ததைக் கேள்விப்பட்டு உடனே மரண வீட்டிற்கு வந்து சுதைத்தார். இளவாலை, பண்டத்தரிப்புக்குப் போகும் ஆசிரியைகள் 5 பேரும் இருந்தனர். எல்லாரையும் ஏற்றிக்கொண்டு அவரவர் இடத்தில் விட்டுப் பண்டத்தரிப்புக்குச் சென்றோம்.

இடையில் மச்சாள் பிளசம் கடைத்தெருவில் நிறுத்தி ஏதோ சாமான் வாங்கியிருந்தார். நானும் சாரதியும் முழுகி முடிந்ததும் பிளசம் என்னிடம் புதிய வேட்டி, சேட், மேஸ் வெனியன் மூன்றையும் தந்து ''இந்தக் கோலத்தோடு ஏன் வந்தீர்கள்? வீட்டில் உடுப்பை மாற்றிக்கொண்டு வந்திருக் கலாமே'' என அன்பாகக் கடிந்துகொண்டார். (கடைத்தெரு வில் வாங்கியது இவைதான்.)

இதற்கிடையில் இறந்தவரின் மனைவி என்னிடம் ''வானுக்கு எவ்வளவு காசு?'' எனக் கேட்டார். நான் சாரதி

யிடம் அறிந்து இருந்ததால் ''800 ரூபா'' என்றேன். உடனே அவர் அப்பணத்தைத் தந்துவிட்டார்.

மறுநாட் காலை மட்டக்களப்புக்குப் புறப்படும்போது, எனது குடிகார நண்பரும், சகாக்களும் நாங்களும் வரப்போகிறோமென்று கெஞ்சினார்கள். நடந்தவற்றையெல்லாம் மறந்து நான் எல்லோரையும் ஏற்றிக்கொண்டேன்.

நண்பர் சொன்னார் ''நாங்கள் எல்லாருமாகச் சேர்ந்து வான் காசு 800 ரூபாவைக் கொடுப்பதாகத் திட்டம் போட்டிருந்தோம். ஆனால் நீங்கள் அக்காசைக் கொடுத்ததாகச் சாரதி சொன்னார்'' என்றார். அதற்கு நான், ''நீங்கள் அவரிடம் குடித்த சாராயக் கணக்கை இத்துடன் தீர்த்துவிடலாம் என எண்ணமா? உங்கள் குணம் அவர் மனைவிக்குத் தெரிந்துவிட்டதோ என்னமோ, அவர் வான் காசை என்னிடம் தந்துவிட்டார்'' என்றேன்.

பளையில் வான் வந்ததும் நிறுத்தி, ''இங்கே நல்ல கள் இருக்கும் குடியுங்கள், என்னுடைய செலவில்'' என்றேன். ஒருவராவது குடியாமல் விடவில்லை. பொலநறுவையில் எல்லோருக்கும் மதியபோசனம் எனது செலவில். அவர்களிடம் சொன்னேன்: ''நான் ஒரே ஒரு நாள் மாத்திரம் இறந்தவருடன் அவரது காரில் கொழும்புக்குச் சென்றேன். அந்த நன்றிக்கடனை இப்போது செலுத்துகிறேன்.'' எல்லோருடைய முகங்களும் அவமானத்தால் சுருங்கிவிட்டன.

சந்தர்ப்பவாதிகளின் முகமூடிகளைக் கிழித்தெறிந்ததில் ஏற்பட்ட மகிழ்ச்சி, என் பயணக் களைப்பையெல்லாம் போக்கடித்துவிட்டது.

# 17. மேலதிகாரிகள் கெஞ்சினால் மிஞ்சுவார்கள் மிஞ்சினால் கெஞ்சுவார்கள்

எனது வணக்கத்துக்கும் மதிப்புக்கும் உரிய குரு பிலிப் விறதர் அவர்களின் தணியாத ஆசை, மேலதிகாரிகள் பிழையாகவும் அநீதியாகவும் நடந்தால் அவர்களைச் சரியான வழிக்குக் கொண்டுவரவேண்டும். இதனால் எனக்குப் பல தீங்குகளும் பண நஷ்டமும் ஏற்படும். என்றாலும் இதைச் செய்து முடிப்பாயா எனக் கேட்டதற்கு நான் 'ஆம்' எனப் பதிலளித்தேன்; நடைமுறைப்படுத்தவும் ஆரம்பித்தேன். அதையிட்டு ஒருசில சம்பவங்கள்:

1936ம் ஆண்டு புரட்டாதி மாதம் முதலாம் தி+தியில் புனித மரியாள் சாதனா பாடசாலையில் கடமை ஏற்றேன். 5ம் வகுப்பிற்குப் பூமிசாஸ்திர பாடம் படிப்பித்துக்கொண்டிருந்தபோது வருடாந்தப் பரீட்சைக்காக திரு. சதாசிவ ஐபரும், திரு. குணசேகரம் M.A. அவர்களும் வந்தனர். திரு. குணசேகரம் அவர்கள் எனது 5ம் வகுப்பிற்கு வந்து கரும்பலகையில் உலகப்படம் கீறி, பின்வருவனவற்றைக் குறிக்குக என ஒரு வினாவை எழுதினார். நான் உடனே அவரிடம் "தயவுசெய்து இந்தக் கேள்வியை அழித்துவிட்டு வேறு கேள்வி எழுதுங்கள்" என்று சொன்னேன். அவரது முகமே மாறுதலடைந்தது. "ஏன் அழிக்கவேண்டும்?" என அதிகார தோரணையில் கேட்டார்.

அதற்கு நான், "எஸ். எஸ். ஸீ. வினாத்தாளில்கூட உலகப்படம் கீறப்பட்ட தாள் இணைத்திருக்கும். அதிலேதான் குறிப்பிடுவது முறை. நீங்கள் இப்பிள்ளைகள் உலகப்படத்தையே கீறவேண்டும் என எதிர்பார்ப்பது சரியா?" என்

றேன். வேறு இரண்டு வினாக்களை எழுதிவிட்டு மற்ற வகுப்புக்குச் சென்றுவிட்டார்.

மத்தியானம் பாடசாலை முடிந்தும் நான் வீட்டுக்குச் சென்றுவிட்டேன். பின்னேரப் பாடசாலைக்கு வந்தபோது தலைமை ஆசிரியர் என்னிடம் கூறினார், உனது தராதரப் பத்திரத்தில் 'வேலை திருப்தியில்லை' எனச் சதாசிவ ஐயர் எழுதியிருக்கிறார் என்று.

இந்த விடயத்தை மதியச் சாப்பாட்டின்போது மற்ற விறதர்மாரிடமும் கூறியிருக்கிறார் தலைமை ஆசிரியர் விறதர் அந்தோனிப்பிள்ளை அவர்கள். கூட இருந்து சாப்பிட்ட ஆசிரிய கலாசாலை அதிபர் ஜெறாட் விறதரின் மனத்தில் இது விசனத்தை ஏற்படுத்தியிருக்கவேண்டும். பி. ப. 3 மணிபோல் விறதர் ஜெறாட் என்னிடம், பின்னேரம் விளையாடப்போகாமல் 5 மணிக்குத் தன்னுடன் வரும்படி கூறினார். அப்படியே சென்றேன்.

அப்போது புளியந்தீவுத் தபால் நிலையத்தில் அதிகாரியாகக் கடமையாற்றியவர் பூணூல் அணிந்த பழுத்த சைவம். அவரது விடுதியில்தான் ஒரு அறையில் சதாசிவ ஐயர் சமைத்துச் சாப்பிட்டுக் குடியிருந்தார். இவர் மட்டக்களப்புக்கு வரும்போது அவருடன்தான் தங்குவார். இதை அறிந்துதான் விறதர் ஜெறாட் என்னை அங்கே கூட்டிக்கொண்டு போனார்.

தபால் அதிபர் செய்தி சொல்லச் சதாசிவ ஐயர் வந்து சேர்ந்தார். விறதர் ஜெறாட் அவரிடம் என்னைக்காட்டி, இவர் சென்ற ஆண்டில் எனது கலாசாலையில் முதலாவதாகத் தேறியவர். இவரது படிப்பித்தலை, கொழும்பில் இருந்து வந்த பதில் கல்வி ஆணையாளர் உவாட்சன்துரை, இவர் படிப்பித்த பைதகோறஸ் திருட்டாந்தத்தை எவ்வளவு அருமையாகப் படிப்பித்தார் எனக் கூறி 95 புள்ளிகள் போட்டுச் சென்றார். நீங்கள் எப்படி இவரது வேலை திருப்தியில்லை என எழுதினீர்கள் எனக் கேட்டதற்கு, திரு. குணசேகரம் சொன்னார் நான் எழுதினேன் என்று.

விறதர் சொன்னார் சிரித்துக்கொண்டு, உங்கள் பரீட்சை முறை நன்றாயிருக்கிறது. இதுவரை காலமும் கல்விப்பகுதியில் நீங்கள் எடுத்த நல்ல பெயரைப் பழுதாக்கிக்கொண்டீர்கள். வருங்காலத்திலும் இப்படிச் செய்யாதீர்கள் எனக் கூறிவிட்டுப் புறப்பட்டார். (இது நான் விறதர் பிலிப் அவர்களுக்கு வாக்குக் கொடுக்குமுன் நடந்தது).

சில நாட்களின்பின் நான் சென்மேரிசில் படிப்பித்துக் கொண்டிருக்கும்போது, ஒருவர் வந்து உங்களை விறதர் ஜெறாட் 5 நிமிஷம் விறதர்மார் விடுதிக்கு (கவுசுக்கு) வந்து விட்டுப் போகட்டாம் எனச் சொல்ல நான் சென்றேன். விறாந்தையில் விறதர் ஜெறாட்டும், திரு. குணசேகரமும் இருந்தனர். குணசேகரம் என்னிடம் ஒரு கடிதத்தைத் தந்து வாசித்துப் பார்க்கச்சொன்னார். அது ஒப்பம் இடப்படாத கடிதம். அவரைப்பற்றிக் கூடாமல் எழுதியிருந்தது.

வாசித்துவிட்டு அவரிடமே திருப்பிக் கொடுத்தபோது இதை நீர்தான் எழுதியிருப்பீர் என்று நான் நினைக்கிறேன் என்றார். அதற்கு நான், இந்தக் கீழ்த்தரமான வேலை செய்யும் பழக்கம் என்னில் இல்லை. அவசியம் எனக் கண்டால் நேரடியாகத் தாக்குவேன் என்று சொல்லிவிட்டு, விறதரிடம் நான் போகிறேன் எனச் சொல்லிவிட்டு நான் திரும்பிவர விறதர் குணசேகரத்திடம் சொன்னது 'I told you know' எனது காதில் கேட்டது.

நாட்கள் சில சென்றபின் ஒருநாள் திருமலை வீதியால் நடந்து சென்றுகொண்டிருந்தபோது, பக்கத்தில் ஒரு கார் வந்து நின்று "Get in Mr. Francis, I can drop you where ever you want to go" என்றார் திரு குணசேகரம். நான் உங்களைப் பிழையாக விளங்கிக்கொண்டேன் என மன்னிப்பும் கேட்டார். அன்றில் இருந்து சிநேகிதர்களானோம். அவரது பிரியாவிடையின்போது வாழ்த்துமடல் வாசித்துக் கொடுத்து அனுப்பிவிட்டேன்.

மற்றொரு வித்தியாதரிசி புதிதாக உத்தியோகம் பெற்றதும் ஆசிரியர்க்கென கூட்டமொன்றைக் கூட்டினார். அவரது ஆரம்ப உரை: நான் ஏன் இந்த வேலைக்கு வந்தேன் என்றால் சில ஆசிரியர்கள் வஸ்ஸில் 8 30 வரை பயணம் செய்துவிட்டு, பாடசாலைக்கு வந்த நேரம் 7.30 என நேரம் குறிப்பிடுகின்றனர். அவர்களுக்குத் தகுந்த பாடம் படிப்பிக்கத் தான் என்றார்.

அவரது உரை முடிந்ததும் நான் "தயவுசெய்து மன்னியுங்கள். உங்கள் நலன் கருதித்தான் இதைக் கூறுகின்றேன். நீங்கள் இந்த வேலையை விட்டுவிட்டு கலால் பகுதியில் சேர்ந்து அபின், கஞ்சா, கள்ளச்சாராயம் வடிக்குமிடம், இவைகளைப் பிடித்துக்கொடுத்தால் கெதியில் உத்தியோக உயர்வு கிடைக்கும்" என்றேன்.

''நீர் எங்கே படிப்பிக்கின்றீர்?'' எனக் கேட்டதற்கு நான் ''பாடசாலையில்'' என விடை சொன்னேன். ஆசிரியர்களுக் குச் சிரிக்க விருப்பம். ஆனால் நெஞ்சில் உரம் இல்லாததால் அது வெளியில் வரவில்லை. கூட்டம் முடிந்தது. இதை இவர் மனதில் வைத்துக்கொண்டு நான் படிப்பித்த வீச்சுக்கல்முனைப் பாடசாலைக்குச் சரியாக 7 30க்குப் பலதடவை சென்று நான் பாடசாலையில் இல்லை எனச் சம்பவத்திரட்டுப் புத்தகத்தில் எழுதினார்.

நான் தெருவுக்குக் கல்போட்டுத் தார் ஊற்றுதல், வஸ் ஓடப்பண்ணுதல், நீர்க்குழாய் விடயங்களில் வெளியே திரிந்து 8.30க்குப் பின்புதான் பாடசாலைக்குப் போவேன். இது கல்விப் பணிப்பாளருக்குத் தெரியும். எனவே அவர் எனக்கு ஒரு கடிதம் தந்தார், சம்பவத்திரட்டுப் புத்தகத்தில் ஒட்டிவிடும் படி. அதில் குறிப்பிட்டிருந்தது: இவ்வாசிரியர் பிந்தி வரும் நேரத்தைக் கூட்டி 5 மணித்தியாலத்தால் பிரித்து வருடமுடி வில் மொத்த லீவுடன் கூட்டப்படவேண்டும் என்று. அதன் பின் அவர் எனது பாடசாலைக்கு வரவில்லை.

உடற்பயிற்சி வித்தியாதரிசி ஒருவர் அரசாங்கத்தால் சன் மானப் பணம் பெற்று அவுஸ்திரேலியா சென்று 6 மாத காலம் விசேட உடற்பயிற்சியடைந்துவந்தவர். இந்தச் சூடான இடத் துக்கு வந்தும் குளிர்தேச உடையே உடுத்தவர். சென்மேரிஸ் பாடசாலைக்கு வந்தார். தேகப்பயிற்சி வகுப்புக்கு மணி அடித்தது. மாணவர்கள் வர நானும் வந்தேன். யார் படிப் பிப்பது எனக் கேட்க நான்தான் என்றேன். படிப்பியும் பார்ப் போம் என்றார். அதற்கு நான், நீங்கள் படிப்பித்துக் காட்டி னால் நான் பிழைகள் இருந்தால் திருத்திக்கொள்வேன் என் றேன்.

ஐந்து தரம் வரையில் என்னைப் படிப்பிக்கச்சொன்னார். அத்தனை முறையும் நான் அவரையே படிப்பிக்கும்படி சொன் னேன். கடைசியில் அவர்தான் படிப்பித்தார். இதை வித் தியா சந்தோரில் சொல்லியிருக்கிறார். அவர்கள் இவருக்குப் புத்தியாக அவரோடு சிநேகிதமாக நடந்துகொள்வது நல்லது என ஆலோசனை கூறியிருக்கின்றனர். அன்றுதொடங்கி என்னுடன் நன்றாக நடந்துகொண்டார் அந்த உடற்பயிற்சி வித்தியாதரிசி.

பின்பு காலத்துக்குக்காலம் ஒவ்வொரு தொகுதியாக ஆசிரியர்களை விடுதியில் வைத்துப் பயிற்சி கொடுத்து 200 ஆசிரியர்களுக்குமேல் சான்றிதழ் வழங்க உதவினேன்.

இவரது மனைவியார் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் ஏஜன்றாக வேலை செய்தார். எனது செல்வாக்கை உப யோகித்து 100 பேருக்கும் மேல் சேர்த்துவிட்டேன். அவர் களது நிதி நிலைமையும் உயர்ந்தது. பின்பு மிகவும் நெருக்க மாகப்பழகினோம். மிஞ்சும் எண்ணத்தையே விட்டுவிட்டுக்குக் கெஞ்சவும் தொடங்கிவிட்டார்.

ஒரு பெண் முதன்முதலாக வித்தியாதரிசியாகக் கடமை ஏற்று, கல்விக்கந்தோரில் என்னை அடக்குவதாகச் சபதம் செய்து சென்மேரீஸ் பாடசாலைக்கு வருகிறார். இதற்கிடை யில் கல்விக்கந்தோர் கிளாக்கர் திரு. அந்தோனி பெர் னாண்டோ செய்தியை எனக்கு அறிவித்துவிட்டார். நான் 7ம் வகுப்புக்கு இலக்கியம் படிப்பித்துக்கொண்டிருக்கிறேன். வந் தவர் என்னைக் குறிப்பாகப் பார்த்துவிட்டுப் பக்கத்தில் இருந்த எஸ். எஸ் ஸீ. வகுப்பில் போய் ஏதோ கதைத்துக் கொண்டு என்னையே கவனித்துக்கொண்டிருக்கிறார்.

நான் விளங்கப்படுத்திக்கொண்டிருந்த பாட்டை நிறுத்தி விட்டு 'பிறை நுதல்' என்னும் சொற்தொடரை விளக்கத் தொடங்கினேன். கரும்பலகையில் இளம் பெண்ணின் முகத்தை அழகாகக் கீறி, பிறைநுதலை விளக்கி, பருவத்தே பயிர் செய்யாவிடின், அதாவது குறிப்பிட்ட இளம் வயதிலே விவாகம் செய்யாவிடின் முகத்திலுள்ள தாடை எலும்புகள் பருத்து வட்டமுகம் சதுரவடிவாகவும் மாறிவிடும். அப்போது பிறைநுதலும் மாறுபடும். (அப்போது இவருக்கு வயது 35க்கு மேல் இருக்கும்) இதனால்தான் "குமர் முற்றிக் குரங்காகும்" என்னும் பழமொழியும் வழக்கில் வந்தது என விளக்கிக் கொண்டிருக்கும்போது எனது வகுப்பிற்குள் வந்தார்.

என்ன பாடம் எனக் கேட்க நான் இலக்கியம் என்றேன். முன் ஆசனத்தில் 3 மாணவர் இருந்தனர். ஒரு பாட்டை எடுத்துக்கொடுத்து மூவரையும் படிக்கச்சொன்னார். அவர்கள் படியாமல் சும்மா நின்றனர் இவர்களுக்குப் பாடத்தெரியாதா எனக் கேட்டார் நான், மடத்தனமாக மூவரையும் படிக்கச் சொன்னதால் அவர்கள் புத்தியாகப் படியாமல் இருக்கின்றார் கள் என்றேன். நான் சொன்னது தனக்கு விளங்கவில்லை என்றார். அதற்கு நான் ஒரே மண்டபத்தில் 10 வகுப்புக்கள் இருக்கும்போது இந்த மூன்றுபேரும் வாயைத் திறந்தால் எப் படியிருக்கும். பாடசாலையே நடைபெறாது என்பது அவர் களுக்குத் தெரியும் என்றேன்.

ஒரு பையனைச் சுட்டிக்காட்டி, நீர் படியும் என்றார். அப் பையனின் பெயர் முத்துலிங்கம். யாழ்ப்பாணத்துப் பையன்.

அந்த வகுப்பில் திறமாகப் பாடக்கூடியவன் அவன்தான். (அப்போது நான் யாழ்ப்பாண சங்கீத சபையாரால் வாய்ப் பாட்டில் உயர்தரப் பத்திரம் பெற்று, மட்/ஆனைப்பந்தி பாடசாலை மண்டபத்தில் ஹம்சத்துவனி வருணனையும், சிங் கார லகாரி, விநதா என்னும் தியாகராஜ கீர்த்தனைகளும் சினிமாப் பாடல்களும் சேர்த்து, சங்கீதக்கச்சேரி ஒன்று வைத்த காலம். பாடசாலையிலும் 10 இராகங்கள்வரை நன்கு பாடக் கூடியதாகப் பழக்கியிருந்தேன்.) மாணவன் கேதாரகௌள இராகத்தில் பாடினான். பாடசாலையில் ஊசி விழுந்தாலும் கேட்கும் அமைதி.

நீங்கள் 'ஆடகப்பைம்பொன்' என்ற சொற்தொடருக்கு ஆடகம் என்பதற்கு ஆடிக்கொண்டிருக்கும் எனக் கூறினீர்கள். ஆடகம் என்பது பொன் எனத் தேவாரத்தில் கூறப்பட்டிருக் கிறதே என்றார். நான் அதற்கு, ஒரு சொல்லுக்குப் பல பொருட்கள் உண்டு. இந்த இடத்தில் ஆடகம் என்பதற்கும் பொன் என்றால் பைம் பொன்னுக்கும் பொன் என்ற கருத்து. இது தங்கப்பொன் என்றும் வந்துவிடும் (இது அவரின் பெயர்).

''இங்கு அகராதி இருக்கிறதா?'' எனக் கேட்டார். அதற்கு நான் ''அகராதி பார்த்துப் படிப்பிக்கும் பழக்கம் எனக்கில்லை'' எனக் கூறினேன். பாடசாலை முடிவுற்ற மணி அடித்தது. நான் அவரை வகுப்பில் விட்டுவிட்டு வெளி யேறி வீட்டிற்குச் சென்றுவிட்டேன்.

12-15க்கு படிப்பதற்காகப் பிலிப் விறதரின் அறைக்குச் சென்று நடந்தவைகளைச் சொல்லிச் சிரித்துக்கொண்டிருக்கும் போது, பாடசாலைப் பையன் ஒருவர் வந்து ''சோதனைகார அம்மா உங்களை வரட்டாம்'' எனச் சொல்லிவிட்டுச் சென் றான். விறதர் என்னிடம் ''மிருதியையும் பார்'' எனச் சொல்லி அனுப்பினார். தலைமை ஆசிரியர் அந்தோனிப் பிள்ளை விறதரையும் சாப்பிடப் போகவிடாது வைத்துக் கதைத்துக்கொண்டிருந்தார்.

நான் போய் அவருக்குப் பக்கத்தில் இருந்த கதிரையில் அமர்ந்தேன். ''நீங்கள் ஏன் நான் கூப்பிடும் கூட்டங்களுக்கு வருவதில்லை?'' எனக் கேட்டார். ''அதில் எவ்வித பயனு மில்லை. அதனால்தான் நான் வருவதில்லை'' என்றேன். ''ஒருவித பயனும் இல்லையா?'' என்று திரும்பவும் கேட்டார். நான் ''எனக்கு எவ்வித பயனும் இல்லை. உங்களுக்கு டயறி எழுதுவதற்குப் பயன்படும்'' எனக் கூறினேன். ''எப்படி யானால் உங்களுக்குப் பயன்படும்?'' எனக் கேட்டார். நான்

"கொன்ரூர் மாப் (Contour Map), சமஉயரக்கோடு லொகா ரதம் (Logarithms) இவைகளைப் படிப்பித்துக்காட்டினால் பயன் பெறலாம். மன்னியுங்கள்; எனக்கு வேறு வேலைகள் இருக்கின்றது" என்று சொல்லி நான் படிக்கப் போய்விட் டேன்.

மறுநாள் கல்விக்கந்தோரில் நேற்று என்ன நடந்தது என விசாரித்தபோது இம்முறை சரிவரவில்லை, இன்னுமொரு முறை பார்ப்போம் எனச் சொல்லி மழுப்பினாராம்.

வேறொரு கூட்டத்தில் நானும் இருந்தேன். இதே வித் தியாதரிசி சொல்கிறார்: "ஆங்கிலப் பாடசாலைகள் எவ்வ ளவோ ஒழுங்காக நடைபெறுகின்றன. தமிழ்ப் பாடசாலைகள் ஆட்டுப்பட்டி மாட்டுப்பட்டிபோல ஒரு ஒழுங்குமில்லை முறையுமில்லை. எல்லோரும் பட்டி ஆடுகள்போலப் பேசாமல் இருக்கிறார்கள்."

நான் பேசத்தொடங்கினேன். "நீங்கள் எந்த ஆங்கிலப் பாடசாலைக்குள் வகுப்பு வகுப்பாகச் சென்றிருக்கின்றீர்கள்? அதிபருடன் கதைத்துவிட்டுத் திரும்பிவிடுகிறீர்கள் வருடாந் தப் பரீட்சையன்று மட்டும் பல வித்தியாதரிசிகள் படை யெடுத்துச் செல்கிறீர்கள் எந்தத் தமிழ்ப் பாடசாலையில் தனித்தனி வகுப்பறையுண்டு? பாடசாலையே மாட்டுப்பட்டி போலத்தான். கிராமப் பக்கத்திலேயுள்ள ஒரு தமிழ்ப் பாட சாலைக்கு நீங்கள் சென்றுவிட்டால், ஒரு பெண்புரசு எவ்வ ளவோ கஷ்டப்பட்டு இந்த இடத்துக்கு வந்து சேர்ந்திருக்கின் றார் என்று, இளநீரையோ, சோடாவையோ கொடுக்கப் பார்க்கிறார்கள். இது மட்டக்களப்பாரின் விருந்தோம்பல் பழக்கம். நீங்கள், அவர்கள் உங்களுக்குப் பயந்து பந்தம் பிடிக்கிறார்கள் என்று நினைக்கிறீர்கள். செஞ்சினால் மிஞ்சுவது தான் மேலதிகாரிகளின் பண்பு, இதை எப்படி மாற்றலாம்."

இடையில் ஒரு முதிய ஆசிரியர் எழுந்து (தான் நல்லவன் என்று பெயரெடுக்க) "தம்பி, நீங்கள் மிகக் கடுமையாகப் பேசுகிறீர்கள்" என்றார். நான் அவரிடம், "பண்பாடு தெரி யாத ஆசிரியரே! உங்களுக்குக் கூட்ட ஒழுங்குமுறை தெரியுமா? ஒருவர் பேசிக்கொண்டிருக்கும்போது இடையிற் குழப்புவது முறையீனம் என்பது தெரியாதா? வித்தியாதரிசியின் சார்பா கப் பேசினால் ஏதும் நன்மை பெறலாம் என்று நினைக்கிறீர் களா?" எனக் கேட்டேன்.

இவரது கூட்டங்களுக்குப் பலமுறை சென்று எதிர்த்தே பேசினேன். அவரால் ஒன்றும் செய்யமுடியவில்லை. என்னை

மறந்தேவிட்டார். தெய்வாதீனமாக, திரு. V. நல்லையா அவர்களை எப்படியோ மணம்புரிந்து கொழும்பு சென்றார்.

திரு. S. U. சோமசேகரம் கல்விப்பணிப்பாளராக இருந்த போது ஒரு கூட்டத்துக்கு, புனித மிக்கேல் ஆங்கிலப் பாட சாலை ஆசிரியர்களாக இருந்த காலஞ்சென்ற திரு. எற்வேட் சீமாம்பிள்ளை, திரு. A. F. ஞானப்பிரகாசம் இருவருடன் நானும் சென்றேன். பணிப்பாளர் கூறுகிறார்: ''இனிமேல் பாடசாலைத் தோட்டம் முக்கிய இடம்பெறும். தோட்டம் நன்றாக இருந்தாற்தான் வேலை திருப்தி என ஆசிரியர் களுக்குப் பதிவு கிடைக்கும்'' என்றார்.

நான் அவரிடம், ''தோட்டம் செய்வதில் பிரச்சினை இல்லை. எல்லா இடங்களிலும் கடியன் எறும்புகள் அதிகம். அதை இல்லாமற் செய்ய வழிவகைகளைச் செய்துதருதல் மிக முக்கியம்'' என்றேன். அதற்கு அவர் சொன்ன பதில்: ''அது எங்களால் முடியாது. கடவுளிடம்தான் கேட்கவேண்டும்.''

''நாங்கள் மூவரும் கடவுளிடம் போய்க் கேட்டுக்கொண்டு வருகிறோம்'' எனக் கூறிவிட்டுக் கூட்டத்தில் இருந்தும் வெளி யேறினோம்.

# 18. சிறுமைகண்டு பொங்குவாய்

நான் மட்டக்களப்புப் பட்டின வட்டார ஆசிரிய சங்கத் தலைவராக இருந்தபோது மேலதிகாரிகளின் அநியாயங்களை அறிந்துகொள்வது வழக்கம். ஒரு வித்தியாதரிசியைப்பற்றி மிகவும் மோசமான குற்றச்சாட்டுக்கள் சேர்ந்தன. ஒருநாள் அவரது வீட்டுக்குச்சென்று "முறையீனமாக நடந்துகொள் கின்றீர்கள். இனிமேலாவது அவைகளைச் செய்யாமல் விட வேண்டும்" என்று சொன்னவுடன் அவர் இதே வசனங்களைக் கேட்டார்.

"அப்படிச் செய்தால் நீ என்னடா செய்வாய்?"

நான் சொன்ன சொற்கள்: "உன்னை ஊருக்கு அனுப்பு வேன்!"

அவர் "ஏலுமெண்டா செய் பாப்பம்."

இவர்பேரில் கூறப்பட்ட குற்றச்சாட்டுகள் 10 வரையில் எழுதி விளக்கம் வைக்கும்படி கல்விக்கந்தோரில் கொடுத்தேன்.

மறுநாள் கல்விப்பணிப்பாளர் என்னை அழைத்து (இவர் என் திறமையை மதித்தவர்) "மிஸ்ரர் பிரான்சிஸ், உனக்கு நான் சொல்லக்கூடிய புத்திமதி நெருப்புக்கொள்ளியை எடுத் துத் தலையைச் சொறியவேண்டாம். அவன் மிகவும் பொல் லாதவன். அவனுடைய காரைக் கட்டையில் ஏற்றிவைத்து விட்டு ஒவ்வொரு மாதமும் (Traveling Claim) பிரயாணச் செலவு போட்டு அனுப்புவான். ஒவ்வொரு மாதமும் நான் தான் அதைப் பாஸ்பண்ணி காசைக் கொடுக்கச்சொல்கிறேன். ஏன் வீண் கரைச்சல் என்ற எண்ணத்தால் – தற்செயலாக இதில் நீர் தோற்றால் ஒரு லெட்சம் ரூபா மானநஷ்டத்துக்கு

வழக்கெடுப்பான். வேலையில் நின்று உன்னை நீக்கிவிடவும் நடவடிக்கை எடுப்பான். அதனால் இதை விட்டுவிடு'' என்றார். பிலிப் விறதருக்குக் கொடுத்த வாக்கு கண்முன்னே தெரிந்தது.

நான் ஆசிரியர் சங்கத் தலைவர் என்ற முறையில் இதற்கொரு வழிதேடுவது எனது கடமை. எனவே, என்னை மன்னியுங்கள். விளக்கத்தை நடத்தி நல்ல முடிவைத் தாருங்கள் என்றேன். அங்கு சிங்கள பெரும்பாக வித்தியாதரிசியாகக் கடமையாற்றிய திரு. குணரெட்ணா என்பவரை அழைத்து இதைக் கொடுத்தார். பாஷைப்படுத்துவதற்குத் தனிப்பட்ட ஒரு உத்தியோகத்தரும் தெரிவுசெய்யப்பட்டார்.

முதலாம் குற்றச்சாட்டு:

ஆசிரிய கலாசாலை இறுதிப் பரீட்சை எழுதிக்கொண்டிருந்த ஒரு கன்னிப்பெண்ணிடம் ''உன்ர அப்பன் எனக்கு மடுத்தோண்டிப் போட்டாண்டீ'' என்று சொன்னதால் அப்பிள்ளை அப்பாடத்தில் சித்தியடையாமற் போனது.

ஒரு கிழமையின்பின் விளக்கம் நடந்தபோது வெளியான உண்மைகள்.

தலைமை ஆசிரியராகக் கடமையாற்றியவர் கணபதிப்பிள்ளை. அவரது பாடசாலையில் சில சாமான்களைப் பழுது என்று எழுதிவிட்டுப் போகும்போது மேசை மணிக்கூட்டை எடுத்துத் தனது பைக்குள் வைத்துச் சென்றுவிட்டார். இதைத் தலைமை ஆசிரியர் கல்விப் பணிமனைக்கு அறிவித்தார். அதற்கான விளக்கத் திகதி வித்தியாதரிசிக்கு அறிவிக்கப்பட்டது. இது மகளுக்குத் தெரியாது. இதனால்தான் ''உன் அப்பன் எனக்குக் குழிதோண்டிவிட்டாண்டீ'' எனக் கூறியது.

மகள் இது என்ன என்று தெரியாமல் மனம் பதட்டமடைந்ததால் விடை எழுதமுடியாமல் போய்விட்டது. அவளது சீவியமே பாழடைந்தது. தகப்பனும் மகளும் சரியான விளக்கம் கொடுத்து நடந்ததை உள்ளபடியே கூறிவிட்டனர். இக்குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டாயிற்று.

இரண்டாவது குற்றச்சாட்டு:

ஒரு பகிரங்கப் பரீட்சைக்கு இவர் தலைமைதாங்குகிறார். கடதாசி விநியோகத்துக்கு இருவர். ஒரு ஆணும் ஒரு பெண்ணும். இந்தப் பெண் ஆசிரியை ஏதோ எடுப்பதற்கு அறைக்குள் போக இவரும் பின்னால் சென்று சோராமாரி செய்ய ஆரம்பித்துவிட்டார். அதே ஆசிரியை நேரடியாக உண்மையைக் கூறிவிட்டார். இதுவும் நிரூபிக்கப்பட்டாயிற்று.

மூன்றாவது குற்றச்சாட்டு:

இரண்டாந்தர ஆசிரிய தராதரப் பத்திரம் முதலாம் தரத்துக்கு 5 வருட சேவையின்பின் உயர்த்தப்படும். அதற்கு வித்தியாதரிசி சிபார்சு செய்யவேண்டும். இதற்காகச் சிபார்சு தேவைப்பட்ட ஆசிரியர்களிடத்தில் 50 ரூபா வீதம் வாங்கியிருந்தார். பரீட்சைத் தினத்துக்கு முந்திய நாள் இதை வாங்குவது இவரது வழக்கம். இரு ஆசிரியர்கள் தங்களிடம் பணம் கேட்டு நாங்கள் கொடுத்தோம் என்பதைக் கூறிவிட்டனர். இதுவும் நிரூபிக்கப்பட்டாயிற்று.

நான்காவது குற்றச்சாட்டு:

பன்குடாவெளி கூட்டுறவுக் கடையில் 10 யார் சீலையை வாங்கிவிட்டு பொருளாளராக இருந்த ஆசிரியரிடம் நீ அந்தப் பணத்தைக் கொடு என வற்புறுத்தியிருந்தார். இதையும் அந்த ஆசிரியர் நேரிலே கூறிவிட்டார்.

ஐந்தாவது குற்றச்சாட்டு:

இவரிடம் ஏதும் அலுவலாகப் போகும் ஆசிரியர்களிடம் ஒரு சோற்றுப்பார்சல் வாங்கிக்கொண்டுவா எனச் சொல்லிவிட்டு, பணம் கொடுப்பதில்லை. அப்படியான 10 ஆசிரியர்களின் பெயர்களைக் குறிப்பிட்டிருந்தேன். இருவரைக் கூப்பிட்டு விசாரித்தபோது அவர்களும் ஏற்றுக்கொண்டனர்.

ஆறாவது குற்றச்சாட்டு:

அக்கரைப்பற்றில் இவருக்குச் சொந்தமான இரண்டொரு கடைகள் இருந்தன. பொருளாதாரத்தில் சிறந்த ஆசிரியரிடம் ஒரு கடையை எழுதித்தருவதாகக் கூறி ரூ 50, 100 எனப் பணம் வாங்கிக்கொண்டு ஏமாற்றிவிட்டார். இதையும் அந்த ஆசிரியர் நேரே கூறிவிட்டார்.

இத்துடன் விசாரணையை முடித்துக்கொண்டனர்.

கல்விப்பணிப்பாளர் என்னை அழைத்து "Mr பிரான்சிஸ் நீர் வென்றுவிட்டீர், எங்களுக்கும் கொஞ்சம் தலையிடி குறையும்" எனக் கூறிவிட்டு வித்தியாதரிசியைக் கூப்பிட்டு "உனக்கும் வயது வந்துவிட்டது. ஓய்வுபெறுவதாகக் கடிதம் எழுதித்தாரும், இல்லாவிடில் நாளைக்கு உம்மை வேலையில் நின்று நீக்கும்படி தலைமைக் காரியாலயத்துக்கு அறிவிப்பேன்" எனக் கூறினார். யோசித்துச் சொல்கிறேன் எனச் சென்று மறுநாள் ஓய்வுக்கடிதத்தைக் கொடுத்துவிட்டார். மேலதிகாரிகள் ஓரளவு அடங்கினர். பிலிப விறதருக்குக் கொடுத்த வாக்கும் நிறைவேறியது.

தொப்பிக்குள் மூளை :

யாழ்நகரில் இருந்து பிரித்துக்கொண்டுவந்த கூட்டுறவுச் சமாசத்தை மட்/ மாடிவீட்டுத் தெருவில் இருந்த திருமதி அருளம்மா காசிநாதர் அவர்களின் வீட்டை வாடகைக்கு எடுத்து நடத்தினோம்.

ஒருநாள் நடராசா என்னும் கூட்டுறவுப் பரிசோதகர் வந்தார் இவர் சுமார் 30 வயதுடைய அழகான பிரமச்சாரி. எனது காரியாலயத்துள் வந்தும் தலையில் இருந்த தொப்பியைக் கழற்றாமலே அரை மணித்தியாலமாகக் கணக்குகளைப் பார்க்கிறார். பின்பு ஒவ்வொரு அறையாகச் சென்று மேற்பார்வையிட்டுக் கூப்பன் ஒட்டிக்கொண்டிருந்த கிளாக்கரின் அறைக்குட் சென்றும் 30 நிமிடம் செலவு செய்தார். மொத்தமாக ஒரு மணித்தியாலம் செலவிட்டுவிட்டுப் போய்விட்டார்.

நாங்கள் எல்லோரும் ஏன் இவர் தொப்பியைக் கழற்றி வைக்கவில்லை. வாசலிலேயே தொப்பி, மழைக்கோட் இவைகளைக் கொழுவ ஸ்ராண்ட் ஒன்றும் இருக்கிறது. அப்போது ஒருவர் சொன்னார் ''சிலர் சில நல்ல சாமான்களைத் தொப்பிக்குள்ளும் வைத்திருப்பது வழக்கம். அப்படியாக இவர் ஏதும் வைத்திருக்கக்கூடும்.''

ஒரு மணித்தியாலத்தின்பின் திரும்பிவந்து, எனது தொப்பியை இங்கேதான் விட்டுவிட்டேன். யாரும் எடுத்தீர்களோ எனக் கேட்டார். நாங்கள் ஒவ்வொரு அறையாகக் காட்டி அதற்குள் இருந்ததைக் கண்டோம் எனச் சொல்லி அவரை இங்கும் அங்குமாக அலைத்தபிறகு நான் சொன்னேன், உமக்கு என்ன தலையாலே காற்றுப் போகிறதா, தலையைத் தடவிப் பார் என்று.

எனக்கு உடனே 7ம் ஆண்டு ஆங்கிலப் புத்தகத்தில் உள்ள படமும் வசனங்களும் ஞாபகத்துக்கு வந்தன. Where are my glasses? Oh, Here they Are. (இதற்குரிய படம் வேறொரு இடத்தில்). அவரும் தலையைத் தடவிப்பார்த்துத் தொப்பியை எடுக்காமல் சென்றுவிட்டார்.

அடுத்த தெருவில் வைத்தியசாலை வீதி - அப்போதிக்கரி சிதம்பரப்பிள்ளை என்பவர் இருந்தார். எல்லோரோடும் எரிந்துவிழுவதால் "புகையன்" என்ற சிறப்புப்பெயர் பெற்றவர். இவரது இரு பெண் மக்களும் விவாகத்துக்காகக் காத்திருக்கின்றனர். மூத்த மகளைக் கத்தோலிக்க சமயத்துக்கு மாற்றி கொழும்பில் உள்ள பெரிய உத்தியோகத்தர் ஒருவர் இரண்டாந்தாரமாகக் கொழும்புக்குக் கொண்டுபோய்விட்டார்.

ஒருநாள் தொப்பிக்காரன் சிதம்பரப்பிள்ளை அவர்களை அணுகி மற்றப் பெண்ணுக்கு யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு நல்ல உத்தியோகத்தருக்கு விவாகம் பேசினார். சீதனமும் குறிப்பிட்டாயிற்று. அழைப்பிதழ்களும் அனுப்பியாயிற்று. தாலி கட்டும் சடங்கு குறிப்பிட்ட நாள் அன்று இரவு 7.30க்கும், 8 மணிக்குமிடையில் வீட்டிலேயே நடக்கும். மாலை 6 மணியாகியும் மாப்பிள்ளை யாழ்ப்பாணம் இருந்து வரவில்லை.

தொப்பிக்காரன், சிதம்பரப்பிள்ளை அவர்களிடம் இன்னும் மாப்பிள்ளை வரவில்லை. இதற்குப்பிறகு அவர் வருவார் என்று எதிர்பார்க்கவும் முடியாது. என்ன செய்யலாம் எனக் கேட்டார். பெண் வீட்டாருக்கும் என்ன செய்வதென்றே தெரியவில்லை எனக் கலங்குகின்றனர்.

தொப்பிக்காரன் தனது மூளையை உபயோகிக்கின்றார். கடைசியில் கூறுகிறார். முழுப் பிழையும் என்னிலேதான். சும்மா இந்த பிள்ளையின் மானத்தைக்கூடக் குறைக்கவேண்டியதாயிற்று. உங்களுக்குச் சம்மதமாயின், எனது பெயரும் நடராசாதான். நான் ஒழுங்குசெய்த மாப்பிள்ளையின் பெயரும் நடராசாதான். ஆதலால் நானே தாலியைக் கட்டுகிறேன் என்றார். வேறு வழியின்றி ஒத்துக்கொண்டார்கள். அழைக்கப் பட்டவர்களும் வரத்தொடங்கினர். நாங்களும் சமுகங் கொடுத்திருந்தோம்.

குறிப்பிட்ட நேரத்துக்கு 15 நிமி. முன் மாப்பிள்ளை தொப்பிக்குப் பதிலாகத் தலைப்பாகையுடன் மாப்பிள்ளைத் தோழருடன் தனது தகப்பனையும் உடனேயே கொண்டுவந்திருந்தார். ஒருலெட்சம் ரூபா பணம், 25 ஏக்கர் வயல், அவர்கள் குடியிருந்த பெரிய வீடும் வளவும் ஒப்படைக்கப் பட்டன சீதனமாக.

இவரது மூளையின் விசித்திரம், முதல் நாளே தகப்பனை யாழ்ப்பாணம் இருந்து வரவழைத்திருந்தார். விவாகம் சிறப்பாக நிறைவெய்தியது. சமாச உத்தியோகத்தர்கள், இவரது தொப்பிக்குள் இருந்த மூளையைப் பாதுகாக்க இரும்பாலான கெல்மற் (Helmet)தான் தேவை எனச் சிரித்துக்கொண்டிருந்தனர்.

# 19. எங்கள் கடை ஆரம்பிக்கப்பட்ட வரலாறு

அறுபதுகளில் ஒரு சனிக்கிழமை. மட்டுநகர்ச் சந்தையில் சில சாமான்களை வாங்கிக்கொண்டு உருளைக்கிழங்கு வாங்குவோமென்று அங்கிருந்த சிங்களவரின் கடைக்குப் போனேன். ஒரு இறாத்தல் கிழங்கு என்ன விலை எனக் கேட்க, 5 ரூபா என்றார். நான் சொன்னேன் கட்டுப்பாட்டு விலை ஒரு ரூபா இருபத்தைந்து சதந்தானே என்று. ''விருப்பமெண்டால் எடுடா இல்லாட்டாப் போடா அங்கால'' எனப் பெரிய றாங்கியாகச் சொன்னான்.

அவமானத்தால் கூனிக் குறுகிப்போனேன். வியர்த்து, வேட்டி உடலோடு ஒட்டிவிட்டது. வீட்டில் சாமான்களைக் கொடுத்துவிட்டு, அந்தக் கடையை அதில் இல்லாமல் செய்ய என்ன செய்யலாம். சந்தைக்குள் இருப்பதால் வியாபாரம் கூடுதலாக நடைபெறுகிறது. ஒவ்வொருநாளும் பி. ப. 6 மணியுடன், வெள்ளிக்கிழமை பிற்பகல், ஞாயிறு முழுவதும், கடை பூட்டும் சாப்புச்சட்டம் சந்தைக்குள் செல்லுபடி ஆகாது.

திரு. K. V. M. சுப்பிரமணியம் ஒரு பங்கு ஆயிரம் ரூபாவுக்கு அங்கத்தவர்களைச் சேர்த்து, கம்பனியாகப் பதிந்து, பிரதான வீதியில் ஜெற்றிக்குப் பின்புறம் ''மக்கள் கடை'' யைத் தொடங்கி தமிழ் மக்களின் உணவுப்பொருட் பிரச்சினையை ஓரளவுக்கு நிவிர்த்தியாக்கிக்கொண்டிருக்கிறார். அப்படியானதொன்றை நான் தொடங்க நினைத்தால் முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்டதுபோலத்தான் இருக்கும் என்றெல்லாம் மூளை சும்மா விடுகிறதாயில்லை.

புறப்பட்டு புறக்டர் பூபாலரெட்ணம், ஆச்சிபோல்ட் அழகையா, அட்வகேட் தவராசா இன்னும் பலருடன் கதைத்

தேன். எல்லாரும் 'வெறுங்கை முழமிடுமா' என்ற பாவனையில் பேசினாலும், ஏதோ நான் ஏதும் தொடங்கினால் அவர்கள் பின்னால் வருவதாக வாக்களித்தனர். அன்றிரவு நித்திரையுமில்லை. ஒரு முடிவுக்கு வந்தேன்.

மறுநாட்காலை அச்சுக்கூடம் சென்று குறிப்பிட்ட மூலதனம் ரூபா முப்பதாயிரம் (30,000), மூவாயிரம் (3000) பங்குகள் பங்கு ஒன்றின் விலை ரூபா 10 எனச் சிறிய நோட்டிஸ் ஒன்றும் பற்றுச்சீட்டு ஆயிரமும் (1000) அச்சிடக்கொடுத்தேன். மூன்று நாட்களில் அவற்றை எடுத்துக்கொண்டு வஸ் கொம்பனி, சில கந்தோர்கள், சிநேகிதர்களிடம் விநியோகம் செய்து மாதம் முடிய வருகிறேன் எனச் சொன்னேன்.

மாதம் முடிவில் 70 பேர் மாத்திரம் 70 பங்குகள் வாங்கியிருந்தனர். (இது உருப்பட்டாலும் உருப்படாவிட்டாலும் 10 ரூபாதானே என்ற எண்ணம்.) 700 ரூபாவையும் எடுத்துக்கொண்டு ஞானசூரியம் சதுக்கம் 22ம் இல. வீட்டில் குடியிருக்கும் நகரசபை வேலைப் பரிசோதகர் (Works Inspector) திரு. செல்லத்துரையிடம் போய் என் மனநிலையை நன்கு விளக்கினேன். அவரும் தமிழ்ப்பித்தன். எவ்வளவு காசு இருக்கிறது எனக் கேட்டார். நான் தயங்கியபடி எழுநூறு ரூபா (700/-) என்றேன்.

அப்போது நகரசபைத் தலைவராக இருந்த காலஞ்சென்ற திரு. A. S. T. கனகசபை அவர்களிடம் சென்று 30 அடிச் சதுரத்தில் ஒரு துண்டு நிலத்தை வாடகைக்கு எடுக்கும்படி சொன்னார். அப்படியே செய்தேன். அதற்கிடையில் நான் இன்னும் 300 ரூபாவுக்கு 30 பங்குகளை விற்றேன். ஒரு ஆயிரம் முதலாக இருக்கிறது.

திரு. செல்லத்துரை அவர்களின் துணிவு: சம்பளம் கொடுக்கக் காசை மாத்திரம் ஆயத்தம் பண்ணிக்கொள்ளுங்கள். சாமான்களைத் தான் பார்க்கிறேன் என்று என்னிடம் சொல்லிவிட்டு நகரசபைக் கொந்தறத்துக்காரர் மாட்டீன் முதலாளியிடம் சொல்லி, அத்திவாரத்துக்குக் கருங்கல், மண், சுண்ணாம்பு எல்லாம் பறிபடுகிறது. கூலியாட்கள் அத்திவாரம் வெட்டுகின்றனர். கடை உருவாகத்தான்போகிறது என்ற எண்ணத்துடன் தமிழ் உணர்வும் அரும்புவிடத் தொடங்கிற்று.

ஒரு கிழமைக்குள் என்னைத் தேடிவந்த காலஞ்சென்ற கொண்றாக்ரர் திரு. பாக்கியராசா ஆயிரம் ரூபா (நூறு பங்கு), திரு. சிவகணேசன் 500 ரூபா (50 பங்கு), திரு. ஆச்சிபோல்ட் அழகையா 500 ரூபா (50 பங்கு) இப்படியாகப் பத்தாயிரம்

ரூபா வரையில் சேர்ந்தது. கடையும் கட்டியாயிற்று. சாமான்கள் வைக்கச் சில கண்ணாடி அலுமாரிகளும், றாக்கைகளும் வைத்தாயிற்று. இனி சாமான்களை வாங்கி அடுக்கவேண்டியது தான் பாக்கி. கையில் இரண்டாயிரம் ரூபா (2000/-) மாத்திரம் இருக்கிறது.

இலங்கை வங்கி மட்டக்களப்புக் கிளை மனேஜர் திரு. நடராசா. இவரும் ''தமிழன் என்றால் தலை நிமிர்ந்து நில்'' என்னும் கொள்கையுடையவர். அவரோடு கதைத்து அவரின் ஆலோசனைப்படி ''எங்கள் கடை'' என்ற பெயரில் வங்கிக் கணக்கு ஒன்றை ஆரம்பித்தேன். கணக்கு இல. 1275. (இன்றைய எனது கணக்கு இல. 10474).

கொழும்பில் இருந்து வானில் (Van) இங்கு கொண்டு வரும் சாப்பாட்டுச் சாமான்களை அதிகமாக வாங்குங்கள். உதாரணமாக மீன், இறைச்சி, மீன்சினை போன்றவைகள். ஏனெனில் சந்தையில் மீன் தட்டுப்பாடானபோது எங்கள் கடைக்குத்தான் வருவார்கள். முதலில் பத்தாயிரம் ரூபா வரையில் சாமான்களை வாங்கிக்கொண்டு 15 நாட்களுக்குப் பிந்தியே திகதியிட்டுச் செக்கைக் கொடுங்கள். அதற்கிடையில் அரைவாசிச் சாமான்கள் விலைப்பட்டுப்போகும். அக்காசை நாளாந்தம் வங்கியில் போடுங்கள். கொழும்பில் இருந்து செக் வந்தால் உங்களுக்கு உடனே அறிவிப்பேன். அடுத்த நாள் குறைவடையும் தொகையைப் போட்டுவிடுங்கள் எனப் புத்திமதியும் கூறினார்.

அப்போது மொத்த வியாபாரி என, கொழும்பில் இருந்து சாமான்களை இறக்குமதி செய்வது சொளுக்கார் என்னும் முஸ்லிம் முதலாளி மாத்திரம். ''நாவியா ஸ்ரோர்'' என்று இன்னுமொரு மொத்த வியாபார நிலையம் உருவாகிவருகிறது. அந்த முதலாளியோடு கதைத்துக் கையில் இருந்த இரண்டாயிரம் ரூபாவைக் கொடுத்துப் பத்தாயிரம் ரூபா வரையில் சாமான்களை வாங்கி அடுக்கினேன்.

கொழும்பில் இருந்து வந்த வானிலும் (Van) இருபதினாயிரம் ரூபாவுக்கு (20,000/-) செக்கைக் கொடுத்து வாங்கினேன். புறக்டர் பூபாலரெட்ணம் அவர்களிடம், ''நீங்கள்தான் 'Board of Director'. கூட்டத் தலைவராக இருக்கவேண்டும்'' என்றேன். சம்மதம் தெரிவித்ததுடன் ஒவ்வொரு திங்கட்கிழமையிலும் பத்தாயிரம் ரூபா தருவதாகவும், அப்பணம் ஞாயிறு பின்னேரம் திருப்பித் தரவேண்டும். ஒருதரம் பிழைத்தால் பிறகு தரவேமாட்டேன் என்றும் வாக்குறுதி தந்தார். அதை நான் கடைசிவரை சரிவரச் செய்தேன். பல தமிழ்ப்

பிரமுகர்கள் மத்தியில் நகரசபை முதல்வர் திரு. A. S. T. கனகசபை அவர்களால் திறந்துவைக்கப்பட்டது.

கடைச் சாமானின் பெறுமதி மூன்றுலெட்சம் வரை அதி கரித்தது. உப்பு, லாம்பெண்ணெய் இரண்டுக்கும் 'பேர்மிற்' கச்சேரியில் உணவுப்பொருள் ஆணையாளரிடம் பெறவேண் டும். இவருடன் திரு. ஆச்சிபோல்ட் அழகையா நெருங்கிய நண்பராக இருந்ததால் இவ்விடயம் மிக இலேசாகியது. மாதம் ஒன்றுக்கு 45 கலன் மண்ணெய்க்கும், 25 அந்தர் உப்புக் கும் பேர்மிட் கிடைத்தது. கிராமப்புறங்களில் இவ்விரு பொருட்களுக்கும்தான் தட்டுப்பாடு. அவர்கள் இவ்விரு பொருட்களுக்காகவும் நேரே எங்கள் கடைக்கே வந்துசேர்வர்.

அடுத்தபடியாக அவர்களுக்குத் தேவைப்பட்டது பனாட்டு. தட்டுப்பனாட்டு என்றால் விரும்பி வாங்குவார்கள். மற்றக் கடைகளில் ஒரு இறாத்தல் 5 சதத்துக்கு விற்பார்கள். நான் ஒரு இறாத்தல் பனாட்டு 4 சதம் என எழுதி ஒட்டிவிட்டேன்.

'எங்கள் கடை' என 10 அடி × 3 அடி தகரத்தில் எழுதி முகப்பில் பொருத்தப்பட்டது. புளியந்தீவுப் பாலத்தால் இறங்கி சந்தைப்பக்கம் திரும்பினால் உடனே இந்த அறி வித்தல் பலகை தெரியும். மனேஜராகக் காலஞ்சென்ற சின்னையா நடராசா என்பவரைத் தெரிவுசெய்தேன். நிதான மும், நேர்மையும், அனுபவமும் உள்ளவர். சிட்டை எழுது வதற்குக் கணபதிப்பிள்ளை என்பவர் (நான்கூட இவரைப் போல் கெதியாக எழுதவும் கூட்டவும் மாட்டேன்.)

விற்பனையாளர் இருவரில் இருந்து ஐவராகினர். ஞாயிற் றுக்கிழமை காலையில் நான் சிட்டை எழுத, கணபதிப்பிள்ளை யும் விற்பனையாளராகத் தொழிற்படுவார். சாதாரணமாக நாளொன்றுக்கு ஆயிரம் ரூபா வரையில், ஞாயிறு வாரத்தில் ஆயிரத்து ஐந்நூறு ரூபா வரையில் வியாபாரம் நடக்கும்.

நூற்றுக்கு நூறு நயம் தந்த பொருள் பனாட்டு. காலை யில் 30 ரூபாவுக்கு இரண்டு கூடை வாங்கினால் மாலையில் 60 ரூபாயாகும், கூடையும் வெறுமையாகும்.

மண்ணெண்ணெய் ஸ்ரோர் மட்/புகையிரத நிலையத்துக்கு அருகில் வார்றோட்டில் இருந்தது. இதன் மனேஜர் இராயப்பு என்னும் நேர்மையான ஒருவர். இவரிடமும் 5 பங்குகளை விற்று 50 ரூபா பெற்றுக்கொண்டேன். இவரும் எங்கள் கடைப் பங்காளியாகிவிட்டார். குறிப்பிட்ட திகதியில் வந்து எடுக் காத எண்ணெயும் எங்கள் கடைக்கே வந்துசேரும்.

கிராமப்புறங்களில் இருந்து வரும் பெண்கள் நாட்டுக் கோழி முட்டைகள் கொண்டுவந்து கொடுத்து, பணாட்டு வாங்குவதும் பழக்கமாயிற்று. நானும் கொக்கொட்டிச்சோலையில் இருந்து கோழி முட்டை கொண்டுவருவேன். மற்றக் கடைகளைப் பார்க்கிலும் குறைத்தே விற்றோம். (நாட்டுக் கோழி முட்டை.)

ஒருநாள் எங்கள் கடையில் லாம்பெண்ணெய் முடிந்து விட்டது. எங்கள் கடையில் நாட்டுப்பக்சமிருந்து வருபவர்கள் 3 போத்தல் லாம்பெண்ணெய் கேட்டால் 6 போத்தலைக் கொண்டுபோ. 7 இறாத்தல் உப்புக் கேட்டால் 14 இறாத்தல் கொண்டுபோ எனக் கொடுப்பார்கள்.

எங்கள் கடை உருவாகக் காரணகர்த்தாவாக இருந்த சிங்களக்கடையில் ஒரு போத்தல் ஒரு ரூபாவுக்கு விற்கத் தொடங்கினர். இந்தக் கடைக்குக் கொழும்பில் இருந்து வரும் லொறி இடையில் லாம்பெண்ணெயும் ஏற்றிக்கொண்டுவந்து கொடுக்கும் வழக்கம். கட்டுப்பாட்டு விலை ஒரு போத்தல் 24 சதம்.

எண்ணெய் ஸ்ரோர் மனேஜர் இராயப்புவிடம் ஓடினேன் ஏதும் வசதி இருக்கிறதா என அறிய. அவர் சொன்னார் மக்கள் கடைக்கு 45 கலனுக்கு பேர்மிற் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் எடுக்க வரவில்லை என்று. உடனே திரு. K. V. M. சுப்பிரமணியம் அவர்களின் வீட்டுக்குப் போனேன். (அப்போது நான் அவரின் மகளுக்குத் தமிழும் கணக்கும் படிப்பிப்பது.) மகள் சொன்னாள்: அப்பா மக்கள் கடைக் கூட்டத்துக்குச் சென்மேரிஸ் பாடசாலைக்குப் போயிருக்கிறார் என்று. அங்கு சென்றேன்.

என்னைக் கண்டதும் K. V. M. வருக வருக எங்கள் கடை என வரவேற்றார். விடயத்தைச் சொன்னேன். உடனே தனது மக்கள் கடை பேர்மிற்றுக்கு வந்த 45 கலனையும் எங்கள் கடைக்குக் கொடுக்கும்படி கடிதம் தந்தார் உடனே ஸ்ரோருக்குப்போய் இராயப்புவிடம் கடிதத்தைக் கொடுத்து, நான் வண்டில் அனுப்புவேன் எத்தனை மணி சென்றாலும் எண்ணெய்த் தகரத்தைக் கொடுத்துவிட்டுத்தான் ஸ்ரோர் பூட்டவேண்டும் என்று சொல்லி விட்டு, எங்கள் கடைக்குச் சாமான் ஏற்றும் சூசைப்பிள்ளையைத் தேடி, மோர்சாப்பிட்டி என்னும் இடத்துக்குச் சென்று அதை ஏற்றிவரும்படி சொன்னேன்.

பாடும்மீன் தெருவில் உள்ள ஒரு தச்சுக் கம்மாலைக்குச் சென்று (இவரும் எங்கள் கடைப் பங்காளி), ஒரு பெரிய

புறவெட்டு எடுத்து இரண்டாக அறுத்து கால் வட்டமாக, பெரியதகரம் வைக்கக்கூடியமாதிரி அறுத்து, ஒரு ஸ்ராண்ட் போல நாலு காலும் அடித்து எங்கள் கடைக்குக் கொண்டு வரும்படி சொல்லிவிட்டு, ஒரு காட்போட் மட்டையில் "ஒரு போத்தல் லாம்பெண்ணெய் 24 சதம். ஒருவருக்கு ஒரு போத்தல் மாத்திரம்'' என எழுதி, எங்கள் கடைக்கும், சிங்களக் கடைக்கும் நடுவில் பெரிய வாசலுக்கு நேரே ஒரு கம்பு நட்டு, மட்டையையும் ஒரு பெற்றோள்மக்ஸ் லாம்பையும் கொழுவினேன்.

ஸ்ரான்ட்டும் வந்தது. எண்ணெய்த் தகரமும் வந்து சேர்ந்தது. 270 பேர் கொண்ட கியூ வரிசையும் புளியந்தீவுப் பாலத்தைக் கடந்து தற்போதைய மணிக்கூட்டுக் கோபுரம் வரையும் நீண்டு நின்றது. முழு எண்ணெயும் முடிய இரவு 11 மணியாகியது. அடுத்த இரு நாட்களில் எங்கள் கடைக்கும் 45 கலனுக்கு பேர்மிட் வந்தது. மற்றக் கடையில் இருந்த எண்ணெய் அப்படியே கிடந்து காய்ந்துவிட்டது.

அந்தச் சிங்களக்கடை நகரசபைக்குச் சொந்தமான 10 கடைகளுள் ஒன்று. இதை ஒவ்வொரு ஆண்டும் குத்தகைக்கு எடுக்கவேண்டும். வருடாவருடம் கார்த்திகை மாதம் முடிவதற்கு முன் ரெண்டர் (Tender) போட்டு அனுப்புவது வழக்கம். அந்தக் கடையையும் ரெண்டர் போட்டு எடுத்து எங்கள் கடை "ஸ்ரேர் றூம்'' ஆக்க நினைத்து நகரசபையில் ஒருவரை ஒழுங்குபண்ணி வைத்தேன் ரெண்டர் கடிதங்கள் உடைப்பதற்கு முதல் நாள் இரகசியமாக அதைப் பார்த்து எனக்குச் சொல்லும்படி. அப்படி அவர் போட்டிருந்தால் அதைப் பார்க்கிலும் 100 ரூபா கூட்டிப் போட்டு எடுப்பதற்காக. அந்தக் கடைக்காரர் ரெண்டர் போடவில்லை, கிடந்த சாமான்களை ஏற்றிக்கொண்டு சொந்த ஊருக்கே சென்றுவிட்டார். திருமலை வீதியில், பொலிஸ் ஸ்ரேசனுக்குப் பக்கத்தில் இருந்த சர்னலிஸ் முதலாளியின் பிரபலியமான கடையும், வியாபாரம் இல்லாத காரணத்தால் பூட்டப்பட்டாயிற்று.

இக்கடையில் விற்பனையாளர்களாக எஸ். எஸ். ஸீ. சித்தியடைந்தவர்களையே அமர்த்தினேன். இதில் ஒருவர் சென்மேரிஸ் விடுதிச்சாலையில் இருந்து படித்தவர். இவரை எனது வீட்டிலேயே வைத்திருந்தேன். பிபிலைத் தேயிலைத் தோட்டத்தில் படிப்பிக்க, எஸ். எஸ். ஸீ. சித்தியடைந்த ஆசிரியர் ஒருவர் தேவை எனப் பத்திரிகையில் இருந்ததைக் கண்டு இவரை விண்ணப்பிக்கச் சொன்னேன். தெரிவு செய்யப்பட்டார். சில ஆண்டுகளின் பின் விவாகம் முடித்தால்தான் வேலையைத் தொடரலாம் எனத் தோட்டத்துரை கூறியதாக எனக்கு அறிவித்தார்.

அப்போது நான் வீச்சுக்கல்முனையில் ஆசிரியர். ஒவ்வொரு திங்கட்கிழமை காலையிலும் ஒரு கன்னிப் பெண்ணை வழியில் சந்திப்பேன். (இவர் வின்சன் மகளிர் கல்லூரி விடுதியின் மேற்பார்வையாளர்). அப்பிள்ளையின் ஞாபகம் வந்தது. விசாரித்தேன். பாடசாலைக்குப் பக்கத்து வீடுதான். ஒரு நாள் அவர்கள் வீட்டுக்குச் சென்று உங்கள் மகளுக்கு ஒரு விவாகம் முடித்துவைக்கட்டா எனக் கேட்ட உடனே தாயும் தகப்பனுமாகச் சேர்ந்து இப்போ வேணுமென்றாலும் கூட்டிக் கொண்டு போங்கள் எனச் சொன்னார்கள்.

விபிலைக்குக் கடிதம் எழுதினேன் உடனே வரும்படி. இரு நாட்களில் வந்ததும் பெண் வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு போய் இருவரையும் நேருக்குநேர் பார்க்கவைத்துச் சம்மதம் கேட்டு, மறுநாளே பதிவை வைத்துவிட்டு, பிரதியைக் கொண்டு மணமகன் பிபிலை சென்று துரையிடம் கொடுத்தார்.

அடுத்த மாதம் விவாகம் நடந்தது. பின்பு ஆசிரியர் கலாசாலை சென்று பயிற்றப்பட்ட ஆசிரியராகி, மட்டக்களப்புப் பகுதியில் தலைமை ஆசிரியராகியிருக்கும்போது நாய் கடித்ததால் சில வருடங்களின் பின் ஹைட்றபோவியா (Hydrophobia) வருத்தம் வந்து இறைபதம் அடைந்தார்.

இவரது ஒரு மகள் மணம் முடித்து இரு பிள்ளைகளுடனும் (வீச்சுக்கல்முனை சொந்த வீட்டில்), மகன் மணம் புரிந்து ஒரு பிள்ளையுடன் கொழும்பில் ஸ்ரீ கதிரேசன் (Travel Agency) றவல் ஏஜன்சியில் வேலை செய்கிறார். இவர்களால் எனக்கும் சில நன்மைகள் உண்டு.

இளைப்பாற்றி மொத்தத் தொகையாக வந்த 35 ஆயிரம் ரூபாவையும் வீச்சுக்கல்முனைக் கோவில் வளவில் grotto கெபி ஒன்று கட்டி உதவியுள்ளனர்.

எங்கள் கடை OUR STORE LTD, Market Square, Batticaloa எனப் பதியப்பட்டு 1961ம் ஆண்டு ஐப்பசி மாதம் 14ந் திகதியன்று டிறக்ரர் (Director) என திரு. C. S. பூபாலரெட்ணமும், (Secretary) செயலாளர் என நானும் ஒப்பமிட்டு கம்பனி முத்திரையுடன் பங்குதாரர்களுக்குப் பங்குப்பத்திரம் விநியோகிக்கப்பட்டது.

சந்தைக்குள் எங்கள் கடையை நடத்தியதால், சாமான் வாங்கவரும் மீன், மரக்கறி வியாபாரிகளுடனும் நெருங்கிய தொடர்புகொண்டேன்.

மீன்களை வெட்டும் முறை, கறிசமைக்கும் முறைகளையும் அறியக்கூடியதாக இருந்தது. (இதுபற்றிக் கடைசியில் தனித் தலைப்பில் உள்ளது.) ■

# 20. பாத்திமா வீதி, பாதயாத்திரைக் குழு

ஐம்பதுகளில் தாண்டவன்வெளியில் மரணச்சடங்கு ஒன்றுக்குச் சென்றிருந்தேன். இந்த வீடு சிறு ஒழுங்கைக்கு அருகில் இருந்தது. பிரேதப்பெட்டியைத் தூம்பையில் வைத்து நாலுபேர் தூக்கினர். வாசலால் போய் ஒழுங்கைக்குள் திரும்ப முடியவில்லை. வாசலில் இருந்த கம்புகளைப் பிடுங்கி ஒழுங்கைக்குள் திரும்பினாலும் இருபக்க வேலிகளும், தூம்பை தூக்கிச் சென்றவர்களைத் தடுத்துக்கொண்டே இருக்கின்றன. பிரதான வீதி திருமலை வீதி. நூறு யார் வரை சென்றுதான் பிரதான வீதியை அடையலாம் அவ்வளவு தூரத்துக்கும் ஒரு பக்க வேலியைப் பிரித்துவிட்டே நடந்துசென்றனர்.

இதைத் தெருவாக்கிவிட்டாலென்ன என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது. நகரசங்க உபதலைவர் எனது நண்பர் திரு. V. இளையதம்பி அவர்களைக் கூட்டிக்கொண்டு இடத்தைக் காட்டினேன. இருபக்கங்களிலும் இருந்த வீட்டுச் சொந்தக்காரருடன் கதைத்தோம். புதிதாக ஒரு தெரு இணைப்புப் போடுவதாயின் இரு பிரதான வீதிகளை இணைக்கவேண்டும் என்பது விதி. எனவே திருமலை வீதியில் இருந்து தொடங்கி டானாப்போல மடங்கி எல்லை வீதியில் முடிக்கலாம் எனத் திட்டம் போட்டோம். இந்தவகையில் காய்க்கும் தென்னை மரங்கள் ஆறு வெட்டவேண்டும். வெட்டுஞ் செலவையும் ஒவ்வொரு மரத்துக்கும் Compensation நஷ்ட ஈடாக 25 ரூபாப்படி நான் கொடுத்தேன், மாதாந்தம்.

நான்காவது வாரத்தில், திரு. இளையதம்பி அவர்கள் தலைவராகியதும் இதற்குரிய கிறவல் போடும் வேலை அங்கீகரிக்கப்பட்டு அடுத்த வருசம் கல்போட்டுத் தார் ஊற்றப்பட்டது.

கத்தோலிக்கர் மாதா கோவிலில் வைகாசி மாதம் முழுவதும் பிரார்த்தனை செய்து 31ந் திகதி கோவிலைச்சுற்றி மாதா சொரூப ஊர்வலமும் நடக்கும் கடைசி நாள் கொண்டாட்டத்துக்குப் பொறுப்பாக கடந்த 24 ஆண்டுகளாக நானே இருந்தேன். ஒவ்வொரு வருடமும் 200 ரூபாவுக்குள்தான் செலவு ஏற்பட்டது. அந்த ஆண்டில் தனிப்பட்டவர்கள் செய்ய முடியாது, குழுக்களாகச் சேர்ந்தே செய்யவேண்டும் என்ற கட்டளை ஏற்பட்டது.

அப்போது பங்குத் தந்தையாகத் தாண்டவன்வெளி காணிக்கை மாதா ஆலயத்தில் இருந்த வண. வாசறஸ் அடிகளார் என்னிடம் நீ 24 ஆண்டுகள் தனித்துச் செய்துவிட்டாய், இவ் வருடமும் செய்து வெள்ளி விழாவாக்கினால் மாதாவின் அருள் நிச்சயம் கிடைக்கும். அடுத்தமுறை குழுக்களாகச் சேர்ந்து செய்யச்சொல்லலாம் என்றார்.

நான், அப்படியானால் நான் புதிதாக அமைத்த தெருவுக்குப் பத்திமா வீதி எனப் பெயரிட்டு அத்தெருவால் மாதா சொரூபத்தை ஊர்வலமாகக் கொண்டுசெல்வோம் என்றதற்கு அவர் ஒத்துக்கொண்டார். பத்திமா வீதி என நகரசபையிலும் பதியப்பட்டாயிற்று.

ஆரம்பத்தில் தெருவை அகலமாக்கிவரும்போது இந்த வீதி எல்லை வீதியோடு பொருந்தும் இடத்தில் ஒரு பெரிய மாமரம் நின்றது. இதன் வயது 300க்கும் மேல் எனக் கூறினர். அதில் வைரவர் இருக்கிறார். வெட்டினால் அவர் பலி வாங்குவார் எனப் பயமுறுத்தினர் பலர். என்னைப் பலி எடுத்தால் பரவாயில்லை, பிரேத ஊர்வலங்கள் தடையின்றி நடக்க வேண்டும் எனக் கூறி நானே நின்று வெட்டுவித்து, தெருவால் ஊர்வலமும் நடைபெற்று, 3 மாதத்துக்குள் எனக்கு அப்பெண்டிக்ஸ் ஒப்பறேசன் நடந்தது.

17 நாட்கள் வைத்தியசாலையில் இருந்தேன். வைரவர் பலி எடுத்துவிட்டார் எனப் பரிதாபப்பட்டுப் பலர் பார்க்க வந்தனர். நான் விவாகம் முடிக்குமுன், ஒரு பெண்ணோடு என்னைச் சேர்த்துவைக்க வசியமருந்தை வீயரோடு (Beer) சேர்த்துத் தந்தனர். நான் அறிந்தும் நடப்பதைப் பார்ப்போம் எனக் குடித்தேன். அந்த மருந்துதான் குடல் வளரியில் சேர்ந்து இந்த சத்திரசிகிச்சைக்கு உட்படுத்திவிட்டது. இந்த விளக்கம் வேறொரு இடத்தில் தெளிவாக உண்டு.

பாதயாத்திரைக் குழுவும், கலாசாரக் குழுவும்:

25-3-53ல் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்ட வண. நோபேட் A. ஒக்கஸ் 54ல் உதவிக்குருவானவராக மட்டக்

களப்புத் தாண்டவன்வெளி காணிக்கை மாதா ஆலயத்துக்கு வண. லாசறஸ் அடிகளுடன் சேர்ந்தார். இளமைத்துடிப்புடன் புதியபுதிய வேலைகளை ஆரம்பித்தார். தான் முகாமையாளர் பதவியை எடுத்துக்கொண்டு தலைவராக காலஞ்சென்ற திரு. A. ஜோசேப், பொருளாளராக திரு. S. தவராசா, செயலாளராக என்னையும் தெரிவுசெய்தார்.

கலாசாரக்குழு, சில புத்தகங்களை அச்சிட்டதுடன் நின்று விட்டது. இதில் முகாமையாளருக்கும் எனக்கும்தான் வேலை. வேறு பல குழுக்கள் வேலைகளைப் பகிர்ந்துகொண்டதால் நாங்கள் இதைத் தொடரவில்லை.

1954 பங்குனி 19ல், 28 மைல்களுக்கு அப்பால் இருந்த, யாத்திரைத் தலமாகப் பிரகடனப்படுத்தப்பட்ட, பெரிய புல்லுமலை செபமாலை மாதா ஆலயத்துக்கு 19 பேருடன் வெள்ளிக்கிழமை பி. ப. 3 மணிக்கு யாத்திரை ஆரம்பமாகியது.

21ந் திகதி ஞாயிறு காலை 8 மணி அளவில் பெரிய புல்லுமலையை அடைந்தோம். 1979ல் பாவப்பரிகார யாத்திரை என்னும் பெயருடன் வெள்ளி விழாக் கொண்டாடியபோது, இதில் கலந்துகொண்டோர் ஆறாயிரம் பேர் வரையில். யாத்திரிகர் இடையிடையே வாகனங்கள்மூலமும் ஹினிதுமை, வகக்கோட்டை, தேவத்தை, பாலையூற்று, மடுத் திருப்பதி, பாலக்குடா, தேற்றாத்தீவு, நிலாவெளியில் இருந்து திருமலை முதலிய பல இடங்களுக்கும் சென்றோம். இனக்கலவரம் தலை தூக்கியதால் இதை நிறுத்தவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

மலைநாடுகளுக்கு யாத்திரை செய்யும்போது எங்களுக்கு வலக்கரம்போன்று உதவியவர் காலஞ்சென்ற திரு. G. மனுவல் என்பவர். இவருக்கு நாங்கள் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம். பாதயாத்திரையின்போது தமது நேரத்தையும், சிரமத்தையும், பொருளையும் பாராது மனமுவந்து அன்னபானாதிகள் அளித்து யாத்திரிகரை ஊக்கப்படுத்திய அத்தனைபேருக்கும் செயலாளர் என்ற முறையில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

பொருளாளராகக் கடமையாற்றிய திரு. S. தவராசா அவர்களின் செயற் திறமையைக் கூறுவதாயின், இக்காலக் கணனியில் ஏதும் பிழை ஏற்பட்டாலும் இவரது கணக்கில் அது ஏற்படாது. இதனாலேயே உபதபால் அதிபர் சங்கத்திலும், புனித மிக்கேல் கல்லூரி பழைய மாணவர் சங்கத்திலும் பல்லாண்டுகாலமாகத் தொடர்ந்து பொருளாளர் பதவியே வகித்துவருகின்றார்.

27 ஆண்டுகளுக்கு முன் 11-7-68ல் இவரது விவாக விழாவின்போது முகாமையாளர், தலைவர், நான் மூவரும் சேர்ந்து 72 கிளாஸ் (Glasses) களை அன்பளிப்புச் செய்து, இது உங்கள் வாழ்க்கைக்கு வழிவகுக்கட்டும் என வாழ்த்தினோம். அதன்படி இன்றும் மாதாந்தம் மூவாயிரம் ரூபாவுக்கு மேல் வருமானத்தைத் தேடிக்கொள்கிறார் இன்னும் சிலவற்றையும் சேர்த்து வாடகைக்குக் கொடுத்து. பீங்கான், கதிரை......

பாதயாத்திரைக்கான திட்டங்கள்:

எல்லாப் பங்குகளுக்கும் அறிவித்தல் நோட்டிஸ் அனுப்பப்படும். ஒவ்வொரு பங்குக்கும் ஒவ்வொரு நிறத்தில் சட்டையில் குற்றுவதற்காக Badge கொடுக்கப்படும். ஒவ்வொரு பங்குக்கும் ஒரு தலைவர். இவருக்கு அதே நிறத்தில் பெரிய அளவில் வித்தியாசமாகத் தெரியும் சின்னம் (Badge). இத்தலைவர்களே, ஏதும் பிரச்சினை ஏற்பட்டால் என்னுடன் கதைப்பார்கள். சாமான் பெட்டிகளில், பைகளில் கட்டக் கூடியதாக லேபல் (Label) அடையாளச் சீட்டுக் கொடுக்கப்படும்.

ஒரு வாகனம் ஒவ்வொரு பங்குக்கும் சென்று யாத்திரிகர்களையும் சாமான்களையும் ஏற்றிவரும். தன்னாமுனை, செங்கலடி போன்ற தூரத்துப் பங்குகளில் உள்ளவர்கள் இடையில் சேர்வர். தொகை கணக்கெடுத்து இலவச உணவு வழங்குவோருக்கு அறிவிக்கப்படும். சாமான்களுக்கு ஒருவர் பொறுப்பாக இருந்து, சேரவேண்டிய இடத்துக்குக் கொண்டு ஒரு அறையில் பூட்டிவைத்துவிட்டு யாத்திரையில் கலந்துகொள்பவருக்கு ஏதும் ஆபத்து, தேவைகள் ஏற்படுமிடத்து உதவி செய்ய, ஆங்காங்கு வாகனம் காத்து நிற்கும்.

யாத்திரிகர் குறிப்பிட்ட இடத்தை அடைந்ததும் சாமான்களுக்குப் பொறுப்பாக இருப்பவர், அவைகளைப் பிரித்து அவ்வத்தலைவர்களிடம் ஒப்படைப்பார். தலைவர் மற்றவர்களுக்கு விநியோகிப்பார்.

சின்னம் அணிந்தோருக்கே முதலில் உணவு வழங்கப்படும். (அவ்வூரிலுள்ள பலரும் உணவுக்காக வருவார்கள். மிகுதி இருந்தால் அவர்களுக்கும் வழங்கப்படும்.) திருநாள் முடிய அவரவர் விருப்பப்படி தத்தம் வீடுகளுக்குச் செல்வர். இதில் கலந்துகொள்வதற்காக நீர்கொழும்பு, கொழும்பு, கல்முனை முதலிய இடங்களில் இருந்தும் முதல்நாளே புளியந்தீவில் வந்து தங்கிநின்று பாதயாத்திரையில் கலந்துகொண்டனர்.

ஹினிதுமை யாத்திரை:

புறப்படும் நாள், திகதி, நேரம் முதலிய விபரங்களுடன், தங்கி நிற்கும் இடங்கள், நாட்கள், காலை உணவு, மதிய உணவு, இரவு உணவுக்கான தனித்தனிக் கட்டணம், புகை வண்டிக் கட்டணம், இலவசப் பிரயாண அனுமதி பெற்றவர்கள் அவர்களது Railway warrant (அனுமதிப்பத்திரம்) இவைகளுடன், அறிவித்தல் பத்திரத்தில் குறிப்பிட்டபடி உரியவரிடம் சேர்ப்பிக்கவேண்டும். அவர்கள் எல்லா விபரங்களுடனும் என்னைச் சந்திப்பர். எனது கடிதத்துடன் பொருளாளரிடம் பணத்தைச் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெறுவர்.

காலை உணவு, மதிய உணவு, இரவு உணவு முதலியவைகளுக்குத் தனிப்பட்ட நிறங்களில் வித்தியாசமான திகதி இடப்பட்ட சீட்டுக்கள் கொடுக்கப்படும். உணவு வசதிகளைச் செய்துதருபவர்கள் அந்தந்த இடங்களிலுள்ள கன்னியர் மடத்தார்.

இந்த விடயத்தில்தான் திரு. G. மனுவல் ஒவ்வொரு இடமாகச் சென்று, சாப்பாட்டு வசதிகளைக் கவனித்துவருவார். உணவுக்குரிய அட்டைகளைக் கொடுத்துச் சாப்பிடுவர். எல்லாம் முடிய தலைமைச் சிஷ்ரர் சீட்டுக்களை, பொருளாளரிடம் அல்லது என்னிடம் தருவார். பணத்தைக் கொடுப்போம். இந்த வகையில் எங்களுக்கு எவ்வித பிரச்சினையும் இருக்கவில்லை. நல்ல உணவு, வசதியாக இருந்து உண்ணுதல், செலவும் குறைவு.

புகைவண்டியில் பிரயாணம் செய்யும்போது, இலவசப் பத்திரங்களையும் (Warrants), கட்டணத்தையும் மொத்தமாகக் கொழும்பிலே செலுத்தி தேவையான பெட்டிகளை (Reserve) எங்களுக்கென ஒதுக்கிக்கொள்வோம். இதற்குப் பெரிதும் உதவியவர் எனது மாணவன் திரு. வடிவேல் என்பவர். இவர் (Railway Welfare Association) புகையிரதப் பகுதி நலன் புரிச் சங்கச் செயலாளராகப் பணிபுரிந்தவர்.

ஹினிதுமைக்குப் போவதற்காக இரவு எட்டு மணி புகை வண்டியில் ஏறி மறுநாள் காலை 5.30 வரையில் கொழும்பை அடைவோம். நானும், முகாமையாளர் Fr. நோபேட்டும் நிலைய அதிகாரியிடம் சென்று எங்களது (Badge) சின்னத்தைப்பற்றி விளக்கிக் கூறி (Platform Ticket) உள்ளேயும் வெளியேயும் சீட்டில்லாமற் போய் வர ஒழுங்குகள் செய்வோம். ஏனெனில் அடுத்த புகைவண்டி பி. ப. 1 மணிக்குத் தான் காலிக்குப் புறப்படும். இந்த 6 மணித்தியாலங்களும்

கொழும்பில் பலதடவை சென்று சாமான்களை வாங்கிக் கொள்ளலாம். பி. ப. 4 மணியளவில் காலியை அடைவோம்.

ஏலவே ஒழுங்கு செய்தபடி 4 அல்லது 5 பஸ்வண்டிகள் தொகைக்கு ஏற்ப, காலி புகையிரதத் தானத்தில் நிற்கும். அதில் ஏறி ஹினிதுமைக்குப் போவோம். இருட்டாகத்தொடங்க ஹினிதுமையை அடைவோம். உடனே மலையில் ஏறி 14 சிலுவைப்பாதைத் தலங்களையும் சந்திப்போம். மறுநாள் காலையும் பெரிய சிலுவைப்பாதை பிரசங்கங்களுடன் பூசையும் முடிய 12 மணி ஆகும்.

கன்னியர் மடத்துக்குச் சென்று மதியபோசனம் அருந்துவோம். அதிகமாக மறுநாள் காலையே புறப்படுவோம். சில வேளை வகக்கோட்டை, இவ்விடங்களுக்குச் சென்றதால் "whip crackers lead the perahera" சவுக்கினால் சத்தவெடி அடித்து ஊர்வலத்தை நடத்துவதைக் கண்டோம். தேவத்தை முதலிய இடங்களுக்கும் செல்வோம். குறிப்பிட்ட நேரத்துக்கு வந்துசேரும் வஸ் வண்டியில் காலியை அடைந்து புகையிரதத்தில் கொழும்பையடைந்து, சற்றுத் தங்கி இரவு வண்டியில் மட்டக்களப்புக்குப் புறப்படுவோம். முதல் முறை போகும் போதே சுமார் 300 பேர் சென்றோம். புளியந்தீவுக் கந்தோர்களில் நிருவாக உத்தியோகத்தர்களாக இருந்த பலர், நாங்கள் பெரும் கஷ்டப்பட்டு இடையிலேயே திரும்பிவந்தாலும் வருவோம் என எதிர்பார்த்தனர், பந்தயங்களும் பிடித்தனர். ஒழுங்காக நடந்ததால் அடுத்தமுறை அவர்களும் சேர்ந்து கொண்டனர்.

ஒருமுறை மாத்திரம் சில தடங்கல்கள் நடைபெற்றன. வழமைபோல 1ம், 2ம், 3ம் வகுப்புப் பெட்டிகளையும் எங்களுக்கு என ஒதுக்கி (Reserved) பிரத்தியேகம் என ஒட்டியிருந்தோம். சேகுவரா இயக்கம் தலைதூக்கிய காலம். இயக்கக்காரர் ஹிங்குறாக்கொடை என்னுமிடத்தில் தண்டவாளத்தின் குறுக்கே படுத்துவிட்டனர். புகையிரதம் இவர்களுக்கு மாத்திரமல்ல எல்லோருக்கும் என்பது இவர்களின் வாதம்.

நிலைய அதிகாரி (Station Master) பிரத்தியேகம் என எழுதி ஒட்டப்பட்டிருந்த கடதாசியைக் கிழித்துவிட்டபிறகு தான் வழிவிட்டனர். பிறகு வஸ்மூலம் நேரே பிரயாணம் செய்தோம். இப்போ எல்லாமே நின்றுபோயிற்று. நாலைந்து பேர் கூட்டமாக நடந்துசென்றாலே துவக்கு வெடிதான்.

# 21. 1978 சூறாவளியின் பின் ஏற்பட்ட சோதனை

24-11-78ல் சூறாவளி. காற்றடித்து ஓய்ந்ததுபோல என வழக்கில் வந்த சொற்றொடருக்கு உண்மையான கருத்தைக் காணமுடிந்தது. சூழலும் மாறி, சுற்றாடலும் மாறிவிட்டது. பக்கத்து வீட்டிலுள்ளவர்களையும் இனம்புரிந்துகொள்ள முடியாத நிலை. அடுப்பு மூட்டவும் முடியாது. உண்ண ஒன்றுமேயில்லை. நிலைகுலைந்த வீட்டில் குடியிருந்த பெண்கள், பிள்ளைகள் நிலைகுலையாத வீட்டில் குடிபுகுந்தனர்.

இரு நாட்களின்பின் பொதுமக்கள் கடைகளையும், பெரிய கிட்டங்கிகளையும், எங்கெங்கே உணவுப் பொருட்கள் உண்டோ அவை எல்லாவற்றையும் உடைத்து எல்லாருக்கும் பகிர்ந்துகொடுத்தனர். ஆனால் நேர்மையற்ற கயவர் இதிலும் தத்தம் சொந்தப் புத்தியைக் காட்டியும்விட்டனர்.

ஒரு கிழமை சென்றதும், தெருக்கள் ஓரளவு வெட்டித் திறக்கப்பட்டதும், பெரிய முதலாளிமாரும், பொதுநல சேவையாளரும் உணவுப் பொருட்களையும் இன்னும் பல சாமான்களையும் கொண்டுவந்து இலவசமாகக் கொடுக்கத்தொடங்கினர். இந்த நாட்கள்தான் ஏழை, செல்வர், உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற பேதம் பாராது எல்லோரும் கை நீட்டிய காலம்.

ஒரு மாதம் சென்றாலும் மனிதன் மனிதனாக இல்லை. சூறாவளியால் பாதிக்கப்பட்ட இடங்களுக்குரிய பாராளுமன்ற உறுப்பினர்களும் கொழும்பில் உல்லாச வாழ்க்கை நடத்தினர். பக்கத்துவீட்டுக்காரன் பட்டினிகிடக்க, தாங்கள் பத்துக் கறிகளுடன் சாப்பிட்டுப் பங்களாக்களில் வாழ்கின்றனர்.

இதை யோசித்து என்ன பலன். நாம் மீட்புப்பெற வழி என்ன என ஆலோசித்தேன். தனியரம் தோப்பாகாது. சங்கம் மூலம்தான் செயற்படவேண்டும் என என் மனம் சொன்னது. அரசியல் சம்பந்தமானதால் வரியிறுப்பாளர் சங்கமொன்றை நிறுவுவதெனத் தீர்மானித்தேன். இதற்குமுன் இச்சங்கம் இருக்க வில்லை, தேவைப்படவும் இல்லை, துணிவும் இருக்கவில்லை.

அப்போது நகரசபை மாநகரசபையாக மாற்றமடைந் தது. பத்தாக இருந்த வட்டாரம் பத்தொன்பதாக விரிவடைந் தது. காத்தான்குடி எல்லையில் 19ம் வட்டாரம். ஒவ்வொரு வட்டாரமாகத் திரிந்து அங்கத்தவரைச் சேர்த்தேன். எனக்கு நேரம் இல்லாத காரணத்தால் P. V. கணபதிப்பிள்ளையைக் காரியதரிசியாக்கி, சிங்களவர் ஒருவரையும் சேர்த்துக்கொண் டால் நல்லது என நினைத்து திரு. A. B. குலசிங்கம் என்ற சிங்கள ஆசிரியரை உபபொருளாளராக அமர்த்தினேன்.

தலைவருக்குப் பொருத்தமானவர் திரு. K. கணபதிப் பிள்ளை. இளைப்பாறிய சிவாநந்தா அதிபர். அவர் சம்மதம் தெரிவித்தார். எல்லாரின் பெயர்களையும் சரியாக எழுதிக் கொண்டு திரு. கணபதிப்பிள்ளை அவர்களிடம் சென்று உங் கள் பெயரை எப்படி எழுதலாம், கடிதத் தலைப்பு அச்சிடப் போகிறேன் என்றேன். அதற்கு அவர் ''அச்சில் எனது பெயர் போடவேண்டாம். இது அரசாங்கத்துக்கு எதிரான சங்கம். எனது மகளும் மருமகனும் அரசாங்க உத்தியோகத்தர்கள். அவர்களுக்கு ஏதும் தொந்தரவு வரும்'' எனக் கூறி மறுத்து விட்டார்.

வெண்ணெய் திரண்டுவரும்போது தாழி உடைந்ததுபோல ஆயிற்று என் நிலை. தனக்கெென வாழும் சுயநலவாதிகளுக்குப் பின்னால் திரிவதால் பலன் ஏதும் இல்லையென்பதை உணர்ந் தேன், சிந்தித்தேன். திரு. V. T. ஞானசூரியம் அவர்களின் பெயர் நினைவில் வந்தது. அவரின் பிறப்பிடம் யாழ்நகர் எனினும் மணம் முடித்தது மட்டக்களப்பில். இங்கு முகத்து வார வீதியில் வீடும் ஒன்று உண்டு. கொழும்பு பல்கலைக் கழகத்தில் பகுதிநேர ஆங்கில ஆசிரியராகப் பணிபுரிந்ததால் 27, வைத்திய வீதி, தெகிவளை என்ற இடத்தில் வசித்து வந்தார். கடிதம் எழுதினேன். வந்து சேர்ந்தார். தலைவர் பதவியையும் ஏற்றுக்கொண்டார். கடிதத் தலைப்பில் "V. T. Gnanasuriyam, *B. A., M. R. S. T,* 209, Bar Road, Batticaloa'' எனவும் அச்சிட்டாயிற்று.

அடிக்கடி கூட்டங்கள் கூடினோம். மட்டக்களப்புக் கச் சேரியில் நிவாரணப்பகுதித் தலைவராகக் கடமையாற்றியவர்

திருமதி பத்தினியம்மா போன். 16ம் இலக்க ஞானசூரியம் சதுக்கத்தில் வசித்துவந்தார். அடிக்கடி சந்தித்து மீன், மரக் கறி, நாடோடி விற்பனையாளர்களுக்குப் புதுச் சைக்கிள்கள் வாங்கிக்கொடுத்தோம். இப்படிப் பலப்பல.

பகிரங்க கூட்டங்களுக்குச் சமுகமளிக்குமாறு மட்டக்களப் பில் பாதிக்கப்பட்ட இடங்களின் பாராளுமன்ற அங்கத்தவர் யாபேருக்கும் அழைப்பு அனுப்பினோம். சமுகந்தந்த ஒரே யொரு பாராளுமன்ற அங்கத்தவர் ஜனாப் பரீத் மீராலெவ்வை அவர்கள்தான்.

தென்னைமரங்கள் ஆயிரக்கணக்கில் வீழ்ந்துகிடந்தன. இவைகள் கெதியில் உக்கிப்போய் குறவணம்புழுக்கள் உண் டாகி இவைகளிலிருந்து செவ்வண்டு, கருவண்டு உண்டாகும். இவைகள் இனிமேல் நடும் தென்னம்பிள்ளைகளை நாசமாக் கும் என மந்திரிசபைக்கு அறிவித்தோம்.

மந்திரி சௌ. தொண்டமான், ஒவ்வொரு கிராமசேவ கருக்கும் (G. S.மார்) விழுந்துகிடக்கும் தென்னைமரங்களைக் கணக்கெடுத்து அவைகளை வெட்டிக் காயவிடுவதற்கு மரத் துக்கு 50 சதவீதம் கொடுக்கும்படி கட்டளை பிறப்பித்தார்.

இதற்கிடையில் தன்னாமுனை, நாவற்குடா, கல்லடி, சின்ன உப்போடை, பெரிய உப்போடைப் பகுதிகளில் உள்ள தென்னைமரம் ஒவ்வொன்றுக்கும் ஒரு ரூபா வீதம் கொடுத்து நான் வாங்கினேன். [இதைப்பற்றி வேறோர் இடத்தில் விளக் கம் உண்டு] தலைவர் கொழும்பில் வசித்துவந்ததால் வேலை கள் நடைமுறைப்படுத்துவதும் இலேசாகவிருந்தது. வசதி குறைந்தவர்களின் வீடுகள் திருத்துவதற்கு வழிவகைகள் செய் தோம். இப்படிப் பலப்பல. (செடெக் நிறுவனத்தின்மூலமும் பல உதவிகள். இதையிட்டு வேறொரு இடத்தில் விளக்கம் உண்டு).

கல்விக்கந்தோருக்குப் பாலர் மேசை கதிரைகள் :

கிராமப்புறங்களிலுள்ள பாடசாலைகள் சேதப்பட்டதால் மாணவர்கள் நிலத்தில் இருந்தே படிக்கவேண்டிய நிலை ஏற் பட்டது. பல இடங்களில் இவைகளைச் செய்வித்தனர். என் னிடமும் கேட்டபோது, சரி பார்ப்போம் எனச் சொன்னேன். அப்போது வண. நோபேட் ஒக்கஸ் பெரிய புல்லுமலைப் பங்குத்தந்தையாக இருந்தார். அவருடன் கதைத்தபோது, புல்லுமலையில் ஒரு சிங்கள ஆள் வந்து தேக்கமரங்களைக் காடுகளில் வெட்டி, புல்லுமலைக்குக் கொண்டுவந்து அறுத்து, கட்டிகள், பலகைகளாகக் கொழும்புக்கு ஏற்றுகிறார். துண்டு கள் மலைபோலக் குவிந்துகிடக்கின்றன. அங்கு வந்தால் பார்க்கலாம் எனச் சொன்னார்.

அங்கே சென்று, ஒரு லொறியில் ஏற்றக்கூடிய அளவு 300 ரூபாவுக்குப் பொருந்தினோம். ஒரு ஓடாவியும், இரு கூலியாட்களும் ஒரு கிழமையாகத் தெரிந்து வேறொரு இடத்தில் குவித்தனர். ஒரு குருவானவர் கேட்டதால் தெரிந்து எடுக்கச் சம்மதித்தார் அந்தச் சிங்கள ஆள். லொறிக் கூலி 800 ரூபா.

இரு லொறி நிறைந்த துண்டுகளை வீட்டிற்குக் கொண்டு வந்தேன். இத்துண்டுகள் கால்களுக்கு மாத்திரம் உதவின. மேற்பலகை மர டிப்போவில் வாங்கினேன். 10 ஓடாவிமார் வரையில் வேலை செய்தனர். வீட்டின் பின்புறம் இதற்கென ஒரு நீளமான கொட்டில் கட்டப்பட்டது.

ஒருநாள் மாநகரசபையின் (Revenue Officer) வரி அறவிடுபவர் வந்து, அனுமதிப்பத்திரம் இல்லாமல் இப்படியான வேலைகளைச் செய்யமுடியாது, வழக்கு வைக்கலாம் என என்னிடம் ஏதோ பந்தம் வாங்கும் நோக்கத்தோடு சொன்னார். எனக்குத் தெரியும், தளபாடங்கள் செய்து விற்பனைக்காகப் பார்வைக்கு (Show Room) வைத்திருந்தால் மாத்திரம் தான் அனுமதி பெறவேண்டும் என்பது. சரி, நீங்கள் வழக்குப் போடுங்கள் எனச் சொல்லி அனுப்பிவிட்டேன்.

எனது நண்பர் லெஸ்லி செல்வநாயகம் புறக்டரிடம் சொல்லி இருவரும், மாநகர ஆணையாளராக இருந்த திரு. அந்தோனிமுத்து அவர்களிடம், மாநகர சங்கப் பிரமாணப் புத்தகத்தைக் காட்டி விளக்கினோம். அவர் ஏற்றுக்கொண்டார்.

பறவைகள், மிருகங்கள்போல இருந்த சிறிய மொக்குகளை, அந்த உருவங்களாக மாற்றித் துப்பரவு செய்து நூறு வரையில் வைத்திருந்தேன். ஒருவர் இவைகளைப் பார்த்துவிட்டு, கொழும்புக்கு அனுப்பினால் உல்லாசப் பயணிகள் விரும்பி வாங்குவார்கள் என்றார். இதில் நான் ஈடுபடவில்லை. விரும்பியவர்களுக்கு ஒன்றும் இரண்டுமாகக் கொடுத்தேன்.

பாலர் கதிரை, மேசை செய்தவகையில் சுமார் 25,000 ரூபா வரையில் லாபம் கிடைத்தது. பலருக்கு வீட்டுத் தளபாடங்களும் மலிவான விலையில் செய்துகொடுத்தேன். பல வீடுகளில் இவைகளை இன்றும் காணலாம்.

# 22. பழுதடைந்த வீடுகளைத் திருத்திக் கொடுத்தமை

சூறாவளியால் அல்லோல கல்லோலப்பட்ட வீடுகளையும் மக்களையும் கருணைக் கண்கொண்டு பார்த்தவர்கள் கத்தோலிக்க சமயத் தலைவர்களே என்பதை எவரும் மறுக்கத் துணியமாட்டார்கள். திருமலை - மட்டுநகர் ஆயராக இருந்த வந். இராஜேந்திரம் அன்ரனி அவர்கள் நோய் காரணமாக ஓய்வெடுக்க, அதிவண. நோபேட் A. ஒக்சஸ் அவர்கள் மாவட்டப் பரிபாலகராக நியமனம் பெற்றார்.

நீர்கொழும்பைப் பிறப்பிடமாகக் கொண்ட ஜோ. பெர்னாண்டோ (Joseph Fernando) என்பவர் உரோமாபுரியில் இருந்தார். SEDEC (Social and Economic Development Centre) ''செடெக்'' தாபனத்தின் பிரதிநிதியாக மட்டுநகர் வந்து ஆயர் இல்லத்தில் தமது செயலகத்தை ஆரம்பித்தார். இவருக்கு உதவியாகப் பரிபாலகர் அதிவண. நோபேட் ஒக்சஸ் அவர்கள் கடமைபுரிந்தார்.

ஒவ்வொரு பங்குக்குருவானவருக்கும் இலட்சம் இலட்சமாகப் பணம் கொடுக்கப்பட்டது. புது வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு அவர்களும் சாதி, சமய பேதம் பாராது சமத்துவமாக நடந்துகொண்டனர். உடைந்த வீடுகளை இவர்கள் கவனிக்கவில்லை. அவர்கள் ''செடெக்'' தாபனத் தலைவருக்கு உதவி கேட்டு விண்ணப்பித்திருந்தனர். இவை ஒரு தொகையாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

வண. ஜோ. பெர்னாண்டோ அவர்கள் எப்படியோ என்னைப்பற்றி அறிந்து, என்னை அழைத்து, தனக்கு உதவி செய்துதர முடியுமா என்றார். என்னால் முடிந்தால் செய்து

தருவேன் என்றேன். வீடு திருத்தக் கோரும் கடிதங்களைப் பார்த்தேன். அவை பல இடங்களிலுமிருந்து வந்திருந்தன. புளியந்தீவு, தாண்டவன்வெளி, வீச்சுக்கல்முனை, கல்லடி, டச்வார், புளியடிக்குடா, உப்போடை இந்த இடங்களில் இருந்த விண்ணப்பங்கள் சுமார் 100 வரை இருந்தன. இவை களை நான் பொறுப்பெடுத்துச் செய்துதருவதாக ஒப்புக் கொண்டேன்.

எந்த அடிப்படையில் செலவு செய்யலாம் என வரை யறுத்துக் கூறினால் நல்லது என்றேன். கைம்பெண் ஆக இருந்தால் ஆயிரம் ரூபா. ஒரு விவாகமாகாத பெண்ணும் கூட இருந்தால் இரண்டாயிரம். இருவர் இருந்தால் மூவா யிரம். மூவர் இருந்தால் ஐபாயிரம் ரூபா வரையில் செலவிட லாம். அவசியம் தேவையாயின் கொஞ்சம் கூடினாலும் காரிய மில்லை. சிலவேளை அவர்கள் ஏதும் சாமான்களை விற்றுக் காசு தந்தாலும், அதையும் சேர்த்து நன்றாகச் செய்து கொடுக்கவேண்டும் என்று சொன்னார்.

காசு தேவைப்படும்போது ஒரு பத்திரத்தில் (Voucher) ஒப்பமிட்டு, தேவையான பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் சொன்னார். நான் மொத்தமாகப் பெற்ற தொகை சுமார் மூன்று லெட்சம் ரூபா வரை. ஒருநாளாவது ஏன் இவ்வளவு பணத்தை எடுத்தாய்? ஏன் இந்த வீட்டுக்குக் கூடச் செலவு செய்தாய்? என்று கேட்டதே கிடையாது.

ஒவ்வொரு வீடும் முடிந்தவுடன், அச் சொந்தக்காரரை, விண்ணப்பபத்திரத்துடன், தலைவர் ஜே. பெர்னாண்டோ விடம் அனுப்பினேன். அவர்கள் விரும்பினால் நன்றி கூறலாம் அல்லது குறைபாடுகளைக் கூறலாம். எவராவது குறை கூறிய தாகத் தெரியவில்லை. நான் ஒரு கல்லில் இரு மாங்காய் களை விழுத்தும் வேலையிலும் ஈடுபட்டேன்.

உதாரணமாக திங்கட்கிழமை காலை 25,000 ரூபாவை எடுத்துக் கணேசன் ஸ்ரோருக்குக் கைமாற்றாகக் கொடுத் தேன். சனிக்கிழமை சம்பளம் கொடுப்பதற்கு 10 அல்லது 15 ஆயிரம் வாங்குவேன். மிகுதி அடுத்த கிழமை சேர்த்து வாங்குவேன். சிறிய கடையாக இருந்தது, பெரிய கடையாக மாறியது. இதுவும் ஒரு நன்மை. ''அரிசிப்பொரியோடு திரு வாரூநம்'' என்ற பழமொழிபோல.

திருத்த விண்ணப்பங்களைப் பார்வையிட்டதும், ஆங் காங்கு சென்று உடைந்த வீடுகளையும், அவர்களது நிலை மைகளையும் ஆராய்ந்தேன். மரங்களே அதிகமாகத் தேவைப்

பட்டதால் நாவலடி, கல்லடி, நாவற்குடா, உப்போடை முதலிய இடங்களில் விழுந்துகிடந்த தென்னைமரங்கள் ஆயிரத்துக்கும் மேல், ஒவ்வொன்றையும் ஒரு ரூபாய்ப்படி வாங்கினேன். வேப்பமரம் 50 வரையில் வாங்கினேன். கைமரங்கள் செதுக்குவதற்குத் தென்னைமரங்கள் இருந்த இடங்களில் கூட்டங் கூட்டமாக ஆட்களை ஒழுங்குசெய்தேன்.

ஊறணி, நாவலடி, டச்வார், மூன்று இடங்களிலும் குழி தோண்டிக் கொட்டில் அமைத்து அறுவையாளரை ஒழுங்கு செய்தேன். பலகைகள், நிலை, யன்னல்களுக்கான கட்டிகள் அறுக்கப்பட்டன. கைமரங்கள் செதுக்கப்பட்டன. லொறிகளில் வரும் மாங்குக் கம்புகளையும், குருநாகல் ஓலைமட்டைகளையும் வாழைச்சேனையில் வைத்தே விலைபேசி வாங்கி இங்கே என்னிடம் கொண்டுவருவதற்கு ஒருவரை ஒழுங்கு செய்தேன். மேசன்மார் 10 பேர்வரை, கூலியாட்கள் 20 பேர் வரை, ஓடாவிமார் 20 பேர்வரை ஒழுங்குபண்ணினேன்.

வேலைகள் காலை தொடங்கி மாலை வரை நடைபெறும். மதியச் சாப்பாட்டை வீட்டில் இருந்து கொண்டுவருவர் அல்லது வேலைத்தலத்திலேயே சமைப்பர். நானும் ஒவ்வொரு நாளும் காலை 7-00 மணிக்குப் புறப்பட்டால் இரவு 9-00 மணிக்குத்தான் வீடு திரும்புவேன். ஞாயிறு மட்டும் ஓய்வுநாள்.

ஒருநாள் இருதயபுரத்தில் வசித்த திரு. சர்வானந்தம் என்பவரின் வீட்டுக்குச் சென்றேன். இவர் பாடசாலை அதிபர். சில நாட்களுக்கு முன்புதான் மனைவியைக் கொழும்பு ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சத்திரசிகிச்சை செய்தபோது இறைபதமடைந்துவிட்டார். பிரேதத்தைக்கூட மட்டுநகர் கொண்டு வரவில்லை. இரு கன்னிப்பெண்கள், இரு ஆண்பிள்ளைகள். விறாந்தையில் ஒரு சாய்மானக் கதிரையில் படுத்திருந்தார். கூரையில் மரங்கள் மாத்திரம் இருந்தன. 'அஸ்பெஸ்ரஸ் சீற்' ஒன்றுமேயில்லை. பக்கத்தில் ஒரு சிறிய கொட்டில் கட்டி. பிள்ளைகள் வசித்தனர்.

அக்குடும்பத்தைப் பார்க்கப் பெரிதும் பரிதாபமாக இருந்தது. எனது வேலைத்திட்ட சட்டதிட்டங்களுக்கு முழுதும் அப்பாற்பட்ட நிலை. என் மனமோ நிம்மதியடைய மறுக்கிறது. அன்று பங்குனி மாதம் 10ம் திகதிவரை இருக்கும். அன்றிரவு ஒரு யோசனை தட்டுப்பட்டது. எதிர்வரும் 19ம் திகதி சஞ். சூசையப்பர் திருநாள் (St. Joseph's Feast). அன்று வண. ஜோ. பெர்னாண்டோ அடிகளாரின் பெயர் கொண்ட நாள். ஆயர் இல்லம் சென்று அவரை வாழ்த்தி,

இதையும் கதைத்தால் என்ன? சரிவந்தால் நல்லது - சரிவரா விட்டாலும் நட்டம் ஏதுமில்லை.

திரு. சர்வாநந்தத்துடன் கதைக்கும்போது அவர் சொன்னார், யாராவது இரண்டாயிம் ரூபா கடனாகத் தந்தாலும் தான் மாதாமாதம் சம்பளத்தில் நூறு ரூபா வீதம் கொடுத்துக் கடனைத் தீர்த்துவிடுவேன். மரங்கள் ஒன்றும் பழுதடையவில்லை. 'சீற்' வாங்குவதற்கும், கூலிக்கும்தான் காசு தேவை என்று. பங்குனி 19ல் ஆயர் இல்லம் சென்றேன். பலர் சந்திக்க வந்திருந்தனர் காலை 11-00 மணிபோல் எல்லோரும் சென்றபின் நான் போய் வாழ்த்திவிட்டுப் பெரிய பீடிகை ஒன்றைப் போட்டேன்.

"I am very sorry father for wasting your time. I am going to put an unreasonable request on your happy day" என்று. அவர் இப்போதும் அதிபர் பதவி வகிக்கின்றார் என்பது எல்லாம் விளக்கினேன். கடைசியில் அவர் என்னிடம், Do you think that's a deserving case எனக் கேட்க, நான் ஆம் என்றேன். உடனே மேசை லாச்சியைத் திறந்து இரண்டாயிரம் ரூபா (இரு தாள்கள்) தந்து கொடுக்கும்படி சொன்னார். இச்சம்பவமும் அவருக்கு என்னில் கூடிய நம்பிக்கையை ஏற்படுத்திவிட்டது. எனது நேர்மையைப்பற்றி வேறொரு குருவானவரோடும் கதைத்திருக்கின்றார், வரியிறுப்பாளர் சங்கப் பகிரங்கக் கூட்டமொன்றுக்கு ஒலிபெருக்கிக்காக 100 ரூபா தேவைப்பட்டபோதுங்கூட வண. ஜோ பெர்னாண்டோ அவர்களிடம் கேட்டு வாங்கினேன்.

1995ம் ஆண்டு மாசி மாதத்தில் ஞானசூரியம் சதுக்கத்துக்கு அருகில் ஏற்பட்ட மரண வீடொன்றுக்கு நான் சென்றபோது திரு. சர்வானந்தம் தான் இருந்த ஆசனத்தையே விட்டு எழுந்து, நான் செய்த உதவியைப் பக்கத்தில் இருந்தவர்களுக்கு விளக்கிக் கூறிக்கொண்டிருந்தார்.

வீடுகளின் திருத்த வேலைகளும் நடந்துகொண்டிருக்கின்றன மேற்றிராசனக் கணக்காளராய் இருந்த வண. சந்திரா அடிகளே உடைந்த கோயில்களைத் திருத்தும் வேலையை மேற்கொண்டிருந்தார். எனவே என்னிடம் சீமேந்து வாங்கித் தரமுடியுமா எனக் கேட்டார். யோசித்துச் சொல்கிறேன் எனக் கூறிவிட்டு; அன்றிரவு மூளையில் தட்டுப்பட்ட விடயம் Marketing Dept. இல் பிரதம லிகிதராகக் கடமையாற்றி, தலைவருடன் சிறு மோதலினால் இடைநிறுத்தம் செய்யப்பட்டு அரைச் சம்பளத்துடன் வீட்டில் இருக்கிறார். தமிழ்,

சிங்களம், ஆங்கிலம் நன்றாகப் பேசுவார். ஆணும் பெண்ணு மாக ஆறேழு பிள்ளைகளின் தந்தை. நம்பிக்கையானவர் திரு. அழகுதுரை என்பவர். இவரது உடைந்த வீட்டையும் திருத்தினேன்.

அவரைச் சந்தித்து, புறப்படும் நாள் தொடங்கி வந்து சேரும் நாள் உட்பட நாள் ஒன்றுக்கு 100 ரூபாப்படி சம் பளம். போவதற்குப் புகைவண்டிச் சீட்டு, யாழ்ப்பாணத்தில் லொறி ஒழுங்குசெய்தல். (எனது மைத்துனரும் இதற்கு உதவி னார்.) யாழ்ப்பாணத்து லொறி திரும்பிப் போகும்போது நெல் ஏற்றிக்கொண்டு போகும். (அதை நான் ஒழுங்குபண்ணு வது ) 200 பக்கற் சீமேந்துக்குப் பெறுமதியான வங்கி உண்டி யல் (Bank draft) எடுத்துக் கொடுப்பது. ஒவ்வொரு முறை யும் சுமார் முப்பதினாயிரம் (30,000/-) ரூபா வரையில் செல வாகும். திரு. அழகுதுரை எங்கள் வீட்டில் வந்து இறங்கி என் னிடம் கணக்கை முடித்ததும் வீடு செல்வார். நான் லொறி யில் ஏறிக் குறிப்பிட்ட இடங்களுக்குச் சென்று இறக்கிவிட்டு, நெல்லை ஒழுங்குபண்ணிக் கொடுப்பேன். சொறிக்கல்முனைக் கோயிலுக்குக் கொண்டு சீமேந்து இறக்கும்போது விடியப்புறம் 3-00 மணி. கல்முனை, கல்லாறு, தேற்றாத்தீவு, கல்லடி இன்னாசியார் கோவில், கடைசியில் டாகுத்தர் வின்சனுக்கும் 200 பக்கற் கொடுத்தேன்.

# 23. சில அதிர்ச்சி வைத்தியங்கள்

**மதிலை உடைத்து வெள்ளத்தை ஓடப்பண்ணியது :**

ஒருகாலமும் இல்லாதவாறு, ஞானசூரியம் சதுக்கத்தில் 10 வீடுகள் வரை வெள்ளத்தில் அமிழ்ந்தின. எங்கள் வீட்டிற்குள்ளும் வெள்ளம். ஆரம்பகாலத்தில் ஒருமுறை வெள்ளம் ஏற்பட்டதால் இருதயபுரம் தொடங்கி கள்ளியங்காடு சவக்காலை ஓரமாக ஆசிரிய கலாசாலை வளவுக்குள்ளால் சென்று புளியடிக்குடா பாடும்மீன் பாலத்தின்கீழ் ஆற்றை அடைவதற்கு வடிகால் (Channel) அமைத்திருந்தோம். இப்போது எங்கேயோ நீர் கட்டுப்பட்டு நிற்கிறது என உணர்ந்து நாங்கள் மூவர் வாய்க்கால் ஓரமாக நடந்துசென்றோம். ஆசிரிய கலாசாலையில் நீர் கட்டுப்பட்டு நிற்பதைக் கண்டோம்.

புகையிரத வீதி ஓரமாகக் கட்டப்பட்டிருந்த மதிலில் (வாய்க்காலுக்கு மேலால்) நீர் ஓடுவதற்காக 2 அடி விட்டமான வட்டத்துவாரம். அதில் 3 கம்பிகள் பொருத்தப்பட்டிருந்தது. அதில் ஓலைகள், மட்டைகள் அடைந்துகிடந்திருக்கவேணும். அதைத் துப்பரவு செய்வது முடியாத காரியம். இலேசான வழி மதிலை உடைப்பது எனத் தீர்மானித்தோம். ஏனெனில் என்னோடு வந்த இருவரில் ஒருவர் செல்வரெட்ணம் என்னும் பொறியியலாளர். மற்றவர் செல்லத்துரை என்ற நகரசபை வேலை மேற்பார்வையாளர்.

பக்கத்தில் இருந்த சாராயத் தவறணைக்குச் சென்று ½ போத்தல் வாங்கினோம். புகையிரத நிலையத்தில் நின்ற கூலியாள் ஒருவருடன் கதைத்தோம். இடிப்பதற்குச் சம்மதம் தெரிவித்தார். கூலி 5 ரூபா. பக்கத்தில் இருந்த கடையில் ஒரு கிளாஸ் எடுத்து ¼ போத்தலை ஊற்றிக்கொடுத்தோம். ஒரே இழுவையில் இழுத்துவிட்டார். பக்கத்து வீட்டில் அலவாங்கு ஒன்று வாங்கிக்கொடுத்து இடிக்கச்சொன்னோம். 6

அடி அகலமான துண்டு உடைக்கப்பட்டதும் உடைத்தவரையும் இழுத்துக்கொண்டு சென்றது.

கொஞ்சநேரம் உருண்டுபுரண்டு எழும்பிவந்தார். மற்ற ½ போத்தலையும், காசையும் கொடுத்தோம். சாய்கூய் என்று தாமரைக்கேணியில் பெரும் சத்தம் உண்டாயிற்று. கட்டுப்பட்டு நின்ற வெள்ளம் புகையிரத நிலைய வீதியைக் கடந்து, தாமரைக்கேணியில் குசினி, முற்றம், விறாந்தை இவைகளில் கிடந்த சட்டி, பெட்டி, சின்னக் கதிரை எல்லாவற்றையும் உருட்டிக்கொண்டு ஓடத்தொடங்கியது. 15 நிமிடநேரத்தில் வெள்ளம் வடிந்துவிட்டது.

அடுத்த கிழமை கடிதம் ஒன்று வந்தது. கல்விக்கந்தோரில் இருந்து. விடயம், உத்தரவு இல்லாமல் ஆசிரிய கலாசாலை மதிலை உடைத்ததற்கு உம்மில் ஏன் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரக்கூடாது என்று. அதற்கு எனது பதில்:

கல்விப்பணிப்பாளர் அவர்களுக்கு,

உங்கள் கடிதத்தைக் கண்டு சிரிப்பதா அழுவதா என்றே புரியவில்லை. காரில் அடிபட்டு உடைந்த மண்டையோடு இருப்பவனைப் பொலிஸ் ஸ்ரேசனுக்குக் கொண்டுபோவதா, வைத்தியசாலைக்குச் சென்று இரத்தோட்டத்தைத் தடைப்படுத்தி மருந்து கட்டுவதா, எது சிறந்தது? மதிலை இடிக்க உங்களிடம் வந்து உத்தரவு பெற்றுக்கொண்டு போவதற்குமுன் வெள்ளத்தில் எத்தனையோ உயிர்கள் அழிந்துவிடும். உங்கள் மூளையின் விஸ்தீரணத்தை விளக்குவதற்குப் பொருத்தமான இடம் நீதித்தலம்தான். ஆகவே தாராளமாக வழக்கைப் பதிவுசெய்யுங்கள்.

இக்கடிதத்துடன் நியாயம் தேடுவதை நிறுத்திவிட்டனர்.

புல்லுமலையில் பட்டுப்பூச்சி வளர்த்தது :

'பட்டுப்பூச்சி வளர்ப்பு' என்னும் விடயம் பத்திரிகையில் எழுதப்பட்டிருந்தது. நானும், பரிபாலகராக இருந்த வண. நோபேட் ஓக்கஸ் அடிகளாரும் கதைத்து, புல்லுமலையில் இதை வளர்த்தால் சில ஏழைக் குடும்பங்களை முன்னேற்றலாம் எனத் திட்டம் போட்டோம். கோயிலுக்குச் சேர்ந்த 2 ஏக்கர் காணியில் முசுக்கட்டைச் செடி வளர்க்கலாம். இரு கிணறுகளையும் சற்று ஆழமாகத் தோண்டினால் நீர் வசதி உண்டாகும். 6 அடி உயரத்தில் தொட்டி கட்டி ஜெனறேற்

றர் (Generater) ஒன்றும், மோட்டார் (Motor) ஒன்றும் வைத்துக்கொண்டால் குழாய்மூலம் நீர் பாய்ச்சலாம். இவ் ஹும் சில விடயங்களைக் கொழும்பு நாயக்காக்கந்தை என்னு மிடத்துக்குச் சென்று அறிந்துவந்தார்.

கூட்டுப்புழு வரையும் இங்கே செய்யலாம். சீலையாக நெசவு செய்வதற்கு இயந்திரமும், மின்சார வசதியுமில்லை. என்றாலும் ஆரம்பிப்போம், காலஞ்செல்ல ஒரு தொழிற் சாலையையே ஏற்படுத்திவிடலாம் எனத் தீர்மானித்து, 10 அடி X 8 அடி அளவிலான சிறு அறை, தடிகளை நட்டுக் களி மண்ணால் அடைத்து, பூசி (நிரைகட்டச்சுவர் என்பர்), சாக் கால் மூடி எப்பொழுதும் சாக்குகளை ஈரமாக்கிவிட்டால், குளிரூட்டப்பட்ட அறையாகும். இதற்குள்தான் முட்டை களை வைத்துப் பொரிப்பிப்பது.

அடுத்த சாதாரண அறையில் முசுக்கட்டைச் செடியின் இலைகளைச் சிறிதாக அரிந்துபோட்டு, புழுக்களை அதனுள் விட்டு வளர்ப்பது. பக்குவநிலை வந்ததும் அடுத்த அறையில் பட்ட மரக்கிளைகள் சில நிறுத்திவைக்கப்பட்ட இடத்தில் புழுக்களை விட்டால் கூட்டுப்புழு வளரும். அது உடைத்துப் புறப்படும் நாளுக்கு முதல் நாள் அவைகளைக் கொதிநீருக் குள் போட்டால் புழுக்கள் இறந்துவிடும். இரு நாட்கள் உலர விட்டுப் பெட்டிகளில் அடைத்துப் புகைவண்டிமூலம் கொழும் புக்கு அனுப்பினோம்.

அங்கிருந்து நெசவு செய்த சீலையாக வரும். இதற்குப் பணம் கொடுப்போம். ஒரு யார்ச் சீலை மட்டக்களப்பில் 100 ரூபாவுக்கு விற்பனை செய்தோம், சுத்தமான பட்டு. நல்ல கிறாக்கி. இச்சீலைகளை இன்றும் சிலர் வைத்திருக் கின்றனர். புல்லுமலையில் இருந்து இரு மைல்களுக்கப்பால் 25 ஏக்கர் காணியையும் அரசாங்கத்திடமிருந்து இலவசமாகப் பெற்றோம் - முசுக்கட்டைச் செடி வளர்க்க. இதில் வேலை செய்து பயன்பெற்ற இளம் பெண்கள் 30 பேர்வரை. இனக் கலவரத்தால் எல்லாமே தடைப்பட்டுவிட்டது.

கிராம எழுச்சித் திட்டம்,
கட்டுமுறிவில் பண்டமாற்று :

அரசாங்கத்தால் நினைத்து நினைத்துச் செயற்படுத்தப் படும் திட்டங்கள் பல இங்கு உடனடியாகச் செயல்படுத்தப் பட்டன. சமூக பொருளாதார முன்னேற்ற நிலையத்தால் (SEDEC) கட்டுமுறிவு என்னுமிடத்தில் 86 குடும்பங்கள் குடி யேற்றப்பட்டன. இவர்கள் வெலிக்கந்தையில் இருந்து அல்

லல்பட்டு வந்தவர்கள். இத்திட்டம் மாவிளை ஆற்றின் கீழ்ப் பாசத்தில் அமைந்தது. காடுவெட்டி பாதைகள், பாடசாலை ஒன்று, கிணறுகள், கடைகள் எல்லாம் கட்டப்பட்டன. புதிய பூமி, நல்ல நீர்வசதி, மரக்கறித்தோட்டம் செய்தனர். சிறந்த பலன். ஆனால் வாங்குவதற்குத்தான் எவருமில்லை. இது தீர்க்கப்படமுடியாத பிரச்சினையாயிற்று. (நீர்ப்பாசன குடியேற்றத் திட்டங்கள் வேறொரு இடத்தில்)

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண எவருடைய மூளையும் முன்வரவில்லை. ஜீப் வாகனம் அடிக்கடி கட்டுமுறிவுக்குப் போகும். அதில் மரக்கறிகளை ஏற்றிக்கொண்டு இங்கு விற்பனை செய்தோம். அங்கு விளைந்த பொருட்களை ஏற்றுவதாயின் 50 ஜீப் வண்டிகளுக்குமேல் தேவைப்படும். அடுத்த பெரிய பிரச்சினை அவர்களது உணவுப் பிரச்சினை.

மரவள்ளிக் கிழங்கும் ஆறு மாதத்தின் பின்தான் பிடுங்கலாம். 'செடக்' நிருவாக அங்கத்தினர் மாதமொருமுறை அங்கு சென்று இருநாட்கள் தங்கிநின்று வருவது வழக்கம். போகும் போது பெருந்தொகைச் சாப்பாட்டுச் சாமான்களையும் ஏற்றிச்சென்று, மிகுதியானவைகளை அக்குடும்பங்களுக்குப் பிரித்துக்கொடுத்தனர். இது ''யானைப் பசிக்குச் சோளம் பொரி'' போன்றுதான் இருந்தது.

அங்குள்ள பிள்ளைகளின் பட்டினி நிலையை என்னால் சகிக்கமுடியவில்லை. பெருந்தொகையான வீரை மரங்கள் வெட்டி வீழ்த்தப்பட்டுக் கிடந்தன. இன்னும் சில கோடரிகள் புதிதாகச் செய்துகொடுத்தோம் அங்குள்ள கடையில் படித்த ஒருவரை ஒழுங்குபண்ணி, கணக்கு எழுதும் வேலையைக் கொடுத்தேன். 3 அடி நீளம் 2 அங் சதுரத்தில் விறகு வெட்டி, கடைக்குப் பக்கத்தில் தெருவோரம் முழுவதும் அடுக்கி ஒவ்வொருவர் கணக்கிலும் பதியச்சொன்னேன்.

புளியந்தீவில் பல நண்பர்களிடம் மலிவான விலையில் விறகு தருவதாகப் பொருந்தினேன். சச்சேரி லொறியை 800 ரூபா வாடகையில் அமர்த்தி, ஐயாயிரம் (5000/-) ரூபா பெறுமதியான சறிச்சரக்கு, கருவாடு, (ஆரம்பகாலத்தில் அரிசியும்) முதலியவைகளை 'நாவியா ஸ்ரோ'ரில் மொத்த விலைக்கு வாங்கி, கட்டுமுறிவுக் கடையில் இறக்கி, விறகுக் கணக்குக்கு அமையப் பொருட்களைப் பண்டமாற்றுச் செய்வித்தேன். இடையிடை சீலை, சேலை முதலியவைகளும் கொடுக்கப்பட்டன.

இதற்கிடையில் பருவகாலத்தில் வயல் விதைக்கவும், சேனை செய்யவும் ஒழுங்குபண்ணினேன். சிலர் வாகரை, பால்சேனை, கதிரவெளி முதலிய இடங்களில் தென்னந்தோட்டக்காரரிடமும், மீன்பிடிப்பவர்களிடமும் வேலைக்கமர்ந்தனர். இதனால் அவர்களது வாழ்க்கை வரவர இலேசாகியது.

# 24. அசுத்த ஆவியின் பிடியில்

யோபுவின் உடலிற் புகுந்து அவரைத் துன்புறுத்த கடவுள் சாத்தானுக்கு அனுமதி கொடுத்தார். இது விவிலியத்தின் பழைய ஏற்பாட்டுச் செய்தி. இயேசு அலகையால் மும்முறை சோதிக்கப்பட்டார். இது பரிசுத்த ஆகமம் புதிய ஏற்பாட்டுச் செய்தி. வேப்பமரத்தில் பேய் இருக்கும். அது மூன்றுமுறை மாத்திரம் கத்தும், நாலாவதுமுறை கத்தாது. இது உலகப் பேச்சுவழக்கு.

விவிலிய நூலில் உள்ளவைகளை நூற்றுக்குநூறு வீதம் நம்புகிறவன் நான். என்றாலும் இவைகளை நேரே காணும் போது இன்னும் விளக்கம் உண்டாகும் என இடையிடையே நினைப்பதும் உண்டு. சில உதாரணங்கள் :-

நான் விவாகம் முடிக்குமுன், சிற்றாண்டி உடையார் சுப்பிரமணியம் என்பவரின் மகன் சிவஞானம் மட் / மத்திய கல்லூரியிலும், ஆரையம்பதி பெருஞ் செல்வந்தர் த. சி. என்பவரின் மகன் தம்பிப்பிள்ளை, அமைச்சர் நல்லையாவின் மருமகன் உருத்திரமூர்த்தி ஆகியோர் புனித மிக்கேல் கல்லூரியிலும் உயர்தர வகுப்பில் படித்துக்கொண்டிருக்கின்றனர். நான் ஆசிரியன். அவர்கள் மாணவராயிருந்தாலும் வயதில் அவ்வளவு வித்தியாசமில்லை. இடையிடையே சிறுக மதுபானத்துடன் உண்டாட்டுக் களியாட்டுக்களில் ஈடுபடுவோம்.

ஒருநாள் இரு கோழிகள் வாங்கி கறி சமைத்து ஒரு போத்தல் சாராயமும் வாங்கி அரைவாசியை முடித்துவிட்டுக் கச்சேரியின் கிழக்குப்புறம் அமைந்துள்ள இறங்குதுறையில் (Jetty) குளிக்கப்புறப்பட்டோம். அப்போது நான் வசித்தது புனித மிக்கேல் கல்லூரியின் அருகில் மத்திய வீதியும், புளியடித்தெருவும் சந்திக்குமிடத்தில் இருந்த வீட்டில். மழை சாடையாகத்

தூறுகிறது. இரு குடைகளுடன் நாலுபேரும் சென்று நன்கு நீராடிவிட்டுத் திரும்பிவந்து, களியாட்டில் மிச்சப்பகுதியைத் தொடர்ந்தோம். சற்றுநேரத்தில் மழையும் விட்டது. மூவரும் சென்றுவிட்டனர்.

அன்று தொடங்கி நான் சுயநிலையில் இல்லை, சாப்பிடுவதும் இல்லை, இரவில் நித்திரையும் இல்லை. கட்டிலில் படுத்திருந்த நான் சிலவேளை நிலத்தில் கிடப்பேன். கட்டிலிலும் தலை, கால்மாட்டில் இருக்கும். இடையிடையே பயந்து எழும்புவேன். ஏதோ பாடசாலைக்குப் போகிறேன் என்பதற்காகப் போவேன். வேறொரு உலகில் சீவிப்பதுபோன்ற எண்ணம்.

ஒரு கிழமையின்பின் தூரத்து உறவுக்காரப் பெண் ஒருத்தி வீட்டுக்கு வந்தபோது அவர் என்னிடம் ''என்னடா உன்ர கோலம், மெலிந்து பயித்தியகாரன்போல இருக்கிறாய்'' எனக் கேட்டுவிட்டுப் போனார். மறுநாள் காலையில் என்னிடம் வந்து ''நீயும், சிவஞானமும், தம்பிப்பிள்ளையும், உருத்திரமூர்த்தியும் கச்சேரியடிக்கு எப்போதாவது குளிக்கப்போனீர்களா?'' எனக் கேட்டார். நான் ''ஆம்'' என்றேன். குளித்துவிட்டு மற்ற இருவரும் கரையேறியபின் நீ சிவஞானத்தின் தோளில் ஏறி நீ நள் குதித்து விழுந்ததும், சிவஞானமும் கரையேறிவிட நீதானே கடைசியாக வந்தநீ என்று கேட்க, நான் 'ஆம்' என்றேன்.

''நீ கரையேறும்போது, ஜெற்றி மதிலில் ஒரு முண்டம் போல கறுப்புக் கம்பளியால் மூடியதுபோல ஒரு ஆள் உனக்குள் புகுந்துவிட்டார். வீட்டில் உனது கட்டிலில்தான் இருக்கிறார். உன்னைத் தலைகீழாகப் புரட்டிவிடுகிறார். கட்டிலில் இருந்து கீழே இழுத்துப்போடுகிறார். ஒருநாள் நீ உன் தலைமாட்டில் வைத்திருந்த செபமாலையைக் காணவில்லை என்று தேடினாய். அது நீ படுத்திருந்த அறையில் ஒரு மூலையில் உருக்குலையாமல், சிலுவை மேலே இருந்தபடி பத்திரமாக இருந்ததைக் கண்டாயா?'' எனக் கேட்டார். அதற்கு ''ஆம்'' என்று சொல்லிவிட்டு உங்களுக்கு இது எல்லாம் எப்படித் தெரியும் என்று கேட்டேன்.

''உன்னைப் பார்த்த உடனேயே, உனக்கு ஏதோ நடந்திருக்கிறது என மனதிற்பட்டது. அன்றிரவு அஞ்சன மை போடும் ஒருவரிடம் சென்று, தான் மைபோட்டுப் பார்க்க வேண்டும் எனச் சொன்னதாகவும், அதற்கான செலவைக் கொடுத்ததும் அவர் மடை வைத்து ஏதோ மந்திரம் சொல்லி அனுமானுக்கூடாக ஏதேதோ செய்து ஒரு வெற்றிலையில் ஒரு துளி மையை விட்டு, தன்னிடம் கொடுத்து கண் இமை

வெட்டாமல் பார்க்கும்படி சொன்னார். அப்படியே செய்தேன் - சினிமாப்படம் பார்த்ததுபோல இருந்தது எனக்கு''

நான் அடிக்கடி இங்கு வந்துபோவதால் உன் சிநேகிதர் பெயர்கள் தெரியும்தானே என்று சொல்லிவிட்டு ஒரு குருவானவரிடம் சென்று ஆசீர்வதிக்கும்படியும் சொன்னார். ''எவ்வளவு காசு கொடுத்தீர்கள்'' எனக் கேட்க, ''இருபத்தைந்து ரூபா'' என்றார். அதைக் கொடுக்க எவ்வளவோ முயற்சிப்பட்டும் அவர் அதை வாங்க மறுத்துவிட்டார். ''நீ சுகமடைந்தால் போதும். எனக்குக் காசு பெரிதல்ல'' எனக் கூறிவிட்டுச் சென்றுவிட்டார். உடனே புனித மிக்கேல் கல்லூரிக்குச் சென்று அருட்தந்தை தியோபிலஸ் அவர்களிடம் சொன்னேன்.

அன்றிரவு 8.30 மணிக்குத் தனது அறைக்கு வரும்படி சொன்னார். சென்றபோது, என்னை முழந்தாட்படியிடச் சொல்லித் தீர்த்தம் தெளித்து ஆசீர்வதிக்கத்தொடங்க நான் அறிவுமயங்கி விழுந்துவிட்டேன். 15 நிமிடம் வரையில் அப்படியே கிடந்து விழித்தபோதும் அவர் செபித்துக்கொண்டே இருந்தார். என்னிடம் தொடர்ந்து தான் சொல்லும்வரையும் வரச்சொல்லி அனுப்பினார்.

ஒவ்வொரு நாளும் அதேநேரம் போனேன். மூன்று நாளின்பின் நான் அறிவுமயங்கவில்லை. இரண்டொரு நாளின் பின் சொன்னார், உன்னில் இருந்தது இன்றோடு போகிறது. நாளைக்கு வரத்தேவையில்லையென்று. அன்றுதான் நான் அவரைப் பார்த்துச் சிரித்தேன். மகிழ்ச்சியான உணர்ச்சி உண்டாயிற்று.

வீட்டில் நானும் தகப்பனாரும் மாத்திரம்தான். சமையல்காரி, மாலை 6 மணிக்கே எல்லாம் ஆயத்தம் பண்ணிவிட்டுச் சென்றுவிடுவார். நான் வீட்டுக்குச் சென்றதும் தகப்பனார் என்னிடம் கொஞ்சநேரம் இங்கே என்ன அமளி துமளி. கதவுகள், யன்னல்கள் எல்லாம் படபட என்று அடித்துக்கொண்டே கிடந்தது. இப்போ சற்று முன்புதான் ஓய்ந்தது எனக் கூறி நடந்த விடயத்தைக் கேட்டார். நான் எல்லா விளக்கமும் கூறினேன்.

ஏதோ ஒரு அசுத்த ஆவி என்னில் குடிகொண்டது. இப்போ விட்டுப் போய்விட்டது என்பதை உணர்ந்தேன். அன்றிரவுதான் சாப்பிட்டேன். அடுத்தநாள் பாடசாலையிலும் எனது மாற்றத்தைக் கண்ட அதிபர் என்னை விசாரித்தார். உண்மையைக் கூறினேன்.

# 25. அசுத்த ஆவியுடன் மற்றொரு போர்

திரு. V. நல்லையாவும், திரு. K. W. தேவநாயகமும் பாராளுமன்ற கற்குடாத்தொகுதிக்குப் போட்டியிட்ட காலமது நான் ஒவ்வொரு நாளும் பின்னேரம் செங்கலடிக்குச் சென்று இரவு 11 மணிவரையில்தான் வருவேன். நாங்கள் இருவரும் ஆசிரியர்களாக இருந்ததால் எங்களது இரு சிறுபிள்ளைகளையும் பாதுகாப்பாக வைத்துக்கொள்ள, எனது மனைவியின் ஊரிலுள்ள ராதா என்னும் கன்னிப்பெண் ஒருவரையும் வைத்திருந்தோம்.

ஒருநாள் இரவு 11 மணிபோல் வந்து கதவைத் திறக்கும்படி சொல்ல மனைவி சொல்கிறார், "கதவைத் திறந்தால் ராதா ஓடிவிடுவாள்" என்று. எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. "பிறகு கதைப்போம், முதலில் கதவைத் திறவும்" எனச் சொல்லித் திறந்ததும் உள்ளே சென்று பூட்டிவிட்டுக் கதைக்கத் தொடங்கினோம்.

இன்று பின்னேரம் உங்களைத் தேடிச் செல்லத்துரை மாஸ்ரர் வந்தார். நீங்கள் தேவநாயகத்தோடு செங்கலடிக்குப் போய்விட்டீர்கள், இரவு 11 மணிபோல்தான் வருவார், எலக்ஷன் முடியும்வரையும் அவரைக் காணமுடியாது எனக் கதைத்துக்கொண்டிருக்கும்போது, ராதா போட்டிருந்த சட்டையுடன் வளவைத் தாண்டித் தெருவால் ஓடத்தொடங்கிவிட்டாள்.

அவளைப் பிடியுங்கள் மாஸ்ரர் எனச் சொல்ல, செல்லத்துரை மாஸ்ரர் துரத்திப்போனார். அவர் நன்றாக ஓடக்கூடியவர். அப்படி இருந்தும் 500 யார்வரை ஓடி வயிரவன் கோயிலடியில், தலைமயிரை எட்டிப்பிடித்து இழுத்துக்கொண்டு வந்தார். நான் ஒரு அறைக்குள் போட்டுப் பூட்டிவிட்டு,

செல்லத்துரை மாஸ்ரரையே அனுப்பி வண. லாசறஸ் சுவாமி யவர்களை அழைத்தேன்.

அவர் இவள் இருந்த அறைக்குப் போனதும், இவள் விறு கொண்டு எழும்பினாள். உடனே சுவாமியார், தெரேஸ், இது எனக்கு அடங்காது. அலோசியஸ்மேரி சுவாமிக்குச் சொல்லி அனுப்பச் சொல்லிவிட்டு அவர் போய்விட்டார்.

செல்லத்துரை மாஸ்ரரை அனுப்பியே அலோசியஸ்மேரிச் சுவாமிக்குச் சொன்னேன். அவர் வந்ததும், இவள் நமது பெட்டகத்தின்கீழ் புகுந்துவிட்டாள். (இவள் பெரிய உருவம். பெட்டகத்தின் கால் 6 அங்குலம் உயரம். எப்படிப் புகுந்தாளோ தெரியாது) அவர் இவளின் தலைமயிரில் பிடித்து இழுத்து வெளியே எடுத்து ஆசீர்வதித்தார். அறிவுகெட்டு விட்டாள்.

கவனமாகப் பார்த்துக்கொள்ளுங்கள். சிலவேளை இரவில் ஓடிவிடுவாள். யாரோ இவளை மணம்முடிப்பதற்காக, சேர்ப்புக்குச் செய்திருக்கிறார்கள் எனச் சொன்னார். அன்று தொடங்கி மனைவி பாடசாலைக்கு லீவு எடுத்துக்கொண்டார். பகலில் பலர் உதவிக்கு வருவர். இரவில் படுக்கைக்கு அகுஸ்தீனார் ஆசிரியர் கலாசாலையில் இருந்து நாலு நாலு பேர் காவலுக்கு வந்து படுத்து விடியப் போவார்கள்.

நானும் செங்கலடியில் இருந்து 6 மணிக்கே வந்துவிடுவேன். குருவானவரும் ஒவ்வொரு நாளும் வந்து ஆசீர்வதிக்கிறார். ஒருநாளைக்கு இலேசாக இருக்கும், மறுநாள் கூடுதலாக இருக்கும். செய்வினை செய்பவன் திருப்பித் திருப்பிச் செய்கிறான். சுடலைகாத்தானுக்கூடாகச் செய்திருக்கிறான். இன்றிரவு (நேற்று) தன்னைக் கட்டிலில் இருந்து தூக்கி முற்றத்தில் எறிந்துவிட்டது. இடுப்பு எழும்பமுடியவில்லை. அரைத்து அரைத்துச் சென்று ஆசிநீர் எடுத்துப் பூசியபிறகு தான் நடக்கமுடிந்தது என்றார் குருவானவரும்.

ஒருநாள் இரவு எனது தலையணையின்கீழ் மூன்று கருங்கல் துண்டுகள் இருந்தன. என் மனைவி அவைகளைக் கொண்டு காணிக்கைமாதா கோவில் சொரூபத்தின் பாதத்தில் வைத்து விட்டு வந்தார். எனக்கும் அடிக்கடி தலை விறுவிறுக்கத் தொடங்கியது. வண. அலோசியஸ்மேரி எனக்கும் ஆசீர்வதிக்கத் தொடங்கினார். என்னிடம் சொன்னார்: சிலவேளை அவள் உனக்கு அடிக்கவருவாள். அவள் அடிக்கமுன் நீ அவளுக்கு அடித்துப்போடவேணும். நீ அடிவாங்கினால் உனக்கும் கரைச்சல் உண்டாகும் என்று.

ஒருமாதமாகிறது. நானும் பாடசாலைக்குப் போவதில்லை. ஒருநாள் எனக்கு அடிக்கவந்தாள். பயத்தில் அவளது முகத்தில் குத்தினேன். மூக்கு உடைந்தது. கதகத என இரத்தம் ஓடுகிறது - பெரிய பரிதாபமாயிருந்தது. நெஞ்சிச்சட்டையால் வழிந்து, மண்டபத்தில் ஓடி, படிக்கட்டால் ஓடி, நிலத்துக்கும் சென்றது இரத்த ஆறுபோல. பெரிய ஆச்சரியமாய் இருந்தது. என்ன செய்யலாம் என யோசித்துக்கொண்டிருக்கும்போது. இரத்தம் ஓடிய அடையாளத்தையே காணவில்லை:

அவள் போட்டிருந்த வெள்ளைச் சட்டையில்கூட ஒரு சிறிய துளிகூட இல்லை. சிவந்த அடையாளமே இல்லை. மூக்கில் காயமா என்றேன். ஒன்றும் இல்லையே என்று காட்டினாள். இரவில் தலையணையை எறிந்துவிட்டுச் செங்கல் ஒன்றை வைத்துப் படுப்பாள்.

சாதாரணமாக இருப்பாள். கண் ஒருமாதிரியாக மாட்டின் கண்போலப் பெரிதாகி உருண்டுபுரண்டால் ஏதோ பிடித்து விட்டது என நம்பலாம். ஒருநாள் சொன்னாள், தான் இந்த வீட்டைவிட்டுப் போவதாயின் 50 பேருக்காவது ஒரு நாளைக்குச் சாப்பாடு கொடுக்கவேண்டும். சோற்றை ஆக்கிப் புதுப் பனையோலைப் பாயில் குவித்து எல்லோரையும் இருத்திச் சாப்பிடப்பண்ணவேண்டும் என்று. பயத்தினால் அவள் சொன்னபடி எல்லாம் செய்தோம். அன்றுமாத்திரம் 500 ரூ. வரையில் செலவு.

யாழ்ப்பாணத்தில் இருந்து மனைவியின் தாயும் வந்திருந்தார். அன்று ஞாயிற்றுக்கிழமை. பூசைக்குப்போக நானும், மாமியாரும், ராதாவும் புறப்பட்டோம். மனைவி வீட்டில் பிள்ளைகளோடு. கோப்பி வைக்கவில்லையா என்று மனைவியிடம் கேட்டேன்.

உடனே ராதா சாப்பாட்டுமேசையில் இருந்த குசினித் திறப்பை எடுத்தாள். கதவில் இருந்த வார்த்தடியைச் சுழற்றினாள், குசினியைத் திறந்தாள். கோப்பிக்கோப்பையுடன் திரும்பிவந்தாள், என்னிடம் தந்தாள் கோப்பியில் ஆவி பறக்கிறது. அசுத்த அரூபியின் திருவிளையாடல் என்று நிச்சயமாகத் தெரிந்தது. என்றாலும் குடித்தேன். கோயிலுக்குள் ஒரே நித்திரை.

ஒருநாள் விறதர் பிலிப் அவர்கள், இதைக் கேள்விப்பட்டு வந்துசேர்ந்தார். ராதாவுடன் கதைக்கிறார்.

விறதர் : எனது பெயர் என்ன?

ராதா : விறதர் பிலிப்.

விறதர் : எங்கே இருந்து வருகிறேன்?

ராதா : கொழும்பில் இருந்து.

விறதர் : கொழும்புக்கு ஏன் போனேன்?

ராதா : முதுகில் ஒரு கட்டு. மருந்து செய்வதற்கு.

விறதர் : நேரே ஆஸ்பத்திரியில் இருந்தா வருகிறேன்?

ராதா : இல்லை. மூன்று நாளைக்குமுன் ஆஸ்பத்திரியில் இருந்து வெளியேறி ஒரு வீட்டில் இருந்து வருகிறீர்கள்.

விறதர் : யாருடைய வீடு?

ராதா : உங்கள் மருமகள் முறையான பெண் வீடு.

விறதர் : அவவுடைய தோற்றம் எப்படி?

ராதா : புறக்டர் டேவிற்றின் மனைவி பரிமளம் போன்ற தோற்றம்.

விறதர் கதையை முடித்துவிட்டு என்னை வாசல் வரைக்கும் அழைத்துச்சென்று இவளைப்பற்றி என்ன சொல்வது என்றே தெரியவில்லை என்றார். என்னைப் பத்திரமாக இருக்கும்படி சொல்லிப் போய்விட்டார்.

ராதாவிடம் சில செபப்புத்தகங்களைக் கொடுத்துப்பார்த்தேன். பிய்த்து எறிந்துவிட்டாள். செபமாலையைக் கொடுத்துப்பார்த்தேன், துண்டுதுண்டாக்கிவிட்டாள். புனித சூசையப்பர் சபைச் சிரேஷ்டராக இருந்த விறதர் கிறிசோஸ்தம் உரோமாபுரி சென்று பாப்பரசரைச் சந்தித்தபோது, அவர் சிறிய அளவிலான பத்திமா படம் ஒரு கட்டு ஆசீர்வதித்துக் கொடுத்தாராம் - அதில் ஒன்றை எனக்கு அனுப்பியிருந்தார். அதை ராதாவின் கையில் கொடுத்தேன். வாங்கவில்லை. பயந்து பின்னுக்குப் பின்னுக்குப் போனாள்.

அதற்கு உடனே பிறேம் போட்டு உயரமான இடத்தில் வைத்துத் தேங்காயெண்ணெய் விளக்கு இரவு பகலாக எரிய விட்டேன். இப்படம்தான் பெரிய ஆபத்தில் இருந்து எங்கள் எல்லோரையும் காப்பாற்றியது.

ராதாவிடம் சாத்திரம் கேட்பதற்காக ஒவ்வொரு நாளும் பத்துப்பேராவது கூடுவர்.

எனக்குச் சொன்ன சாத்திரம். இதைப்பற்றி நான் மனைவியிடம்கூடச் சொல்லவில்லை. ராதா சொன்னதின் சுருக்கம்:-

ஒருநாள் இம்பீரியல் தியேட்டரில் இரண்டாங்காட்சி முடிய இரவு ஒருமணியிருக்கும். புளியந்தீவுப் பாலத்தால் வருகிறேன்.

பாலத்துக் கம்பியில் இருவர் உட்கார்ந்திருக்கின்றனர். ஒருவர் தனது சகோதரியை எனக்கு விவாகம் பேசியவர். நான் அதைத் தட்டிக்கழித்துவிட்டேன். செல்றல் ஹொட்டலில் வியர் (Beer) குடிக்கப்போக அழைத்தார்கள், சென்றேன்.

வார் கீப்பரை (Bar Keeper) எழுப்பினார்கள். பின் கதவு திறக்கப்பட்டது. நான் நிலத்தில், மற்றவர் கடைசிப் படியில், விவாகம் பேசியவர் முதலாம் படியில்.

கொஞ்ச நேரத்தில் வால்கால் போன்ற ஒரு கிளாஸ் நிறைய பீயர் தந்தனர். மெல்ல, கொஞ்சம் குடித்துப்பார்த்தேன். ஒருவிதமான கசப்பும் அருவருப்புத் தன்மையும் ஏற்பட்டது. ஏன் ஏதோ வித்தியாசமாக இருக்கிறதே எனக் கேட்க, பீயருக்குள் கொஞ்சம் ஜின் ஊற்றினேன் என விவாகம் பேசியவர் சொன்னார்.

எனக்கு விளங்கிவிட்டது, இதற்குள் ஏதோ மருந்து போட்டுவிட்டதாக. என்றாலும் வழமையாக எனக்குள்ள முட்டாள் துணிவுடன் குடித்தேன். அருவருத்துக் குடித்ததில் கையிலும் (சினனிவிரலில்) கொஞ்சம் வழிந்தது. துடைத்து விட்டேன். கிளாசின் அடியிலும் கொஞ்சம் மருந்து இருந்திருக்கிறது.

இந்தக் கிளாசை றாக்கையில் வார்க் கீப்பர் வைக்கும்போது, கதவுக்கு நேரே படுத்திருந்த மக்சிம் என்னும் பெயருடைய, நியூவேக்கரி மனேஜர் கண்டு, மறுநாள் காலை வேக்கரிக்குப் போகும்போது அந்தக் கிளாஸையும் கொண்டு சென்றார்.

காலை 6 மணியளவில் மாதா கோவிலில் பூசை முடிந்து வந்த, காலஞ்சென்ற ஆசிரியமணி திரு. K. L. இராசேந்திரம் அவர்களிடம் காட்டி விடயத்தை விளக்கியிருக்கின்றார்.

அன்று முழுவதும் அவர் என்னைத் தேடியிருக்கின்றார். நான் அன்று நாடகம் பழகுவதற்காக கல்முனை, கார்மேல் கழகத்துக்குச் சென்றுவிட்டேன்.

அடுத்தநாள் திரு. இராசேந்திரம் அவர்கள் என்னோடு கதைத்தார். சின்னி விரலில் வழிந்த இடத்தில் பச்சை நிற மாக ஏதோ ஒட்டியிருந்தது. எவ்வளவு தேய்த்துக் கழுவினாலும் போகவில்லை. கடைசியில் கத்தியால் சுரண்டித்தான் நிறத்தை மாற்றமுடிந்தது. அதுவும் 6 மாத காலத்தின்பின் தான்.

இதே மருந்துதான் குடலில் சேர்ந்து வளரியாகி சத்திர சிகிச்சைக்குட்படுத்தியது. இந்த ஒப்பரேஷனைப்பற்றி மக்கள் நினைத்தது. பாத்திமாகிரி வீதி உருவாகியபோது வெட்டப்பட்ட மாமரத்தில் இருந்த வைரவர் பலி எடுத்துவிட்டார் என்று. கேட்டிருந்தவர்கள் எல்லோரும் என்னிடம் உண்மையா என வினாவினர். நான் ஒரு எழுத்துக்கூடப் பிழையில்லை என்றேன். எல்லோரும் திகைப்பூண்டில் மிதித்தவர்கள்போல் ஆனார்கள்.

ஒருநாள் காலை எங்கள் எல்லோரையும் ஆழ்ந்த கலவரத்துள் இறக்கிவிட்டாள் ராதா. அவள் சொன்ன வசனம் "இன்று நடுச்சாமம் 12 மணிக்கு நான் போய்விடுவேன். முடியுமென்றால் தடுத்துப்பாருங்கள்". முன்னேற்பாடுகள் எங்களுக்குள் மும்முரமாக நடக்கின்றன. வண. அலோசியஸ்மேரி அவர்களிடம் சொன்னேன். கவனமாக இருக்கச்சொன்னார்.

ஒவ்வொரு ஜன்னலுக்கும் இரு வார்த்தடி வைத்து 4 ஸ்குரு ஆணி, 4 ஜன்னல்களுக்கும் 16 ஸ்குரு ஆணிகள். ஒவ்வொரு ஜன்னலுக்கும் வெளியில் இருவர் காவல், மொத்தம் 8 பேர். முற்றத்தில் 10, 15 பேர்வரையில் ஆண்கள். மண்டபத்தினுள் பெண்கள் 6 பேர். எல்லோருக்கும் விருந்துபோன்ற இராச் சாப்பாடு.

ராதா படுத்த அறையில் 12 மணிக்கு அலாரம் வைத்த மேசை மணிக்கூடு. ராதாவின் அறை ஒரு கதவு பூட்டப்பட்டு உட்புறமாக நானும் மத்தேஸ் ஆசிரியரும் தனித்தனி ஒரு நிலையிற் சாய்ந்து மறுநிலையில் கால்களைச் சோணால் வீணாலாக வைத்துக்கொண்டோம்.

ராதா படுத்த அறையில் இருந்து மறு அறைக்குப் போகும் வழிக்கதவைச் சாத்தி ஒருக்கணித்து ஓரமாக என் மனைவி படுத்திருக்கிறார். அவவுக்குப் பிரசவநாள் கிட்டியிருந்ததால் நித்திரையில்லை. ஒவ்வொரு மணித்தியாலத்துக்கொருமுறை எல்லோருக்கும் கோப்பி பரிமாறப்படுகிறது. நித்திரை கொள்ளாமல் இருப்பதற்காகக் கதையும பாட்டும் பயனும் தொடர்கின்றன

11.55. ராதா சற்று உரத்துச் சொல்கிறாள், எல்லோரும் கவனமாகப் பாதுகாத்துக்கொள்ளுங்கள். இன்னும் 5 நிமிடம் மாத்திரம். எல்லோருக்கும் உடம்பு உதறல் எடுக்கத் தொடங்கிவிட்டது நான் கவனமாக அவளையே பார்த்துக்கொண்டு இருக்கிறேன். அவள் படுத்தபடியே கிடக்கிறாள்.

இரு நிமிடங்களின்பின் அவள் எழுந்து பாயில் இருந்து கொண்டு, இன்னும் இரு நிமிடங்கள் என்றாள் நாங்கள் மொத்தம் சுமார் 30 பேர். எல்லோரும் நித்திரை. மயான அமைதி. சிறிது நேரத்தின்பின் மனைவி என்னை எழுப்பு கிறார். நேரத்தைப் பார்த்தேன் 12 மணி 3 நிமி.

இந்த 5 நிமிடமும் நாங்கள் எவருமே இவ்வுலகில் இல்லை. ஒவ்வொருவரும் சத்தம்போட்டு மற்றவர்களை எழுப்புகிறார்கள். அவர்கள், நாங்கள் என்ன நித்திரை என்று நினைக்கிறீர்களா என்று கேட்கின்றார்கள். எனக்குச் சிரிப்பும் பயமும் கலந்து செதியில் வெள்ளை வஸ்ஸில் ஏறி அங்கொடைக்குப் போகவேண்டும்போல் இருந்தது.

ராதாவைப் பார்த்தேன். ஒரு சீலைப் பொட்டணிபோல நடு வீட்டில் கிடக்கிறாள். என்னைப் பார்க்கிறாள். அவளது கண்கள் மாட்டின் கண்கள்போலத் தெரிகின்றன. கண்கள் இப்படியாகத் தெரிந்தால் அசுத்த அரூபி பற்றிப்பிடித்திருக்கும் என்ற அனுபவம்.

நான் பயந்து பயந்து அவளிடம் ராதா, உனக்கு என்ன நடந்தது? நீ ஏன் இன்னும் போகவில்லை? 12 அடித்து 5 நிமிஷமாயிற்றே என்று பயம் கலந்த பகிடி ஒன்றைச் சொல்ல, அவள் சுவரில் வைத்திருந்த பத்திமா மாதாவின் படத்தைக் காட்டி, இது செய்த வேலை. நான் வெளிக்கிட்டு ஓடுவதற்கு இரண்டு எட்டு வைத்ததும் அவ ஒரு சவுக்குமாதிரி ஒன்றை வீசினா. அது எனது இடுப்பில் சுற்றி கால் வரையும் சென்றது. விழுந்துவிட்டேன். இல்லாவிட்டால் இந்தநேரம் நான் போக வேண்டிய இடத்துக்குப் போயிருப்பேன். 4 ஜன்னல்களுக்கும் இரண்டு இரண்டு வார்த்தடி, 4 ஸ்குரூ மொத்தம் 16 ஸ்குரூ பூட்டினீர்கள். இவ்விரு ஆண்களும், முற்றத்தில் 10 ஆண், மண்டபத்தில் 10 பெண். எனக்கு இது எல்லாம ஒரு காவலா? காற்றுப்போகும் துவாரத்தின் வழியாக நான் போயிருப்பேன். இவ செய்த வேல. சரி பாப்பம் என்று சபதம் போட்டாள்.

நான் எழும்பி அவளை நெருங்கி, எழும்பிப் பாயில் போய்ப் படு என்றேன். என்னால் எழும்ப இயலாது என்றாள். தூக்கி நிறுத்தினேன். திடீர் திடீர் என விழுகிறாள். இடுப்புக்குக்கீழ் வழக்கமில்லாமல் போயிற்று. மனைவி வந்து அவளைக் கட்டிப்பிடித்து இழுத்துப் பாயில் படுக்கவைத்தார்.

அடுப்பில் நீர் கொதிக்கத்தொடங்கிவிட்டது. விடிய விடியக் கோப்பி போட்டதுதான் வேலை. 5 மணியானதும் மத்தேஸ் மாஸ்ரரை வண. அலோசியஸ்மேரி அடிகளாரிடம் அனுப்பி

விடயத்தைச் சொல்லச்சொன்னேன். அவர் ஒரு பெரிய புதுக் குடம் எடுத்து வைக்கச்சொன்னாராம். வரும்போதே பாலத்துக் கடையில் பெரிய குடம் ஒன்றும் வாங்கிவந்தார்.

அருட்திரு. அலோசியஸ்மேரி அடிகளார் அதிகாலையில் வந்து குடத்தில் நீர் நிறைத்து, ஆசீர்வதித்து, ராதாவைப் படுக்கையிலேயே இருப்பாட்டி முழு நீரையும் அவளின் தலையில் சொரிந்து தூக்கி நிமர்த்தினார். நின்றாள். நடக்கச் சொன்னார். நடந்தாள். அவர் போகும்போது என்னிடம், ராதாவைத் தனது அறைக்குக் கிட்டே வசிக்கும் ஒரு குடும்ப வீட்டில் வைத்து காலை, மதியம், பின்னேரம் தொடர்ந்து சில நாளைக்கு ஆசீர்வதிக்கவேண்டும். இதைச் செய்யும் மந்திரவாதியும் தொடர்ந்தே செய்துகொண்டிருக்கிறான் எனக் கூறினார்.

ராதாவின் தகப்பன் கம்பஹா என்னும் இடத்தில் அரசாங்கக் கந்தோரில் தலைமைக்குமாஸ்தாவாகப் பணியாற்றிக் கொண்டிருந்தவர். பல கடிதங்கள் அனுப்பினேன் வந்து ராதாவைக் கொண்டுபோகும்படி. அவர் பதில்கூட எழுதவில்லை. எங்களை நம்பிவந்த கன்னிப்பெண்ணுக்கு ஏதும் தீங்கு வரக்கூடாது என்றே மூன்று மாதகாலமாக இரவு பகலாகப் பட்ட கஷ்டங்கள், தலைக்குமேலால் கடன்சுமை. இவைகளுக்கு இனி முற்றுப்புள்ளி வைத்தே ஆகவேண்டும் என, மட்டக்களப்புப் பெரும்பாக நீதிபதிக்கு மனுப்பண்ணினேன். அவர் பிடி ஆணை பிறப்பித்தார். கம்பஹாப் பொலிசார் கொண்டுவந்து சேர்த்தனர். மகளைப் பாரம்கொடுத்தோம். அவர் புளியடிக் குடாவில் ஒரு வீட்டில் சேர்ப்பித்தார். குருவானவர் அடிக்கடி சென்று ஆசீர்வதித்தார். பூரண சுகமடைந்தாள். மட்டு/தள வைத்தியசாலையில் தாதியாகக் கடமைபுரிந்தாள்.

புனித வின்சன் டீ போல் தரும சபையின் பிரதேச தலைவராயிருந்தபோது இல்லத்தரிசனைக்குச் சென்றேன். அப்போது ராதா விவாகம் முடித்து, பேரப்பிள்ளைகளுடன் வசித்திருப்பதைக் கண்டேன். பழைய கதைகளை ஞாபகப்படுத்திவிட்டு வந்தேன். அசுத்த அரூபிகள் மனிதனை ஆட்டிப்படைக்கும் என்பது மீண்டும் ஊர்ஜிதம் செய்யப்பட்டது.

# 26. ஏழையின்மேல் இரக்கம்

ஏழைக்கு இரங்கி ஒன்றும் ஈயாத கோடீஸ்வரர்களும் பேருக்கும் புகழுக்கும் ஆயிரக்கணக்கில் கொடுக்கின்றனர். ஓரளவு பணக்காரனும் சில வெள்ளிக்காசுகளைக் கலகலெனச் சத்தம் கேட்கும்படி காணிக்கைப்பெட்டியில் போடுகின்றான். பட்டினிப்பாயில் படுக்கும் ஒரு ஏழை மற்றொரு ஏழைக்கு இரண்டு சதம் கொடுக்கிறான். இதுவே உத்தம நற்கிரியை.

*1985ல்* நான் திருகோணமலைக்குச் சென்றேன். இளம் வயதுச் சிநேகிதரான வண. நோபேட் ஒக்கஸ் பேராலயப் பங்குத்தந்தையாக இருந்தார். அப்போது எனது இரு கெண்டைக் கால்களிலும் கிரந்திபோன்று சொறிவும், சிரங்குமாக இருந்தது. கடல்குளிப்பு இதற்கு உகந்தது எனக் கூறி அவருடனேயே என்னை வைத்துக்கொண்டார். சுமார் ஆறு ஆண்டுகளாக அங்கே தங்கினேன். பலப்பல நற்கிருத்தியங்களைச் செய்தேன். உதாரணத்துக்கு ஒன்றை மாத்திரம் குறிப்பிடுகின்றேன்.

நான் இருந்த அறைக்குப் பக்கத்தில் பாலர் பாடசாலை ஒன்று நடக்கின்றது. கன்னி ஒருத்தியும், தாய்மையடைந்த ஒருத்தியும் ஆசிரியைகள். தாய்மையடைந்தவர் படிப்பிக்கும் நேரத்திலும் வாந்தி எடுக்கும் நேரம் அதிகம். குருவானவர் அவர்களுக்கு உதவி செய்யும்படி என்னிடம் கேட்டார். அப்படி அங்கு உதவிசெய்யச் சென்றபோது மற்றக் கன்னியிடம், வாந்தியெடுக்கும் பெண்ணின் வரலாறு முழுவதையும் அறிந்தேன். அது எழுத்தில் வடிக்கமுடியாத ஒரு தொடர்கதை. எனினும் சுருக்கமாகக் கூறினார்

அவரது தந்தை அரசாங்கத்தில் சிற்றூழியராக இருந்து மாதம் தொள்ளாயிரம் ரூபா ஒய்வூதியம் பெறுகின்றார். இவ

ளது தமையன்மார் நால்வர் மணம்முடித்துத் தனிக் குடும்பங்கள். படித்துக்கொண்டிருக்கும் தம்பி ஒருவர். இவளது மூத்த சகோதரி மணம்முடித்து இரு பிள்ளைகளுடன் அதே வீட்டில் வசிக்கின்றாள் மூத்த சகோதரியின் கணவனுக்கும் நிரந்தரப் பிழைப்பு ஒன்றும் இல்லை குடியிருந்த வீட்டை இரு பெண்களுக்கும் பிரித்து எழுதிக்கொடுப்பதாகப் பெற்றோர் கூறியிருந்தனர்.

இளைய சகோதரி வேற்றுச்சாதி ஒருவரை விரும்பிவிட்டாள். விவாகச்செலவுகளுக்காகக் குடியிருந்த வீட்டை மாதாந்தம் ஒரு ரூபாவுக்கு இரண்டு சதவீதம் வட்டி தருவதாகப் பொருந்தி பதினையாயிரம் ரூபாவுக்கு அடகுவைத்து விவாகத்தை நடத்தினர். மணமகன் கொழும்பில் ஒரு ஹொட்டலில் வேலை. மூன்று மாதத்துக்கு ஒருமுறை வந்து ஒரு கிழமை தங்கி மணவாழ்க்கையைப் புதுப்பித்துச் செல்வார். ஒரு கிழமைச் செலவுக்களவாகவே அவரிடம் பணம் இருக்கும்.

ஒரு வருடமாகியது. இவளும் கர்ப்பவதியானாள். இப்படியான சந்தர்ப்பத்தில் சிலருக்கு வாந்தி எடுப்பது குடும்பச் சொத்து. இதற்கிடையில் தகப்பனார் நேர்மை தவறாத காரணத்தால் ஓய்வூதியம் பெற்றவுடன், 300 ரூபாவைக் கொண்டு அடவு பிடித்தவரிடம் கொடுத்துவிட்டு 600 ரூபாவை மனைவியிடம் கொடுப்பார். இதற்குள்ளாலேயே வீட்டுச் செலவு, தம்பியொருவனுக்குப் படிப்புச் செலவு, சத்திக்கு ஏதும் விருப்பமான சாப்பாடு எல்லாம் நடக்கவேண்டும். இது முடியக்கூடிய காரியமா?

ஒருநாளைக்கு ஒரு சாப்பாடும், சாப்பாடு என்ற பேருக்குத்தான். அதனால் இந்த ஆசிரியை எலும்புந்தோலுமாகிவிட்டாள். பாலர் பாடசாலையில் மாதாந்தம் 150 ரூபா வந்தால் கன்னிக்கு இருபங்கு, கன்னிமை கடந்தவளுக்கு ஒருபங்கு 50 ரூபா மாத்திரம். இது இப்படியே நடந்துகொண்டு போனால் இன்னும் 10 வருடங்கள் சென்றாலும் வளவு மீண்டு எடுக்கமுடியாது. மாதம் 600 ரூபாவுக்கு மேல் வீட்டுக்கும் வராது.

தந்தைக்கும் வயோதிப தசை. வருத்தமும் வாதையும். மூத்த சகோதரியின் கணவன் வீட்டிற்குரிய உறுதியைத் தரும்படி, நாள் குறைந்தாலும் சண்டைக்குக் குறைவில்லையாம். வாசகர்கள் சற்றுச் சிந்தித்துப்பாருங்கள், உங்களுக்கு இப்படி ஒரு நிலை ஏற்பட்டால் என்ன செய்வீர்கள் என்று.

அப்போது எனது மாத ஓய்வூதியம் ஆக 1112 ரூபா. இது வங்கிக்குப் போகும். அந்தப் பிள்ளையின் தகப்பன் நேர்மை

யானவர். பலநாள் சிந்தித்து ஒரு முற்றுக்கு வந்தேன். ஆயர் வந். சுவாம்பிள்ளை அவர்கள் வரும்போது விடயத்தை விளக்கி செடக் நிறுவனத்தில் பதினையாயிரம் (15,000/-) ரூபாவைக் கடனாக வாங்குவது, மாதாந்தம் ஆயிரம் ரூபாவீதம் வங்கிக் காசோலையை செடக் நிறுவனத்துக்குக் கொடுப்பது. நான் கொடுக்கும் காசோலைப் பணம் ஆயிரம் ரூபாவை, பிள்ளையின் தகப்பன் மாதாந்தம் தருவதாயின் அவருக்கு தொள்ளாயிரம் ரூபாதான் ஒய்வூதியம். எப்படி ஆயிரம் ரூபா தரமுடியும்? அப்படித்தான் அவர்கள் தந்தாலும் அவர்களது சீவியம் எப்படிப் போகும்? கேள்விக்குமேல் கேள்வியாகத்தான் இருக்கிறது மூளையில். ஆயர் அவர்கள் இதற்குச் சம்மதிக்கவேண்டும்.

சரி, நீர் பதினைந்து காசோலையைக் கொடுத்து பதினையாயிரத்தை வாங்கலாம். இடையில் உமக்கு ஏதும் நடந்தால், மிச்சக்காசுக்கு என்ன வழி எனக் கேட்டால் அதற்கென்ன மறுமொழி சொல்வது...... இவைகள் ஒன்றுக்குமே எனக்கு மறுமொழி தட்டுப்படவில்லை. இதற்கிடையில் ஆயர் அவர்கள் மட்டக்களப்பில் இருந்து திருமலை வந்து உவர்மலையில் தங்கியிருக்கிறார். நடப்பது நடக்கட்டும் எனக் கடவுளிற் பழியைப் போட்டுவிட்டு ஆயரைச் சந்திக்கச் சென்றேன். பணத்தைக் கேட்டேன். என்னைப்பற்றிய நல்ல அபிப்பிராயம் கொண்டிருந்ததினால்போலும், 'செடக்' நிறுவனத் தலைவர் அருட்திரு. லீயோ அவர்களுக்குத் தொலைபேசிமூலம், நான் கேட்கும் தொகையைக் கொடுக்கும்படி கூறிவிட்டார்.

புத்தகத்தில் ஐந்து 'செக்' மாத்திரம் இருந்தன. வங்கிக்குச் சென்று புதிய செக் புத்தகம் ஒன்று வாங்கிவந்து பதினாறு மாதங்களுக்கும் பதினாறு காசோலைகளைக் கொடுத்துப் பதினாறாயிரம் ரூபா பெற்றேன் – உறுதி எழுதுவதற்குக் கூலிக் காசு ஆயிரம் ரூபா வரையில் வரும் என நினைத்து.

அவர்களது வீட்டுக்குச் சென்று தாய், தகப்பன் இருவரிடமும் விளங்கப்படுத்தினேன். இன்னும் 25 வருடங்கள் சென்றாலும் உங்களால் வீட்டை மீளமுடியாது. கடைசியில் ஈடு பிடித்தவருக்கே 5 இலட்சம் பெறுமதியான வீடும் வளவும் 15 ஆயிரம் ரூபாவுக்குச் சொந்தமாகிவிடும். மாதாந்தம் ஆயிரம் ரூபா நீங்கள் எனக்குத் தருவதாயின் நான் வளவை மீட்டுத் தருவதாக.

அவர்கள் ஒத்துக்கொண்டனர். இளைப்பாற்றி வேதனம் 900 ரூபா மட்டும், எப்படி 1000 ரூபா தரமுடியும். சாப்பாட்டுக்கு என்ன செய்வீர்கள்? அவர்களது பதில், பட்டினி கிடந்து

பழகிவிட்டோம், தொடர்ந்தும் பட்டினி கிடப்போம். கிடைக்கும் சிறிய சிறிய சாமான்களை விற்றாவது மாதாமாதம் 100 ரூபா சேர்த்து ஆயிரம் ரூபாவாகத் தருவோம் என்றார்கள். வளவு மீட்டுக்கொடுத்தாயிற்று.

முதலாம் மாதம் அப்பிள்ளையின் தகப்பன் ஆயிரம் ரூபா கொண்டுவந்து தந்தார். மகளிடம் விசாரித்தபோது 100 ரூபா யாரிடமோ கடன் வாங்கியதாகச் சொன்னாள். நான் அந்த 100 ரூபாவைத் திருப்பிக் கொடுத்துவிட்டேன். ஒவ்வொரு மாதமும் 900 ரூபாப்படிதான் வாங்கினேன். அவர்களது வீட்டில் பட்டினிப்படலம் தொடர்கிறது. என் மனம் நிம்மதி கொள்ளவில்லை.

நோபேட் அடிகளாரிடம் விடயத்தை விளக்கி, அவர்களது வீட்டில் இருந்து எனது சாப்பாட்டைக் கொண்டுவர ஏற்பாடு செய்தேன். இதற்காக அரிசி, தேங்காய் மொத்தமாக வாங்கிக் கொடுத்தேன். ஞாயிறு, சனியில் சந்தைக்குப் போய்ச் சாமான்களும் வாங்கிக் கொடுத்தேன். எனது சாப்பாட்டுடன் அவர்களது பசியும் சற்றாவது குறைவதைக்கண்டு சந்தோஷமடைந்தேன். இவர்களது வீட்டிலிருந்து 50 மீற்றர் தூரத்தில்தான் ''அறிவகம்'' ரியூட்டரியும் ஆரம்பித்தநால் எல்லாம் வசதியாகப்போயிற்று.

1991ல் மட்டக்களப்புக்குத் திரும்பி வரும்போது, அப்பிள்ளையின் பெற்றார், குடும்பம் முழுவதுமே அழுது பிரலாபித்து, தங்களுக்கு நன்மை செய்யக் கடவுள் அனுப்பிய தூதர் என்றும் சொல்லி வாழ்த்தி வழியனுப்பிவைத்தனர்.

# 27. சில நகைச்சுவைச் சம்பவங்கள்

இருபதாம் ஆண்டுகளில், புளியந்தீவு மத்திய தெருவில் இப்போதுள்ள ''எகெட்'' கடைக்கு எதிரில் மினி மார்க்கட் இருக்கும் வளவில் ஒரு தச்சுத் தொழிற்சாலை இருந்தது. சிறப்பியான் கம்மாலை என்றால் மட்டக்களப்புப் பகுதியில் எல்லோருக்கும் தெரியும். மற்றக் கம்மாலைகளில் செய்யமுடியாதவைகளை இங்கே கொண்டுவந்துதான் செய்வர்.

சிறப்பியான் கம்மாலையில் அதிகமாக இரட்டைமாட்டு வண்டில், ஒற்றை மாட்டு வண்டில், வக்கிக்கரத்தை, திருக்கல் வண்டி முதலியவற்றின் சக்கரம், குடம், நுகம், கடைச்சல் வேலைகள், பலகையில் வேலைப்பாடு அறுத்தல், கோதுதல், பாஸ்கு, சூரன்போர் போன்ற பொம்மலாட்ட முகம், கண் மூடித் திறக்கும் விதமாக, கைகள் விரல்களை மடக்கி நிமிர்த்தக்கூடிய மாதிரியான நுட்ப வேலைகள் இடம்பெறும். ஆர்மோனியம், வயலின் முதலிய வாத்தியங்களும் பழுதுபார்த்தனர், 100 அடி, 30 அடிக்குமேல் நீள அகலம்கொண்ட ஓலையால் வேயப்பட்ட திறந்த மண்டபம்.

பிற்பகல் 5 மணிக்கு வேலை முடிந்ததும், அழகாகச் சுத்தம் செய்யப்பட்டு 6 மணியானதும் 3 அரிக்கன் லாம்பு கொழுவப்படும். இதன் சொந்தக்காரரான சிறப்பியான் இதே வளவில் சற்றுத் தள்ளி சிறிய கல்வீட்டில் குடித்தனம் செய்தார். காலை 10 மணி, பிற்பகல் 3 மணி தவறாமல் எல்லோருக்கும் தேநீர் வழங்கப்படும். இடையிடையே வேலைகளை மேற்பார்வை செய்வார்.

வேலைகளைப் பாரமெடுப்பதும், பணக் கொடுக்கல் வாங்கலும் அவர்தான். நேர்மையானவர், எல்லோரதும் மதிப்பைப்

பெற்றவர். அரசாங்க உத்தியோகத்தர், படித்தவர், படியாதவர், வயதுசென்றவர், வாலிபர் எனப் பலரும் 6 மணிக்கு வந்துசேர்வர். சிலர் சீட்டாடுவர், படித்தவர்கள் கூடிப் பல பிரயோசனமான விடயங்களை அலசி ஆராய்வர். படிப்பிலும் வயதிலும் குறைந்தவர்கள் தங்கள் அனுபவங்கள், கெட்டித்தனங்களைப் புழுகித்தள்ளுவர். இவைகள் கேட்கக் கேட்க இன்பம் பயப்பனவாகவேயிருக்கும்.

மேல்மட்டக் குழு, கீழ்மட்டக் குழு என இரண்டாகப் பிரித்து ஒருசில விடயங்களைக் குறிப்பிடுகின்றேன்.

மேல்மட்டக் குழுவில் பல சமயத்தவர்களும் உள்ளனர். ஆசிரியர் சிலர், கோடு கச்சேரி உத்தியோகத்தர், நடிகர்களும் அடங்குவர்.

கீழ்மட்டக் குழுவில் கூலித்தொழிலாளர், சண்டியன்மார், மதுபோதையில் ஈடுபடுபவர்கள் என்போர் அடங்குவர்.

மேல்மட்டக் குழு, காதுக்குள் மிட்டாய்:

கிராமக்கோட்டு நீதிவானும், நகரசபை உபதலைவரும், ஒரு ஆசிரியரும் விமானத்தில் ஏறினார்கள். இதற்குமுன் ஒரு போதும் அவர்கள் விமானத்தில் பயணம் செய்யவில்லை. விமானம் புறப்பட ஆயத்தம். ஆசனத்திலுள்ள பட்டியை இடுப்பைச் சுற்றிக் கட்டிக்கொள்ளும்படி அறிவித்தல் கொடுத்தும் ஒருவரும் கட்டிமுடிக்கவில்லை. சரியான முறை தெரியாமல் தட்டுப்பட, பணிப்பெண் வந்து கட்டும் முறையைக் காட்டிக்கொடுத்தாள். கட்டிக்கொண்டனர்.

பின்பு ஒரு தட்டில் பஞ்சும் இன்னொரு தட்டில் நடுவில் துவாரமுள்ள சிறிய வட்டமான வெள்ளை நிறமான பொருளும் வந்தன. மூவரும் ஒவ்வொன்றாக எடுத்துக்கொண்டனர். என்ன செய்வதென்று தெரியாமல் மூவரும் கையில் வைத்துப் பிசைந்துகொண்டிருந்தனர். ஆசிரியர் கொஞ்சம் மூளையைப் பிரயோகித்து, பஞ்சு காதிற்குள் அடைப்பதற்கு. ஏனெனில் விமானம் புறப்படும்போது பெரும் இரைச்சல் உண்டாகும் தானே, வெறும் பஞ்சை மாத்திரம் காதுக்குள் வைத்தால் சிலவேளை உள்ளே போய்விடும் என்றுதான் இந்த அடைப்பும் தரப்பட்டது. இந்தத் துவாரத்துக்குள்ளாகப் பஞ்சைப் புகுத்தி, வட்டமான பொருளைக் காதுக்குள் இறுக்கிவிட்டால்தான் சரி என நினைத்து அப்படியே செய்து காதுக்குள் இறுக்கி அடைத்துவிட்டார்.

சேர்மனும், நீதிவானும் ஆசிரியரைப் பின்பற்றி அப்படியே செய்தனர். மூன்றுபேருக்கும் ஒற்றைக்காது மட்டும் வெள்ளை நிறம். பணிப்பெண்ணுக்குச் சிரிப்பு வந்துவிட்டது. மூவருள்ளும் ஆசிரியர்தான் இளமையும் அழகுமுடையவர். பணிப்பெண் மெல்ல ஆசிரியரது காதில் "Put the cotton in to the ears and the Peppermint in your mouth" எனக் கூறியதும் ஆசிரியர் அப்படியே செய்தார். மற்ற இருவரும் அப்படியே செய்தனர்.

இக்கதை மிகவும் மேல்மட்டத்தில் டாகுத்தர்மார் நியாய துரந்தரர் போன்றோர் கூடிய கொண்டாட்டமொன்றில் ஆசிரியரின் மடமைத்தனம் என்ற தலைப்பில் பகிடியாகப் பேசப்பட்டது. கிராம நீதிவான், நகரசபைத் தலைவர் என்ற பெயர்கள் வரவில்லையாம்.

ஒருநாள் பலர் கூடியிருந்த ஒரு கொண்டாட்டத்தில் கதாநாயகர்களான மூன்றுபேரும் சமுகம் கொடுத்திருந்தனர். நகரசபை அக்கிராசனர் திரு. A. S. T. கனகசபை, அந்த ஆசிரியரைப் பார்த்து பெப்பர்மின்றைக் காதுக்குள் வைத்துச் சாப்பிட்டீராமே எனப் பகிடிபண்ணி, சரியான முட்டாள் பட்டம் பெற்றுவிட்டீர் என்றதும், அந்த ஆசிரியர் அங்கிருந்த கிராம நீதிவானையும், உப அக்கிராசனரையும் காட்டி, நான் முட்டாள் பட்டம் பெற்றால் இந்த இருவரும் கூழ் முட்டைகள். இருவரும் என்னைப் பார்த்துத்தானே ஒற்றைக்காதில் கடுக்கள் போட்டவர்கள். பிறகு நான் பெப்பர்மின்றை வாய்க்குள் போட இவர்களும் போட்டுவிட்டார்கள் என்றார். அப்போதுதான் எல்லோருக்கும் உண்மை தெரியவந்தது. அன்றுதொடங்கி ஆக மேல் மட்டத்தில் இவர்களைக் கண்டால் காதுக்குள் பெப்பர்மின்ற் இருக்குதா எனப் பகிடியாகக் கேட்கத்தொடங்கினர்.

சமயப்பிணக்கு:

புனித மிக்கேல் கல்லூரி மாணவர் சிலருடன் வண. கிறெளதர் சுவாமியார் கொத்துக்குளத்து மாரியம்மன் கோயிலடி ஆற்றங்கரைக்குச் சுற்றுலாவுக்குச் சென்று மதிய உணவை அங்கேயே தயாரித்தனர். மாணவர், அக்கோயில் ஐயரிடம் உரல், உலக்கை வாங்கி அதில் மாசி இடித்துவிட்டனர். மாலையில் திரும்பக் கொடுக்கும்போது உரலில் மாசி இடித்து அதன் தூய்மையைக் கெடுத்துவிட்டீர்கள் எனக் குருக்களுக்கும் மாணவருக்கும் இடையில் வாக்குவாதம். இது நீதித்தலம் வரை சென்றுவிட்டது.

வழக்காளி: சைவக்குரு.
எதிரி : கத்தோலிக்கக் குரு.
நீதிபதி : கத்தோலிக்க சமயத்தவர்.

வழக்காளியின் சார்பில் வாதிப்பதற்கு எந்த வக்கீலும் முன்வரவில்லை. கடைசியில் திரு. R. B. கதிராமர் தெரிபட்டார்.

எதிரிபக்க வாதம்: உரலிலாவது உலக்கையிலாவது - புனிதத் தன்மைக்குரிய அடையாளம் எதுவும் இருக்கவில்லை. எனவே இது குற்றமாகாது.

வாழக்காளிபக்க வாதம்: கத்தோலிக்க நீதிபதி இவ்விடயத்தில் தீர்ப்பளிப்பது அவ்வளவு முறையல்ல.

வழக்கு பின்போடப்பட்டது.

அடுத்த தவணைக்குக் கொழும்பில் இருந்து பௌத்தசமய நீதிபதி ஒருவர் வந்தார். சமய அடிப்படையில் புளியந்தீவு மக்களே இரண்டாகப் பிரிந்தனர். நீதித்தலம் சனக்கூட்டத்தால் அமளிதுமளிப்படுகிறது. வழக்கு சற்றுநேரம் சூடுபிடிக்கிறது.


நீதிபதியின் தீர்ப்பு: உண்மையான வழக்காளிகள் உரலும், உலக்கையும். எதிரிகள் மாணவர்கள். இரு குருக்களும் பகைப்பதில் அர்த்தமில்லை. இருவரும் ஒருவருக்கொருவர் கையைக் கும்பிட்டுச் சமாதானத்தைத் தெரிவித்துக் கொள்ளுங்கள், வழக்கைத் தள்ளிவிடுகின்றேன்.

சனங்களும் சந்தோஷத்துடன் சென்றனர்.

நரிக்கொம்பு வைத்திருந்தால் நல்லகாலமா:

குதிரை, நரி இவைகளுக்குக் கொம்பில்லை என்றே சொல்லுகிறார்கள். இல்லாத ஒன்றுக்கு உவமை கூறும்போது 'குதிரைக் கொம்பு' என்றும் வழக்கில் உள்ளது. சில நரிகளுக்கு மாத்திரம் நெஞ்சில் ஒரு அங்குல நீளத்தில் கொம்பு முளைக்குமாம் (படம் பார்க்கவும்). இதைப்பற்றி ஆங்கிலத்தில் ஒரு பாட்டு. ஒரு நாடோடித் தாய் தன் குழந்தையைத் தாலாட்டும்போது...

Your father has gone to the Jungle
to bring you a fox's horn
He'll find it where the Jungle's stopped burning.
and the long green grasses grow
and you litlle gypsy baby
Will find bright gold at your door.



Where are my glasses — oh! here theyare!
(Page : 102)




father has gone to the jungle.

(Page : 148)



"......... you little gypsy baby will find bright gold at your door." (Page : 148)



சாண்டோ சங்கரதாஸ், பண்டிதர் செ. பூபாலபிள்ளை

*(பக்கம் 3, 151)*

ஒருவர் புளியந்தீவுச் சந்தையில் 5 ரூபாவுக்கு நாடோடிக் கன்னியிடம் நரிக்கொம்பு ஒன்றை வாங்கித் தனது மணிப் பேர்சில் வைத்திருந்தாராம். கல்முனைக்குச் சென்று சந்தையில் 25 புசல் அரிசி வாங்கி வண்டிலில் ஏற்றி பணியத்தார் வோட்டில் ஏற்றிப் புளியந்தீவுக்குக் கொண்டுவர நினைத்து அப்படியே செய்தார். இடையில் கல்முனையில் வைத்து விதானையார் அரிசியை மறியலாக்கிவிட்டார். அன்று பகிரங்க விடுமுறை நாள். மறுநாள்தான் கோட்டுக்குக் கொண்டு போய்த் தீர்க்கலாம் எனவும் சொல்லிவிட்டார் இரண்டாம் உலகமகா யுத்தகாலம். திரு. A. M. A. அசீஸ் அவர்கள் கல்முனையில் உதவி அரசாங்க அதிபராக இருக்கிறார். அரிசி கொண்டுவந்தவர் அசீஸ் துரையோடு கதைத்தபோது அவர் 25 புசலுக்குப் பெர்மிட் எழுதிக்கொடுத்தாராம். இது நரிக் கொம்பின் திருவிளையாடலாக இருக்குமோ?

திடீர் சூப்!

சின்ன உப்போடையில் தற்போது மீன்பிடிக் கூட்டுத் தாபனம் இருக்கும் வளவில் 40 ஆண்டுகளுக்கு முன் ஒரு குருமனை இருந்தது. இதில் வெள்ளைக்காரத் துரை ஒருவர் வசித்துவந்தார். இந்த வீட்டுக்கு மலைநாட்டுத் தோட்டத் துரைமார் அடிக்கடி விருந்தாளிகளாக வருவதுண்டு.

ஒருநாள் நடுச்சாமத்தில் இரு துரைமார் விருந்தாளிகளாக வந்தனர். எஜமான் சமையல்காரரிடம் இருவருக்கும் சாப்பாடு தயாரிக்கச் சொன்னார். குசினியில், பாண், வட்டர், பழம் எல்லாம் இருந்தன. ஆனால் சூப் வைக்க எதுவும் இருக்கவில்லை. திடீரென்று அவருக்கு ஒரு ஐடியா உதித்தது. சூப் வைத்துவிட்டார்.

விருந்தாளிகள் இருவரும் சாப்பாட்டின்போது இந்த சூப்பை மிகவும் ரசித்துக் குடித்தனர் "Fine Excellent" என்று பாராட்டினர். ஆனால் அந்த சூப்பின் மர்மம் ஒருவருக்கும் தெரியாது.

பின்பு ஒருநாள் அந்தச் சமையல்காரரே அந்த மர்மத்தை, சந்தர்ப்பவசத்தால், நமது கீழ்மட்டக் குழுவினரிடம் தெரிவித்துவிட்டார்.

அந்த மர்மம் இதுதான்:- குசினி மேசையில் இறைச்சிகள், மரக்கறிகளை வெட்டும்போது அதைத் துடைப்பதற்கு ஒரு துணி இருந்தது. மேசையின் கீழ்ச்சட்டத்தில் தொங்கிய அத் துணியில் நல்ல கறிமணம் இருந்தது. சமையல்காரர் அந்தத் துணியைக்கொண்டே சூப்பைத் தயாரித்தார். குடித்துப் பார்த்தார் அபூர்வமான சுவை அதையே விருந்தாளிகளுக்குப் பரிமாறிவிட்டார். ★

# 28. சில சமூக உறுத்தல்கள்

மதிப்புமிக்க சென் அன்றூஸ் பாடசாலை:

ஆரம்பகாலத்தில் பல பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. ஆனைப்பந்திப் பாடசாலை என்னும் பெயருடன் அருணாசலம் தேசிகர் அவர்களால் சைவசமய அடிப்படையில் நிகழ்ந்த ஒன்று; கோவிந்தர் தெருவும், வைத்திய சாலைத் தெருவும் சந்திக்கும் சந்திக்கு அண்மையில் ஆலையடிப்பள்ளி என்னும் பெயருடன் மெதொடிஸ்த சபையின் அனுசரணையுடன் செல்லப்பா வாத்தியாரால் நடாத்தப்பட்டது ஒன்று. இரண்டும் கொஞ்சக்காலத்தின் பின் காரணம் கண்டுபிடிக்க முடியாத நிலையிலேயே மூடப்பட்டுவிட்டன.

புனித மிக்கேல் கல்லூரி, சென் மேரிஸ், கார்மேல் கழகம், வின்சன்ற கல்லூரி இவைகள் ஓரளவு வளர்ச்சிபெற்று வந்தன. ஆனால் பலராலும் போற்றப்படக்கூடிய வகையில் சென் அன்றூஸ் பாடசாலை, மட்டக்களப்புச் சந்தைக்கு அருகில், ஜெற்றியின் ஆற்றுக்கு அக்கரையில் Rev. தம்பிமுத்து அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது.

இவர், திரு. E. R. தம்பிமுத்து அவர்களின் சகோதரர். இவர்தான் முதன்முதல் அரசாங்கசபை அங்கத்தவராகப் பதவி பெற்று சபைக்குச் சென்றபோது, சிங்கள அங்கத்தவர் சிலர் 'மட்டக்களப்பில் இருந்து வந்த புது விளக்குமாறு' எனக் கூறியதும், இவர் ''நிச்சயமாக உங்கள் மூளையில் பிடித்திருக்கும் தூசியைத் துடைக்கவந்த தும்புக்கட்டுத்தான்'' எனத் துணிந்து கூறிய அஞ்சாநெஞ்சம் படைத்த மூளைசாலி. ஆழ்ந்த அறிவு, துணிவு முதலியன இவர்களது குடும்பச் சொத்து எனக் கூறலாம்.

அங்கிளிக்கன் சபையைச் சேர்ந்தவர்கள். அங்கிளிக்கன் சபைக்கு மட்டக்களப்பில் செல்வாக்குக் குறைந்ததால், இப்

பாடசாலை தளைத்து வளராமல் அடிமாந்திப்போயிற்று. எனினும் இப்பாடசாலையின் இலட்சணங்களை மனதில்இருத்து வது நம் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

மாணவர் எல்லோரும் தமிழிலேயே பிறந்து வளர்ந்துவரு கிறவர்கள். தனித் தமிழில் கற்க வேறு பாடசாலைகள் உண்டு. தனி ஆங்கிலத்தில் சில பாடசாலைகள் பேருக்கு இயங்கிக் கொண்டிருந்தவேளை. Bilingual School இரு மொழிப் பாட சாலை. எட்டாம் ஆண்டு வரையும் தமிழ் இலக்கியம், தமிழ் இலக்கணம், தமிழ் வரலாறு, ஆங்கிலத்திலும் ஆங்கில இலக் கியம், ஆங்கில இலக்கணம், ஆங்கிலத்தில் வரலாறு. 8ம் ஆண்டு சித்தியடைந்த பின் தங்கள் விருப்பப்படி மேற்படிப் பைத் தொடரலாம். 8ம் ஆண்டு வரையும் இப்பாடசாலை யில் படித்தவர்களே இன்று மேதாவிகளாகத் திகழ்கின்றனர்.

பிரபலியம் வாய்ந்த முத்துவேலரின் மகன் திரு. A. M. நல்லையா என்பவர் சாரணர் ஆசிரியராக இருந்து மட்டக் களப்பில் சாரணர் இயக்கத்தை ஆரம்பித்துவைத்த பெருமை யைப் பெற்றவர் ஆவார்.

வித்துவான் சரவணமுத்தனின் கலை ஆர்வம் :

மட்டக்களப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட அருணகிரி என்பவரின் மகன் சரவணமுத்து (சரவணமுத்தன்). இவர் அர சாங்க உத்தியோகத்தர். நடிப்பில் வீரன். இராவணனுக்கு நடித்து ''இராவணன் சரவணமுத்தன்'' என்னும் சிறப்புப் பெயரையும் பெற்றவர். கொழும்பு வைத்தியசாலையில் சத்திரசிகிச்சையின் பின் அன்றிரவு கட்டிலிற் படுத்திருந்த போது பாட்டுப் பாட விருப்பம் வந்ததாம். ''திரிலோகமும் புகழும் தீர வீர சூரன் நானே'' எனப் பாடினாராம். நடிக் கவும் விருப்பம் வந்ததாம். கட்டிலில் இருந்து குதித்து அரச கெம்பீரத்துடன் நடந்தாராம். சத்திரசிகிச்சை செய்த இடத் தில் இருந்த ஒட்டுக் கழன்றுவிட்டதால் இரத்தப்பெருக்கு ஏற்பட அறிவு மயங்கிக் கீழே விழுந்தார். இரத்தப்பெருக்கின் அதிகத்தால் உயிரே பிரிந்தது என்றால் இதற்குக் காரணம் பாட்டா, நடிப்பா, வைத்தியசாலை நிருவாகமா என்பது சிந்திக்கவேண்டிய விடயம்.

சாண்டோ சங்கரதாசின் சாகசம் :

சிலர் உல்லாசப் பயணமொன்றை மேற்கொண்டு தாழங் குடா என்னுமிடத்துக்குச் சென்று மதிய உணவுக்குக் கறி சமைக்கச் சிறிய ஆட்டுக்கடா ஒன்றை வாங்கினர். தலை யைத் துண்டாக்கி ஆட்டைக் கொன்றுவிட்டனர். எப்படித்

தோலை உரிக்கலாம் எனத் திண்டாடிக்கொண்டிருக்கின்றனர். ஏனெனில் எல்லோரும் உத்தியோகத்தில் இருந்து சொகுசாக வாழ்பவர்.

கத்தோலிக்க தேவாலயத்தின் முன் மணலில் இருந்து கதைத்துக்கொண்டிருக்கின்றனர். அவ்வேளை தெருவில் போய்க்கொண்டிருந்த சாண்டோ சங்கரதாஸ், பிஸ்கால் திரு. சந்திரசேகரம், செல்லத்துரை உடையார் இவர்களைக் கண்டதும் அவர்களோடு கதைக்கச்சென்றார். அவர்கள் ஆட்டுக் கதையையும் சொல்லியிருக்கின்றனர்.

உடனே சாண்டோ அவர்கள் ஒரு வீட்டில் மெல்லிய கயிறும், கூரான கத்தி ஒன்றும் வாங்கிவந்து ஆட்டின் கழுத்தில் நன்றாக இறுக்கிக் கட்டி ஒரு மரத்தில் தூக்கிவிட்டு, கால் பகுதியில் ஒரு சிறிய வெட்டுப் போட்டு வாயை வைத்து இரண்டு மூன்று முறை மூச்சுப்பிடித்து ஊதினாராம். மெல்லிய சத்தத்துடன் ஆட்டின் தோல் விம்மிப் புடைத்து வந்ததாம்.

வயிறு, முதுகு, கால்களில் கத்தியை விட்டு மிகவும் இலேசாகத் தோலை உரித்துக் கொடுத்தாராம். பெரிய கத்தியால் வயிற்றைப் பிளந்து வயிற்றினுள் இருந்த எல்லாவற்றையும் எடுத்து பக்கத்தில் இருந்த வாழையிலையில் வைத்துவிட்டு, கிணற்றடிக்குச் சென்று கையைக் கழுவிவிட்டு, போகப் புறப்பட்டாராம்.

செய்யாமற் செய்த உதவிக்குத் தாங்கள் என்ன பிரதி உபகாரம் செய்யலாம் என்று பிஸ்கால் சந்திரசேகரம் அவர்கள் வாய்விட்டுக் கேட்டாராம். அதற்கு சாண்டோ அவர்கள் உங்களுக்கு விருப்பமாய் இருந்தால் அதன் ஈரலைத் தான் கொண்டுபோவதாகக் கூறினாராம். எல்லோரும் சந்தோஷத்தோடு அதைக் கொடுத்து வழியனுப்பி வைத்தனராம்.

பிற்காலத்தில் இலங்கை, இந்தியா, மலேசியா முதலிய இடங்களில் சங்கரதாஸ் சாண்டோ எனப் பெரும் புகழ்பெற்றவர். இன்று இவருக்கு உருவச்சிலை ஒன்றும் கல்லடியில் நிறுவப்பட்டுள்ளது.

மனவலிமையும், உடல்வலிமையும் ஒன்றாக அமைந்ததால் ஆட்டுத்தோலும் பலூன்மாதிரிப் பருத்தது – நம்பவும் முடியவில்லை, நம்பாமல் விடவும் முடியவில்லை.

முத்திப்பேறுபெற்ற ஜோசேப்வாஸ் அடிகளார் :

மட்டக்களப்புப் பகுதியில் பல சிற்றரசர்கள் ஆட்சிபுரிந்து கண்டி மன்னனுக்குத் திறை கொடுத்துள்ளனர். இது சரித்திர

வரலாறு. பொதி எருதுகள்மூலம் சம்மாந்துறை வழியாகக் கண்டி நகருக்குச் சென்று வாணிகஞ் செய்தனர். ''அட்டைக் கடியும், அரிய வழி நடையும், கட்டை இடறலும் காணலாம் கண்டியிலே''. இது மட்டக்களப்பு வாணிபரின் வாயில் இருந்து வந்த வசனம்.

சம்மாந்துறையில் இருந்து கண்டிக்குச் சென்ற பழைய கிட்டிய பாதைகள் தூர்ந்த நிலையில் இன்றும் உள்ளன. மட்டக்களப்பில் இருந்து கண்டியின் எல்லையிற் கால் வைக்கும் இடம் ''கண்டியக்கட்டு''. இது இன்றும் உள்ளது.

1710ல் தாண்டவன்வெளி பரி. காணிக்கைமாதா கோயில் வளவில் ஓலைக் குடிலில் பலி ஒப்புக்கொடுக்கும்போது, பிடிபட்டார். கோயில் தீக்கிரையாகியது. அதிலிருந்த மாதா சொரூபம் அற்புதமாய் மறைந்தது. பிறகு கண்டெடுக்கப்பட்டது. இன்றும் இச்சொரூபம், தாண்டவன்வெளி காணிக்கை மாதா கோயிலில் உண்டு.

வம்மி மரத்தில் கட்டி அடிக்கப்பட்டார். நாடு கடத்தப்பட்டார். இவைகளை நிச்சயப்படுத்தியவர்கள் 17ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஒல்லாந்தர் ஆட்சியின்போது அம் மதத்தைப் பின்பற்றிய ஸ்ரீவன் குடும்பத்தின் வழிவந்த ஜோசையா என்பவர். வம்மி மரமும் இவர்களுடைய வளவிலேயே இருந்தது. இம்மரம் 1913ல் ஏற்பட்ட யானை மிதந்த வெள்ளத்தால் அள்ளுண்டு போயிற்றாம்.

முத். முனீந்திரர் 1711, தை 16, வெள்ளி நள்ளிரவில் இறைவனிடம் சென்றார் மூன்றாம் நாள் 19ம் திகதி அவரால் நிருமாணிக்கப்பட்ட ''மனம் திரும்புதல் மாதா'' ஆலயத்தில் அடக்கம்செய்யப்பட்டார். இதில் நாம் கவனிக்கவேண்டிய விடயம், அவரது உள்ளங்கால் தோலும், பாதங்களும் படிந்த மண், தாண்டவன்வெளிப் பங்குக் காணிக்கை மாதா கோவில் வளவில் உண்டு. ஏனெனில் இலங்கையில் காலடி வைத்த 24 ஆண்டுகளும் செருப்பும் இல்லாமல் வெறுங்காலுடனேயே பயணஞ் செய்தவர். இரத்தத்துளிகளும் சிந்தியிருக்கக்கூடும்.

வைத்தியசாலைகளைப்பற்றி :

தனியார் வைத்தியசாலைகள் ஓரளவு சுமுகமாக நடைபெறுகின்றன. ஆனால் பணம் குட்டிச்சாக்கில்தான் கட்டிக்கொண்டு போகவேண்டும். அரசினர் வைத்தியசாலைகளில் உயர்பதவி வகிப்போர் மரியாதையாக நடந்துகொள்கின்றனர். கீழ் உத்தியோகத்தரிடமும், புதிதாகப் பதவியேற்றவர்களிடமும் அடாவடித்தனம் அதிகமுண்டு.

ஒரு நாள் பெரிய டாகுத்தர் கீழ் உத்தியோகத்தருக்கு அறிவுரை கூறுகின்றார்: கன்னியாஸ்திரிகள் நடத்தும் வயோதிபர் மடங்களைப் போய்ப் பாருங்கள். அன்பு, ஆதரவு, சகிப்புத்தன்மை, புனிதம் முதலியவற்றை அங்கே காணலாம். அங்கேயுள்ள குளியல் அறை, கழியல் அறைகூட எவ்வளவு நன்றாக இருக்கின்றன. ஏன்? அவர்கள் சம்பளத்துக்காக வேலை செய்பவர்களல்ல, கடவுளுக்குப் பயந்து அவருக்காக ஊழியஞ் செய்பவர்கள். நீங்களும் அப்படி நடக்கப் பழகுங்கள்.

இந்துக்கோயில் வண்ணக்கர் கத்தோலிக்க கோயிலுக்குப் பலிபீடம் செய்துகொடுத்தது :

மட்டக்களப்பு ஊறணியில் வசித்த ஒரு செல்வந்தர். ஆறடி உயரமும் அதற்கேற்ற பருமனும் உடையவர். சாத்திரமும் சொல்வார். இரு கைகளிலும் பத்துப் பவுணுக்கு மேற்பட்ட இரு கிட்டிக்காப்புகள் போட்டிருப்பார். எப்போதும் நடையிலேயே திரிவார். ஊறணித்தம்பியர், கிட்டிக்காப்புத் தம்பியர் என்றே அழைக்கப்பட்டார். மரியாளும், கண்ணகை அம்மாளும், மாரியம்மனும் சகோதரிகள் என்றே சொல்லிக் கொள்வாராம்.

பல்லாயிரம் ரூபா செலவில் நல்ல தேமல் முதிரைமரத்தில் பீடம் ஒன்று செய்வித்துக் காணிக்கை மாதா கோவிலில் தானே நின்று நிறுவிவைத்தார். தேவதாயார் தன்னிடம் கனவில் கேட்டுக்கொண்டபடி செய்தாராம் எனக் கூறினார். இப்படியான அழகிய வேலைப்பாடமைந்த ஒரு பீடம் கிழக்குமாகாணத்திலேயே இருக்கவில்லை.

வண. டோமினிக் சாமிநாதன் தாண்டவன்வெளிப் பங்குத் தந்தையாக இருந்த காலத்தில் இப்பீடத்தைக் கழற்றி வைத்துவிட்டு வேறுவிதமாக, குருவானவர் மக்களைப் பார்த்தபடி பலி ஒப்புக்கொடுக்கும் ஒரு பீடத்தை அமைத்தார். இது பிரயோசனமற்று இருந்ததை நீர்கொழும்புப் பக்கம் இருந்து வந்த குருவானவர் ஒருவர் கண்டு தனக்குத் தரும்படி கேட்டு வாங்கித் தனது பங்குக் கோவிலுக்குக் கொண்டுசென்றார். இதிலிருந்து சமயத்துவேஷம் அப்போது அவ்வளவு இருக்கவில்லை என்பது புலனாகின்றது.

கீழ்மட்டக் குழு:

1. இனிப்புக் கள்ளைப் பார்க்கிலும் புளித்த கள்ளில் வெறித் தன்மை கூட. குடலையும் (வயிற்றை) சுத்தமாக்கும். கமுகம்வேரை இரண்டொரு மணித்தியாலம், எந்தக் கள்

ளுக்குள்ளும் ஊறவிட்டுக் குடித்தால் ஒரு நாள் முழுவதும் தலை கிளப்பமுடியாத வெறி உண்டாகும்.

2. வீடி, சுருட்டு, சிகரெட், சுந்தன் சிவஞானமுகிலி (கஞ்சா), அபின் இவைகளைப்பற்றியது:

வீடி, சுருட்டு, சிகரட் இவைகளால் அவ்வளவு பிரயோசனம் இல்லை. சும்மா கோச்சியில புகை போகிற மாதிரி போகும். கஞ்சாச் சுருட்டு என்றால் கொஞ்சம் பிடிக்கும். றோக்க சுத்தி அடிச்சா ஒருக்கால் சுவர்க்கம் போய்வரலாம். அதனால்தான் முனிவர்கள் இதை அதிகமாகக் குடிப்பது (புகைப்பது). அதனால்தான் இதற்குச் சுந்தன் சிவஞானமுகிலி என்று பெயரும் உண்டானது.

அபின் பச்சக்கச்சல். எப்பொழுதும் நித்திரை வரும். கண் இமைக்கு முட்டுக் கொடுக்கவேண்டிவரும். இதிலே பழக்கப்பட்டவர்கள் கைவிரல் நகத்துக்குள் வைத்துக் கொண்டு அடிக்கடி சூப்பிக்கொள்வார்கள்.

3. வெள்ளைவெங்காய லேகியம், சாத்தாவாரி லேகியம், சாம்பல்வாழை லேகியம் இவைகளைப்பற்றியது:

வெள்ளைவெங்காய லேகியம் வாய்வைக் கலைக்கும், பசிக்கும், வெறியில்லை. மற்ற லேகியங்கள் கொஞ்சம் வெறிக்கும். சிலவேளை ஆகாயத்தில் தூக்கிப் பறக்கிறது போல இருக்கும். தண்ணீர்விடாய் அதிகம்.

4. சிட்டுக்குருவி லேகியம்:

(1) இது ஒரு புதுத் தயாரிப்பு. விலையும் குறைவு. சிறிய சொக்கிலேட் அளவு. 10 சதம். இது அந்தரத்தில் தூக்கிக்கொண்டு சென்று சடார் என்று நிலத்தில் போட்டுவிடுவதுபோல உணர்ச்சி உண்டாகும். தண்ணீர்விடாய் அதிகம். இதைப் போட்டுவிட்டு ஒருநாள் தாகம் அதிகமாகிவிட்டது. பாலத்துக் கம்பியில் இருந்த நாங்கள் இரண்டுபேரும் முச்சந்தியில் இருந்த பைப்பில் போய்த் தண்ணீர் குடிக்க வென்று, அதன் கொண்டையைப் பிடித்து (படம் பார்க்கவும்) 15 நிமிடம் வரை மாறிமாறி ஆட்டினோம். நீர் வரவில்லை. பிறகு வீட்டுக்குப்போய் வாளியில் இருந்த நீர் முழுவதையும் அப்படியே குடித்தோம். வயிறு ஊதிப்போச்சு, விடாய் அடங்கவில்லை.

(2) சிட்டுக்குருவி லேகியம் போட்ட இருவர் மட்டுநகர் வாவி ஓரம் சென்றனர். அதிகமான தோணிகள் வாவியில் இறால் பிடித்துக்கொண்டு நின்றதைக் கண்டு இவர்களும் ஒரு தோணியை வலித்துக்கொண்டு நடு ஆற்றுக்குச் சென்று ஒவ்வொரு தோணிக்காரரிடமும் 10 சதம், 15 சதம் எனக் கொடுத்து இறால் வாங்கினார்கள். இரண்டு ரூபாவுக்கு மொத்தமாக வாங்கினரர்கள். அரைத் தோணிக்கு இறால் சேர்ந்தது. அப்போது கல்லடிப்பால வேலை நடந்துகொண்டிருந்த காலம். அங்கு போனால் பாலத்தையும் பார்க்கலாம், ஊரி பாடுவதையும் கேட்கலாம் என்று அங்கே சென்று, பாலத்துச் சிலிண்டர் ஒன்றில் தோணியை அணைத்துவைத்துக் கதைத்துக்கொண்டிருந்தனர். சும்மா இருக்கும்போது இறாலைக் கோது உடைத்து விட்டால் நல்லது என நினைத்து அப்படியே செய்து நடுச்சாமம் திரும்பிவந்து வீட்டுக்குப் போய் ஒரு வரை அனுப்பினார்கள் உமல் ஒன்றுடன் தோணிக்குள் இருக்கும் இறாலை எடுத்துவருவதற்கு. அவன் வந்து பார்த்திருக்கிறான் தோணி நிறைய இறால் கோது மட்டும்தான்.

லேகியத்தின் விளையாட்டு, இறால் எல்லாம் ஆற்றுக்குள் கோதெல்லாம் தோணிக்குள்.

கட்டுமுறிவுக் காட்டில் குடியேற்றங்கள் :

1971, 1978ம் ஆண்டுகளில் ஏற்பட்ட இனக்கலவரங்களால் கட்டுமுறிவு, மியான்கல்குளம் முதலிய இடங்களில், பாரிய நீர்ப்பாசன, குடியேற்றத் திட்டங்கள் உருவாக்கப்பட்டன. இதன் மூலகர்த்தாக்கள் திரு. K. W. தேவநாயகம் (பா. உ. பின்பு அமைச்சர்), திரு. எஸ். மரியசிங்கம் (பொறியியளாளர்) ஆகியோர்.

1978ல் கிழக்கிலங்கையில் வீசிய புயல் காரணமாக, வீட்டுத் திட்டங்களும், பாடசாலைகளும் இடம்பெற்றன. ''நொறாட்'' உதவியுடன் ''செடெக்'' (தற்போது எஹெட்) சர்வதேச சுயவிருப்பு நிறுவன வாழைச்சேனைக் கிளை, இவற்றை நிறைவேற்றின.

இக்கிளையின் ஆலோசகராகப் பணியாற்றிய திரு. மரியசிங்கம், மிதந்த அர்ப்பணிப்புடன் இப்பணியில் ஈடுபட்டார். முழுநேர உழைப்பு, அதைவிட அவரது சொந்தப்பணம், சில லட்சங்கள் இதில் செலவிடப்பட்டது யாருக்கும் தெரியாது.

✶

# 29. கறிகளைப்பற்றிய அறிவுரைகள்

1. மாட்டிறைச்சியை ஈர்க்கில் சதையாக வாங்கி வெட்டும் போது சதுரத்துண்டுகளாக வெட்டாது மெல்லியதாக (Slice) வெட்டி, இஞ்சியும் வெள்ளைப்பூடும் அரைத்துப் புரட்டி காற்றுப் புகாதபடி மூடி ஒரு மணித்தியாலத்தின் பின் எடுத்து ஆக்கினால் பல்லு விழுந்தவர்களும் சுவைத்துச் சாப்பிடுவர். ஒரு புளியும் போடப்படாது. உப்பு மாத்திரம். உறைப்பு தேவைக்கு அளவாக.

2. உடும்பு இறைச்சி:

மசாலை போட்டு, கருக்கி வைத்துக்கொண்டால் நாலைந்து நாட்களுக்கும் பழுதுபடாது. உருசி கூடிக் கொண்டே வரும்.

3. பன்றி இறைச்சி:

தென்னந்தோட்டங்களை அண்டிய பகுதிகளில் இருந்து கொண்டுவரப்பட்ட பன்றிகள் நன்கு கொழுத்திருக்கும். தோல் (வார்) மென்மையாகவும் இருக்கும். வாங்கும் போது கழுத்தாங்குத்தி அல்லது பொட்டையடி வாங்க வேண்டும். நாலு அங்குலச் சதுரமாக, வார் கொழுப்பு இறைச்சி சேர்ந்த துண்டுகளாக வெட்டி, நன்கு அவிக்க வேண்டும்.

அவிந்தபின் வாரைக் கடித்துப்பார்த்து அவியாமல் இருந்தால், சிரட்டைத்துண்டு அல்லது பப்பாசிக்காய்த்துண்டு அல்லது இறைச்சி நெகிழ்த்தான் இலை போட்டு மீண்டும் அவிக்கவேண்டும். அவித்தபின் இறக்கி வைத்து அதனுள் போட்ட சிரட்டைத்துண்டு முதலியவற்றை எடுத்துவிட்டு (சட்டியில் இருக்கும் நீரைப் பத்திரமாக

வைக்கவேண்டும். இதனுள்தான் கொக்சிக்காய்த்தூள், மசாலை எல்லாம் போடவேண்டும்). இறைச்சித்துண்டை எடுத்து ஒவ்வொரு மயிராக, கத்தி அல்லது கரண்டியின் உதவியோடு ஒவ்வொன்றாகப் பிடுங்கவேண்டும். (சிலர் சவர அலகால் (Blade) வழித்துவிடுவர். இது பிழை. அப்படிச் செய்தால் அதன் அடிப்பாகம் அதனுள்ளே இருக்கும். கறுத்தப்புள்ளிகளாகத் தெரியும். உண்ணவும் அருவருப்பு. வருத்தத்துக்கும் காலாகும். கொஞ்சம் சிரமந்தான்.) வார் கொழுப்பு இறைச்சி ஒன்றாகச் சேர்ந்த நீளத்துண்டுகளாக வெட்டிப் புரட்டலோ, வெள்ளைக்கறியோ, குழம்போ ஆக்கலாம். மஸ்கோத்தைப் பார்க்கிலும் இனிமையும் மென்மையுமானது. விலையும் குறைவு.

இப்படிச் செய்தால், சாப்பிட விரும்பாதவர்கள்கூட எப்பொழுதும் கேட்டு வாங்கிச் சாப்பிடத்தொடங்குவர். இதுதானே இறைச்சிகளுள் விலை குறைந்த இறைச்சி. ஒரு ரூபாவுக்கு 10 இறாத்தல். தனியே ஒரு இறாத்தல் 12 சதம். இது காட்டுப்பன்றியின் கதை. ஊர்ப்பன்றியின் விலை கூட. ரசமும் குறைவு. ஆனால் பலர் இதை வளர்ப்பதால் நினைத்தவுடனே வாங்கலாம்.

4. ஆட்டிறைச்சி:

இதைப்பற்றி அதிகமாக எவரும் அக்கறைகொள்வதில்லை. அந்த இறைச்சியில் மொச்சை மணம் என்னும் ஒருவித மணம் உண்டு. ஆடுகள், வளர்ப்பவர்களிடம் இருந்து வாங்கப்படுவது. விற்பவர்களும் வலட்டல், மலடு, கிழடு என்ற காரணத்துக்காகத்தான் விற்பர். பட்டியோடு விற்பவர்கள்தான் சிறிய குட்டிகளையும் விற்பர். அதிலும் "குட்டி ஆடு கொழுத்தாலும் வழுவழுப்புத் தீராது" என்ற பழமொழியும் அனுபவவாயிலாக வந்துவிட்டது. விற்பவன், வாங்குபவன், கொண்டுவந்து சேர்ப்பவன், வெட்டுபவன், கடை வாடகை, முதலுக்கு வட்டி. எந்த இடத்திலும் சோழியன் குடுமி சும்மா ஆடாது.

இப்போது இறைச்சியின் விலையை ஒப்பிட்டால் ஒன்றுக்குப் பத்தாகின்றது. நாம் ஒரு பதமான ஆட்டுக்கடாவை விலைக்கு வாங்கினாலும், வேதம் சொல்லி வெட்டாமல் விட்டால் விருந்தாளிகளுள் ஒருவர் முஸ்லீமாக இருந்துவிட்டால் சாப்பிடாமல் போய்விடுவார். நாங்கள்தான் வெட்டினாலும், வெட்டப்பழகியவன்தானே வெட்ட வேண்டும். விறகு வெட்டுவதுபோல வெட்டலாமா?

உரிக்கும்போதும் இறைச்சியில் மயிர் பட்டால் அது ஒரு விதம். கறிக்குள்ளும் மயிர் மிதக்கும், அருவருப்பும்தான். என்ன செய்வது. ஊம்பக் கணாக்கண்டால் ஒருவருக்கும் சொல்லக்கூடாத நிலை, சாப்பிடுவதுதான்.

## மீன்களைப்பற்றி:

முள் அதிகம் உள்ள மீன்கள்தான் உருசியும் கூட. அதிகமாக, தொண்டையில் முள்ளுச் சிக்கியவர்கள் கொய்மீன் சாப்பிட்டவர்கள்தான். ஏனெனில் விலை குறைந்த மீன் கொய்மீன்தான். அகலத்தைக் குறைத்து வெட்டி, விரும்பினால் இடையிலும் கத்தியால் ஒரு கீறுபோட்டு முறுகப் பொரித்தால் சிறிய முள்ளுகளையும் சப்பித் தின்றுவிடலாம். உருசியும் கூட.

## மீன் வெட்டும் முறை:

### பாலமீன்:

நீளத்தில் 2 அல்லது 2½ அங்குல நீளமாக வெட்டி, நீளப்பாட்டில் நான்காக அல்லது மொத்தம் கூடிய மீனாயின் ஆறாக, எட்டாகப் பிளந்து (முருங்கைக்காய்போல) கறி ஆக்கினால் வாழைப்பழத்தில் இருந்து ஊசி எடுப்பதுபோல, சதையில் இருந்து முள்ளை எடுக்கலாம்.

### மண்ணா மீன்:

அம்மாவை விற்றாவது மண்ணா மீன் வாங்கு என்று சாதாரண மக்கள் கதைப்பர். அவ்வளவு உருசியானது. பெரிய மீனை 6 அங். நீளத்துண்டாக வெட்டி, துப்புரவாகச் செதில்களை எடுத்துவிட்டு, நல்ல கொதி நீரில் 5 நிமிடம் போட்டு எடுத்து, ஆறவிட்டு முள்ளுக்கரண்டியால் முதுகுப்பக்கமிருந்து வயிற்றுப்பக்கமாக வழித்தால், பனம்பழத்தை வழிக்கும் போது தும்பில் இருந்து களி வருவதுபோல முள்ளில் இருந்து சதை வரும். சதையுடன் விரும்பிய மசாலை சேர்த்து உருண்டையாக்கிக் குழம்புக்கறி இறக்கும்போது அதனுள் மெல்லப் போட்டுவிட்டால், ஒவ்வொருத்தருக்கும் உருண்டைகள் ஒன்றோ இரண்டோ கொடுக்கலாம். இந்தச் சதையுடன் உருளைக்கிழங்கும் மசாலையும் சேர்த்துக் கட்லற் போன்றவைகளும் செய்யலாம். முள் எல்லாம் ஒன்றாக, பன்னாடை போன்று இருக்கும். சொதிக்குள் அப்படியே போட்டால் நல்ல மீன்சொதியின் உருசியைத் தரும். சிறிய மீன்களாயின் வழித்து எடுப்பது கஷ்டம்.

பறட்டை, ஒட்டி, ஒரா மீன்கள்:

எல்லாம் ஒரே இனம். சிறியது பறட்டை, நடுத்தரம் ஒட்டி, மிகப்பெரியது ஒரா. இதில் முள் குறைவு, ஆனால் விஷம் கூடியது. கூட்டில் பிடிபடும் பறட்டையும் ஒட்டியும் உருசி கூடியவை. கத்தாக்கடி வேலாயுதசாமி கோயிலுக்கும் பெரியகளத்துக்கும் இடையில் மட்டக்களப்பு வாவியில் சில பெரிய கற்கள் உண்டு. கச்சான் உரத்து வீசும் காலத்தில் இந்தக் கல்லில் நின்று தூண்டிலில் பிடிக்கும் மீனை, விஷயம் தெரிந்தவர்கள் என்ன விலை கொடுத்தும் வாங்குவர். மட்டக் களப்பாரை மட்றால் என்று சொல்வதிலும் ஒரா மீன் இன் னும் சிறப்பாக அமையும். ஏனெனில் அந்த உருசியை விளக்கத் தமிழில் சொற்கள் இல்லை.

நண்டு:

பலசாதி நண்டுகள் இருந்தும் பல்லுத்தேய்ந்த கண்ணாக் கடியன் நண்டுபோல மற்றவைகள் கூடிய உருசி இல்லை.

இறால்கள்:

கூனி றால், மணல் றால், வெண்றால், கருமண்டன் றால், மட்றால், மோட்றால், கால்றால், சிங்கறால் எனப் பலவகை றால்கள் இருந்தாலும், சாடையாகத் தண்ணியப் போட்டபின் ஒரு கூனி வடையைக் கடிப்பதுபோல, சுதி வேறு எதிலும் இல்லை. இதனாலேயே கல்லாற்றுக் கூனி என்ற பெயரே பதிவாகியிருக்கிறது.

20 சதத்தால் மதிப்புப்பெறும் தேவண்ணர்:

ஒருவர், கடவுள் எங்கே இருக்கிறார் எனக் கேட்க மற்ற வரின் பதில் புளியமரத்தடியில் இருக்கிறார். இதன் விளக் கம்: அக்காலத்தில் சிகப்புத் தலப்பா ஒன்றின் விலை ஒரு ரூபா நாற்பது சதம்,

வெள்ளைப் போத்தலில் எட்டு திறாம் (8 Drams) சாராயம் விட்டு அடைத்து சிகப்பு நிறக் சஞ்சந்தாளினால் ஒட்டப்பட்டிருக்கும். புளியந்தீவு எனப் பெயர் வந்த காரணங் களுள் ஒன்றாகக் கூறப்படும் புளியமரம், தற்போதைய மத் திய தெரு, புளியடித் தெருக்கள் சந்திக்குமிடத்தில் பெரிய புளியமரம் ஒன்று இருந்தது. அந்த மரத்தடியில் ஒருவர் இருந்துகொண்டு ஒரு ட்றாம் சாராயம் 20 சதத்துக்கு விற் பார். சாராயத் தவறணை புளியந்தீவுப் பாலத்துக்கு அப் பால் 50 யார் தூரத்தில் இருந்தது. வெய்யிலில் போகமுடி யாது. சிலவேளை இவரிடம் கடனுக்கும் வாங்கலாம். தவற ணையில் ஒரு ட்றாம் 18 சதம். இங்கே 20 சதம். அவ்வளவு வித்தியாசம் இல்லை போகும்போதும் வரும்போதும் கும்பிட் டுக்கொள்வர். கடவுளைப்போலத்தான் இவரும். இவரின் பெயர் தேவர். தேவரும் கடவுளும் ஒன்றுதானே என்று விளங்கப்படுத்துவர்.

ஒரு ட்றாம் சாராயம் செய்யும் வேலை, ✶

# 30. மூன்று சண்டியன்கள்.

வாழைக்குலை களவு:

ஒரு சண்டியன் சிறப்பியான் சம்மாலைக்கு எதிரில் இருந்த வீட்டில் குடும்பத்துடன் வசித்தார். அவர்களது வீட்டு முற்றத்தில் ஒரு வாழைமரம். அதில் நன்கு முற்றிய கப்பல் வாழைக் குலை. சம்மாலையில் இருந்து பார்த்தால் வாழைக்குலை தெரியும். ஒருநாள் மற்ற இருவரும் வாழைக்குலைச் சொந்தக் காரனுடன் ஒரு சிவப்புத் தலப்பாக்குப் பந்தயம் பிடிக்கின்றனர்.

அன்றிரவு இருவருமாக அக்குலையை வெட்டிக்கொண்டால், வாழைக்குலைக்காரன் 1 ரூ. 40 சத, சிவத்தத் தலப் பாவுடன் மறுநாள் வரவேண்டும். அன்றிரவு வாழைக்குலைச் சொந்தக்காரன் வாழைக்குலைக்குக் கீழே பாயைப் போட்டுப் படுத்துக்கொண்டான். மற்ற இருவரும் சம்மாலைக்குள் இருந்து பார்த்துக்கொண்டிருக்கின்றனர். விடியப்புறம் 4 மணியாகியும் அவன் நித்திரை கொள்ளவில்லை. அதன்பின்பு அவனின் அசைவாட்டம் இல்லாமற்போயிற்று.

(இனிமேல் வரமாட்டார்கள் என்ற எண்ணத்தில் நித்திரை கொண்டிருக்கலாம்.) மற்ற இருவரும், ஸ்ரூல், களிமண் உருண்டை, கத்தியுடன் சென்று, உயரத்தில் ஏறிக் குலையை வெட்டிவிட்டு, வெட்டிய இடத்தில் களிமண் உருண்டையை அப்பிவிட்டு, வாழைக்குலையைக் சம்மாலைக்குள் கொண்டு வைத்துவிட்டுப் புதினம் பார்த்துக்கொண்டிருக்கின்றனர். வெட்டப்பட்ட இடத்தில் இருந்து வடிந்த வாழைக் கசறு (நீர்போன்ற பதார்த்தம்) வழிந்து வழிந்து களிமண்ணைக் கரையவைக்கிறது. களிமண் உறிஞ்சி ஓரளவு கூழ்ப்பதமானது தொப்பென்று வாழைக்குலைக்காரன் முகத்தில் விழுந்தது. கண் திறக்சமுடியவில்லை. பெலத்து மனைவியைக் கூப்பிட்டார். மற்ற இருவரும் உதவிக்கு ஓடிச்சென்று எல்லோருமாக முகத்தைக் கழுவிவிட்டு மனைவியிடம் பந்தயத்தைப்பற்றிச் சொல்லிச் சிரித்தனர். மறுநாள் சிகப்புத் தலப்பாவையும் கண்டு சிரித்தனர்.

பேய் கத்துவதும் மூன்றுதரம், கூப்பிடுவதும் மூன்றுதரம்

மந்திரமும் சூனியமும் அந்தக்காலத்தில் மட்டக்களப்பில் கைவந்த கலை. இரவில் யாராவது வந்து பெயரைச் சொல்லிக் கூப்பிட்டால் நாலாந்தரம் கூப்பிட்ட பிறகுதான் வெளியில் போய்க் கதைப்பர். பேய் நாலாம்முறை கூப்பிடாதாம். காடேறி என்னும் பேய்க்குள்ளால் செய்திருந்தால், ஆளைக் கூட்டிக்கொண்டுபோய் ஒரு மரத்தில் ஏற்றிவிட்டுப் போய் விடும். இவைகள் எல்லாம அனுபவத்தில் கண்ட உண்மைகள் எனச் சொல்லுகிறார்கள். நாங்கள் நேரடியாக இவைகளைக் காணவில்லையே. இதற்கொரு சந்தர்ப்பம் கிடையாதா என அங்கலாய்த்துக் கொண்டிருந்த சண்டியன்மார் மூவருக்குக் கிடைத்த அருமையான சந்தர்ப்பம், ஒருநாள் நடுச்சாமம் புளியடிச் சந்தியில் பேய் கத்திற்று என்ற கதை பரம்பிற்று. இது உண்மையாயின் இன்றும் நாளையும் கத்தும். (மூன்று நாள்தான் கத்துவது வழக்கமாம். அதுவும் குறிக்கப்பட்ட இடத்திற்தான் கத்துமாம்.) ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு சண்டியனாக மூவரும் மூன்று இடங்களிலும் அன்றிரவு படுப்பது என்பது தீர்மானமாயிற்று.

முதலாம் சண்டியன்:

மாதா கோவில் உபதேசியாராகஇருந்த திரு. வர்ணகுலசிங்கம் அவர்களின் வீடு. இது மாதா கோவிலுக்கு எதிர்ப் பக்கத்தில் தெருவுக்கு மறுபுறம் கதலிக் கிளப்புக்கும் G. S. மங்களராஜ் இருந்த வீட்டிற்கும் மத்தியில். இப்போது இவ் வீட்டில் மாதா கோவில் சக்கிறிஸ்ரியன் ஞானசூரியம் வசிக்கிறார். வீடும் நிலைமாறி இருக்கிறது. வீட்டின் சுவரே தெருவின் எல்லை, வீட்டு விறாந்தை மண்டபம் மறுபக்கம். நிலம் சாணியால் மெழுகப்பட்டது. வர்ணகுலசிங்கம் அவர்களின் அனுமதியுடன் வீட்டு விறாந்தையில் முதலாம் சண்டியன் படுத்துவிட்டார்.

இரண்டாம் சண்டியன்:

புளியடிச் சந்திக்கும் மிராண்டாச் சந்திக்கும் இடையில் வீதியில் கிழக்குப்பக்கமாக ஒரு பெரிய வீடு. இப்போ, பாய்வா குடும்பம், இன்னும் சிலர் வசிக்கின்றனர். அப்போது R. B. கதிராமரின் சகோதரி சித்திரம் என்பவர் சுகாதாரப் பரிசோதகர் பற்றிக் என்பவரோடு குடித்தனம் நடத்தினார். கதிராமர் குடும்பத்துக்குச் சொந்த வளவு. சித்திரம் அக்காவின் விருப்பத்துடன் முன் விறாந்தையில் படுத்துவிட்டார்.

மூன்றாம் சண்டியன்:

முன்பு மிராண்டாசாப்பு, பின்பு ஹூட்லண்ட், இப்போ சாதாரண சாப்பாட்டுக்கடை. விறாந்தையில் படுப்பதற்கு

எவரிடமும் உத்தரவுகேட்கத் தேவையில்லை. ஆனால் கடைத் தெரு நடமாட்டம் குறைவடைய இரவு பத்துமணியாகும். அதன்பின்தான் நித்திரை வரும் - இவர் சண்டியன் என்பது பிரபலியம். எனவே பலரும் வந்து கதைத்துக்கொண்டிருந்த னர். பின்பு படுத்துவிட்டார்.

மறுநாட் பகல் எல்லோரும் தத்தம் வேலைகளுக்குச் சென்று மாலையில் ஒன்றுகூடினர். இது ஒரு சர்ச்சைக்குரிய விஷயமாய் இருந்ததால் மேல்மட்டக்குழுவும் சேர்ந்தே ஒரு முடிவுக்கு வருவதெனத் தீர்மானித்து எல்லாருமாக முதலாம் சண்டியன் படுத்திருந்த வீட்டுக்குச் சென்றனர். வீட்டுக்கார ரின் வாக்குமூலத்தையும் கேட்டனர். அவர்கள், நடுச்சாமம் போல ஏதோ முக்கிமுனங்கி அவதிப்பட்டதுபோலச் சத்தம் கேட்டது எனக் கூறினர்.

சண்டியனின் வாக்குமூலம்: ஏதோ அலறல் சத்தம் கேட் டது, பயந்தேபோனேன். பாயைப்போட்டு வறாண்டியிருக்கி றேன். நகப்பொட்டுக்குள் சாணிப் பொருக்குகள் இருந்தன. நிலத்தில் அங்குமிங்கும் கோடுகள், விசிறிபோல கீறுப்பட்டுக் கிடந்தன. பேய் கத்தியதுதான் என ஒத்துக்கொண்டார் சண்டியன். இரண்டாவது இடத்துக்குப் போகின்றனர்.

இவர்களைக் கண்டதும் சித்திரம் (திருமதி பற்றிக்) உரத்த சத்தமாக ''வெட்கமில்லையா, பெரிய சண்டியன்கள் என்று பேர் மாத்திரம். நடுச்சாமம் நாங்கள் எல்லாரும் நல்ல நித் திரை, சித்திரக்கா சித்திரக்கா எண்டு கதவிலபோட்டு அடிச்சி அவர்ர நித்திரையையும் குழப்பிவிட்டு... பிறகு நான் வெளி யில் வந்து தொங்கல் அறைக் கதவைத் திறந்துவிட, பாய் தலையணை எல்லாம் தூக்கிக்கொண்டு பின் விறாந்தையில் போய்ப் படுத்தான் சண்டியன். இனிமேல் இந்தப் பேரைக் கீறிவிடு'' என்று பகிடி பண்ணினார்.

விறாந்தையில் இருந்து முற்றத்துக்கு இறங்கியதும் மூன் றாவது சண்டியன் நான் என்னுடையதையும் சொல்லிவிடுகி றேன். அங்கே ஏன் போவான்?

அவரது வாக்குமூலம்: கத்திற்றுது. காதுக்குள்ள கத்தினது போலத்தான் இருந்தது. தட்டுத்தாவரமின்றி சாறனோடு சிறுநீர் போயிற்றுது. அப்படியே ஆற்றிலேபோய்க் குளித்து விட்டுத்தான் வீட்டுக்குப்போய் சாறன் மாற்றினேன்.

இப்போ மேல்மட்டம் கீழ்மட்டம் எல்லாம், பேய் கத்துவதுதான் என ஒத்துக்கொண்டு போயினர். கொஞ்ச நாளாகச் சண்டியனுகளைக் கண்டால் எல்லாருக்கும் சிரிப்புத் தான். ■

# 31. மண வினைப் படலம்

1940ம் ஆண்டில், திரு. V. K. நாதன் (கல்விப்பணிப் பாளர்) அவர்களின் ஆலோசனையுடன் கிழக்கிலங்கை சங்கீத சபையை ஆரம்பித்து திரு. தில்லையம்பலம், திருமதி நவம் எதிர்வீரசிங்கம் என்னும் இரு ஆசிரியர்களையும் வாய்ப்பாட்டு வயலின் பழக்க அமர்த்தினேன். வகுப்புக்கள் கார்மேல் கழகம், புனித தெரேசா பாடசாலை, புனித மிக்கேல் கல்லூரி, புனித மரியாள் பாடசாலைகளில் நடைபெற்றன. ஆசிரியர்களும் மாணவர்களும் கலந்துகொண்டனர். வகுப்புகளை மேற் பார்வை செய்தல், பணம் அறவிடுதல், வேதனம் அளித்தல் எல்லாம் எனது வேலை.

1941ம் ஆண்டு மார்கழி மாதம் 5ந் திகதி வியாழக்கிழமை கார்மேல் கழக வகுப்பில், அடுத்தநாள் பாடசாலைகளுக்கு விடுதலை. எனவே விடுதலையில் வகுப்புக்கள் நடைபெறாது என்று சொல்லிவிட்டு வெளியே வரும்போது இரு ஆசிரியைகள் என்னிடம் வந்து. (ஒருவர் மட்டக்களப்பு, மற்றவர் யாழ். பண்டத்தரிப்பு இருவரும் விடுதியில் வசிப்பவர்கள்.) இவ்விடு தலைக்கு யாழ்ப்பாணம் போகிறோம். நீங்களும் வாருங்கள் என்றனர். நான் சரி வருகிறேன் என்றதும், நீங்கள் ஏறாவூர் புகையிரத நிலையத்தில் இருந்துதான் ஏறவேண்டும். இரவுச் சாப்பாடு நாங்கள் கொண்டுவருகின்றோம் என்றனர். நானும் அப்படியே செய்தேன்.

அடுத்தநாள் இராச்சாப்பாடு றெயிலில்தான். ஐந்து நட்சத்திர ஹோட்டலிலும் அப்படிச் சாப்பாடு கிடையாது. இரவு 9 மணிபோல நாங்கள் இருந்த பெட்டிக்கு திரு. செபாஸ் தியான்பிள்ளை என்பவர் (இவர் புனித மிக்கேல் கல்லூரி ஆசிரியர்) வந்து கொஞ்சநேரம் கதைத்திருந்து போய்விட் டார். அப்போது பண்டத்தரிப்பு ஆசிரியை என்னிடம் சொன் னார், இவர் பண்டத்தரிப்பில் எங்களது வீட்டிற்குப் பக்கத்து

வீட்டில் வசிப்பவர். இவரும் இன்று மட்டக்களப்பு நிலையத்தில் வந்து ஏறுவார் என நினைத்துத்தான் உங்களை ஏறாவூரில் வந்து ஏறும்படி சொன்னேன் என்று. எனக்குச் சிரிப்புத் தான் வந்தது.

மாகோ நிலையத்தில் இறங்கி யாழ். போகும் வண்டிக்குக் காத்துக்கொண்டு ஒரு சீற்றில் இருந்து கதைத்துக்கொண்டிருக்கும்போதும் செபஸ்தியான்பிள்ளை என்பவர் எங்களைக் கடந்து இரண்டொருமுறை சென்றார். ஆனால் கதைக்கவில்லை. அப்போது பண்டத்தரிப்பு ஆசிரியை வீட்டுக்குப் போனதும் என்னத்தை அள்ளிவைக்கப் போகிறாரோ தெரியவில்லை என வாய்விட்டுக் கூறினார். அவரது மனதில் ஒருவித பயம் ஏற்பட்டதை நான் உணர்ந்தேன். யாழ். செல்லும் வண்டிவந்தது. ஏறிக்கொண்டோம்.

இருவரும் என்னிடம் ''நாங்கள் யாழ்ப்பாணம் போகாமல் மதவாச்சியில் இறங்கி மன்னாருக்கு ரிக்கற் எடுத்து அங்கே போவோம். அங்கே எனது சிறிய தகப்பனார் அன்றூ மாஸ்ரர் இருக்கிறார்'' (இது பண்டத்தரிப்பு ஆசிரியை, சொன்னது). எனக்கு எல்லாம் சரிதான். அப்படியே மன்னாரில் அவரது வீட்டுக்குச் சென்றோம். நல்ல வரவேற்பு. மன்னார் வேசாட்சிகள் கோயில், கன்னியர் மடம் எல்லாம் சந்தித்தோம்.

பத்துநாள் வரை தங்கினோம். இதற்கிடையில் அன்றூ மாஸ்ரரின் இளைய மகள், பதினெட்டு வயதிருக்கும். அவரின் கதை, சிரிப்பு ஒன்றும் எனக்குப் பிடிக்கவில்லை. ஒருநாள் எனது உடுப்புப்பெட்டியில் இருந்த சில சாமான்களையும் காணவில்லை. இரு ஆசிரியைகளிடமும் சொன்னேன். பண்டத்தரிப்பு ஆசிரியை தன் சிறிய தகப்பனாரிடம் விடயத்தை விளக்கி அந்தச் சாமான்களையெல்லாம் எடுத்துத்தந்தார். அத்துடன் வாடகைக்கார் ஒன்று வந்தது. என்னையும் ஏற்றிக்கொண்டு மன்னார் வாடி வீட்டுக்குச் சென்றனர். இவையெல்லாம் எனக்கு ஏதோ சினிமாக் காட்சிபோலத்தான் புலப்பட்டது.

அன்று பின்னேரம் வாடி வீட்டில் இருந்து தலைமன்னார்த் துறைமுகம் பார்க்கப்போனோம். கடற்கரையில் மணலில் கதைத்துக்கொண்டிருக்கும்போதுதான், என்னை இவ்வளவு தூரம் அழைத்துவந்த விடயத்தை ஆரம்பித்தார் பண்டத்தரிப்பு ஆசிரியை

தனக்கு அடுத்த வருடம் ஆடி மாதம் வரையில் சொந்த மைத்துனர், புனித பத்திரிசியார் கல்லூரியில் படிப்பிக்கும் பட்டதாரியை மணம் முடித்து வைப்பதாக எல்லா ஒழுங்கு

களும் நடைபெறுகின்றன. தனது சிநேகிதி மட்/ ஆசிரியை என்னை விரும்புவதால் அந்தக் கலியாணத்தையும் முடிக்க லாம் - இதற்கு எனது விருப்பத்தைக் கேட்கவே இவ்வளவு தூரம் அலைந்துவந்தோம் என வாய்விட்டுச் சொன்னார். அமிர்தம் என்று விழுங்குவதா நஞ்சு என்று உமிழ்வதா? இந்தச் சங்கடமான நிலையில் இருந்து விடுதலை பெறுவதற்காக என்னை அறியாமலே ''உங்களை நான் ஏற்றுக்கொள்கிறேன். அவளை நான் விரும்பவில்லை'' என்று சொல்லிவிட்டேன். மூன்று பேரின் மூளைகளும் முக்கோணமாகத் தொழிற்படு கின்றன. எல்லோரும் மௌன விரதம்.

இதற்கிடையில் செபஸ்தியான்பிள்ளை என்பவர் பண்டத் தரிப்பு ஆசிரியையின் பெற்றோரிடம் வர்ணப் புகைப்படம் போல நன்றாக விளக்கியிருக்கிறார். இவரது சகோதரன் மன்னாருக்கு அன்றா மாஸ்ரரிடம் வந்து அங்கிருந்து வாடி வீட்டிற்குவந்து காத்துக்கொண்டிருக்கிறார். நாங்களும் தலை மன்னாரில் நின்றும் மன்னார் வாடி வீட்டை அடைந்தோம். அக்காவும் தம்பியும் தனிமையில் கொஞ்சநேரம் உரையாடி னார்கள் வந்தவரும் எங்களுடன் மூன்று நாள் வாடி வீட்டில் தங்கியிருந்து யாழ்ப்பாணம் சென்றுவிட்டார்.

எனது அண்ணன் முறையான ஒருவர் திருமலை நேவியில் வேலை செய்துகொண்டிருக்கும்போது ஏதோ இயந்திரத்துள் கை அகப்பட்டு மூன்று விரல்கள் துண்டாடப்பட்டு விட்ட தாகவும், என்னை உடனே திருகோணமலைக்கு வரும்படியும் அனுப்பிய தந்தி மட்டக்களப்பு சென்று, மன்னாருக்குவந்து வாடி வீட்டிற்கும் வந்துவிட்டது.

எனது மூளையில் திருமலைப் பயணம் புகுந்துவிட்டது. நான் உடனே திருமலை போகவேண்டும் என இருவரிடமும் கூறினேன். தாங்களும் வரப்போவதாகக் கூறினர். நிதி நிலைமையைப் பார்த்தோம். வாடி வீட்டுக்குக் காசு கட்டித் தான் புறப்படவேண்டும். றெயில் செலவு, திருமலையில் நேவி வைத்தியசாலைக்குப் போய்ச் சேரவேண்டும். அவருக் கும் ஏதாவது சாப்பாட்டுச் சாமான்கள் வாங்கிக்கொண்டு போகவேண்டும்.

பெண்கள் இருவரும் புறப்பட்டுச்சென்று ஒரு மணித்தி யாலத்தின்பின் ஆயிரம் ரூபாவுடன் வந்துசேர்ந்தனர். (அன்றா மாஸ்ரரிடம் வாங்கியதாகப் பின்பு அறிந்தேன்) 30ந் திகதி இரவு மன்னாரில் றெயில் ஏறி மதவாச்சியில் இறங்கி அங்கி ருந்து கொழும்புக்குச்செல்லும் வண்டி வரும்வரை காத்திருந்து மாகோவிற்குச் சென்றோம்.

எங்கள் மூவருக்கும் நாற்பத்திரெண்டாம் ஆண்டு தொடங்கியது. மாகோ புகையிரத நிலைய விடுதியில். பின்பு மட்டு நகர் செல்லும் வண்டியில் ஏறி கல்லோயாவில் இறங்கி திருமலை செல்லும் பெட்டியில் ஏறி மத்தியானம் 2 மணிக்குத் திருமலையில் இறங்கி வாடகைக்கார் ஒன்றில் ஏறி, சாப்பாட்டுக்கடையில் எங்கள் மூவருக்கும் இரு சாப்பாட்டுப் பார்சல்களும் அண்ணனுக்கும் மோல்ற்றட் மில்க் இன்னும் ஏதோ எல்லாம் வாங்கிக்கொண்டு நேவி வைத்தியசாலையை அடைந்தோம்.

பிற்பகல் 6 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு புகைவண்டி நிலையம் வந்து காத்துக்கிடந்து மட்டக்களப்புச் செல்லும் பெட்டியில் ஏறி இருந்து மறுநாள் மத்தியானம் மட்டுநகரை அடைந்து வாடகைக்காரில் இருவரையும் ஏற்றி அவர்களைச் சிசிலியா மடத்தில் விட்டு நான் வீடு சென்றேன். இந்தப் பயணத்தை யோசித்தபோது, பகீரதன் ஆகாயகங்கையைப் பூமிக்குக் கொண்டுவந்ததுதான் ஞாபகத்துக்கு வந்தது.

பாடசாலை ஆரம்பமாயிற்று (ஆறாம் திகதியென நினைக்கின்றேன்). நாங்கள் படிப்பித்த இரு பாடசாலைகளுக்கும் இடைப்பட்ட சுவர்களில் நல்ல விளம்பரம் எழுதியிருந்தது எங்கள் மூவரையும் பற்றி. வியாபார விளம்பரமல்ல விபச்சார விளம்பரம். மாணவர்களைக்கொண்டு தண்ணீர்ச் சீலையால் அழித்துவிட்டேன். யார் இந்த விளம்பரத்துக்கு சூத்திரதாரி என ஆராய்ச்சிபண்ணி திரு. சுவக்கீம்பிள்ளை என்பவர் என அறிந்தோம். திரு. சுவக்கீம்பிள்ளையைப் பற்றிய விபரம்:

1939ம் ஆண்டில், மட்/ சிசிலியா மகளிர் ஆங்கிலப் பாடசாலையில் தமிழ் ஆசிரியராக நியமனம் பெற்றுவந்தார். இருக்க வீடும், வீட்டுத் தளபாடங்களும் கொடுத்து நல்ல நண்பர்களாக இருந்தோம். செபஸ்தியாம்பிள்ளை ஆசிரியரின் கதையைக்கேட்டு, யாழ். நெல்லியடியைச் சேர்ந்த இவர் வடபகுதி செபஸ்தியாம்பிள்ளையுடன் சேர்ந்துகொண்டு என்னை வெறுத்தார்.

நான் அவருக்குச் சொல்லி அனுப்பினேன். இப்படிச் செய்வது சரிவராது என்று. அதற்கு அவர் ''தான் நினைத்ததைச் செய்வேன். மற்றவர்கள் தன்னை ஒன்றும் செய்ய முடியாது'' என்ற மாதிரியாகச் சொல்லி அனுப்பினார் சாம, பேத, தான, தண்டம் என்பதில் கடைசியானதே சரியெனத் தீர்மானித்தேன்.

தைமாதம் 26ந் திகதி, மரியநாயகி பாடசாலைக்கும் அகுஸ்தீனார் ஆசிரியர் கலாசாலைக்கும் விடுதலை நாள்.

ஏனெனில் அன்று சஞ் சூசையப்பர் சபைச் சிரேஷ்டராகிய கிறிசொஸ்தம் அடிகளாரின் பெயர்கொண்ட திருநாள். சட்டத் தரணிகள் சிலருடன் ஆலோசித்து, அன்று காலை பொலிஸ் நிலையம் சென்று, அங்கு முறைப்பாடு எழுதும் பொலிஸ் உத்தியோகத்தரின் ஆலோசனையுடன் 11.40க்கு சிசிலியா பாடசாலைக்கு அருகில் இருக்கும் நியூ வேக்கரி உரிமையாளர் திரு. ஹென்றியுடன் கதைத்துக்கொண்டிருந்தேன்.

11.45க்கு பாடசாலை முடியும் மணிச்சத்தம் கேட்டது. பாடசாலை வாசல் (வெளிக்கேற்) சென்றேன். பாடசாலை யில் இருந்து நூற்றுக்கணக்கான மாணவிகள் வெளியேறுகின் றனர். இவரும் 25 வரையில் அப்பியாசப் புத்தகங்களையும் நெஞ்சோடு அணைத்தபடி வருகிறார். வாசலில் கால் வைத் ததும் இடுப்புக் காற்சட்டையில் பிடித்து ஒரு உலுக்கு உலுக்கி "நன்றி கெட்டவனே, இதையும் சுவரில் எழுது" – எனச் சொல்லி கன்னத்தில் ஒரு அறை!

அப்பியாசப் புத்தகங்களை எறிந்துவிட்டு கையை ஓங்கி னார். கையைப் பொத்திப்பிடித்து முகத்தில் ஒரு குத்து. ஓட்டமும் நடையுமாக பொலிஸ்ரேசனுக்குச் செல்கிறார். அங்கு கடமையில் இருந்தவர் பாடசாலைவிட்டு வரும் பொழுதா அடித்தது எனக் கேட்க, "ஆம்" என்றாராம். காயம் ஒன்றுமில்லை. பொலிஸ் இதை வழக்காக்க முடியாது. கிராமக்கோட்டில் வழக்குப் போடும்படி சொல்லிவிட்டார்கள். இவரும் மறுநாள் கிராமக்கோட்டில் வழக்குத் தாக்கல்செய் தார்.

கிராமக்கோட்டு நீதிவான் திரு. சீதாராம் எனது உற்ற நண்பர்களில் ஒருவர் (ஆகாய விமானத்தில் என்னைப்பார்த்து மிட்டாயைக் காதுக்குள் வைத்தவர்). வேறொரு நண்பர்மூலம் எனக்குச் சொல்லி அனுப்பினார். நான் அடிக்கவில்லை என்று சொன்னால், தான் வழக்கைத் தள்ளுபடி செய்வதாக.

கோட்டுக் கட்டளையின்படி சென்றேன். நீதிபதி என்னிடம் "நீங்கள் தைமாதம் 26ந் திகதி மத்தியானம் 11.45க்கு பாட சாலை முடிந்து வரும்போது திரு. சுவக்கீம்பிள்ளை என்பவ ருக்கு அடித்தீர்களா?" நான் "ஆம்". அப்படியென்றால் நீங்கள் குற்றவாளிதானே. எனது பதில் "நான் சுத்தவாளி". அடித்ததை ஏற்றுக்கொள்கிறீர்கள், குற்றவாளி இல்லை என வும் சொல்கிறீர்கள். இது எப்படிச் சரிவரும்? எனது பதில் "நான் அதை நிரூபிப்பேன்". வழக்கை 3 மாதம் தள்ளிப் போட்டார்.

இதற்கிடையில் வழக்காளி பல இடங்களில் சாத்திரம் கேட்டதாகவும், நீர் வழக்கில் தோல்வியடைவீர் எனச் சொன்னதாகவும் அறிந்தேன். அவர் கத்தோலிக்க பாடசாலை

களின் பொது முகாமையாளர் வண, மரியான் அடிகளாரைச் சந்தித்து, கோட்டில் இருந்த வழக்கை வாபஸ் வாங்கப் போவதாகவும், குருவானவரே இதைத் தீர்த்துவிடுவதும் நல்லது எனவும் கூறினாராம். பொது முகாமையாளர் என்னிடம் விசாரித்தார். நான் எல்லாம் விளக்கமாகச் சொன்னேன். அவரது தீர்ப்பு வயோதிபர் மடத்துக்கு இருபத்தைந்து ரூபா கொடுத்துவிடும் என்பது. நான் சந்தோஷத்துடன் அப்பணத்தைக் கொடுத்தேன். மழை விட்டும் தூவானம் விடவில்லை.

திரு செபஸ்தியாண்பிள்ளையின் பிரசாரத்தால் பண்டத்தரிப்பு மாப்பிள்ளை தனது மச்சாளை விவாகம் செய்ய மறுக்கிறார். உடனே வேலையை இராஜினாமாச் செய்துவிட்டு ஊருக்கே வரும்படி தகப்பன் கடிதத்தின்மேல் கடிதம் எழுதியபடியாம். திரு. A. F. ஞானப்பிரகாசம் என்பவரும் புனித மிக்கேல் கல்லூரி ஆசிரியர், சிசிலியா ஆங்கிலக் கல்லூரி உயர் வகுப்புக்குத் தமிழ் கற்பிக்க நாளாந்தம் ஒரு பாட நேரம் செல்பவர். அவரிடம் இரு ஆசிரியர்களும் சேர்ந்து விடயத்தை விளக்கி, நான் பண்டத்தரிப்புப் பெண்ணை விரும்புவதாகவும் சொன்னதாகச் சொல்லியிருக்கின்றார்கள். எனது தகப்பனார் சுகவீனமாக இருந்ததால் அடிக்கடி எங்கள் வீட்டிற்கு வருபவர். எனது தகப்பனாரிடம் இதைச் சொல்லியிருக்கிறார். இதற்கிடையில் பண்டத்தரிப்பு ஆசிரியையிடமிருந்து எனக்கொரு கடிதம் வந்தது. அதன் சாரம்:-

''நீங்கள் என்னை மணம் செய்வதாயின், செய்வேன் என்றீர்கள். அதன்படி செய்யுங்கள்''

இரு நாட்களாக எனக்கு ஒரே மூளைக்குழப்பமாக இருக்கும்போது தகப்பனார் என்னிடம் தனக்கும் வருத்தம் உரத்துக்கொண்டு வருகிறது, கெதியாய் நீ விவாகம் முடித்துவிட்டால் தான் நிம்மதியாகக் கண்களை மூடுவேன் என்றார். (அவர் சொன்னபடியே விவாகம் நடந்த எட்டாம் நாள் அவர் இறைபதமடைந்தார். மரணச்சடங்குக்கு திருமலையில் இருந்து அண்ணனும் வந்திருந்தார். மட்டக்களப்பு ஆசிரியையை ஏற்றுக்கொள்ள அவர் ஒப்புக்கொண்டார்) தகப்பன் மகன் இருவரினதும் சம்பாஷணையின்போது அப்பா என்னிடம் நீ அவளுக்கு மணம் முடிப்பேன் என்று வாக்குக்கொடுத்தது உண்மைதானா எனக் கேட்டார். நான் 'ஆம்' என்றேன். அப்படியானால் உடனே அதைச் செய்யன் என்றார்.

தாலி, கூறை, வீட்டுச் செலவு இவைகளுக்கு எல்லாம், என்னசெய்ய எனக்கேட்டேன். உடனே தலையணையின் கீழ் இருந்த திறப்பை எடுத்துத்தந்து பெட்டகத்தைத் திறந்து

இருக்கும் ஐந்து தங்கப்பவுண்களையும் எடு, காசு ஐயாயிரம் ரூபாவும் எடு என்றார். அப்படியே செய்தேன். இன்னும் காசு தேவைப்பட்டால் பிறகு பார்ப்போம் என்றார். தேவைப் பட்டதும் அப்படியே செய்தார். ஆவணி மாதம் 24ந் திகதி எனது பிறந்த நாளையும் கொண்டாடினோம்.

பொது முகாமையாளர் வண. மரியான் அடிகளாரிடம் விடயத்தைச் சொன்னேன். நாள் பார்க்கவும் இல்லை. சுப முகூர்த்தம் பார்க்கவும் இல்லை. தாலியும் செய்தாச்சு, கூறையும் வாங்கியாச்சு. வண. மரியான் அடிகளாரே முன்நின்று ஆவணி 31ந் திகதி மணமக்களாக்கி கைப்பிடித்தும் விட்டார். மன்னாருக்குத் தேடிவந்த மணமகளின் சகோதரன் விவாகத்துக்குவந்து ஒருமாத காலம் எங்களோடு தங்கிச்சென்றார். தேன்நிலவுக்காக வான் நிலவிற் பறந்தோம்.

(படம் அடுத்த பக்கம்)

## சவரி பிறான்சிஸ், சாமுவேல் தெரேஸ்மேரி தம்பதிகள் இல்லற வாழ்வில் இணைந்த

## இனிய 45 ஆண்டுகள்

31-8-1942 — 25-2-1987

ஆண்கள் மூவரும் பெண்கள் ஐவருமாக எண்மரை ஈன்றனர்.

22 பேரர் 4 பூட்டப்பிள்ளைகளையும் கண்டனர்.

*31-8-1967*ல் வெள்ளிவிழாக் கண்டனர்.

*25-2-1987*ல் தெரேஸ்மேரி இறைவனடி கண்டார்.


பெண்கள் ஐவரில் றெஜினாவதி மட்டக்களப்பில் (தந்தையுடன்)
ஹெலனாவதி கொழும்பில்.
பிலோமினாவதி இந்தியாவில்.
அல்போன்ஸாவதி கனடாவில்.
லூசியாவதி அவுஸ்திரேலியாவில்.
ஆண்கள் மூவரும்,
றெட்ணஜோதி, அருள்ஜோதி, ஜெயஜோதி கனடாவில்.

இறைவன் இவர்களை வழிநடத்துவாராக.



தேனிலவுக்காக வானிலவில் பறந்தோம்.

(பக்கம் 170)


MAP ILLUSTRATING THE JOURNEYS OF FATHER JOSEPH VAZ
1686 - 1711
CART TRACKS AND FOOT PATHS FATHER VAZ IS KNOWN TO HAVE FOLLOWED.
CONJECTURED ROUTES
Point Pedro
Kayts
Jaffna
Delft
Punnarin
1704
1690
1687 APRIL
Pallavarayankatu
1693-6
Mullaitivu
Talaimannar
Mannar
Mantotam
1690
1693
1703
1705
Madhu
Arippu
Alambil
Musalai
1690
Trincomalee
Arasady (Kalpitiya)
Pomparippu
Kottiyar (Mutur)
1706
1710
Anuradhapura
Kala Oya
Etale
Navat-kadu
Puttalam
Maripa
Kuruvikulam
Minneriya
SEVEN KORALES
Wahacotte
1692
Nalanda
Chilaw
Madampe
Kurunegala
Matale
Weuda
1692
Kammala
Kandy
1692 - 1711
Negombo
Narangoda
Ruwanwella
Puliyantivu (Batticaloa)
1706
Kalmunai
(Batticaloa)
Walligampitiya
Avissawella
Sitawaka
COLOMBO
Hanwella
Moratuwa
Kendagamuwa
Ratnapura
(Saffaragamuwa)
Kalutara
Maggona
Beruwala
1693
Galle
Matara



# இந்நூலாசிரியரைப்பற்றி...

1. உங்கள் பெறுமதிமிக்க உதவி கிடைக்காமல் இருந்திருந்தால் என்ன செய்திருப்பேனோ தெரியாது.

   — V. T. ஞானசூரியம் (வீடமைப்பு)

2. ஊரிலுள்ள எல்லா வேலைகளையும் தலையில் தூக்கிச் சுமக்கிறீரே.

   — வ. அரசன் (வட். கல்வி அதிகாரி)

3. இவர் கைவைத்தால் மாத்திரம் யாவும் திருப்தியாக முடியும்.

   — கு. சோமசுந்தரம் (வட். கல்வி அதிகாரி)

4. இப்புனித பணியை மேற்கொள்ளுங்கள். (காலம்சென்ற திரு. இம்மானுவேல் (D. I.) அவர்களின் உடலை யாழ். கொண்டு செல்லுதல்).

   — இராஜகாரியர் (கி. பி. கல்விப்பணிப்பாளர்)

5. இவரது நிருவாகத் திறமையை நேரில் கண்டேன்.

   — A. M. மஜீத் (கி. பி. கல்விப்பணிப்பாளர்)

6. நீர் வென்றுவிட்டீர்; எங்களுக்கும் இனி நிம்மதி.

   — S. தனிகாசலம் (கி. பி. கல்விப்பணிப்பாளர்)

7. திருமலை, மட்டுநகர், கல்முனைப் பகுதிகளில் சித்திரச் செயற்காட்சியைப் பொறுப்பெடுங்கள்; 40 நாள் கடமை விடுதலை தருகின்றேன்.

   — வே. சங்கரலிங்கம், (கி. பி. கல்விப்பணிப்பாளர்)

8. கூட்டுறவுச் சமாசத்தை மட்டுநகரில் நிறுவியவர்.

   — த. சண்முகநாதன் (உதவிக் கூட்டுறவு ஆணையாளர்)

9. நீதித்துறையிலும் ஈடுபாடு கொண்டவர். உயிரோடு இருப்பவருக்கு நினைவுச்சின்னம் அமைக்கக்கூடாது என்ற வீண் வாதத்தை உடைத்தவர்.

— K. V. M. சுப்பிரமணியம், J.P.U.M.,
(நியாயதுரந்தரர்)

10. இவர் எனது குருவும், என் தந்தையின் அரசியல் ஆலோசகரும். — இராஜன் செல்வநாயகம் (அரசியல் அதிகாரியும், மட். 2வது பாராளுமன்ற உறுப்பினரும்)

11. வீச்சுக்கல்முனை, சேற்றுக்குடாப் பகுதிகளுக்குக் குடிநீர் வசதியும், பஸ் போக்குவரத்தும் ஏற்படுத்தியவர்.

— செ. இராஜதுரை (1வது பாராளுமன்ற உறுப்பினர்)

12. நான் அ. இ. த. ஆசிரியர் சங்கத் தலைவர் ஆவதற்கு வழி வகுத்தவர் எனது குருவாகிய இவரே.

— D. S. K. வணசிங்க.

13. இவர் கல்வித்துறையில் ஒரு முன்னோடி.

— முகிலழகன் க. கந்தசாமி.

14. பிறர் துக்கம் பார்க்கச் சகிக்காதவர்.

— மகாவித்துவான், கலாசூரி F. X. C. நடராசா.

15. நாடகங்கள் எழுதுவதிலும், நடிப்பதிலும் கைதேர்ந்தவர்.

— வண. நோபேட் A. ஒக்கஸ்.

16. கஷ்டமான ஒரு வேலையைக் கெதியாகவும், சரியாகவும் செய்யவேண்டுமாயின் நன்கு சிந்தித்தபின் தனித்தே செய்.

— சுவாமி விபுலாநந்தர்.

17. எனது பிரேரணையை அனுமதிக்கக்கூட எவரும் விரும்பாத வெபர் விளையாட்டு அரங்கு என்னும் பெயரை நிலையாக நிலைநாட்டிவிட்டீர்கள்.

— ஜேம்ஸ் (மட். நகரசபை உறுப்பினர்)

18. தமிழ் வாத்தி என்னும் பெயரை மாற்றுவதற்கும், மிஞ்சும் மேலதிகாரிகளைக் கெஞ்சவைப்பதற்கும் உன்னால்தான் இயலும். — வண. S. பிலிப், S S.J.

19. இவரை இங்கிருந்து மாற்றுவதாயின் இவரது இடத்துக்கு மூன்று ஆசிரியர்களை நியமிக்கமுடியுமா?

— வண. S. அந்தோனிப்பிள்ளை (தலைமை ஆசிரியர்,
சென். மேரிஸ் பாடசாலை)

20. நான் நினைத்துத் தீமை செய்த இவரே எனது கஷ்டத்தை நீக்கினார். என் தவறை உணர்கின்றேன்.

— வண. தம்பிமுத்து (பொது முகாமையாளர்,
றோ. க. பாடசாலை)

# இந்த நூலைப்பற்றி

★ இது ஒரு வாழ்க்கை வரலாறு அல்ல; ''வாழ்க்கையின் சுவடுகள்''. இதில் உள்ள 31 அத்தியாயங்களும் 31 சிறு கதைகள். ஒவ்வொன்றிலும் உங்களுக்கு ஒரு செய்தி உண்டு.

★ வாழ்க்கையில் எதிர்நீச்சல் போடுபவர்களே சாதனை புரிவர்கள். மனித இதயம் படைத்தவர்களே மற்றவர்களுக்கு உதவுவார்கள். சுயசிந்தனை உள்ளவர்களே பிரச்சினைக்குத் தீர்வு காண்பார்கள்.

★ வாழ்க்கையில் ஒரு நெருக்கடி (Crisis) ஏற்படும்போது நீங்கள் எவ்வாறு **react** செய்கிறீர்கள்? நிலைகுலைந்து போகிறீர்களா? அல்லது நிதானமாகச் செயற்படுகிறீர்களா?

★ பணம் கையில் இல்லாத நிலையிலும் பாரிய செயற் திட்டங்களை நிறைவேற்றலாம். பின்தங்கிய கிராமத்துக்கு றோட்டுப்போடலாம்; பஸ் ஓடச்செய்யலாம்; நீர் வழங்கலாம்; கடை திறக்கலாம்; வியாபாரம் செய்யலாம்; யாழ்ப்பாணத்திலிருந்து பொருட்கள் தருவிக்கலாம்.

★ பேய் உண்டா? பேய் மனிதனைப் பிடிக்குமா? எவ்வாறு அதை ஓட்டலாம்? எவ்வாறு பேயிடமிருந்து மனிதனை மீட்கலாம்?

★ எதிரியும் நண்பனாகலாம்; இன்னா செய்தாருக்கும் உதவலாம்; ஏழைகளுக்கு இரங்கலாம்; திக்குத் தெரியாத காட்டிலும் மக்களுக்குச் சேவை செய்யலாம்.

★ வாழ்க்கை வாழ்வதற்கே! எவ்வளவு காலம் வாழ்ந்தாய் என்பது முக்கியமல்ல, எப்படி வாழ்ந்தாய் என்பதே முக்கியம். உனக்காக மட்டும் வாழ்வது வாழ்க்கையல்ல, ஊருக்காகவும் வாழ்வதே வாழ்க்கை.

நூல் கிடைக்குமிடம்:

1. திரு. எஸ். பிரான்சிஸ்,
   29/1, செல்வநாயகம் வீதி, மட்டக்களப்பு.
2. இரா. நாகலிங்கம்,
   ''தவபதி'', ஆரையம்பதி.
3. க. தங்கேஸ்வரி,
   18, நல்லையா வீதி, மட்டக்களப்பு.

சென். ஜோசப் கத்தோலிக்க அச்சகம், மட்டக்களப்பு.